V211.21 Ti
NAS.54.4
136067
Chennai-600 008.

உள்ளடக்கம்.

15 —11 —1983

பக்கங்கள்.

1. வினாக்கள் —விடைகள் —

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 243—285

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 285—412

2. தகவல் கோரல்—

(அ) உறுப்பினர்களுக்கு மருத்துவ மனைகளில் முதல் வகுப்பு அறைகள் ஒதுக்கப்பெறுதல் .. .. 413—415

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 415

3. அறிவிப்புகள்—

(அ) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல் 416

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை — உறுப்பினர்கள் தேர்தல் 416

4. கவன ஈர்ப்பு—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகள் தோண்டுதல் .. .. 416—418

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடையில் கொசுக்களின் தொல்லை .. .. 418—420

5. அறிக்கை அளித்தல் —

நில உரிமைப் பதிவேடு (பட்டா பாஸ் புக்) வழங்கல் சட்ட முன்வடிவு, 1981 மீதான கூட்டாய்வுக் குழு .. .. .. 420—421

6. அரசினர் சட்ட முன்வடிவு —

இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளைச் செல்திறனாக்குதல்) சட்ட முன் வடிவு, 1983 421

7. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—(தொடர்ச்சி)— — 421—472

மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் .. 421—472

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 472—473

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குரிய உதவிகளோடு செய்வதற்குரிய காலத்தையும் நன்கு அறிந்து செய்தால், செய்தற்கரிய செயல்கள் என்பன இல்லாமல் போய்விடும்.

1. வினாக்கள் – விடைகள்,

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் சம்பந்தப்பட்ட வினாக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் மாற்று சிறுநீரக சிகிச்சைப்பிரிவு தொடங்கும் திட்டம்.

*வினா எண். 166 — திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவ மனையில் மாற்று சிறுநீரக சிகிச்சைப் பிரிவு தனியாகத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்காக அதிகப்படி சிலவு எவ்வளவு?

[1983 நவம்பர் 15

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைப்பிரிவு தொடங்கவும் இதற்கு தேவையான பணியாளர்கள் பதவி இடங்கள் தோற்றுவிக்கவும் மற்றும் தேவையான கருவிகள் வாங்கவும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) இதற்காக பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ 1.41 லட்சம் தொடர் செலவும், கருவிகள் வாங்குவதற்கு ரூ. 15.60 லட்சம் தொடராச் செலவும் உத்திரவிடப்பட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதற்காகத் தனியாகக் கருவிகள் வாங்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக அரசுக்கு எவ்வளவு செலவாகியது? கருவிகள் வாங்குவதினால் அதற்காக தனியாக கட்டிட வசதிகளை ஏற்படுத்த அரசாங்கத்திடம் ஏதாவது ஆலோசனை உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1.41 லட்சம் அதாவது ஒரு லட்சத்து நாற்பத்தோறு ஆயிரம் ரூபாய் தொடர் செலவாக இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே, 15·60 லட்சம், 15 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் தொடராச் செலவாகவும் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அங்கே கட்டிட வசதியிருக்கிறது. இப்போது அங்கே அந்தப் பிரிவு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த கிட்னி டிரான்ஸ்பிளேண்டேஷன் என்ற அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில், அதற்காக Surgical part of transplantation unit in Neurology isready. It is not functioning due to non-completion of tissue taping facilities. அப்படி டியூபேப்பிங் பெசிலிட்டீஸ் தேவைப்படுகிறது. அதைத்தான் கேட்கிறார்கள். அதையும் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அது தயாரான உடனே, ஒரு கிட்னிக்குப் பதிலாக இன்னொரு கிட்னியைப் பொறுத்தக் கூடிய இந்த அறுவை சிகிச்சையை செய்ய தயாராக இருப்போம்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறுநீரக சிகிச்சைப் பிரிவுக்காக இட வசதி உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவருக்குத் தெரியாதது அல்ல. பொதுவாக, பொது மருத்துவ மனைகளில் எல்லாப் பிரிவுகளுக்குமே மிகக் கடுமையான இட நெருக்கடி உள்ளது. அதைத் தவிர்க்க வேண்டும். அதே நேரத்தில் இதுபோன்ற விலை உயர்ந்த கருவிகளை வாங்குகிற போது, அந்தப் பிரிவில் சிகிச்சைப் பெற வருகின்ற உள்

1983 நவம்பர் 15]

நோயாளிகளும், வெளி நோயாளிகளும், போதிய இட வசதி இல்லாமல் அவதிப் படுகிறார்கள். அதை நிரந்தரமாகத் தவிர்ப்பதற்காக, இடத்தை விஸ்தரித்து ஏற்பாடு செய்து தர, அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பாக நாம் அதற்காக வேறு ஏற்பாட்டைச் செய்து, தனியாக ஒரு இடத்தை ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். இட நெருக்கடி பிரச்னை, இந்த இலாக்காவைப் பொறுத்தவரையில், குறிப்பாக இந்தப் பிரிவைச் பொறுத்தவரையில் இல்லை. இதில் இருக்கிற ஒரே பிரச்னை, டிஷ்யு டேப்பிங் பெசிலிட்டீஸ் வாங்க வேண்டும் என்பதுதான். அதை வாங்கிவிட்டால் இந்தப் பிரிவு செயல்படுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

திரு. இ.எஸ்.எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவினை, மருத்துவத் துறையில் இருக்கின்ற, தலைமை மருத்துவ மனைகளிலும், மற்றும் மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் ஆரம்பிப்பதற்கு அரசுக்கு ஏதாவது ஆலோசனைக் குறிப்பு உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அவ்வளவு தேவைப்படாது. இந்த சிகிச்சையில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏறத்தாழ 100 கிட்னி டிரான்ஸ்பிளேண்டேஷன்கள் நடந்திருக்கின்றன என்றால், 70, 80 சதவீதம் அதில் வெற்றி பெறவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சிறுநீரகப் பிரிவு மட்டுமல்ல, மற்ற இதரப் பிரிவுகள் எல்லாம்கூட கவனிக்கலாம் என்று சொன்னார்கள் சென்ற ஆண்டிலே. அமைச்சர் அவர்கள் சொன்னபோது மற்றப் பிரிவுகளுக்காக இடவசதியற்ற தன்மையை மாற்றி நோயாளிகளுக்கு வசதியற்ற தன்மையை மாற்றி இந்த ஆண்டு செய்யப்படும் என்று சென்ற ஆண்டே சொன்னார்கள். ஆனால் இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக மற்றப் பிரிவுகளுக்குக் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இட நெருக்கடி என்பது பொதுவான பிரச்சினை. நம்முடைய இலாகாவைப் பொறுத்தவரைக்கும் நிறையக் கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் டபிள்யு.எச்.ஓ., நமக்கு சொல்லியிருக்கக்கூடிய அறிவுரை என்னவென்றால் நிறைய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு போவதைவிட Preventive and Promotive medicine என்பது முக்கியமாக இருப்பதால் அதைக் கவனிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அகில இந்தியாவிலே தமிழகம் மிகப்பெரிய வெற்றி பெற்றிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய அரசுப் பொது மருத்துவ மனையிலே இதுவரைக்கும் மாற்று சிறுநீரகங்கள் எத்தனை பொருத்தப்பட்டிருக்கின்றன? எத்தனை சக்சஸ்புல்லாக இருக்கின்றன? எத்தனை பெய்லியர் ஆகியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 3 அறுவை சிகிச்சைகள் புவியரசு, எழிலரசு, சுமரேசன், விஜயன், வேலுசாமி, பட்சியம்மாள் இவர்கள் ஒவ்வொருவரும் சொந்தக்காரர்கள். ஆகவே Tissue taping இல்லாமல் செய்திருக்கிறோம். சொந்தக்காரர்கள் கிடைக்கவில்லையென்றால் Tissue taping செய்துதான் செய்யவேண்டும்.

புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான வரைமுறைகள்.

***வினா எண். 167 —திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு ஆரம்பிக்கின்ற (புதிதாக) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாய் பணமும் கொடுத்தால்தான் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படும் என்ற முறை உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதை மாற்றும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் மாற்ற உத்தேசம் இல்லை.

1983 நவம்பர் 15]

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகிற இடங்களில் 10 ஆயிரம் ரூபாய் என்பதை 15 ஆயிரம் ரூபாயாக வேண்டுமானால் பொது மக்களிடமிருந்து வசூலித்துக் கொடுத்துவிடலாம். ஆனால் 5 ஏக்கர் என்கின்ற நிலை ஒரே இடத்தில் இருப்பது மிகவும் கடினமான காரியம் மட்டுமல்ல, பல்வேறு இடங்களில் அது விவசாயத்திற்கு பயன்படும் பூமியாகவும், அதன் காரணத்தினால் விலையும் அதிகமாக கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலையும் இருப்பதால் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதைப் பரிசீலனை செய்து மாற்றுவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய பிரச்சினையெல்லாம் நிறைய பேர்கள் முன்னுக்கு வருகிறார்கள். நாங்கள் 5 ஏக்கர் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், 10 ஆயிரம் ரூபாய் வசூலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே நாங்கள் செய்கிறோம் என்று சொல்லக்கூடியவர்களை திருப்திப்படுத்தமுடியாத நிலையில் இருக்கிறோம். அப்படியொரு வகையில் இருக்கிறோம். இரண்டாவதாக நாம் அந்த நிலத்தை வீணாக்கவில்லை. சோஷியல் பாரஸ்ட் பிரிவோடு தொடர்பு கொண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே நிறைய மரங்களை வைப்பதற்கு திட்டம் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இடம் கொடுக்க —ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க —நிறையபேர்கள் முன்வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே மருத்துவ மனைகளை ஆரம்பிக்க பொருளாதார நிலைமைதான் காரணமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியிலே விஜயமங்கலத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இன்றைய தினம் அந்த பூமி ஒருஏக்கர் 20 ஆயிரம் ரூபாய் விலைபோகக்கூடிய நிலைமையிலே இருக்கிறது. ஆகவே 5 ஏக்கர் ஒரு இடத்திலே கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் மறு பரிசீலனை செய்வார்களா என்று கேட்டேன். பல்வேறு இடங்களில் தேவை இருக்கிறது, ஆனால் இடம் இல்லை. அம்மாதிரியான இடங்களில் குறைந்தபட்சம் நிலம் என்ற முறையிலே பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தனிப்பட்ட தொகுதிப் பிரச்சினைப்பற்றிச் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு விவரங்களை அனுசாங்கத்திற்கு எழுதிக்கொடுத்தால் உடனடியாகப் பரிசீலனை செய்து கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

[1983 நவம்பர் 15

திரு. மு. வெ்பெருமாள்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், காடியம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே மரக்கோட்டை என்ற கிராமத்திலே ஒன்றிவீரனூர் என்ற இடத்திலே ஒரு ஆரம்ப சுகாதாரநிலையம் ஆரம்பிப்பதற்காக 10 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக 5 ஏக்கர் நிலம் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாவட்ட சுகாதார அலுவலர் அதைப் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார்கள். அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கையைப்பற்றி கேள்வி கேளுங்கள், தொகுதியைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். டேனிட்டா திட்டத்தின் கீழ் பல வேலைகளை அங்கே செய்து இருக்கிறோம். ஒரு ஆஸ்பத்திரிக்கும் இன்னொரு ஆஸ்பத்திரிக்கும் இடையே 8 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும் என்று அரசு ஆணை இருக்கிறது. அதனை தளர்த்த வேண்டும். இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினையை விரிவான முறையில் நமக்கு அனுப்புவார்களானால் அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு 5 ஏக்கர் கேட்கின்ற நிலையில் இன்றைக்கு எத்தனையோ நாலுக்கா அரசு மருத்துவ மனைகள் 5 ஏக்கருக்கு குறைவாக இருக்கிறது. ஆகவே பெரிய மருத்துவ மனைகளில் இப்போதுள்ள நிலையை அனுசரித்து அரசு 5 ஏக்கர் என்று இருப்பதைக் குறைத்துக் கொள்ள பரிசீலனைச் செய்ய முன்வருமா? 5 ஏக்கர் ஒரே இடத்தில் இல்லாமல் 2 இடங்களில் இருந்தால் உதாரணமாக திருமங்கலம் தொகுதியில் கள்ளக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 2 இடங்களில் 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. அரசு அதை பரிசீலித்து உடனடியாக அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கையைப் பொறுத்தவரையில் மூலக்கேள்விக்கு பதில் அளிக்கும் போது மாற்றம் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் இந்த எக்சிஜென்ஸி தனிப்பட்ட பிரச்சனைகள் அங்கே ஏதாவது இருக்குமானால் அந்த விவரங்களை கொடுத்து நமக்கு ஒரு மனு அனுப்புவார்களானால் எந்த மனுவாக இருந்தாலும் அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1983 நவம்பர் 15]

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு.

*வினா எண். 468—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு மருத்துவ மனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுபவர்களுக்கு உணவுக்காக ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு எவ்வளவு வழங்கப்படுகிறது ?

(ஆ) பெரிய நகரங்களுக்கும் சிறிய நகரங்களுக்கும் வித்தியாசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் உள்நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகளில் நிர்ணயித்தபடி அவர்களின் நோயின் தன்மையைப் பொறுத்தும், நோயாளியின் தேவைக்கான உணவுக் கலோரியை அடிப்படையாகக் கொண்டு, செலவில் கட்டுப்பாடின்றிக் கீழ்க்கண்ட உணவு வகைகள் வழங்கப்படுகின்றன:—

(1) இந்திய சாதாரண உணவு.

(2) குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துணவு.

(3) நீரிழிவு நோயாளிகளுக்கான ஊட்டச் சத்துணவு.

(4) காச நோயாளிகளுக்கான ஊட்டச் சத்துணவு.

(5) பால் மற்றும் ரொட்டி உணவு.

(6) முற்றிய நோயாளிகளுக்கான விசேஷ உணவு.

(ஆ) வித்தியாசம் ஏதுமில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு வித்தியாசமான உணவு நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முனிசிபாலிட்டி போன்ற நகரசபைகளில் இருக்கக் கூடிய ஆஸ்பத்திரிகளில் இன்றைக்கு அங்கே கொடுக்கக்கூடிய உணவு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இங்கே அமைச்சர் அவர்கள் பல தரமான சத்துணவு, சாதாரண சத்துணவு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி கொடுக்கப்படவில்லை என்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இருக்கக்கூடிய நிலையைச் சொல்லியிருக்கிறேன். நாம் பலவகைகளில் பரிசோதனைகளைச் செய்கிறோம். திடீர் சோதனை செய்கிறோம். நமக்குத் தகவல் கிடைத்தவுடன் சோதனை செய்கிறோம். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது பொதுவாக சொல்லியிருக்கிறேன். தனியாக ஏதாவது ஒரு பகுதியில் குறை இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருவார்களானால் அது உடனடியாக கவனிக்கப்படும். Vegetables (200 gms.), Greens (50 gms.), Butter Milk..... இப்படி எல்லாம் நாம் தொகுத்து வைத்து இருக்கிறோம். அதற்காக ஒரு டையட்டிஷியன் ஆங்காங்கே போட்டு இருக்கிறோம். டிஸ்டிரிக் மெடிக்கல் ஆபீஸர் அங்கும் இங்கும் சென்று திடீர் சோதனைச் செய்யவேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறோம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மூலக்கேள்வியில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுபவர்களுக்கு உணவுக்காக ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு எவ்வளவு வழங்கப்படுகிறது என்று கேட்டிருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அதைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு உணவு சப்ளை செய்யக்கூடிய ஆஸ்பத்திரிகளில் சப்ளை செய்யக்கூடியவர்கள் டெண்டர் போடப்பட்டு அதிலே 50 சதவீதம் டெப்பாசிட் கட்டினால் தான் அந்த டெண்டர் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதனால் தமிழகத்தில் உள்ள பல்வேறு ஆஸ்பத்திரிகளில் உணவு சப்ளை செய்யமுடியாமல் நிறுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக என்னுடைய ஊரில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியில் உணவு சப்ளை செய்வது இல்லை. இம்மாதிரியான குறைகளை நீக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் முறையை மாற்றியமைக்கவேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது இருக்கும் முறையை மாற்றியமைக்கவேண்டிய எந்த விதமான சாத்தியக்கூறும் இல்லை. இன்னொரு கேள்வி என்னவென்றால் இன்றைக்கு மருத்துவமனைகளிலே ஒவ்வொரு நோயாளிக்கும் செலவழிக்கக்கூடிய தொகையைக் கேட்டார்கள். இன்டியன் ஆர்டினரி டயட், அதற்காக 4 ரூபாயிலிருந்து, 4.60 பைசா, சில்ட்ரன் ஆர்டினரி டயட் 5.70 பைசாவிலிருந்து, 6.10 பைசா, கையாபடிக் டயட் 6.65 பைசாவிலிருந்து 7.10 பைசா ; டி.பி. டயட் 7 ரூபாயிலிருந்து 8.40 பைசா ; மில்க் அன்ட் பிரட் 5.10 பைசாவிலிருந்து 5.70 பைசாவரை. ஆகவே நாம் ஒட்டு மொத்தமாக எவ்வளவு செலவழிக்கிறோம் என்றால் 4 கோடியே

1983 நவம்பர் 15]

90 லட்சத்து 61 ரூபாய். டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் அந்தத் தொகையை செலவழிக்கிறார். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் மூலமாக 5 கோடியே 11 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அதாவது 4.90 லட்சம் டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் மூலமும் 5 கோடியே 11 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ் மூலமும் செலவு செய்கிறோம். அதாவது கிட்டதட்ட 10 கோடி ரூபாய் இந்த டயட்டைப் பொறுத்த மட்டும் தமிழக சர்க்கார் செலவழித்துக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. ராணி : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சாதாரண நோயாளிக்காக ஒரு நாளைக்கு 4.60 பைசா அளவிற்கு அதனுடைய உணவிற்காக செலவழிக்கப்படுவதாகச் சொன்னார்கள். இத்தோடு கொடுக்கப்படுகின்ற காய்கறி, கீரை போன்றவைகளின் எடையும், கிராம் கணக்கிலே சொன்னார்கள். பிரச்சினை என்னவென்றால், இந்தத் தொகையால் கிடைக்கக் கூடிய உண்மையான நல்ல உணவு அந்த நோயாளிகளுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதுதான் வாஸ்தவம். இதைத் தடுப்பதற்கும், இந்த திருட்டுப் போவதை சம்மி பண்ணுவதற்கும், இவைகளைக் கண்காணிப்பதற்கும் அதிகாரிகளை மட்டும் வைத்தால் போதாது. அதற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று முன்னாலே சொன்னார்கள். இந்த மன்றத்திலே சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வரையிலும் அது அமைக்கப்படவில்லை. என்னிடம்கூட அதற்காக இங்கே இருக்கக்கூடிய சி.எம்.சி. ஆஸ்பத்திரியிலேயிருந்து கையெழுத்து கேட்டார்கள். நான் எழுதிக் கொடுத்தேன். ஆனால் இன்றைக்கு வரையிலும் அது அமைக்கப்படவில்லை. எனவே அந்த கண்காணிப்புக் குழு அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா அந்தக் குழு வேலை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு உள்நோயாளிக்குக் கொடுக்கக் கூடிய உணவினுடைய விலை குறைந்தபட்சம் 4 ரூபாய் 60 பைசாவிலிருந்து அதனுடைய சத்தைப் பொறுத்து உயர்கிறது என்ற முறையிலே சுற்றிப்பிட்டார்கள். ஆனால் தற்போது மாவட்டத் தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் கொடுக்கக்கூடிய உணவு ஒரு மாதிரியாகவும், மாவட்டத் தலை நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் சாதாரண ரொட்டியும் பாலும் மட்டும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே ஒரேமாதிரியான உணவு அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ள உள்நோயாளிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அதைத் தான் நாம் செய்துகொண்டு இருக்கிறோம்.

பீடி, நெசவுத்தொழிலாளர்களுக்குக் காச நோய் பரவுவதைத் தடுக்க அரசின் சிறப்புத் திட்டம்.

*வினா எண். 169—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் பீடி, நெசவுத்தொழிலாளர்களுக்குக் காச நோய்ப் பரவுவதைத் தடுக்க அரசிடம் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை (நிலை) எண் 900, நாள் 24-5-80-ல் பீடித் தொழிலாளர் மற்றும் கைத்தறித் தொழிலாளர்களுக்கான நல்வாழ்வுத் திட்டத்தின் மூலம் ஐந்து நடமாடும் மருத்துவக் குழுக்களையும், நான்கு மார்பகத் தொடர்பாக படப்பிடிப்பு சாதனங்களைக் கொண்ட ஊர்திகளை வழங்குவதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான பணியாளர்களை நியமிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 5 நடமாடும் ஊர்திகள் தமிழ்நாட்டில் காசநோயால் பாதிக்கப்பட்டு உள்ள பீடித் தொழிலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல இடங்களில் பீடித் தொழிலாளர்களும், நெசவுத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். எனவே, எங்கெங்கே அவர்கள் வாழ்கிறார்களோ அந்த இடங்களுக்கு எல்லாம், தாலுக்கா மருத்துவமனைகளிலே காசநோய் பரவுவதைத் தடுக்க நடமாடும் மருத்துவ மனையை ஏற்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது ஆரம்பக் கட்டத்தில் 5 இடங்களில் நாம் சர்வே செய்து எந்தெந்த இடங்களில் ஸ்பெஷியாக பீடித் தொழிலாளர்கள், மற்றத் தொழிலாளர்கள் இந்த டி.பி. நோயாலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து ஸ்டாட்டிஸ்டிக்ஸ் அடிப்படையில், புள்ளி விவரத்தின் அடிப்படையிலே செலவம்

1983 நவம்பர் 15[

ஈரோடு, திண்டுக்கல், துத்துக்குடி, வேலூர் ஆகிய 5 இடங்களில் ஆரம்பித்து, இதற்காக 36 லட்சத்து, 45 ஆயிரம் ரூபாய் ஆண்டு தோறும் செலவழித்துக் கொண்டு வருகிறது.

முற்பகல் 9—20

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூக்கினுள் தூசு போவதால் தான் காச நோய் வருவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆகவே மூக்கினுக்குள்ளே தூசு போகாமல் தடுப்பதற்காக தொழிலாளர்களுக்கு ஏதாவது சாதனங்களை கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மை. சிலிகோஸ், சித்தகோஸ் என்றெல்லாம் மூக்கின் மூலமாகப் போகக்கூடிய காற்றிலிருக்கிற தூசின் விளைவாக வருகிற வியாதிகள் இருக்கின்றன. ஆகவே, அதற்காக ஹெல்த் எஜுகேஷன் என்ற பெரியபகுதி ஏற்படுத்தப் பட்டு, எப்படி இதில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, எப்படி மூக்கில் துணியைகட்டிக் கொள்வதென்று அந்தஎஜுகேஷனை முறையை மருத்துவக் கல்வித் துறையில் போதனை செய்து எப்படியெல்லாம் நடைமுறைப் படுத்த வேண்டுமென்று, எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டுமென்று அதற்காக ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே நமக்கு முன்னேற்றம் இருக்கிறது. எனவே, அதற்கென்று தனி கருவிகள் எதுவுமில்லை.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடி தொழிலாளர்களுக்கு, நெசவுத் தொழிலாளர்களுக்கு காச நோய் பரவுவதை தடுக்கிற அரசுத் திட்டத்தை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதைப் போல ஜின்னிங், பஞ்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் இந்த காச நோய் பரவுகிற நிலைமை இருக்கிறது. உதாரணமாக கோவை மாவட்டத்தில் இந்த நிலைமை இருக்கிறது. அந்த ஆலைகளில் பணிபுரிகிற ஆண்தொழிலாளர்களும், பெண் தொழிலாளர்களும் இந்த காசநோய்க்கு ஆளாவது வாடிக்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தடுப்பதற்கு மாவட்ட வாரியாக் ஒவ்வொரு மருத்துவ மனைகளிலும் காச நோய் பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசு முற்படுமா? உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், திருப்பூரில் இப்படிப்பட்ட ஜின்னிங் பஞ்சாலைகள் அதிகமாக இருப்பதால் அதில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு காச நோய் வருகிறது. அவர்கள் பெருந்துறையில் இருக்கிற காச நோய் மருத்துவ மனையை நாடித்தான் போக வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்து மாவட்ட வாரியாக மருத்துவ மனைகளில் காச நோய் பிரிவை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் இதுபற்றி பலமுறை என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் இரண்டு பேரும் அதாவது இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து இதிலே ஒரு சிறந்த திட்டத்தை தீட்டி 50 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவை ஆரம்பிப்பதற்காக திட்டம் போட்டிருக்கிறோம். அது வெகு விரைவிலே செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மருத்துவ மனையில் பீடித் தொழிலாளர்களுக்காக காச நோய் சிகிச்சை பெறுவதற்கு தனி வார்டு அமைக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக தொழிலாளர் நல இலாக்கா மூலம் கேட்கப்பட்டதே அதை உடனடியாக அமைக்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பீடித் தொழிலாளர்களைப் பற்றியது. ஆகவே, பீடித் தொழிலாளர்களைப் பற்றி திரு. பூங்காவனம் அவர்கள் கேட்பார்கள், நீங்கள் உட்காருங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தமிழகம் முழுவதிலும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வடஆற்காட்டை பற்றி மட்டும் முதலில் சொல்கிறேன். அந்த மாவட்டத்தில் வேலூருக்கு அருகாமையில் அடுக்கம்பாளையம் என்ற பகுதியில் காச நோய் மருத்துவமனை இருக்கிறது. அதிலே பீடித் தொழிலாளர்களுக்கென்று தனியாக படுக்கைகள் ஒதுக்கப்படுமா? இரண்டாவதாக, பீடித் தொழிலாளர்கள் இருக்கிற வேறு இடங்களில் இதற்காக மருத்துவமனைகளை உருவாக்குகிற போது வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமான பீடித் தொழிலாளிகள் இருப்பதால் காச நோயைத் தடுப்பதற்காக அங்கே ஒரு மருத்துவ மனை துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தி இருக்கிறது. அதற்காக தற்போது ஆரம்பக் கட்டத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் 26 ஆயிரத்து 19 பேர்களை பரிசோதனை செய்திருக்கிறோம். அதிலே நோய் இருப்பதாக சந்தேகப்பட்டவர்களின் எண்ணிக்கை 187. ஆனால் அதில் ஒருவருக்கும் காச நோய் இல்லையென்ற நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. அதைப் போல சேலம் மாவட்டத்தைப்

1983 நவம்பர் 15

பொறுத்தவரை 35 ஆயிரத்து 632 பேர்களுக்கு பரிசோதனை செய்ததில் 72 பேர்களுக்கு அந்த வியாதி இருக்கிறது. சிப்ட மாடிக் எல்பது ஒன்று. டி.பி. டயக்னைஸ்ட் அண்ட் புட் ஆன் ட்ரிட்மெண்ட். டயக்னைஸ் செய்ததில் ''நில்'' என்று வந்திருக்கிறது. அதில் ஒரு சின்ன எக்ஸ்-ரே கருவி இருக்கிறது. அதற்கு என். எம். ஆர். என்று பெயர். உடனடியாக அந்த இடத்திற்கே கொண்டு போய் அதை பார்த்துவிட்டு அதில் இருக்கிற பெரிய கண்ணாடியில் பார்த்தால் நமக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையிலே வெகு வேகமாக நாம் பணி செய்து கொண்டிருக்கிறோம். டபிள்யூ. எச். ஓ. வும் நமக்கு இன்னொரு கட்டளையை இட்டிருக்கிறார்கள். கூடிய வரையில் டி.பி. நோயாளிகளை மருத்துவ மனைகளில் தங்க விடுவது நல்லதல்ல. நடமாடக் கூடிய, மொபைலாக, ''ஆப்புலேட்டரி ட்ரீட்மெண்ட் இஸ் தி லேட்டஸ்ட் மாடர்ன் டெக்னிக்ஸ் ஆப் ட்ரீட்மெண்ட்''.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக காச நோய் நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு அதிகமாக வருகிறது. மதுரை மாவட்டத்தில் அதிகமாக நெசவுத் தொழில் செய்கிறவர்கள் சின்னாளப்பட்டியில் இருக்கிறார்கள். அந்நாட்டம் பலர் காச நோயால் பீடிக்கப்பட்டு மருத்துவ மனையில் சேர வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு காச நோய் மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் கூட 21,087 பேர்களைப் பரிசோதனை செய்ததில் 77 பேர்களுக்கு வியாதி இருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டு அவர்களை மருத்துவ மனையில் அமர்த்தியிருக்கிறோம்.

கடலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 170 — **திரு. ஆ. சுந்தரமூர்த்தி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் (Intensive Medical Care Unit) தீவிர சிகிச்சைப் பகுதி ஒன்று உடனடியாக அமைத்துத் தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் மாவட்ட தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பதற்கு அங்குள்ள

[1983 நம்பர் 15

கட்டிடத்தில் தேவையான குளிர் சாதன வசதிகள் அமைப்பதற்காக, அரசு ஆணைகள் விரைவில் வழங்கப்பட இருக்கின்றன. குளிர் சாதன வசதிகள் நிறுவப்பட்டவுடன், இப் பிரிவு ஆரம்பிப்பதற்கான தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1970–80 முடிய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விபத்தில் இறந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை.

* **வினா எண். 213 — திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1970 முதல் 1980 முடிய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விபத்தில் இறந்த, ஊனமுற்ற, ஒப்பந்தத் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளனவா ?

(இ) இவர்தம் வாரிசுக்கும் வாரியத்தில் நிரந்தரப்பணி தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இறந்தவர்கள் 60 பேர் ; ஊனமுற்றவர்கள் 22 பேர்

(ஆ) ஆம். இறந்தவர்கள் 60 பேரில், 53 தொழிலாளர்களுக்கான ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. ஒருவருக்கு, சொந்த கவனமின்மையால் விபத்து நேர்ந்ததால் ஈட்டுத்தொகை அளிக்கப்படவில்லை. மீதம் 6 பேர்களுக்கான ஈட்டுத்தொகை வழக்கில் உள்ளது. ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுவிட்டது.

(இ) இத் தொழிலாளர்களின் வாரிசுக்கு மின்சார வாரியத்தில் வேலை வாய்ப்பு அளிக்கும் உத்தேசமில்லை.

மின் திட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்கள்.

* **வினா எண். 214 — திரு. கு. ரமணி** : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மின் திட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டும் அவை நீண்ட நாட்களாகக் கட்டப்படாமலிருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

1983 நவம்பர் 15]

(ஆ) ஒரு திட்டத்துக்கு ஒரு ஆலோசனைக் குழு என்று இருப்பதை மாற்றி ஒரு திட்டத்தில் பல ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்த அரசு சிந்தித்து வருகிறதா ?

(இ) ஆம் எனில் அதுபற்றிய விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஒவ்வொரு மின் திட்டத்திலும் கோட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்களின் கூட்டங்கள், சில கோட்டங்களில் தான் முறைப்படி கூட்டப்படுகின்றன. இக்குழுக்களின் கூட்டங்களை முறைப்படி நடத்தும்படி திட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

(ஆ) ஒவ்வொரு மின் திட்டத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆலோசனைக் குழுக்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன.

(இ) ஒரு மின் திட்டத்தில் எத்தனை இயக்குதல் மற்றும் பராமரிப்பு கோட்டங்கள் உள்ளனவோ, அத்தனை ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் மாதம் ஒருமுறை கூடும். இந்தக் குழுக்களுக்கு சம்மந்தப்பட்ட கோட்டப் பொறியாளரே அனைத்து பாளரும் தலைவரும் ஆவார். சம்பந்தப்பட்ட எல்லா சட்ட மன்ற, சட்ட மேலவை, பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலரும் இந்த குழுக்களின் உறுப்பினர்கள் ஆவார்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இப்படி கோட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் பல கூட்டங்கள் முறையாக நடக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கூட்டங்கள் முறையாக நடந்தாலும் அந்தக் கோட்டக் குழுக்களில் உள்ள அதிகாரிகளே அவற்றிற்கு தலைவராகவும் இருக்கிறார்கள். ஒரு திட்டம் முழுவதற்குமாக போல் அதிகாரியாக இருக்கக்கூடிய சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர் அதில் பங்கெடுப்பதில்லை, அவர்கள்தான் அங்கே மின் லைன்கள் கொடுப்பதும், புதிய காரியங்களைச் செய்வதற்கான திட்டங்களை இறுதிப்படுத்துவதும் ஆகிய அதிகாரங்கள் அவர் அதிகாரத்திற்குட்பட்டது. அப்படிப்பட்ட நிலை இருக்கும்போது அந்த சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர் கலந்து கொள்ளாத இந்தக் கூட்டங்கள் எதற்காவது முடிவு எடுக்கக்கூடிய கூட்டங்களாக ஆவதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நடைமுறையில் இருக்கிற சில சிக்கல்கள், சில சிரமங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் சீரமைப்புகள் செய்யப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. சு. ரமணி : தலைவர் அவர்களே, நடைமுறை சிக்கல் என்பது சூபரின்டென்டிங் என்ஜினியர் அவர்கள் ஒவ்வொரு குழுக் கூட்டத்திலும் பங்கெடுக்கமுடியாது. சாதாரணமாக எம். எல், ஏக்கள், எம்.எல்.சி-க்கள் மற்றும் எப்.பி-க்களாக இருக்கிறவர்கள் கூட பல்வேறு கூட்டங்களில் பங்கெடுப்பது கஷ்டம். ஆகவே, இந்த சூபரின்டென்டிங் என்ஜினியர் லெவலிலே இருக்கும்படி யான சிஸ்டம் கமிட்டி கூட்டத்தைக்கூட ஒரு வருஷத்திலே 3 தடவையோ அல்லது 4 தடவையோ, குவாட்டர்லியோ, அல்லது ஆப் இயர்லிலோ, கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். வேதமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுக்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கோட்டத்திலும் ஆலோசனைக் குழுக்கள் இருப்பதாகவும் அவைகள் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், திருவாரூர் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கோட்டத்தில் ஆலோசனைக் குழு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் குழுவின் கூட்டம் சூபரின்டென்டிங் என்ஜினியர் லெவலிலே கூட்டப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆகவே, அந்தக் குழுவின் கூட்டத்தை கூட்டி, ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்வதற்கு அந்த ஆலோசனைக் குழுவை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும், சுற்றுலாத் துறையிலிருந்து அந்த விவரத்தைக் கேட்டு, ஆகவன முறையிலிருந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுக்களின் கூட்டத்தை வட்ட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுவதே இல்லை. உடனடியாக கூட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அப்படிச் செய்தால், பாபு செட்டு

1983 நவம்பர் 15]

களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை வழங்க ஏதுவாக இருக்கும். அவ்வாறு அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முழுக் கேள்விக்குப் பதில் சொன்னதுபோல், ஏதாவது தாமதங்கள், குறைகள் இருந்தால், நிச்சயமாக அவைகள் களையப்படும்.

நிலமெண்ணெய் ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களிக்கும் திட்டம்.

* வினா எண். 215 **திரு. டி. மணி :** மாண்புமிகு மின்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

நிலமெண்ணெய் ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களித்துத் தடையின்றி மின்சாரம் வழங்கும் செயற்நிறைவு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நிலமெண்ணெய் ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களிக்கும் செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தருதிக்கேற்றவாறு கூடுதலாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் அரசு தொடக்கப்பள்ளிக்கூடங்கள், குறிப்பாக பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், கால்நடை மருத்துவக் கூட்டுறவு மையங்கள் ஆகிய இப்படிப்பட்ட பணிகளை பூர்த்தி செய்ய நிலமெண்ணெய் பற்றாக்குறை இருக்கிறது. அதன் காரணமாக, ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக பல வேலைகள் முடங்கி இருக்கின்றன. அரசு தேவையைக் கூட இந்த நிலமெண்ணெய் பற்றாக்குறை பாதிக்கின்றது காரணத்தினால், இந்த நிலமெண்ணெய் ஆலைகளுக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு அளித்து நம்முடைய தேவையை பூர்த்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமெண்ணெய் ஆலைகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களிப்பது பற்றியது மூலக் கேள்வி, மேலும் விவரங்கள் வேண்டுமானால் தயவுசெய்து தனிக் கேள்வி போடுமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசாங்கத் தையைத் தான் மிக அதிசமாக வலியுறுத்திக் கேட்டிருக்கிறேன் அது மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்தையும் எடுத்துக் கொள்

[1983 நவம்பர் 15

கிறபோது, இங்கு மக்களுக்கு, தாதாரண ஏழை எளிய மக்களுக்கு 10 மூட்டை, 20 மூட்டை வழங்க ஏற்பாடு இருக்கிறபோது, அந்த சிமெண்ட் கூட கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே மக்களின் தேவைகளையும், அரசாங்கத்தின் தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த சிமெண்ட் ஆலைகளுக்கு இந்த மின்வெட்டிலிருந்து விதிவிலக்களிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் ஆலைகளுக்குப் போது மான மின்சாரத்தை அரசு இப்போது அளித்து வருகிறது. தற் போது சிமெண்ட் தொழிற்சாலைகளிடமிருந்து தங்களுக்கு அளிக்கப்படும் பங்கீடு போதவில்லை என்றோ, அதிகம் வேண்டு மென்றோ எவ்வித கோரிக்கையும் வரவில்லை. அப்படி கோரிக்கை வந்தால், அதன் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும்.

தாமிரபரணி நீர் மின் திட்டம்.

*விளா எண். 216—திரு. வேதாந்தம் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி நீர் மின் திட்டம் யாரை அரசின் அனுமதிக்காக மாநில அரசு எப்போது அனுப்பியது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டது.

(ஆ) இத் திட்டம் குறித்து கூடுதலான சில ஆய்வுகளை நடத்தும்படி மத்திய மின் அதிகார மன்றம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேற்கொண்டு ஆய்வுப் பணிகளை மின்வாரியம் மேற்கொண்டுள்ளது.

திரு. வேதாந்தம் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது 1973 ஆம் ஆண்டு அனுப்பப் பட்ட திட்டம். இது செயல்படும்பொழுது எவ்வளவு மின்சார உற்பத்தி கிடைக்கும் ? இதற்கான திட்டச் செலவு எவ்வளவு ? 1973 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட இந்தத் திட்டத்தை விரை

1983 நவம்பர் 15]

வாகச் செயல்படுவதற்குத் தற்பொழுது அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாமிரபரணி நீர் மின் திட்டம் என்ற இந்தத் திட்டம் முண்டன்துறை புலி சரணாலயத்தில் அமைந்துள்ளது. ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்குக் காடுகள் மற்றும் வன விலங்குத் துறையின் அனுமதியைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. அந்தத் தாமதம் தீர்க்கப்பட்டு, 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடந்த உயர் மட்டப் பேச்சுவார்த்தை களில் தமிழக அரசு எடுத்து முடிவின்போரில் இந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வந்துள்ளன. இன்றைக்கு முடிந்திருக் கிறது. இன்றைக்கு ஏறக்குறைய 120 மெகாவாட் உற்பத்தித் திறனும், ஆண்டொன்றுக்கு 450 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தியும் கிடைக்கும். ஏறக்குறைய 88 கோடி ரூபாய் இதற்கான மதிப்பீட்டுத் தொகையாகும்.

திரு. வேதாந்தம் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைப்போன்ற நீர் மின் திட்டங் கள் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன ? அந்தத் திட்டங்களில் உத்தேச உற்பத்தித் திறன் எவ்வளவு, அதனால் அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு, ஆகிய விவரங்களை மாண்பு மிகு அமைச்சரிடத்திலிருந்து நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாமிரபரணி நீர்மின் திட்டத்தைப் போன்ற ஆறு திட்டங்களைத் தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. குறிப்பாக கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், நீலகிரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் என நான்கு மாவட்டங்களில் பரவலாக 420 மெகாவாட் திறன் கொண்ட அளவிற்கு உற்பத்தி செய்ய 200 கோடி ரூபாய் அளவில் இந்தத் திட்டங்களை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பி மத்திய அரசு அவைகளை ஆய்ந்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நமக்கு மின்சாரம் மிகத் தேவையாக இருக்கிறது. ஆனால் குறிப்பாக நீர் மின் திட்டங்களை அமைக் கும் வாய்ப்பு நம்முடைய மாநிலத்தில் மிகவும் குறைவாக இருக் கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்தத் தாமிரபரணி நீர் மின் திட்டம் 1973 ஆம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய பத்தாண்டுக் காலமாக தாமதப்பட்டிருக்கிறது. இவ்வளவு கால தாமதமாக மெதுவாக இது நடந்து கொண்டு வருகிறது. வன இலாக்காவி

[1983 நவம்பர் 1

லிருந்து அனுமதி வாங்குவதற்கே இவ்வளவு நாட்கள் என்றால் எப்படி இவ்வளவு நாட்கள் காலதாமதம் ஆகியது ? இனிமேலாவது உடனடியாக மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுத் துரிதமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல, அது இப்பொழுது துரிதப்படுத்தப்பட்டு, வன விலங்குத் துறை அதற்கான அங்கீகாரத்தை அளித்து ஆய்வு செய்யப்பட்டு துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. சுப்பிரமணியம் (பத்திரிகை மரம்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மேல் தாமிரபரணி நீர்மின் திட்டம் திட்டத்தட்ட 120 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் முன்னதாக 165 மெகாவாட் உற்பத்தி செய்யப்படும் என்ற முறையில் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபொழுது, புலியைக்காட்டி முதலில் அத்தத் திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் இப்பொழுது பத்தாண்டுக் காலத்திற்கும் மேலாகிவிட்டது. இப்படி பத்தாண்டுக் காலமாகிவிட்டபடியால், இப்பொழுது அனுமதி கொடுக்கும் நேரத்தில் விலைவாசி ஏறி விட்ட காரணத்தால் முன்பு போடப்பட்ட பழைய எஸ்டிமேட்டில் மதிப்பிடப்பட்ட தொகை காணாது என்பதால் அது ரிவைஸ் செய்யப்பட்டதா ? அப்படி ரிவைஸ் செய்யப்பட்டதால் இப்பொழுது எவ்வளவு தொகை வருகிறது ? எஸ்டிமேட்டை ரிவைஸ் செய்யும்படி, மத்திய அரசு கேட்டதா, அதை மாநில அரசு அனுப்பிவிட்டதா ? மாநில அரசு அனுப்பியிருந்தால் அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு என்ன பதில் கூறியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல, முண்டன்துறை புலி சரணாலயத்தின் பிரச்சனை இப்பொழுது தீர்க்கப்பட்டு, தமிழக அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. விரைவில் அனுப்பப்படும்.

முக்கிய அரசு ஆணைகளைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் திட்டம்.

* வினா எண். 158 – திரு. வேடசந்தூர் வி. பி. பாலகப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கேள்விக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1983 நவம்பர் 15]

(அ) அரசு பொதுமக்களுக்கு சலுகைகள் அளித்து வெளியிடும் முக்கிய அரசு ஆணைகளைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இலவச சத்துணவுத் திட்டம், கடன் நிவாரணத் திட்டம், கிராமப்புறத் தண்ணீர்த் திட்டம், தொழில் முனைவோர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள், வேலையற்றோர் நல வாழ்வுத் திட்டம், இலவச சட்ட உதவி, முதியோர்களுக்கு நிதியுதவி, சமூக நலக் காடு திட்டம் (மரம் வளர்க்க இலவச செடிகள் வழங்குவது) இவை போன்ற அரசு அளிக்கும் சலுகைகள் பற்றிய விளம்பரங்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் செய்தி வெளியீடாகவும், விளம்பரங்களாகவும் வெளியிடப்படுகின்றன.

[முற்பகல் 9-40]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலகப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் அரசின் பொதுவான சிறப்புத் திட்டங்களும் சமூகநலத் திட்டங்களும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் உதாரணமாக வருவாய்த் துறையின் மூலம் ஒரு சலுகை அளிக்கப்பட்டு உத்தரவு போடப்படுகின்றது என்றால் கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு அதுபற்றித் தெரியாத நிலைமை இருக்கிறது. எனவே, பொதுமக்களுக்காக அளிக்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் சில உரிமைகள் குறித்த சம்பந்தப்பட்ட உத்தரவுகளை துரிதமாகப் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி அதன் மூலம் பொதுமக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வசதியில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலகப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அதேபோன்று அரசு அளிக்கின்ற ஒரு சில சலுகைகள் மற்றும் நடைமுறைகள் குறித்தும் கிராமப்புற மக்களுக்குத் தெரியவாய்ப்பில்லாத சூழ்நிலை இருக்கின்றது. உதாரணமாக அரிசனங்கள் இறந்துவிட்டால் ஈமக்கடன்களைச் செய்வதற்கு அரசுகள் இறந்துவிட்டால் ஈமக்கடன்களைச் செய்வதற்கு அரசு தரும் கொடுக்கின்றது என்றாலும் அதற்காக எப்படி எல்லாம் விண்ணப்பிக்க வேண்டும் என்பது பற்றித் தெரியாமல் இருக்கிறார்கள். எனவே இன்னின்ன முறையில் விண்ணப்பிக்க வேண்டும்

[1983 நவம்பர் 15

என்பது குறித்து மாவட்ட அதிகாரியோடு செய்தி விளம்பரத் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு விளம்பர போஸ்டர்களை ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதால் மட்டும் மக்கள் அனைவரும் அதைத் தெரிந்துகொள்வார்கள் என்று சொல்ல முடியாது. பத்திரிகை படிக்கின்ற வாய்ப்பு இருப்பவர்கள் மற்றும் பழக்கம் உடையவர்கள் மட்டும்தான் தெரிந்துகொள்ள முடியும். மாவட்ட அளவிலே ஆங்காங்கே உள்ள மாவட்ட ஆட்சி ஒன்றிய அலுவலர்கள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் அரசு வழங்குகின்ற சலுகைகள் மற்றும் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவிகளை அவர்கள் பெறுவதற்குரிய வகையில் விளம்பரப்படுத்துவதற்கான முயற்சிகள் இப்போதும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அதனை விரிவாக்கி கிராமப்புற மக்கள் தெரிந்துகொள்கின்ற வகையில் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு செயல்படுத்துகின்ற திட்டங்கள் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தப்படுவதாகச் சொல்லுவார்கள். எந்தெந்தப் பத்திரிகைகளிலே அப்படி விளம்பரப்படுத்தப்படுகின்றது? முரசொலி, எதிரொலி போன்ற பத்திரிகைகளுக்கு இப்படிப்பட்ட விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசினுடைய ஆணைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றதா என்பது கேள்வி. எனவே அதைப்பற்றி தெளிவுபடுத்திக்கொண்டிருக்கிறேன். வேறு தகவல்கள் வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கென்று தனி கேள்வி எழுப்ப வேண்டும்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஏழைகளுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. ஆனால் விளம்பரம் செய்யவேண்டும் என்றால் பணம் கொடுத்துச் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கின்றது. ஆனால் உத்தியோகங்கள் பற்றி விளம்பரங்கள் செய்கின்றபோது எத்தனை உத்தியோகங்கள் இருக்கின்றன, அவற்றிலே மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோருக்கு எத்தனை கொடுக்கப்படும் என்கின்ற குறிப்புகளைப் போடாமலே அரசாங்க அதிகாரிகள் விளம்பரம் செய்கின்றார்கள். எனவே அப்படிச் செய்கின்றவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய வழிவகைகளைச் செய்வதற்கு வருங்காலத்திலாவது அரசாங்கம் முன்வருமா ?

1983 நவம்பர் 15]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே அரசின் பதவிகளுக்காக விண்ணப்பங்களை எதிர்நோக்கி வெளியிடப்படுகின்ற விளம்பரங்களில் எந்தெந்தப் பிரிவினருக்கு அந்த விளம்பரங்கள் என்று தெளிவாகக் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அப்படி எத்தனை பதவிகள் என்ற விவரங்கள் அந்த விளம்பரத்தில் சேர்க்கப்பட வேண்டுமா, சேர்க்கப்பட்டு வருகின்றதா என்பது தெரியவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை சம்பந்தப்பட்ட துறைக்கு செய்திக்குறை அனுப்பி அதைப் பரிசீலிக்கச் செய்யும்.

திரு. நோவல்நம்பி: தலைவர் அவர்களே, அரசினுடைய சலுகைகளும், அளிக்கப்படுகின்ற ஆணைகளும் பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்யப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விளம்பரங்களில் எந்த ஆணை மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று முதல் ஆணை நிறைவேற்றப்படுகின்றதோ அந்த ஆணையை விளம்பரப்படுத்துகின்ற பத்திரிகைகள் விமர்சனம் செய்வதற்கு பதிலாக, அவற்றிற்கு வியாக்கியானம் செய்வதற்குப் பதிலாக சேவலப்படுத்துகின்ற நிலைமை இருக்கின்றது. அதாவது ஒரு பக்கத்திலே அந்த ஆணையைப் பற்றிய விளம்பரத்தைப் போட்டு, அதே பக்கத்திலே அந்த ஆணையைக் கேவலப்படுத்துகின்ற அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு அப்படிப்பட்ட விளம்பரங்களை எதிர்காலத்திலே கொடுக்காமல் இருக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள். கேட்ட கேள்வியினைத் தொடர்ந்த கேள்வி இது. ஆகவே உறுப்பினர் அவர்கள் தனியாக இதைப்பற்றி கேள்வி கேட்டால் அதனுடைய நடவடிக்கைகளைப் பற்றி தெளிவாக பதில் சொல்ல முடியும்.

இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண் 159 திரு. ஏ. பெரியசாமி : மாண்புமிகு செய்தி அமைச்சர் சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து விடையளிப்பாரா –

(அ) இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மேலும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இதற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (அ) இராமேசுவரம், மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய சுற்றுலா இடங்களை மேம்படுத்த பெரும் திட்டங்கள் முறையே ரூ. 28 கோடி, ரூ. 6 கோடி மற்றும் ரூ. 16 கோடி செலவிட தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இந்த திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்றாலும் இத்திட்டங்களை நிறைவேற்ற நிதி உதவி கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவி இன்னும் கிடைக்கப் பெறாத நிலையில் மாநில அரசின் பல்வேறு துறைகள் மூலம் இத்திட்டங்களின் பகுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. செ. நெல்லை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, நம் முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நிதி ஒதுக்கீடு குறைவாகச் செய்யப்படுகிறது என்பது உண்மையா இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து கிட்டத்தட்ட 50 கோடி அளவிற்கு உதவி கேட்டு இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே அந்த 3 சுற்றுலாத் தலங்களைப் பொறுத்தவரையில், வெளிநாட்டுப் பயணிகள் நிறைய வந்து போகிற இடமாக இருக்கிற காரணத்தால், நமக்கு அந்நியச் செலவாணி அதிகம் கிடைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசின் உதவியை வலியுறுத்திப் பெற அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலாத் துறையின் கீழ் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கும் திட்டத்தை மத்திய அரசு இப்போது வைத்துக் கொண்டு இருக்கவில்லை. மத்திய அரசின் சுற்றுலாத் துறை மூலமாக அவர்கள் போடுகின்ற திட்டங்களைத்தான் அவர்கள் அந்தந்த மாநிலங்களில் நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள் அல்லது அவர்கள் ஆரம்பித்து நடத்தி வருகின்ற இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலமாக சில திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, மாநில சுற்றுலாத் துறைக்கு என்று எந்தத் தலைப்பிலும் அந்த நிதி ஒதுக்கீடு வருவது இல்லை. நமது மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சி அடையவேண்டும் என்பதற்காக, நமது மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் துறையே சில திட்டங்களை உருவாக்கி, மைய அரசுக்கு அனுப்பி, மைய அரசின் உதவியைக் கேட்டு இருக்கிறோம். அப்படி மத்திய அரசு ஒத்துழைப்பாக நிலையில் இருந்தால், உலக வங்கி போன்ற உலகப் பொருளாதார நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்றுத்

தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். 2, 3 திட்டங்களுக்காக அந்த வேண்டுகோள் மைய அரசுக்கு வைக்கப்பட்டு, அது தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, மாமல்லபுரத்தில் சுற்றுலா வளர்ச்சி செய்வதற்காக பெரிய அளவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருந்தாலும், மைய அரசு ஒரு குறிப்பிட்ட சில திட்டங்களுக்காகவாவது சுமார் 3 கோடி ரூபாய் திட்டங்களையாவது அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் 3 ஆண்டுகள் வற்புறுத்திய பிறகு, ஒரு 20 லட்ச ரூபாய் அளவிற்கு ஒலி-ஒளி காட்சி அமைப்பதற்காக நிதி உதவி வழங்க முன்வந்தார்கள். மத்திய சுற்றுலாத் துறை அதை வழங்க முன்வந்தது ஆனால் அதை மத்திய தொல் பொருள் ஆய்வுத் துறை வேறு வகையில் தடுத்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்த உதவி கூட இதுவரையில் கிடைக்கவில்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இரண்டாண்டுகளுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் இதே மாமன்றத்தில் பதில் சொல்கிறபோது, உலகப் பிரசித்த பெற்ற மியாமி கடற்கரை போன்று ராமேஸ்வரம் அபிவிருத்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். அங்கே தினசரி வெளி நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். யாத்திரிகர்கள் வருகிறார்கள். ஆகவே, அதை அபிவிருத்தி செய்வதற்கு உடனடியாக அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் 28. கோடி. ரூபாய் செலவில் 3 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு நாம் மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசு அந்தத் திட்டம் பற்றி எந்தவிதமான பதிலும் சொல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறது. என்றாலும், கடந்த இரண்டாண்டு காலமாக நம்முடைய மாநில அரசின் சார்பில் பல்வேறு துறை களின் கீழ் சுமார் 50 லட்ச ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது. இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கிற நிதியாண்டில் சுமார் 25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுற்றுலாத்துறை ஊராக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை மற்றும் போக்குவரத்துத் துறை என்ற பல்வேறு துறைகள் மூலமாக அங்கே அடிப்படை வேலைகள் தொடங்கி நடத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜே. ரெமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான சுற்றுலாத் தலம் கன்னியாகுமரி. அங்கே வருகின்ற பயணிகள் குடிப்பதற்கு குடிநீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதைப் போக்குவதற்கு, சுத்தமான குடிநீர் கிடைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, குடி தண்ணீர் கொடுப்பதற்காக அந்தத் திட்டத்தையும் இந்தத் திட்டத்தோடு இணைத்து இருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் வரையில் காத்திருக்காமல் உடனடியாக குடிதண்ணீர் திட்டம் அங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அந்த உணர்வை அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கலெக்டர் அவர்களுக்கும் தெரிவித்து, பொறுப்பாளர்களுக்கும் தெரிவித்து, அவர்களுக்கு (டாஸ்வீர்) கொள்ளும்படி அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு வெளிநாட்டுப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தால் அந்த அந்த இடத்தில் இந்திய நாட்டில் இருக்கிற ஒவ்வொரு மாநிலத்தினுடைய நடனம், நாட்டியம் போன்ற கலைச் சாரங்களைத் தெரிவிப்பதற்காக, பயணிகள் தெரிந்து கொள்வதற்காக பெரிய அரங்குகள் அமைத்து, கலைநிகழ்ச்சிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை முதலிலே நிறைவேற்றியாக வேண்டும். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்ட அமைப்புகளை அதற்குப் பிறகு மெல்ல மெல்ல மெண்டு திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை ஏட்டிலே மாத்திரம் புரத்திலே கூட திறந்த வெளி அரங்காகியாகும் ஒன்று அமைக்கப் பட ஆணையிடப்பட்டு, வேலை நடந்து வருகிறது. கன்னியாகுமரியிலும் இப்படிப்பட்ட ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்ற திட்டங்களை வகுத்திருக்கிறோம். அடிப்படை வசதிகளை நிறைவேற்றிய பிறகு இந்தத் திட்டங்களை நிறை வேற்றும் முயற்சியில் அரசு ஈடுபடும்.

இலங்கையில் தமிழ்த் தொழிற்சாலை வளர்ச்சிக் குழுவினரின் முதலீட்டை ஊக்குவிக்க நடவடிக்கை

*வினா எண். 160. —திரு. கி. ராஜாராம் நாயக்கர் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இலங்கையில் ஏஜென்டுகளை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

1983 நவம்பர் 15]

(இ) எப்பொழுது முதல் நியமனம் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம். (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் நிர்வாகக் குழுவின் நிர்மாணப்படியும் இலங்கை சுற்றுலா அபிவிருத்திக் குழு அலுவலருடன் கலந்து பேசியும் இலங்கையில் பொது விற்பனை முகவர் நியமிப்பது பற்றிய மனு ஒன்றை இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது. அந்த மனு மத்திய அரசின் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழக அரசுக்கு மேல் நடவடிக்கைக்காக குறிப்பு அனுப்பியுள்ளது. அது இப்போது பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. கு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நான் இந்தக் கேள்வியைப் போடும்போது இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் சென்று கொண்டிருந்ததால் முகவர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருந்தேன். இப்போது நீங்கள் முகவர்களை நியமித்தால் கூட சுற்றுலாப் பயணிகள் வரமாட்டார்கள். வேறு நாடுகளில் இப்படிப்பட்ட முகவர்களை நியமிக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஓராண்டுக்கு முன்பாகவே மலேசிய நாட்டிலும் சிங்கப்பூரிலும் முகவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் காரியங்கள் நடைபெறுகின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முகவர்களை நியமித்தால் பயன் இருக்குமா என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மூலம் வெளிநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் திட்டம்.

*வினா எண். 161 —திரு. கெ. செல்வலை : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் வெளிநாடுகளுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் வருடத்திற்கு எவ்வளவு டன் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் ?

[1983 நவம்பர் 15

(இ) அதனால் அரசுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம் (ஆ) தேயிலைச் சந்தையில் அடிக்கடி விலையில் மாற்றம் ஏற்படுவதாலும், ஏற்றுமதி வியாபாரம் எளிதில் மாறுபாட்டுக்கு இடந்தருவதாலும், வருடத்திற்கு எவ்வளவு டன் ஏற்றுமதி யாகுமென்று சொல்வதற்கில்லை. ஆனால், 30-9-1982 முதல் 5-2-1983 வரை ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை 53,360 கிலோ ஆகும்.

(இ) இதன் மூலம் கிடைத்துள்ள மொத்த வருமானம் ரூ. 11,28,458.54.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, நாம் இதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றபோது வெறும் தேயிலைத் தூளை மட்டுமே அனுப்புகிறோம். ஆனால் சில தனியார் நிறுவனங்கள் நமது தேயிலையோடு அஸ்ஸாம் தேயிலையையும் பிளன்டிங் செய்து, ஏற்றுமதி செய்து, அதிக இலாபம் ஈட்டுகிறார்கள். நாமும் அதைப் போன்று பிளன்டிங் யூனிட்டுகளை ஆரம்பித்து, நமது தேயிலையை பிளன்டிங் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதிக இலாபம் ஈட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்போதுதான் தேயிலைத் தூளை ஏற்றுமதி செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். தொடர்ந்து இதில் கிடைக்கின்ற அனுபவங்களைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. உசேன் : தலைவரவர்களே, தமிழக தேயிலைத் தோட்டக் கழகம் மூலம் வெளி நாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதோடு, நீலகிரியில் 11 கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகள் உள்ளன. அவை மட்டுமல்லாமல் 'டான்டி- Tanti என்ற ஸ்தாபனமும் உள்ளது. இதை எல்லாம் கருத்திற் கொண்டு அங்கே உற்பத்தியாகும் தேயிலையையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய வனத்துறை பொறுப்பிலே இருக்கின்ற தேயிலைத் தோட்டங்களிலே இருக்கின்ற தேயிலையை இப்போது 'இன்கோ' என்று அழைக்கப் படுகின்ற அந்தக் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தான் வழங்கிக்

1983 நவம்பர் 15]

கொண்டு இருக்கிறோம். தேயிலைத் தோட்டக் கழகம் தனியாக அவர்கள் பொறுப்பிலே இயங்குகின்ற தோட்டங்களிலிருந்து தயாரிக்கின்ற தேயிலைத் தூளை இப்போது நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். இப்படி அரசின் பொறுப்பிலே இயங்குகின்ற நிறுவனங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு கூட்டு முயற்சியிலே இந்தத் தேயிலையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அந்தக் கருத்து பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அருணாசலம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு எத்தனைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தேயிலைத் தொழிற்சாலைகளில் இலங்கை அகதிகளை பணியில் அமர்த்த அரசு முன் வரும என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

மணப் பயிர்களுக்கு பயிர்ப் பாதுகாப்பு வசதியை விஸ்தரிக்கும் திட்டம்.

*வினா எண். 217—திரு வே. இரா. ஐயாமன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கரும்பு, பருத்தி, திராட்சை, வாழை போன்ற பணப் பயிர்களுக்குப் பயிர்ப்பாதுகாப்பு (Crop Insurance) வசதியை விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில், திராட்சை, கரும்பு, வாழை போன்றவைகளுக்கு எல்லாம் தற்சமயம் அரசின் செயற்குறிப்பில் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் திராட்சைக்கு ஒரு மழை பெய்துவிட்டால் அந்தப் பிஞ்சுகள் அப்படியே உதிர்ந்து விடுகின்றன. அதேமாதிரி வாழைக்கு முடிக்கொத்து நோய் வந்து பயிர்கள் பூராவும் அழியக் கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட பயிர்களுக்காவது இந்த கிராப் இன்சூரன்ஸ் (Crop Insurance) திட்டத்தை விரிவுபடுத்தி, அந்த இன்சூரன்சுக்கு எவ்வளவு தொகை கட்ட வேண்டும் என்று சொல்லி, இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 15

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்ப்பாசனப் பரப்பு மற்றுமோர் திட்டம் மட்டில் இந்தியாவிலேயே முதல் முதலாக நடைமுறைப்படுத்தி அதில் வெற்றியடைந்த மாநில அரசின் பாராட்டுதலைப் பெற்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். This is only a pilot Scheme இந்தத் திட்டத்தை முதன் முதலாக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. முதல் கட்டமாக, முதல் போகம், இரண்டாம் போகம் என்று ஆண்டுக்கு 32 வட்டங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறது. மானாவாரியில் உறுப்பினர் எண்ணுகின்றதைப் போலத்தான், அரசுக்கு மட்டுமல்ல நெல்லையிலே தென்னை விவசாயிகளுக்கு உறுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுடைய தமிழகத்தில், உழவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்ற காரணத்தால், அந்த நெல்லால் இன்றைக்கும் பாரதமே என்று இந்தியா என்று சொல்லுகின்ற அந்த வகையில் நிலக்கடலை திராட்சை, வாழை, மரத்தி போன்ற பயிர்களைப் பயிரிடுகின்ற அந்த உழவர் பெருமக்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் நிலக்கடலைக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துமாறு அரசு ஒப்புதலை அளித்திருக்கிறது. திராட்சை, வாழை போன்ற பயிர்களுக்கு அவர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். முடிவு அவர்கள் வசமிலே இருக்கிறது. நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. எஸ். எஸ். வி. திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்ப்பாசனப் பரப்பு மற்றுமோர் திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சமாகக் குறிப்பிட்டு ஆண்டு கடும் வறட்சி திருந்த காலத்தில் 32 வட்டங்களில் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்டது, என்று பெருமையுடன் கள். கழிந்த ஆண்டு வறட்சியில் எந்த அளவுக்கு விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்கள்? அதற்கு எவ்வளவு பிரீமியம் வளவு ? விவசாயிகளுக்கு அளித்த நட்ட ஈட்டுத் தொகை என்பதைச் சொல்ல இயலுமா ?

மாண்புமிகு திரு பி. பொன்னையன் : தலைவர் அவர்களே உழவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 6,059 உழவர்களுக்கு நெல்லில் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய வகையில் 9 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய்களை அரசு செலவு செய்திருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழை போன்ற பணப் பயிர்களுக்கு அதிகமாக செலவு செய்து பயிர் செய்யவேண்டியிருக்கிறது. திடீரென்று

1983 நவம்பர் 15]

நோய்களினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ மிருந்த சேதம் ஏற்பட்டு முழுமையாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் நிர்க்கதியாக நிற்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைக் கணக்கில் கொண்டு பாதிப்பிற்கு அடைந்த உழவர்கள் வாழ்க்கு விசேஷமாக இந்தப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அமல் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா ?

(குறிப்பு : 10-00)

மாண்புமிகு பொன்னையன் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிப்பு பிரேரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : தலைவர் அவர்களே, [illegible] பயிர்களுக்கு, திராட்சைக்கு [illegible] வாழைக்கும் [illegible] பயிர் பாதுகாப்பு [illegible] அமைச்சர் அவர்கள் [illegible] விவசாயிகளுக்கு [illegible] அதிகாரிகளுக்கு [illegible] அதிகாரிகளுக்கு [illegible] விவசாயிகளுக்கு [illegible] திராட்சை, வாழை [illegible] திட்டத்தை [illegible] பரிசீலனை [illegible] அதற்கு [illegible] வேண்டும் என்று முயற்சிகளை [illegible] அனுப்பியிருக்கிறோம்.

மத்திய கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு குறுகிய கால கடன் வழங்கும் நடவடிக்கை.

*கேள்வி எண். 218. திரு. [illegible] வேலன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து வினாக்களுக்கு வாய்மொழி அளிப்பாரா—

(அ) மத்திய வங்கியில் இருக்கும் சிறைவாகிகட்குத் தரமான பயிர்க்கடன், நகைக்கடன் செய்யும் பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் அவர்கள் விடுதலையானவுடன் அது சம்பந்தமான தொழிற் சாலைகளில் அவர்கட்கு வேலை கிடைக்க வழிசெய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு பி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) விடுதலைக்குப்பின் அவர்களுக்குத் தேவையான உதவிகள் அளிக்கப்படுகின்றன.

[1983 நவம்பர் 15

திரு இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நல்ல பயிற்சி பெற்ற சிறைவாசிகள் வெளியிலே வரும்போது அவர்களுக்கு வேலைகளை மீண்டும் தரும்போது, வயது, படிப்பு போன்ற விதிகளைத் தளர்த்தி அவர்களுக்கு உதவி செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இ. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பயிற்சிகளை சிறையில் இருக்கின்ற கைதிகளுக்கு அளிக்கின்றபோது அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு அவர்கள் செல்ப்-எம்ப்ளாய்மெண்ட் என்று சொல்லக்கூடிய சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில் செல்ப் எம்ப்ளாய்மெண்ட் திட்டத்தை நாம் ஈடேற்றி வருகிறோம். அதை ஈடேற்றுகின்றபோது, அவர்களுக்கு வயது போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை.

திரு இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைக் கைதிகள் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று சிறையில் இருக்கும்போது பல்வேறு சிறப்பான பயிற்சிகளைப் பெற்ற அவர்கள் வெளியிலே வரும்போது—பல தொழிற் சாலைகளில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்ற இந்தக் காலத்தில் அதை நிரப்புவதற்கு, தேவைப்பட்டால் பயிற்சி பெற்ற அந்த சிறைவாசிகளை அங்கே அனுப்பி அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இ. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, விடுதலை பெற்று வருகின்ற கைதிகள் அவர்கள் நன்னடத்தையோடு திரும்பி வருகிறபோது அவர்கள் குற்றவாளிகளாக உள்ளே இருந்து, வெளியில் வருகின்றவர்கள் தொடர்ந்து குற்றவாளிகளாக இருக்க வேண்டும். வாழவேண்டும் என்பது அரசினுடைய நோக்கம் அல்ல. அதற்காக, மறு வாழ்வு திட்டத்தை நாம் தருகிறோம். அந்த மறு வாழ்வு திட்டத்தில் நாம் முழுக்க முழுக்க கொடுக்கின்ற டிரெயினிங் எல்லாம், Carpentary, Tailoring Penyle making, toy Making, Painting, Paper Making, and Weaving போன்ற சிறுசிறு குடிசைத் தொழில்களில் அவர்களுக்கு டிரேயினிங் தருகிறோம். அந்தக் கைதிகள் பயிற்சி பெற்று விடுதலை ஆனபிறகு சமுதாயத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் அவர்களை ஈடுபடுத்துகிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் எழுப்புகின்ற பிரச்சினை எழ வாய்ப்பில்லை.

1983 நவம்பர் 15]

திரு. கு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் கைதிகளாக இருந்து அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்து வருப்போது—அவர்களுக்கு தொழில் பயிற்சி தரப்படுகிறது—விடுதலை ஆகி வருகிறபோது, எந்தத் தொழிலில் ஈடுபட்டு திரும்பு கிறார்களோ, அந்தத் தொழில் பயிற்சி பெற்றதற்கான அத்தாட்சி கொடுக்கப்படுவது இல்லை. எனவே அப்படி அத்தாட்சி கொடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பொன்னையன் : தலைவர் அவர்களே, சிறையிலே பயிற்சியைப் பெற்றுவிட்டு வெளியிலே வரும் போது வேலையில்லாமல் திண்டாடக் கூடாது என்பதற்காகத் தான், சென்ற ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த முடிவின் அடிப்படையில் Released Prisioners Rehabilitation Corporation என்ற ஒரு அமைப்பை அரசு அமைக்கநடவடிக்கைகள் எடுத்து வருவதை ஏற்கனவே இந்த அவையில் சொல்லி யிருக்கிறோம். எனவே அது ஈட்டுகின்றபோது அவர்களுக்கு எந்தப் பிரச்சினையையும் இல்லாத நிலை ஏற்படும். சர்டி பிகேட் தற்போது அவர்களுக்குத் தரப்படுகிறது.

திரு. ஜே. கி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நன்னடத்தையோடு சிறைகளில் நடந்து கொள்கின்ற அந்தக் கைதிகளுக்கு பரோலில் விடுவிக்கின்ற போது, அதிகமாக நீட்டிப்புத் தருவதற்கு, அவர்களை உற்சாகப்படுத்துகின்ற விதத்திலே அங்கே இருக்கின்ற நடைமுறைகள் மாற்றியமைக்கப்படுமா? வெளியிலே வருவோம் என்ற அந்த நம்பிக்கையோடு உள்ளே இருக்கும் போது நன்றாக நடந்துகொள்வதன் மூலமாக, சிந்தித்துப் பார்த்து செய்கையை மாற்றுகிற விதமாக வெளியிலே வந்தால் வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற விதத்திலே அது மாற்றியமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் இருக்கின்ற கைதிகள் மறு வாழ்வு பெறவேண்டும் என்ற நோக்கோடு அளிக்கப்படுகின்ற பயிற்சிகளிலே மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் தற் போது ஈடேற்றப்பட்டு வருகிறது. நன்னடத்தையோடு செயல் படுகின்றவர்கள் விடுதலை பெறுவதிலே . அதேபோன்று

[1983 நவம்பர் 15

குறிப்பிட்ட காலகட்டத்தை, 5 ஆண்டுகள் கடந்தபிறகு பரோலில் வெளியிலே வருவதிலே அவர்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. பயிற்சி முடித்தவுடன் அவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதில் அவர்களே பிக்க தனிக்கவனம் செலுத்தி இருக்கின்ற காரணத்தால் இதிலே பிரச்சினை எழுவதில்லை.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டம்

வினா எண். 219 — திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடமாடும் நீதி மன்றம் செயல்பட அரசு நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : பொதுத் தீவிரவாத மற்றும் போக்குவரத்துக் குற்றங்களை [General Crimes and traffic offences] விசாரிக்க, இரு நடமாடும் நீதிமன்றங்கள் சென்னை யில் இயங்கி வருகின்றன. மதுரையில் ஒரு நடமாடும் நீதிமன்றம் இயங்கி வருகிறது. மேலும் குடிமையியல் வழக் குகளை Civil Offences விசாரிக்க இரு நடமாடும் நீதிமன் றங்களை சென்னையில் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. கோயம்புத்தூரில் தற்போது செயல்பட்டு வரும் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்ற(IV)த்தை மீண்டும் நடமாடும் நீதி மன்றமாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அரசின் பரிசீலனை யில் உள்ளது. திருச்சியில் நடமாடும் நீதிமன்றம் ஏற்படுத்து தல் குறித்து செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏனைய மாவட்ட தலைநகரங்களில், நடமாடும் நீதிமன்றம் அமைப்பது, குறித்த வேண்டுகோள்களை உயர் நீதிமன்றத்தை கலந்து ஆலோசித்து அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத் தோறும் நடமாடும் நீதிமன்றம் துவக்குவதற்கு, உயர்நீதி மன்றத்தை கலந்தாலோசித்து கவனிக்கப்படும் என்று கூறி னார்கள். மாவட்ட தலைநகரங்களிலே உள்ள நீதி மன்றங் களில் வழக்குகள், பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிற காரணத்தால், போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட சில வழக்குகளைத் தவிர, மற்ற வழக்குகள் எல்லாம் நீதிமன்றங்

1983 நவம்பர் 15]

களில் தேக்கங்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், அரசே முன் வந்து எல்லா மாவட்ட தலைநகரங்களிலும், நடமாடும் நீதிமன்றங்களை அமைக்க ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கிற வழக்குகளின் தன்மை வேறு. நடமாடும் நீதிமன்றங்கள் மூலமாக மக்களுக்கு பரி காரம் காண மேற்கொள்ளப்படுகிற வழக்குகளின் தன்மை வேறு. இரண்டையும் ஒப்பிட முடியாது. நெரிசல் அதிக மாக இருக்கிற பகுதிகளில் சாலை விதிகளை மீறுகின்ற பெட்டி அப்பொண்ஸ் என்று சொல்லப்படுகிற சிறு சிறு குற்றங்களை விசாரிக்கத்தான், பெருநகரங்களாகக் கருதப் படுகிற, சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 மாநகரங்களிலும், நடமாடும் நீதிமன்றம் வேண்டும் என்று முடிவுக்கு வந்து, முதற்கண், சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு பெருநகரங்களிலும், நடமாடும் நீதிமன்றங்களை அமைக்க, இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. கோவை மற்றும் திருச்சி ஆகிய பெருநகரங்களில், நடமாடும் நீதிமன்றங்களை அமைக்கும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்துடன் கலந் தாலோசிக்கப்பட்டு வருகிறது. முதன் முதலாக இந்த அரசு தான் இதை நடைமுறைப்படுத்தி வருகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற இந்த தலைநகரங்களில் நெரிசலின் காரணத்தைக் கொண்டு, நடமாடும் நீதிமன்றங்கள் துவக்கப்பட்டு, அவை நடைமுறை யில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தே இப்போதிருக்கும் அதாவது நடமாடும் நீதிமன்றங் களிலே தீர்ப்பு வழங்கக்கூடிய வழக்குகளின் தன்மையை இன்னும் அதிகமாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகளின் தன்மை மாறுகின்றபோது, That becomes a trial டிரையல் என்று வரு கிறபோது, சாட்சியங்களை வரவழைத்து விசாரித்து, குறுக்கு விசாரணை, வழக்கறிஞர்களின் ஆர்க்யுமென்ட்ஸ், கவுன் டர் ஆர்க்யுமென்ட் ஸ் என்கிற நிலைமை வந்து விடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவது போல் பெரும் வழக்குகளை நடமாடும் நீதி மன்றங்களில் மேற்கொள்ளப்படக் கூடாது என்று சொல்ல

விரும்புகிறேன். சிறு சிறு வழக்குகளுக்கு on the Spot delivering the Judgement என்ற முறையில் தான் நடமாடும் நீதிமன்றங்கள் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தும்.

திரு. பி. எம். தங்கவேலராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நீதிமன்றம் வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக திருச்சியிலே ஒன்று இருக்கிறது. அந்த நீதிமன்றத்திற்கு வருவதற்கு, அரிசன மக்கள் 60 மைல், 70 மைல் தூரம் வரவேண்டியிருக்கிறது. பக்கத்தில் 10, 15 மைல் தூரத்தில் உள்ள கோர்ட்டுகளை விட்டு விட்டு, திருச்சி போன்ற நகரங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே இதுபோன்ற கேஸ்களையும் நடமாடும் நீதிமன்றங்கள் மூலம் விசாரணை செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னல்களுக்கு ஆளாகின்றபோது, அவர்களுக்கு விடுதலை தர, அவர்களுக்காகவே ஒரு நடமாடும் நீதிமன்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்கிற திட்டத்தை முதன்முறையாக நடைமுறைக்கு இந்த அரசுதான் கொண்டு வந்திருக்கிறது. மைய அரசின் உதவி பெற்று, இதை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். தற்போது பல இடங்களில் நடமாடும் நீதிமன்றங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக துவக்கப்பட்டு, இன்னும் பல இடங்களில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத் தலைநகரங்களில் முதன்மையாகக் கொண்டு வரவேண்டும் என்றும் அடுத்த கட்டமாக வட்ட அளவிற்குச் செல்ல வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய திட்டம்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே ஒரு சின்ன விளக்கம். 1976லேயே நடமாடும் நீதிமன்றங்களைப் பார்த்தாக நாகவல். ஆனால் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில்தான் முதல் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது, 4 தலைநகரங்களில் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்களே, அது உண்மையா?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய முதல் பதிலைக் கவனிக்க வில்லை என்று கருதுகிறேன். சென்னையில், போக்குவரத்துக்

குற்றங்கள்மற்றும் பொதுக் குற்றங்கள் ஆகியவைகளை விசாரிக்க இரு நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு, செயல் பட்டு வருகின்றன. இது தவிர குடியமையியல் வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையில் மேலும் இரு நடமாடும் நீதி மன்றங்கள் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. மாவட்டத் தலைநகரங்களிலே நடமாடும் நீதி மன்றங்கள் இந்த ஆட்சியிலேதான் முதன்முறையாகக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

திரு. பி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுவதால் சென்னை நகரத்திலே போக்கு வரத்து விதிகளை மீறுகிற குற்றங்கள் குறைந்துள்ளது உண்மையா ? போக்குவரத்து விதிகளை மீறியதற்காக எத்தனை குற்றங்களில் தண்டனை வழங்கப்பட்டது ? இதன் மூலமாக விதிக்கப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : தலைவர் அவர்களே, போக்குவரத்து சாலை விதிகளை மீறுகிற குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்தான் தற்போது என்னிடத்திலே இருக்கிறது. எந்த அளவுக்கு அந்தக் குற்றங்கள் குறைந்து இருக்கிறது என்ற தகவல் தற்போது என்னிடத்திலே இல்லை. அதற்கு தனி வினா போட வேண்டும். 1983 ஆம் ஆண்டு இந்த நடைமுறையை ஆரம்பித்தற்குப் பிறகு 12,405 மோட்டார் வாகனச் சட்ட விதிகளை மீறியதற்காக குற்றங்களுக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. சென்னை போக்குவரத்து விதிகளை மீறிய நிறுவனங்களுக்காக 4,014 வழக்குகள் தொடரப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. சென்னை நகர காவல் துறை சட்டத்தின்படி, பெட்டி அபன்சஸ் என்று சொல்லப்படுகிற சிறு குற்றங்கள் எல்ற வகையில் 2,146 குற்றங்கள் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப் பட்டது. அபராதத் தொகை ரூ. 2,41,060 அவற்றில் வசூலிக்கப் பட்டது.

மத்திய நீர் கலப்படத் தடுப்புக் கட்டுப்பாடு வாரியம் அறிவித்துள்ள வழிமுறைகள்.

*வினா எண் 175 - திரு. கோ. அழகுவேலு : மாண்புமிகு கற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மத்திய நீர் கலப்படத் தடுப்புக் கட்டுப்பாடு வாரியம் சர்க்கரை ஆலைகளின் கழிவுநீர், ஆறுகளிலும், நீர் நிலைகளிலும் போய் விழாமல் தடுப்பதற்கான நடவடிக்கையை 1982 ஆம்

[1983 நவம்பர் 15

ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் மேற்கொள்ள வேண்டுமென்றும், இல்லையெனில் கருப்புப் பிழிதல் தடை செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்ட அறிவிப்பு கழிவு நீரைச் சுத்திகரிக்கும் நடவடிக்கை மற்றும் மொலாசஸ் தேக்கி வைக்கும் போதுமான தொட்டிகள் கட்டுவது என்ற இரண்டு பிரச்சினைகளைப் பற்றியதாகும். சர்க்கரை ஆலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நடவடிக்கை எடுப்பதை தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டு வாரியம் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. மொலாசஸ் தேக்கி வைக்கும் எக்குத் தொட்டிகளைக் கட்டும் வரை திறந்த மண்குழிகளைப் பயன்படுத்தலாம் என்ற சலுகையை மத்திய அரசு 10-11-1982 இல் அறிவிப்பு வெளியிட்டதால் கருப்பு பிழிதலைத் தடை செய்யும் பிரச்சினை எழ வில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள கரும்பாலைகளில் கழிவுநீர் எத்தனை ஆறுகளிலே மற்ற நீர்நிலைகளிலே கலக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு மத்திய அரசு விதித்திருக்கிற அக்டோபர் 1982 என்பது முடிந்து ஓராண்டு ஆகிறது. அதற்குப் பிறகும் கழிவு நீர் ஆறுகளிலேயும் மற்ற நீர்நிலைகளிலேயும் கலக்கக் கூடிய நிலைமையை தடுத்து நிறுத்துவதற்கோ அல்லது அவர்களாகவே தடுத்துக் கொள்வதற்கோ தீவிரமாக நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பெரிய தொழிற்சாலைகளில் 21 தலைவர் அவர்களே, இருக்கிறது. அந்த 21 இடங்களிலும் அந்த நிலை கட்டுப்பாடுகள், முதலில் அவர்கள் கழிவு நீரை சுத்தம் செய்ய வில்லையென்றால், கருப்பு பிழிதலை தடை செய்ய உத்திரவைப் போட்டார்கள். ஆனால் மத்திய அரசு அவர்களை கவே ஒரு வழியைச் சொல்லி உடனடியாக கழிவு நீரைச் சுத்தம் செய்வதற்கு எற்பாடு இல்லையென்றாலும் குழிகளைத் தோண்டி அந்த கழிவு நீரை தேக்கி வைக்க வேண்டு மென்று சொல்லிவிட்டார்கள். அதனால் குழிகளைத் தோண்டி வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் நிச்ச யம் பல இடங்களில் நீர் கெட்டுக் கொண்டு வருகிறது. அதனால்

1983 நவம்பர் 15]

கட்டுப்பாட்டு வாரியம் வேகமாகப் பரிசீலனை செய்து அந்தனை பேர்களுக்கும் அறிவிப்புக் கொடுத்து துரிதமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஆற்றிலே தண்ணீரை விடுவது, ஆங்காங்கு மண் குழிகளைத் தோண்டி தண்ணீரைத் தேக்குவதன் மூலமாக பக்கத்திலே உள்ள கிணறுகள் அல்லது நிலங்கள் பூராவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? எட ஆற்காடு மாவட்டத்திலே தோல் பதனிடும் தொழிற்சாலையில் அந்த மாதிரி நடக்கிறது. இதற்காக தனி இலாகாவை நிர்வகிக்க அமைச்சர் வந்திருக்கிற காரணத்தினாலே துரிதமாக நடவடிக்கை எடுத்து மக்களுக்கு இடைஞ்சல் உண்டாகாமல் தடுப்பார்களும் நோய் உண்டாகாமல் தடுப்பதற்கும் அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. அழகர்சாமி அவர்கள் சொல்கிற யோசனையையும், ஆர்வத்தையும் ஏற்று அதற்கான நடவடிக்கையிலேதான் இந்த வாரியம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகள், கரும்பு ஆலைகள், பேப்பர் ஆலைகள் இம்மாதிரி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆங்காங்கே ஆறுகளிலும் அல்லது அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி குழி வெட்டி அதில் நிரப்பினாலும் அதனால் ஏற்படும் நாற்றத்தால் பக்கத்தில் இருக்கக் கூடிய கிராம மக்கள் அங்கே வசிக்க முடியாமல்லை. இன்னைக்கு அமைச்சர் அவர்கள் அலோசனைக் கூறி கடிதம் எழுதியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இந்த ஆலோசனைகளை எல்லாம் எந்தெந்த கால கட்டத்தில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே உடனடியாக இம்மாதிரி உள்ள நிர்வாகத்தினரின் மீது நடவடிக்கை எடுக்கும் முறையில் அவர்கள் லைசன்ஸை நிறுத்தி வைத்து அதற்கு பரிகாரம் காணுவதற்கு இப்போது புதிதாக வந்து இருக்கிற சுற்றுப் புறச்சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு போக்குவரத்துத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தீவிரத் தன்மை எனக்கும் இருக்கிறது. நிச்சயமாக நாற்றத்தை ஒழிக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறோம். ஆனால் நாற்றத்தை ஒழிக்கப் போய் தொழிற் சாலையை மூடினால் அங்கே இருக்கக் கூடிய தொழிலாளர்கள் கொடி தூக்கி விடுவார்கள். தொழிலாளர்களுக்காக வருந்துகிறோம் நாம் அந்த நிலையை உண்டாக்கக் கூடாது என்பதால், அரசு

[1983 நவமபர் 15

அவர்களை எச்சரித்து உடனடியாக இதைத் தீர்ப்பதற்கு நட வடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கிறோம். முனைந்து நடவடிக்கை எடுப்பதனால் நிச்சயமாக விரைவில் அதற்கு ஒரு பரிகாரம் கிடைக்கும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தரு கிறேன்.

கடலில் முழுகி முத்து எடுக்கும் தொழிலாளர்களுக்கு ஆக்சிஜன் சிலிண்டர் வழங்கும் திட்டம்.

வினா எண் 176—திரு. டி. மணி : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தூத்துக்குடியில் கடலில் மூழ்கி முத்து எடுக்கும் தொழிலாளர்களுக்குப் பணி நேரங்களின் போது ஆக்சிஜன் கொண்ட சிலிண்டர் தரும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகுதிரு. க. கலைமணி : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் கடலில் மூழ்கி முத்து எடுக்கும் தொழிலாளர் களுக்கு சரியான பாதுகாப்பு இல்லாத காரணத்தால் அவர்களுக்கு விபத்து ஏற்படுவதால் இந்த ஆக்சிஜன் பொருந்திய சிலிண்டர் கொடுத்து அந்த விபத்துக்களை தடுப்பதோடு மட்டும் அல்லாமல் அதிகமான அளவில் முத்துக்களை எடுக்கக்கூடிய வேலையையுமாகச் செய்ய முடியும். ஆகவே, அதை மறுபரிசீலனைச் செய்து அதை விணியோகிக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு தற்போது நடைபெறவில்லை. கடைசியாக 1961-ஆம் ஆண்டு நடைபெற்ற தோடு இலாபகரமாக அங்கே முத்து கிடைக்காததாலும் முத்துச் சிப்பிகள் வளர்ச்சி பெருக்கம் இல்லாத காரணத்தாலும் முத்து குளிப்பு நடைபெறவில்லை. ஆகவே, இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அற்றுத் தொழில் ஆரம்பித்தின்றபோது அந்த சிஸ்டத்தை அமுல் ஆக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

1983 நவமபர் 15]

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துக்குளிப்பு இப்போதே நடைபெறாமல் இருக்கிறபோது அது பற்றி கேள்விக்கு இடம் இல்லாமல் இருக் கிறது.

வேதாரண்யம் ஒன்றியத்திற்காகத் தனியாக மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 177—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்பு மிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் ஒன்றியத்திற் காகத் தனியாக மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண் மென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, திருத்துறைப்பூண்டி கூட்டுறவுச் சங்கத்தோடு இந்தத் தாலுக்காவும் இணைத்து இருப்பதால் வேதாரண்யம் தாலுக்காவுக்காக தனி மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண் டும் என்று அந்த மீனவர்கள் எல்லாம் கேட்டிருக்கிறார்கள். எனவே, அதை அமைப்பதற்கு உடனடியாக அரசு முன்வரா விட்டாலும் இப்போது இல்லை என்று சொன்னாலும் கூட அங்கே நாலுபதி என்ற கிராமத்தில் ஒரு மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் இருந்தாலும் அது மீனவர் அல்லாதவர் தலைவராக இருந்து அது செயல்படாமல் இருக்கிறது. எனவே, அதைக் கருத்தில் கொண்டு புதியதாக உடனடியாக அமைப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்திற்கென தனியாக மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக்கோரி கோரிக்கை பெறப்படவில்லை. ஆனால், வேதாரண்யம் தாலுக்காவிற்கு ஓர் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக்கோரி திரு. சுப்பிரமணியம் என்பவர் 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ஆம் நாள் அன்று தஞ்சை மண்டல மீன் துறை உதவி இயக்கு நரிடம் மனு கொடுத்திருந்தார். அந்த மனுவை பரிசீலித்ததில் அதில் உண்மையான மீனவர்கள் 36 பேர்தான் தொழிலில் ஈடு படுபவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு என்று ஓர் தனியாக சங்கம் அமைப்பது சாத்தியம் இல்லை என்றும்

[1983 நவம்பர் 15

திருத்துறைப்பூண்டி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து அவர்கள் பயன்பெறலாம் என்றும் துறையின் மூலம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருப்பவர் கூட மன்னார்குடியில் இருப்பவராகத்தான் இருக்கிறார்கள். எனவே, இப்படி இருக்கிற நிலைமையை மாற்றுவதற்காகத்தான் வேதாரண்யம் நாலுக்காவில் உள்ள மீனவர்களுக்கு ஏன் என்றால் அங்கே மீனவர்கள் சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கக்கூட மாட்டேன் என்று சொல்கிறார்கள். தனி மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தை அருகுள்ள உள்நாட்டு மீனவர்களைக் கொண்டு அமைக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறது. எனவே, அதை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் நாலுக்காவில் நாலுவேதிபட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அவெரிக்காடு மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்கள் ஏற்கெனவே உள்ளன. எனவே, மூன்றாவது சங்கம் ஆரம்பித்தால் பொருளாதார ரீதியாக சரியாக இயங்காது. எனவே, வேதாரண்யம் நாலுகாவுக்குத் தனி மீனவர் சங்கம் அமைப்பது சாத்தியம் இல்லையென இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தஞ்சை மாவட்டம், ஆறுகாட்டுத் துறையில் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.

* **வினா எண். 220—திரு. எம். எஸ். மாணிக்கம்** : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், ஆறுகாட்டுத் துறையில் மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை மகளிர் கூட்டுறவுமீனவர்கள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு க. கலைமணி : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் இதுவரை (15) பதினைந்து மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1983 நவம்பர் 15]

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்கு உதவி அளிப்பதற்காக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, தமிழ் நாட்டிலே 15 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் என்று இருப்பதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புவதோடு, என்னுடைய தொகுதியிலே கோடியக்கரை, சிறுத்தலைக்காடு ஆகிய இடங்களிலே மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் தேவை என்று மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தால், அவற்றைப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறிப்பிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

திருப்பூர் நகரில் காசநோய் சானிடோரியம் அமைக்கும் திட்டம்

வினா எண் 1532.—**திரு. ஆர். மணிமாறன்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா —

திருப்பூர் நகரில் டி.பி. சானடோரியம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

விடை —

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பூரில் காசநோய் சானடோரியம் திறக்கும் திட்டம் தற்போது இல்லை. கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டதன் விளைவாக திருப்பூரிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையில் காசநோய் மையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

[1983 நவம்பர் 15

கோட்டூர் உயர்நிலைப்பள்ளி ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

2— வினா 1845—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் ஒன்றியம் கோட்டூர் உயர்நிலைப்பள்ளியின் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியை பள்ளி அருகாமையில் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோட்டூர் அரசினர் மாணவர் விடுதிக்குக் கட்டப்படும் அரசு கட்டிடம் பள்ளிக்கு மிக அருகாமையில் உள்ளது. இப்பணி முடியும் தருவாயில் இருப்பதால் தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழக வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

வடஆற்காடு மாவட்டத்தில் கோவில்களுக்கு புதிதாக அறங்காவலர்கள் நியமனம்.

3 வினா 2318—திரு. பி. கூர்நரம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் திருப்பத் தூர் தாலுக்காவில் கோவில்களுக்கு புதியதாக அறங்காவலர்கள் போடப்பட்டு

1983 நவம்பர் 15]

(ஆ) ஆம் எனில் எத்தனை கோவில்களுக்கு போடப் பட்டது ?

(இ) யார், யாரை எந்த எந்த கோவில்களுக்கு போடப் பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதுவரை அறுபத்திரண்டு (62) ஆலயங்களுக்கு அறங் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

@ (இ) விவர அறிக்கை இணைப்பில் தரப்பட்டுள்ளது.

சதுரகிரி மலையிலிருந்து வரும் வெள்ளத்தைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுதல்.

4—வினா 2526—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருவில்லிப்புத் தூர் வட்டம் சதுரகிரி மலையிலிருந்து வரும் காட்டாற்று வெள்ளத் தினால் அரிசன குடியிருப்புகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

பொதுவாக பாசனத்துக்காக பயன்படுத்துகின்ற ஏரி மற்றும் கால்வாய் சம்பந்தப்பட்ட வெள்ள பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் ஆற்றுப் பாதுகாப்பு பற்றிய பணிகள் மட்டும் பொதுப் பணித்துறையினரால் எடுத்து நிறைவேற்றப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில், நலுக்கப்பட்டி கிராமம் அருகில், அர்ஜினா நதியின் கரையில் வெள்ளத்திலிருந்து குடியிருப்புகளை பாது காப்பதற்காக ரூ. 13,500 செலவில் வெள்ளப்பாதுகாப்பு பணி கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பகுதியில் வேறு எந்த வெள்ளப் பாதுகாப்புப் பணியும் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் தற்போது இல்லை.

@ பக்கம் 474–484-ல் இணைப்பு I ஆக அச்சிடப்பெறறுள்ளது.

பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை.

வினா 2586—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மொத்த எண்ணிக்கையில் மாவட்ட வாரியாக பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டதா ?

(ஆ) கூட்டாமைக்கு காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ). : விவரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன—

கூட்டுறவு சர்க்கரை ஆலையின் ஆலையின் பெயர்.	1-9-81 நிலவரப்படி கடைசியாக பொதுக்குழு கூட்டம் நடந்த நாள்.	1-9-1981க்குப் பின்னர் பொதுக்குழு கூட்டம் கூட்டாமைக்குக் காரணங்கள்.
(1)	(2)	(3)
1 தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை.	24-10-1978 ..	தணிக்கை அறிக்கைகள் தாமதமாக பெறப்பட்டதால் பொதுக்குழு கூட்டம் 24-10-1978-க்குப் பின் கூட்டப்படவில்லை. இந்த ஆண்டில் பொதுக்குழு கூட்டம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
2 செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	7-7-1981 ..	..
3 அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை.	27-9-1980 ..	1979-80 ஆம் ஆண்டில் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது. அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் பொதுக்குழு கூட்டம் கூட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
4 வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	6-3-1980 ..	தற்போது நடைபெறும் 1978-79 ஆம் ஆண்புற்கான தணிக்கை முடிந்து அறிக்கை பெற்ற பின் அடுத்த பேரவைக்கூட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.
5 மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	26-9-1981 ..	....
6 தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை.	4-10-1978 ..	தணிக்கை அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கப்பெறாததால் 4-10-1978-க்குப் பின்னர் பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை.
7 ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.	29-9-1977 ..	29-9-1977 ஆம் தேதி பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டது. ஆனால் பேரவைக் கூட்டத்தினை ஒத்திவைப்பதென பேரவையில் தீர்மானிக்கப்பட்டது. பேரவையால் ஒத்திவைக்கப்பட்டதாக தீர்மானம் செய்யப்பட்ட பின்னர் 18-4-1978ல் மீண்டும் கூட்டப்படுவதற்கு அறிவிப்பு செய்யப்பட்டது. அந்த சமயத்தில் விவசாயிகள் போராட்டம் இருந்ததால் பேரவைக்கூட்டம் நடத்தப்படுவது ரத்து செய்யப்பட்டது. தற்போது 1979-80 ஆம் ஆண்டுக்கான

தணிக்கை அறிக்கைப் பத்தி வாள மீருந்து கிடைக்கப் பெற்றவுடன் பேரவைக் கூட்டத்தினைக் கூட்டு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படு கின்றன.

11-9-1977க்கு பின்னர் உள்ள ஆண்டு கணக்கான தணிக்கை முழுமையாக முடிவு பெறாததாலும், பாரிலேனையின் துணை விதித் திருத்தம், ஆலையிலோ பொதுக் இருந்ததாலும் கூட்டம் கூட்டப்படவில்லை. 1982-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக பொதுக்குழு கூட்டம் கூட்ட ஏற்பாடு கள் செய்யப்படுகின்றன.

ஆலையின் 1977-78 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை சட்டத்தில் கிடைக்கப் பெற்றதாலும், 1978-79 ஆம் வருடத் தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் பேரவை யினைக் கூட்ட முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

ஆலையின் 1979-80 ஆம் ஆண்டின் தணிக்கை முடியும் கட்டத்தில் உள்ளது. வுடன் பேரவைக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்படும்.

8 கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க் கரை ஆலை. .. 11-9-1977

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க் கரை ஆலை. .. 30-9-1977

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. .. 9-12-1978

1983 நவம்பர் 15]

திதம்பரம்பட்டியில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம்

6—வினா. 5523—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம் திதம்பரம்பட்டியில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம்எனில், எந்த நிலையில் உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): இத்திட்டத்தை ரூபாய் 7.75 லட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற அரசு செப்டம்பர் 1981-ல் அனுமதி அளித்துள்ளது.

முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மூன்றாவது மருத்துவர் நியமனம்.

7—வினா 5547—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்றாவது மருத்துவர் நியமிக்கப்படுவாரா?

(ஆ) புறநோயாளிகள் நாள் ஒன்றுக்கு எத்தனை பேர் வருகிறார்கள்?

(இ) 1979-80 ஆண்டு மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எவ்வளவு மருந்து விநியோகிக்கப்பட்டது?

விடை—

(அ) தஞ்சை மாவட்டம் முருக்கங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்றாவது மருத்துவர் பதவி 15-7-1981 அன்று நிரப்பப்பட்டது.

(ஆ) நாளொன்றுக்கு சராசரியாக 1.91 புறநோயாளிகள் இந்நிலையத்தில் மருத்துவ வசதி பெறுகிறார்கள்.

[1983 நவம்பர் 15

(இ) 1979-80-ம் ஆண்டு ரூபாய் 2,000 மதிப்புள்ள பல வகை மருந்துகள் இந்நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூபாய் 14,000 மதிப்புள்ள மருந்துகள், நடமாடும் சுகாதார குழுவிற்கு ரூபாய் 15,000 மதிப்புள்ள மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

பழனி தேவஸ்தானத்தில் பணிபுரியும் முடிசவரத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்தல்.

8—வினா 5556—திரு. ன். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி தேவஸ்தானத்தில் பணிபுரியும் முடிசவரத் தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலய அனுமதி பெற்ற முடிசவரத் தொழிலாளர்களின் கூலி உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு முன்பு முடிக்கட்டணமாக ரூ. 1.25 வீதம் வசூல் செய்து திருக்கோயிலுக்கு ரூ. 0.55 பைசாவும் முடிசவரத் தொழிலாளர்களுக்கு டிக்கட் ஒன்றுக்கு 0.70 பைசாவும் வழங்கப்பட்டதற்குப் பதிலாக முடிக்கட்டணம் டிக்கட் ஒன்றுக்கு 2 ரூபாய் வசூல் செய்து அதில் திருக்கோயிலுக்கு 0.75 பைசாவும் முடிசவரத் தொழிலாளர்களுக்கு ரூ. 1.25ம் கொடுக்கவும், நிரந்தர நியமனம் தேவையில்லை எனவும் 8-6-81 நாளன்று நடைபெற்ற அறங்காவலர் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு 1-7-81 முதல் இந்த உயர்ந்த விகிதம் நடைமுறையிலுள்ளது.

1983 நவம்பர் 15]

சிவகாசி விஸ்வநாத சுவாமி கோயில் அருகில் கடைகள் கட்டும் திட்டம்.

9—வினா 5869—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலுள்ள விஸ்வநாதசுவாமி கோயிலின் வலது பக்கத்தில் கடைகள் கட்டப்படும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் சட்டிட்டத்து கோயில் வருவாயை பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) சிவகாசி அருள்மிகு விஸ்வநாதசுவாமி ஆலயத்தின் வலது பக்கத்தில் கடைகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

செங்குன்றபுறம் கிராமத்தில் புறக் காவல் நிலையம் அமைத்தல்.

10—வினா 6376—திரு. மு. சந்தரராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகர் ஊரகம் ஆமத்தூர் காவல் நிலையத்திற்குட்பட்ட செங்குன்றபுரம் கிராமத்தில் அவுட்போஸ்ட் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

விருதுநகர் ஊரகத்தில் உள்ள செங்குன்றபுறம் கிராமத்தில் புறகாவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவுமில்லை. மேலும், அக்கிராமத்தில் நிலவும் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான நிலைமை, அப்பகுதியில் புறக் காவல் நிலையம் அமைக்கும் அவசியத்தை ஏற்படுத்தவில்லையென காவல்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

[1983 நவம்பர் 15

பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான சாலை பராமரிப்புக்கு பராமரிப்பு நிதி ஒதுக்கீடு.

11 –வினா 6383 –திரு. மு. சுந்தரராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொந்தமான சாலை பராமரிப்புக்கு எந்த அடிப்படையில் பராமரிப்பு நிதி ஒதுக்கப்படுகிறது ?

(ஆ) அந்த நிதி ஒதுக்கீட்டு முறையில் மாற்றம் செய்யும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 131 பிரிவின்படி சாலைகளின் நீள அடிப்படையிலும் ஜனத்தொகை விகிதத்திலும் மானியம் கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக்கப்படுகிறது

தலைக்கு 18 பைசா.
சாதாரண சாலைக்கு ரூ. 533 கி.மீ. 1க்கு.
கடற்பகுதி சாலைக்கு ரூ. 715 கி.மீ. 1க்கு
மலைப்பகுதி சாலைக்கு ரூ. 1,340 கி.மீ. 1க்கு.

(ஆ) சாலைகளின் பராமரிப்பு கீழ்க்கண்டுள்ளவாறு நீள அடிப்படையிலும ஜனத்தொகை அடிப்படையிலும் மானியம் மாற்றம் செய்ய அரசின் பரிசீலனையில் உள்ளது:—

சாதாரண சாலை – ரூ. 1,600 கி.மீ.1-க்கு.
கடற்கரை சாலை – ரூ. 2,100 கி.மீ.1-க்கு.
மலைப்பகுதி சாலை – ரூ. 3,900 கி.மீ.1-க்கு.

வத்திராயிருப்பிலுள்ள சாப்டூர் கிராம கோயில்களின் நிர்வாக அலுவலகம்.

12 –வினா 6439 –திரு. இரா. முத்தையா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் சாப்டூர் கிராமத்தில் உள்ள சுந்தர மகாலிங்கம் திருக்கோயில், சந்தன மகாலிங்கம் திருக்கோயில் ஆகிய கோயில்களின் நிர்வாக அலுவலர் அலுவலகங்களைத் தற்போதுள்ள வத்திராயிருப்பில் இருந்து சாப்டூருக்கு மாற்றும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

1983 நவம்பர் 15]

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை —

(அ), (ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டு உள்ளது.

புதுக்கோட்டையிலுள்ள நெடுஞ்சாலைத்துறை டிவிஷன் என்ஜினியரிங் பொறுப்பிலுள்ள திருச்சி மாவட்டத்தை சேர்ந்த வட்டங்கள்.

13. வினா 6404-திரு.ஆர். கருப்பையா மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டையிலுள்ள நெடுஞ்சாலைத்துறை டிவிஷனில் என்ஜினியரில் நிர்வாக பொறுப்பில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூர், குளித்தலை, மணப்பாறை வட்டங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், இப்பகுதியை திருச்சி டிவிஷனில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருச்சியிலுள்ள நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை கோட்டம் ஆறு உட்கோட்டங்களை கொண்டுள்ளது. இவற்றுடன் புதிதாக கரூர், மணப்பாறை உட்கோட்டங்கள் மற்றும் மணப்பாறை உட்கோட்டத்தில் உள்ள குளித்தலைப் பிரிவு அலுவலகத்தையும் சேர்த்தால் அக்கோட்டத்தில் வேலைப் பளு அதிகமாவதுடன் அதன் எல்லையும் நீண்டு விடும் என்பதால் தற்பொழுதுள்ள ஏற்பாடே நீடிக்கப்பட்டு வருகிறது.

மதுராந்தகம் பேருந்து நிலையம் கட்ட வழங்கப்பட்ட சிமிண்ட் மூட்டைகள் மற்றும் இரும்பு கம்பிகள்.

14 –வினா 6660 – திரு.எஸ்.டி.உகம்சந்த். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பஸ் ஸ்டாண்ட் கட்ட வழங்கப்பட்ட சிமெண்ட் மூட்டைகள், இரும்பு கம்பிகள் விற்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், தவறு செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

(இ) நிலுவையிலுள்ள பணம் வசூல் செய்யப்பட்டுள்ளதா ?

(பக்கம் 484 –486-ல் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

(இ) கீழ்க்கண்ட இனங்களில் குத்தகை பாக்கி வரவேண்டி உள்ளது :

நிலகுத்தகை பாக்கி பசலி 1390 நெல் 2792 கலம் 39 படி முடிய

ரொக்கம்	ரூ	1,421.25
அடிமனை வாடகை பாக்கி	ரூ.	31,383.00
கட்டிட வாடகை பாக்கி (19–11–1981 வரை)	ரூ.	6,893.34

சத்தியமங்கலம் தாலுக்காவில் நியாய விலைக் கடைகள் அமைத்தல்.

16—வினா 7016 —திரு. கு. ராமனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, குத்தியாலத்தூர், திங்களூர் மலைப்பகுதியில் இருட்டுபாளையம் என்ற ஊரில் மட்டும் ஒரே ஒரு நியாய விலைக்கடைதான் உள்ளது என்பது உண்மையா ?

(ஆ) கரளையம், பசுவனாபுரம், அனுக்கனை, அருகியம், வெள்ளக்குட்டை, கடம்பூர் ஆகிய ஊர்களில் நியாய விலைக்கடைகள் இல்லையென்பதால் மக்கள் அவதிப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், மேற்கண்ட ஊர்களில் நியாயவிலைக் கடைகள் அமைக்கப்படுமா ?

விடை—

(அ) இருட்டுபாளையம், குன்றி, கடம்பூர் என்னும் மூன்று இடங்களில் நியாயவிலைக்கடைகள் உள்ளன.

குத்தியாலத்தூர் வருவாய் கிராமத்திற்கான நியாயவிலைக் கடையானது இருட்டிபாளையத்தில் செயல்பட்டு வருகின்றது. குத்தியாலத்தூர் வருவாய் கிராமத்தின் குக்கிராமமான இருட்டிபாளையம் மற்ற குக்கிராமங்களுக்கு மையமாக அமைந்துள்ளது. இக்கடை சுற்றியுள்ள குக்கிராமங்களுக்கு அருகாமையில் உள்ளது. மேலும் கடம்பூர், குன்றி ஆகிய ஊர்களில் இரண்டு நியாய விலைக்கடைகள் உள்ளன. திங்களூர் கிராமத்திற்குட்பட்ட குக்கிராமங்களுக்கு சிக்கு விசாபாளையம் என்னும் ஊரில் குடிசைப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

விடை—

(அ) பஸ் நிலையம் கட்டுவதற்கான வேலையை தாமதம் செய்தமையால் ஒப்பந்தக்காரருடைய ஒப்பந்தம் 3–12–1975ல் ரத்து செய்யப்பட்டது. அவர் வசம் இருந்த 12.40 டன் சிமெண்டும் 24,111 டன் இரும்புக் கம்பிகளும் இலாகாவிற்கு திருப்பித் தரவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரரின் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டது. அவரை பிளாக்லிஸ்ட் செய்த பட்டியலிருந்து பெயரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) நீதி மன்றம் மூலம் வழக்குத் தொடர்ந்து வசூலிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுராந்தகம் ஸ்ரீ சோதண்டராமசுவாமி திருக்கோயில் நிலங்கள் குத்தகை உரிமம்.

15—வினா 6827—திரு. எஸ். டி. உமாசந்த் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர ஸ்ரீ சோதண்டராமசுவாமி திருக்கோயில் நிலங்கள் குத்தகை உரிமம் அனுமதி இன்றி அதிக தொகைக்கு முந்திய குத்தகைதாரராலே மாற்றப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(இ) குத்தகை பாக்கி எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1983 நவம்பர் 15

(ஆ) கரளையம், பசுவனாபுரம், அனுக்கரை, அருகியம், பவளக்குட்டை ஆகியவை குத்தியாலத்தூர் வருவாய் கிராமத்தின் குக்கிராமங்களாகும். இந்த குக்கிராமங்களின் தேவைகளை இருட்டிபாளையத்திலுள்ள கடை பூர்த்தி செய்து வருகின்றது. அத்தியாவசிய பொருள்கள் கிடைக்காதது குறித்து புகார்கள் ஏதும் பொது மக்களிடமிருந்து வரவில்லை. மேலும் இந்த குக்கிராமங்களில் குடும்ப அட்டைகள் மிகக் குறைவாக உள்ளதால் இங்கு கடைகள் தனித்தியங்க வாய்ப்பில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பண்ணைப்புரத்தில் மழைக் காலத்தில் வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட கோரிக்கை.

17—வினா 7123—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடித் தொகுதி பண்ணைப்புரத்தில் மேற்கே, மழைக்காலத்தில் வெள்ளம்ஏற்பட்டுஊருக்குள் வருவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அப்பகுதி மக்கள் பல வருடங்களாக கோரிக்கை விடுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி தடுப்புச் சுவர்களை கட்டித்தர அரசு முன்வருமா ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ரூ. 75,000-ல் மதிப்பீடு தயார் செய்து உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் மதுரை கோட்டப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது. கோட்டப் பொறியாளருக்கு நிதியிலிருந்து தடுப்புச் சுவர் கட்ட நிதி இல்லை என திருப்பி யுள்ளார். மேலும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு 12 நிலச் சுவான்தார்கள் 27 ஏக்கர் 18 செண்ட் நிலத்தை இனாமாகத் தர எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்து உள்ளனர்.

ஒருவர் மட்டும் 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை தரத் தயாராக இல்லை. அந்த நிலத்தினையும் ஆர்ஜிதம் செய்த பிறகு தான் இச்சுவர் கட்ட இயலும். எனவே தடுப்புச் சுவர் கட்டுவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும், இதற்கான கட்டாய நில ஆர்ஜிதத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியாளர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

1983 நவம்பர் 15]

சிவபுரத்தில் நடந்த சிலைகள் திருட்டு.

18—வினா 7172 திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவபுரத்தில் என்ன சிலைகள் திருடு போயின; அதில் எந்த சிலைகள் கிடைத்தன ?

விடை —

விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திருநீர்மலை ரங்கநாதர் ஆலய திருக்குளத்தை தூர்வாரும் பணி

19—வினா 7494 — திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாம்பரம் தொகுதியில் திருநீர்மலை ரங்கநாதர் ஆலய திருக்குளம் அசுத்தமாகவும், சுகாதாரக் கேடாகவும் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தூர்வாரி பக்தர்கள் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

(அ) மற்றும் (ஆ): திருநீர்மலை அருள்மிகு அரங்கநாதசாமி ஆலய திருக்குளம் சுத்தமாகவே வைக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் குளத்தின் நான்கு புறமும் தடுப்புச் சுவர் இல்லையாதலால் மழைக் காலத்தில், மழை நீரோடு குப்பை கூளங்களும் குளத்தில் வந்து சேருகின்றன. மேலும், இவ்வூர் மக்களுக்கு வேறு நீர் நிலைகள் இல்லாததால் அவர்கள் தங்கள் துணி மணிகளை துவைப்பதற்கும், குளிப்பதற்கும் இந்தக் குளத்தையே பயன்படுத்துகின்றனர். இச்செயல்களைத் தடுக்க முடியாத நிலையுள்ளது. குளத்திற்கு தடுப்புச் சுவர் எழுப்பவும், குளத்தை தூர் வாரி சுத்தப்படுத்தவும் சுமார் ரூ.2 இலட்சம் செலவாகக் கூடும். அந்த அளவு செலவு செய்ய ஆலயத்திற்கு வருமானமோ நிதி வசதியோ தற்போது இல்லை. ஆலய நிதி வசதி பெருகிய பின்தான் குளத்தைச் சுத்தம் செய்ய இயலும்.

@ பக்கம் 486-487-ல் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

136067
Chennai-600 006

[1983 நவம்பர் 15

ஆறுதேசம் கிராமம் முஞ்சிறை மடத்திற்கு வழங்கும் அரசு மானியம்

20—வினா 7545 —திரு. டி. மணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஆறுதேசம் கிராமத்தில் முஞ்சிறை மடத்திற்கு மானிய தொகை அரசு கொடுக்கிறதா ?

(ஆ) அந்த நிலங்கள் விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

(இ) அரசு மடத்திற்கு மானியம் வழங்கியும் விவசாயிகளிட மிருந்து ஜென்மிக்கரம் வசூலிக்கப்படுகிறதா ?

விடை—

(அ) ஒவ்வொரு பசலி ஆண்டிற்கும் ரூபாய் 924.40 ஆறு தேச கிராமத்திற்கான தஸ்தக் அலவன்சாக முஞ்சிறை மடத்திற்கு கொடுக்கப்படுகிறது.

(ஆ) ஜென்மிக்கரம் ஒழிக்கப்பட்டு அந்நிலங்கள் விவசாயி களுக்கு (குடியான்களுக்கு) பட்டா செய்து கொடுக்கப்பட்டு விட்டன.

(இ) இல்லை.

பேராவூரணியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்

21—வினா 7559 —திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தீ அணைக்கும் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, தமிழ்நாட்டில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்காக முன்னுரிமைப் பட்டி யலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் முறை வரும்பொழுது அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும்.

[15 நவம்பர்

சேத்தி படமாத்தூர் சாலையில் வைகை ஆற்றின் மீது கட்டப்பட்ட பாலத்தை புதுப்பித்துக் கட்டுதல்

22—வினா 7703 —திரு. க. பாரமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தொகுதி யில் திருப்பாச்சேத்தி-படமாத்தூர் செல்லும் சாலையில் வைகை ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலம் மணல் பரப்பிற்கு கீழ் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் புதுப்பித்து உயர்த்திக் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பாலம் மணல் பரப்பிற்கு மேல் ஓர் அடி உயரத்திற்கு உள்ளது. எனவே புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் இல்லை.

ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர் நியமனம்

23—வினா 7790—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 140 பள்ளிகளுக்கு ஆசிரியர் நியமனம் செய்யப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) அப்படியெனில், மாற்று ஏற்பாடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மருங்காபுரி ஒன்றிய கிராமங்களை திருச்சிராப்பள்ளி கோட்ட வளர்ச்சி அதிகாரி பிரிவிற்கு மாற்றும் திட்டம்

24—வினா 7800—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

[1983 நவம்பர் 15

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியப் பகுதிகளைச் சேர்ந்த ஐராமங்கள் கரூர் கோட்ட வளர்ச்சி அதிகாரி பிரிவிலிருந்து திருச்சிராப்பள்ளி கோட்ட வளர்ச்சி அதிகாரி பிரிவுக்கு மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது அமுல்படுத்தப் படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கரூர், திருச்சிராப்பள்ளி வளர்ச்சிக் கோட்டங்களில் அதிகார எல்லைகளை இருத்தியமைக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயற்குறிப்பு ஏற்கெனவே அரசால் பரிசீலிக்கப்பட்டு ஊராட்சித் தேர்தல்கள் முடிவுற்றதும் இது பற்றி ஆய்வு செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் சார்பாக கொடுக்கப்பட்ட விவரம்.

25—வினா 7835—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கேள்விக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு சார்பாக 1979-80-ம் ஆண்டு எவ்வளவு பேப்பர் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு சார்பாக 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 14,000-க்கு பல்வேறு நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது.

வள்ளிடக்கோனேந்தலில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

26—வினா 7651—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கேள்விக்கண்ட வினாக்களுக்கு விடையளியப்பாரா—

1983 நவம்பர் 15]

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளிடக்கோனேந்தல் என்ற ஊரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அறிஞர் உ.வே.சா. பிறந்த இல்லத்தில் நூல் நிலையம் ஏற்படுத்தல்.

27—வினா 7923 — திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கேள்விக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்த் தாத்தா, அறிஞர் உ. வே. சா. பிறந்த ஊரான உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த வீட்டை அரசு வாங்கி அங்கு ஒரு நூல் நிலையம் ஏற்படுத்த அரசுக்கு எண்ணம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான தங்கத்தேர் மூலம் ஈட்டித் வருமானம்.

28—வினா 7938—திரு. ஏன். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கேள்விக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1983 நவம்பர் 15

(அ) பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தில் இருக்கும் தங்கத்தேர் மூலம் ஆண்டொன்றுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

(ஆ) கடந்த 1979 முதல் 1981 வரை வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும்(ஆ): பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தில் இருக்கும் தங்கத்தேர் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் பின்வருமாறு :—

	ரூபாய்.
1979 ஆம் ஆண்டு	9,15,120.00
1980 ஆம் ஆண்டு	10,77,412.00
1981 ஆம் ஆண்டு	15,71,400.00

மணலி பேரூராட்சி பகுதிகளில் புதியதாக உணவுப் பங்கீட்டுக் கடைகள் அமைத்தல்.

29— வினா 8026— திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மணலி பேரூராட்சியைச் சேர்ந்த சின்ன சேக்காடு, மாத்தூர், கடப்பாக்கம் பகுதிகளில் புதியதாக உணவுப் பங்கீட்டு கடைகள் அமைக்கும் முயற்சிகள் உண்டா ?

விடை—

மணலி பேரூராட்சியைச் சேர்ந்த சின்ன சேக்காடு, மாத்தூர், மற்றும் கடப்பாக்கம் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள 900 உணவு பங்கீட்டு அட்டைகளை இந்த மூன்று கடைகளுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதலால், இங்கு புதிய நியாயவிலை கடைகளை திறப்பதற்கு அவசியமில்லை என கருதப்படுகிறது.

1983 நவமபர் 15]

ஏரக்காப்பட்டி மழையாலும் திருமணிமுத்தாறு உடைப்பாலும் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கை.

30 —வினா 8035—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி ஏரக்காப்பட்டி கிராமம் மழையாலும் திருமணிமுத்தாறு உடைப்பாலும் பாதிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்பீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இப்பகுதிக்கு வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டும் குறிப்பு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையிலுள்ளது.

கருமாண்டி செல்லியாளையம் பேரூராட்சி நகரசுத்தி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.

31—வினா 8302— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம் கருமாண்டிசெல்லி பாளையம் பேரூராட்சியிலுள்ள ஸ்வீப்பர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்படி கேட்டு ஏதாவது மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு நடவடிக்கை எடுத்து எப்போது செயல்பாட்டிற்கு வரும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1983 நவம்பர் 15

பெருந்துறை காசநோய் மருத்துவமனை ஊழியர்களுக்கு அரசு ஊழியர் சலுகைகள் வழங்கல்.

32 –வினா 8373 –திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) பெருந்துறை காசநோய் மருத்துவமனையில் வேலை செய்யக்கூடிய அனைத்து ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் சலுகைகள் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எந்த வருடத்திலிருந்து செயல்பாட்டிற்கு வரும் ?

விடை –

(அ) நடைமுறையில் உள்ளது.

(ஆ) 1981 ஆம் வருடம் மார்ச்சு திங்களிலிருந்து பெருந்துறை காசநோய் மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் குறிப்பிட்ட சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது.. விடுப்பு விதிகளும் பணியின் விதிமுறைகளும் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவனபோல் மாற்றப்பட்டு 1 –4 –1981-ல் இருந்து பின்பற்றப்பட்டு நடைமுறையில் கோரிக்கைகள் இம்மருத்துவமனையின் நிதிநிலை சீர்அடையுமானால் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இணைப்புச் சாலைப்பணி.

33 –வினா 8421 –திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாபநாச கோவிலுக்கு வடபுரம் உள்ள யானைப்பாலம் மற்றும் இணைப்புச் சாலை வேலை முடிவு பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1983 நவம்பர் 15]

விடை–

(அ) மற்றும் (ஆ): அம்பாசமுத்திரம்-பாபநாசம் (வழி), விக்கிரமசிங்கபுரம் சாலையில் கி.மீ. 9/6 இல் புதிய பாலம் கட்டும் பணி மற்றும் அணுகுசாலை அமைக்கப்பட்டு, 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் தேதி முதல் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை டிவிஷனிலுள்ள சுரூர் நெடுஞ்சாலை அலுவலகத்தை கரூருக்கு மாற்றி அமைத்தல்.

34 –வினா 8439 –திரு. பி. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா–

திருச்சி மாவட்டம், சுரூர் நெடுஞ்சாலை அலுவலகம் புதுக்கோட்டை டிவிஷனில் இருக்கிறதை மாற்றி கரூரில் அமைக்கப்படுமா ?

விடை –

இல்லை.

காளூர்புதூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

35 –வினா 8490 –திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) அவினாசி யூனியன் காளூர்புதூர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில் எப்போது கட்டி முடிக்கப்படும் ?

(இ) தற்போதுள்ள கட்டிடத்தைப் பழுது பார்க்க எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) (ஆ) மற்றும் (இ) : இப்பள்ளியில் 6 முதல் 10 வகுப்புகளில் மொத்தம் 172 மாணவர்கள் பயில்கிறார்கள். இப்பள்ளியில் உள்ள 6 பிரிவுகளில், 4 வகுப்புகள் பள்ளிக்கு சொந்தமான ஓட்டுக் கட்டிடத்திலும் மீதமுள்ள 2 வகுப்புகள் மரநிழலிலும் நடைபெறுகின்றன. இப்பள்ளிக் கட்டிடங்கள் நல்ல நிலைமையிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு இன்னும் தேவையான கட்டட வசதிகள் வரும் ஆண்டுகளில் நிதிவசதிக்கேற்ப கருத்திற் கொள்ளப்படும்.

குமரி மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

36 —வினா 8511 —திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தாலுகாதோறும் விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டுமென்ற அரசின் திட்டப்படி குமரி மாவட்டத்தில் எந்த இடத்தில் கட்டப்பட்டுள்ளது ?

(ஆ) இதற்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) தமிழகத்தில் தாலுகாதோறும் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. இருப்பினும் ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கப்படும் ஊரக விளையாட்டு மையங்களில் ஒரு சிக்கன விளையாட்டரங்கம் நிறுவிட வேண்டும் என்ற திட்டம் நடைமுறையில் உள்ளது. இந்த திட்டத்தின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் "தோவாளை" ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த "பூதப்பாண்டி" கிராமத்தில் சிக்கன விளையாட்டரங்கம் கட்ட நிதி உதவி தரப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கென ரூ. 35,000 வழங்க அரசு அனுமதித்துள்ளது. இதில் முதல் தவணையாக ரூ. 17,500, 1980-81-ல் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது தவணையாக ரூ. 17,500 வழங்கப்பட உள்ளது.

முத்தலாபுரம் கிராமத்திலுள்ள கோவில் விழா.

37 —வினா 8514 —திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளாத்திக்குளம் தாலுகா, முத்தலாபுரம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான கோவில் உள்ளது. இந்து அறநிலையத் துறை கோவிலுக்குள்ள சொத்தையும் எடுத்துள்ளது. ஆனால் 10 ஆண்டுகளாக கோவில் பராமரிப்போ, தேர் விழா நடத்துவதோ இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விழா எடுக்கப்படும் ?

விடை —

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், முத்தலாபுரம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பவானிசுவரன் ஆலயம் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட பட்டியலில் சேராத ஆலயமாகும்.

ஆலய நிதி பற்றாக்குறை காரணமாக கடந்த பத்து அல்லது பதினைந்து வருடங்களாக ஆலய நிதியிலிருந்து பத்து தினங்கள் திருவிழா நடத்தும் நிலை இல்லை. இருப்பினும் பசலி 1390 வரை மாட்டுத்தாவணி குத்தகைதாரரால் திருவிழா நடத்தப்பட்டு வந்திருக்கிறது. பசலி 1391-ல் திருவிழா (1981 ஆம் ஆண்டில்) மாட்டுத்தாவணிக் குத்தகைதாரரால் நடத்தப்படாததால், இனிவரும் காலங்களில் மாட்டுத்தாவணிக் குத்தகைதாரர்களை எதிர்பாராமல் இதர ஆலயங்களைப் போன்று திருவிழா தினங்களுக்கு கட்டளைதாரர்களை (மண்டகப்படிதாரர்கள்) ஏற்படுத்தி ஆலயத்தின் பொறுப்பிலேயே திருவிழா நடத்த தக்க முயற்சிகள் மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாக அறங்காவலர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறையினரால் அறிவுரை அளிக்கப்பட்டுள்ளது.

பழனி தேவஸ்தானத்தின் வருமானம்.

38 —வினா 8573 —திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா —

[1983 நவம்பர் 15

பழனி தேவஸ்தானத்தில் 1980 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதி முதல் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய வருமானம் எவ்வளவு ?

விடை –

பழனி தேவஸ்தானத்தில் 1—1 –1980 முதல் 31 –12 –1980 முடிய வரவு விபரம் பின்வருமாறு : –

	ரூபாய்.
சாதாரண வரவு	1,75,98,921·81
மூலதன வரவு	30,36,119.71
மொத்தம்	2,06,35,041.52

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கும் வருங்கால வைப்பு நிதிக்கான ரசீது கொடுத்தல்.

39—வினா 8614 –திரு. டி. மணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா –

(அ) அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரா விடண்ட் பண்டிற்கான ரசீது கொடுக்கப்படவில்லை என அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை –

(அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

முந்திரி பயிரிட அரசால் ஒதுக்கப்பட்ட தொகை.

40 –வினா 8623 –திரு.டி. மணி : மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

@ பக்கம் 487-489-ல் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1983 நவம்பர் 15]

(அ) 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் முந்திரி பயிரிட எத்தனை லட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டது ?

(ஆ) தனியாருக்கு மானியம் ஏதும் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதனுடைய அபிவிருத்தி என்ன ?

(ஈ) 1981 ஆம் ஆண்டு முந்திரிக்கொட்டை எவ்வளவு கிடைக்கும் என அரசு எதிர்பார்க்கிறது ?

விடை –

(அ) 1978-79, 1979-80-இல் முந்திரி பயிரிட அரசால் ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு : –

1978-79 –ரூ. 21.57 இலட்சம்.

1979-80 –ரூ. 17.20 இலட்சம்.

(ஆ) முந்திரி பெருக்குத் திட்டத்தின்கீழ் முந்திரி செயல் விளக்கப் பாத்திகள் சுமார் 22 ஏக்கர் அளவில் போடப்பட்டு முந்திரி உற்பத்தியாளர்களுக்கு 1978-79-இல் ஒரு செயல் விளக்கப் பாத்திக்கு ரூ. 450 வீதமும், 1979-80இல் ரூ. 500 வீதமும் மானியமாக வழங்கப்பட்டது.

(இ) செயல் விளக்கப் பாத்திகள் போடுவதன் மூலம், முந்திரி உற்பத்தியாளர்கள் நவீன முறையில் சாகுபடி செய்வது குறித்தும் உரிய நேரத்தில் சிபாரிசு செய்யப்பட்ட உரங்கள் இடுவதாலும் முந்திரியின் உற்பத்தி திறன் அதிகரிக்கும் வழிமுறை களை முந்திரி உற்பத்தியாளர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள்.

(ஈ) 1981-82-ஆம் ஆண்டில் முந்திரியின் விளைச்சல் சுமார் 11,000 டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

41 –வினா 8677 –திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) மதுரை மாவட்டத்தில் உள்ள பருத்தி அறவை மில்கள் (Ginning Factory) எவ்வளவு ?

(ஆ) அங்கு நிரந்தரப்படுத்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை என்ன ?

விடை –

(அ) 53.

(ஆ) 141.

விவசாயிகளுக்கு வண்டி மாடுகள் வாங்க அரசு கடனுதவி அளிக்கும் திட்டம்.

42 –வினா 8694 –திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா –

ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வண்டி மாடுகள் வாங்க அரசு கடனுதவி அளிக்கும் திட்டம் உள்ளதா ?

விடை—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பரிந்துரையின்பேரில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கிராமப்புற மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களுக்கு கீழ்க் கண்டவாறு மானியம் வழங்கப்பட்டு வருகின்றது : –

சிறு விவசாயிகள்	25 சதவீதம்.
குறுநில விவசாயிகள், கிராமப்புற கைவினைஞர்கள், விவசாயக் கூலிகள், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள்.	33.1/3 சதவீதம்.
பழங்குடியினர்	50 சதவீதம்.

பாக்கித் தொகையை இவர்கள் வங்கிகள் மூலம் கடன் பெற வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் வண்டி மாடுகள் வாங்கலாம்.

பழனி, சிவன்மலை கோவில்களுக்கு வாகனங்கள் செல்ல பாதை அமைக்கும் திட்டம்.

43 –வினா 8801 –திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி, சிவன்மலை ஆகிய மலைக் கோயில்களுக்கு வாகனங்கள் மேலே சென்று வரத்தக்க வகையில் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் ?

விடை –

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம், பழனி மலைக் கோயிலுக்கு வாகனங்கள் செல்வதற்கு பாதை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. பக்தர்கள் வசதியாக மலை மேல் செல்வதற்கு இரண்டு மின்சார ரயில் பெட்டிகள் உள்ளன.

சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வாகனங்கள் செல்லத் தக்க வகையில் ரூ. 10 இலட்சம் செலவில் பாதை அமைக்கும் திட்டம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப் பின் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில் பணியாளர்களுக்கு வீட்டு வசதி.

44 –வினா 8857 –திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக் கோயில் பணியாளர்களுக்கு வீட்டு வசதி கோரி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

விடை — [1983 நவமபர் 15

வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை டவுன் மற்றும் வட்டத்தில் உள்ள அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் பணியாற்றும் கூடுதல் 107 பணியாளர்களில் 21 அர்ச்சகர்கள் குடியிருப்பு வசதி கோரி மனு செய்துள்ளனர். இவர்களுக்கு திரு அம்மணி அம்மன் கோபுரத்தின் மேற்கு பக்கம் சுமார் 670 அடி நீளம், 70 அடி அகலம் கொண்ட காலி மனையில் சுமார் 30 அடி நீளம், 20 அடி அகலம் கொண்ட பரப்பளவில் 21 வீடுகள் ரூ. 2,10.000 உத்தேச மதிப்பீட்டில் கட்டுவதற்கான செயற் குறிப்பு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்பால் பரிசீலனையில் உள்ளது.

நடுப்பட்டி கிராமத்தில் பாலங்கள் கட்டும் திட்டம்.

45 —வினா 8928 —திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) பார்கூர் தொகுதியில் மாகூர அள்ளிக்கும் திருப்பத்தூருக்கும் இடையில் நடுப்பட்டி என்ற கிராமத்தில் இரண்டு பாலங்கள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பாலம் நடப்பாண்டில் கட்ட உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[திரு. எஸ் இராமாராமன் : will the Hon'rable Minister for Industries be pleased to State.]

Number of parties from abroad and Inland selected to clear the raw dressed grante

(a) The Parties from abroad and inland which were selected to clar the raw dressed grantitc during the calander years

(b) the total quantity of granite they were asked to clear and

(c) the grounds on which they were selected

1983 நவம்பர் 15]

விடை —

(அ) கடந்த மூன்றாண்டுகளில் (1979–80 முதல் 1981–82 வரை) ஜப்பானிலுள்ள பின்வரும் 5 வெளிநாட்டு நிறுவனங்கள் சுரும்பாறைகள் விற்பனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன : —

1. மிட்சுபிசி கார்ப்பரேசன், டோக்கியோ.
2. ஓரியண்ட் சாங்கியோ சைசா நிறுவனம்.
3. நிசோ இவாய் கார்ப்பரேசன், டோக்கியோ.
4. ஜாம்போ இங்க், டோக்கியோ.
5. கோசான் டிரேடிங் நிறுவனம், டோக்கியோ.

(ஆ) மொத்தம் 3,300 கனமீட்டர் அளவுள்ள சுருப்புக்கற்கள் மேற்கண்ட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்பட்டன.

(இ) அரசின் கொள்கைப்படி வெளிநாட்டவரிடம் மட்டும் இருந்து அனைத்துலக ஒப்பந்தப்புள்ளி கோரி அவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

தங்கமாப்பட்டி அருகில் வண்டி கருப்பணசாமி ஆலயத்தை அறநிலையத்துறை கீழ் கொண்டு வரும் நடவடிக்கை.

47 —வினா 9142 —திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வேடசந்தூர் வட்டம், வடமதுரை ஒன்றியம் தங்கமாபட்டியில் உள்ள அருள்மிகு வண்டிகருப்பணசாமி ஆலயத்தினை அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை —

வேடசந்தூர் வட்டம், தங்கமாபட்டியில் உள்ள அருள்மிகு வண்டிகருப்பணசாமி ஆலயம் ஏற்கனவே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டது.

[1983 நவம்பர் 15

போளூர் நகர பள்ளிவாசல் முகமதியர் அறக்கட்டளை மீதான புகார்.

48 —வினா 9155 —திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் நகர பள்ளிவாசல் முகமதியர் அறக்கட்டளை சம்பந்தமாக அரசுக்கு மனு வந்ததா ?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இம்மனுவில் இரு கோரிக்கைகள் உள்ளன. ஒன்று போளூர் பெரிய குளக்கரை மற்றும் பயணிகள் விடுதி அருகில் ஆர். எஸ். 264/பி1 எண்ணுள்ள நிலத்திற்கு போளூர் மசூதியின் பெயரில் பட்டா வழங்குவதைப்பற்றியது. இரண்டாவது, போளூர் முஸ்லீம் மயானத்தை ஆக்கிரமித்து, வேலிச்சுவரை இடித்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியதாகும். இரு கோரிக்கைகள் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி போளூர் வட்டாட்சியாளரையும், காவல் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளையும் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் வேண்டியுள்ளது.

செல்லம்பட்டு அருகே முத்தா நதி குறுக்கே பாலம் அமைத்தல்

49 —வினா 9176 —திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சங்கராபுரம் தொகுதியில் செல்லம்பட்டு அருகில் முத்தா நதி குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

(இ) எப்போது பணி துவக்கப்படும் ?

1983 நவம்பர் 15]

விடை —

(அ), (ஆ) மற்றும் (இ) அரசம்பட்டு, செல்லம்பட்டு சாலையில் கி.மீ. 12/8 இல் முத்தா நதியின் குறுக்கே ரூ. 2.33 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டு பால வேலை 16 —5 —1981 அன்று செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் உருளைமாவு ஆலைகளுக்கு கோதுமை வழங்கல்.

50 —வினா 9237 — திரு. கு. மணி : மாண்புமிகு நீதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டத்தில் கோதுமை சப்ளை கிடைக்காததால் மாவு அரைக்கிற நான்கு பெரிய மில்கள் (1981 இம்மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) அம்மில்களுக்கு நாள் ஒன்றுக்கு எவ்வளவு கோதுமை சப்ளை செய்யப்பட்டு வந்தது ? சப்ளை நிற்க என்ன காரணம்?

(இ) தேவையான கோதுமை சப்ளை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை —

(அ) மத்திய உணவு கார்ப்பரேஷனிடமிருந்து கோதுமை, சப்ளை கிடைக்காத காரணத்தினால் 1981 மே திங்களில் ஒரு சில தினங்கள் மட்டுமே இயங்கவில்லை.

(ஆ) கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு மாதாந்திர அடிப்படையில்தான் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. சேலம் மாவட்டத்தில் உள்ள உருளை மாவு ஆலைகளுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையின் அளவு கீழ்க்கண்டபடியாகும்—

		ஒதுக்கீடு (டன்களில்).
1	சேலம் உருளை மாவு அரைவை ஆலை ..	1,906
2	கிருஷ்ணப்பா உருளை மாவு ஆலை	750
3	ரத்னா உருளை மாவு ஆலை	593
4	பிரிமியர் உருளை மாவு ஆலை	602

[1983 நவம்பர் 15

மே மாதம் மத்திய அரசு ஒதுக்கிய கோதுமையை இந்திய உணவு கழகத்தால் முழுமையாக கொடுக்க முடியவில்லை, சேலம் மாவட்டத்தில் உள்ள உருளை மாவு ஆலைகளுக்கு மே மாதத்தில் ஒவ்வொரு வாரமும் வழங்கப்பட்ட கோதுமையும் அந்த ஆலைகள் அரைவை செய்த விபரமும் @ இணைக்கப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையை தாமத மின்றி உருளைமாவு ஆலைகளுக்கு வழங்கும்படி இந்திய உணவு வர்த்தக கழகத்தை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

அரசு பொறுப்பில் உள்ள ஆலயங்களில் அமைக்கப்பட்ட திருப்பணிக்குழுக்கள்

51 —வினா 9239 — திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் அவர்கள், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு பொறுப்பில் உள்ள ஆலயங்களில் அமைக்கப் பட்ட திருப்பணிக்குழுக்கள் எவ்வளவு ?

(ஆ) இதில் எத்தனை ஆலயங்களில் திருப்பணி நடந்து வருகிறது ?

(இ) செயல்படாத குழுக்கள் எத்தனை ?

(ஈ) இவைகள் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

(அ) 566.

(ஆ) 339.

(இ) 149.

(ஈ) செயல்படாத திருப்பணிக்குழுக்களை கலைத்து புதிய திருப்பணிக் குழுக்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

@ பக்கம் 490—491-ல் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1983 நவம்பர் 15]

காவேரிப் பட்டணம் அரசு மேல் நிலைப்பள்ளி நவீன கூடைபந்து விளையாட்டு அரங்கம் கட்ட அரசு வழங்கிய தொகை.

52 — வினா எண் 9254 —டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கல்வி யமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அரசு மேல் நிலைப் பள்ளிக்கு நவீன கூடைப்பந்து விளையாட்டு அரங்கம் கட்ட அரசு எவ்வளவு தொகை வழங்கியுள்ளது ?

விடை —

காவேரிப்பட்டணம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடைப் பந்து விளையாட்டரங்கம் அமைக்க ரூ. 19,800 இவ்வரசு இது வரை வழங்கியுள்ளது. இதில் மைய அரசிடமிருந்து நிதியுதவி யாகப் பெற்ற தொகையான ரூ. 9,900-மும் அடங்கும்.

ராமாவரம் அருகில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்.

53 —வினா எண் 9348 —திரு. எம். சின்னசாமி, திரு. இரா. தாமரைக் கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிண்டி-பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ராமாவரம் அருகில் உள்ள பாலம் மிகவும் பழுதுபட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப்பாலத்தை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை —

(அ) கிண்டி-பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ராமாவரம் அருகில் 2/8 இல் உள்ள பாலம் குறுகலாக இருக்கிறது. கி.மீ. 3/4 இல் உள்ள பாலம் வலுவற்றுள்ளது.

(ஆ) பாலங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1983 நவம்பர் 15

கடப்பாக்கம் கூட்டுறவு பனைவெல்ல உற்பத்தி சங்கம்.

54 —வினா எண் 9355 —திரு. கி. கணேசன் :மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கடப்பாக்கத்தில் கூட்டுறவு பனைவெல்ல உற்பத்தி சங்கம் மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

இச்சங்கம் 1980-81-ம் ஆண்டிலிருந்து செயல்படாமல் உள்ளது. பதனீர் இறக்கி விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டாமையால் இச்சங்கம் செயல்படவில்லை. செயல்படும் வாய்ப்பும் இல்லை.

கடப்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

55 —வினா 9358 —திரு. கி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதி கட்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை —

அச்சிறுபாக்கம் தொகுதி கடப்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசிடம் தற்சமயம் இல்லை.

PRODUCTS EXPORTED BY THE TAMIL NADU HANDICRAFTS DEVELOPMENT CORPORATION TO THE FOREIGN COUNTRIES.

56-Q. 9364-THIRU N.S.V. CHITHAN, THIRU M.A CHINNASAMY: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state-
(1) The details of the places out side the State and (2) outside India to which the products of the Tamil Nadu Handicrafts Development Corporation or its financially patronised units have been exported during 1978, 1979 and 1980 ?

1983 நவம்பர் 15]

Answer

The particulars are furnished below :—

(1) *Countrywise Exports of the products of Tamil Nadu Handicrafts. Development Corporation Limited.*

Serial number and name of the Country.	1979-80.	1980-81
(1)	(2) (RUPEES IN LAKHS.)	(3)
1. United States of America	2.00	2.76
2. United Kingdom	0.04	1.22
3. Japan	0.64	0.98
4. Singapore and Malaysia	0.34	1.56
5. Belgium	0.43	0.62
6. West Germany	0.29	0.37
7. Italy	1.25	..
8. Saudi Arabia	0.70	..
9. Holland	0.55	0.06
10. Australia	0.18	0.69
11. Switzerland	0.07	0.42
12. France	0.16	0.23
13. Mauritius	0.14	0.04
14. Canada	0.01	0.07
15. Sri Lanka	0.04	..
16. Austria	..	0.07
17. Fiji	0.04	..
18. Jordan	0.04	..
19. Czecoslovakia	..	0.01
20. Norway	0.01	..
Total ..	6.93	9.10

For the year 1978-79, the total value of exports to other countries was Rs. 7.16 lakhs . Countrywise details are not available.

(2) *Products sold in other States*

(1)	1978. (2)	1979. (3)	1980. (4)
	(RUPEES IN LAKHS.)		
1. Bangalore	5.57	7.89	8.91
2. Bombay	3.27	4.70	4.62
3. New Delhi	8.39	11.70	14.46

விடை—

விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

தமிழ் நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் பொருட்கள் ஏற்றுமதியான விவரங்கள் நாடு வாரியாக கீழே தரப்பட்டுள்ளன :—

வரிசை எண்ணும் நாட்டின் பெயரும். (1)	1979-80. (2) (ரூபாய் இலட்சங்களில்.)	1980-81. (3)
1. அமெரிக்கா	2.00	2.76
2. இங்கிலாந்து	0.04	1.22
3. ஜப்பான்	0.64	0.98
4. சிங்கப்பூர் மற்றும் மலேசியா.	0.34	1.56
5. பெல்ஜியம்	0.43	0.62
6. மேற்கு ஜெர்மனி	0.29	0.37
7. இத்தாலி	1.25	..
8. சவுதி அரேபியா	0.70	..
9. ஹாலந்து	0.55	0.06
10. ஆஸ்திரேலியா	0.18	0.59

1983 நவம்பர் 15]

வரிசை எண்ணும் நாட்டின் பெயரும். (1)	1979-80. (2) (ரூபாய் இலட்சங்களில்.)	1980-81. (3)
11. சுவிட்சர்லாந்து	0.07	0.42
12. பிரான்சு	0.16	0.23
13. மொரிசியஸ்	0.14	0.04
14. கானடா	0.01	0.07
15. ஸ்ரீலங்கா	0.04	..
16. ஆஸ்திரியா	..	0.07
17. பிஜி	0.04	..
18. ஜோர்டான்	0.04	..
19. செக்கொஸ்லாவாகியா ..	..	0.01
20 நார்வே	0.01	..
மொத்தம் ..	6.93	9.10

1978-79-ல் ரூ. 7.16 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. நாடுவாரியான விவரங்கள் இல்லை.

மற்ற மாநிலங்களில் விற்கப்பட்ட பொருட்களின் மதிப்பு.

	1978.	1979.	1980.
	(ரூபாய் இலட்சங்களில்).		
1. பெங்களூர்	5.57	7.89	8.91
2. பம்பாய்	3.27	4.70	4.62
3. புதுடில்லி ..	8.39	11.70	14.46

[1983 நவம்பர் 15

கோவை, நேரு திடலுக்கு கூரை அமைக்கும் திட்டம்,

57 —வினா 9405 —திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை, நேரு திடலுக்கு கூரை வேய அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை —

(அ) தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு காவல் துறையினருக்கு புலனாய்வு பயிற்சிகொடுக்கும் திட்டம்

58 —வினா 9409 —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் உள்ள காவல் துறையினருக்கு புலனாய்வு பயிற்சி கொடுக்கும் திட்டம் செயல் படுத்தப் படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) காவல் துறையின் புலனாய்வு பயிற்சி சம்பந்தப்பட்ட விவரங்கள் —

காவல் துறைக் கண்காணிப்பாளர்கள். —இவர்களுக்குச் சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டுக் கால பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்போது குற்றங்களை எப்படி கண்டு பிடிப்பது, துப்பு துலக்குவது போன்றவை சொல்லிக் கொடுக்கப்படுகிறன. குறிப்பாக, கொலை, கொள்ளை போன்ற பெரும்

1983 நவம்பர் 15]

குற்றங்களை எப்படிக் கண்டு பிடிப்பது, மோசடி கள்ள நோட்டு போன்ற வழக்குகளை எப்படி விசாரிப்பது என்று சொல்லிக் கொடுக்கிறார்கள்.

(2) சார்பு ஆய்வாளர்கள். —இவர்கள் பயிற்சித் திட்டம் கோரே அறிக்கையின்படி, திருத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பாடத் திட்டத்தின்படி, அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப் படுகிறது. மேலும் அவர்களுக்கு வழக்கு நாட் குறிப்பு மற்றும் காவல் நிலையத்தில் ஒரு வழக்கில் புலனாய்வு சம்பந்தமான பல பதிவுகள் தயார் செய்வது போன்றவைகள் முறையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது.

(3) காவலர்கள். —ஒரு வழக்கை காவலர்கள் நேரிடையாக புலனாய்வு செய்யத் தேவையில்லை எனினும், காவலர்களுக்கு விஞ்ஞான புலனாய்வு வழி முறைகள் கற்றுக் கொடுப்பதுடன் புலனாய்வு அதிகாரிகளுக்கு முதல் தகவல் அறிக்கை தயாரிப்பதிலிருந்து சாட்சிகளினுடைய வாக்கு மூலங்கள், பிரேதத்தை பிண பரிசோதனைக்கு அனுப்புவது மற்றும் அது சம்பந்தமாக விபரங்களை சேர்ப்பது வரையிலான பணியினைச் செய்வது வரை கற்றுக் கொடுக்கப்படுகிறது.

கரிவலம்வந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுப் படுத்தும் திட்டம்.

59 —வினா 9423 —திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மேற்கொள்ளப்படும்?

விடை —

(அ) மற்றும் (ஆ) : கரிவலம்வந்தநல்லூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

[1983 நவம்பர் 15

காகுப்பம் கிராமத்தில் திருடுபோன அய்யனார் சிலை.

60—வினா 9418— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரத்தை அடுத்த காகுப்பம் கிராமத்தில் உள்ள பஞ்சலோகத்தில் செய்யப்பட்டுள்ள அய்யனார் சிலை திருடு போனது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சிலையை மீட்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): விழுப்புரத்தை அடுத்த காகுப்பம் கிராமத்தில் உள்ள பஞ்சலோகத்தில் செய்யப்பட்டுள்ள அய்யனார் சிலை ?—4—81 அன்று இரவு திருடு போனதின் தொடர்பாக, விழுப்புரம் காவல் நிலைய குற்ற எண் 82/1981 ஆக இந்திய குற்றவியல் சட்டக் கோவைப் பிரிவுகள் 457 மற்றும் 380இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சிலை 9—4—1981 அன்று விழுப்புரம் காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு விழுப்புரம் துணை குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட கிராமங்களிலுள்ள பண்டகசாலைகள்.

61 வினா 9225— திரு. கே. கல்லன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் கிராமங்களுக்கு உணவுப் பண்டங்கள் சீரான முறையில் விநியோகிக்க எத்தனை பண்டகசாலைகள் உள்ளன?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் கிராமங்களுக்கு இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்ய நாற்பது கூட்டுறவு கிராமக் கடைகள் உள்ளன. இந்த கடைகள் பொது விநியோக முறையின் கீழ் எல்லா அத்தியாவசிய பண்டங்களையும் விநியோகம் செய்கின்றன.

1983 நவம்பர் 15]

வேடசந்தூர் கிராம வீடு கூட்டும் கூட்டுறவு சங்கத்தில் கடன் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை.

62—வினா 9608—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூரிலுள்ள கிராம வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தில் வீடு கட்ட கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதுவரை கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் எத்தனை?

(இ) மீதம் உள்ளவர்களுக்கு எப்போது கடன் கொடுக்கப் படும்?

விடை—

(அ) வேடசந்தூர் வட்ட கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் 15—1—1982 வரை 1,264 நபர்கள் கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இதில் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1,107.

(ஆ) மேற்படி சங்கத்தின் மூலம் கடன் பெற்று இதுவரை 537 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 225 வீடுகள் பல்வேறு நிலையில் கட்டப்பட்டு வருகின்றன.

(இ) தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் நிதி நிலைமையையொட்டி மீதம் உறுப்பினர்களுக்கும் விரைவில் கடன் வழங்கப்படும்.

கூத்தப்விளை—தளக்கான்விளை இணைப்புச் சாலையை சீரமைக்க ஒதுக்கப்பட்ட நிதி.

63—வினா 9669—திரு. டி. மணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தாலுக்காவில் மெதுகும்மல் கிராமத்தில் கூத்தம்விளைக்கும் தளக்கான்விளைக்கும் இணைப்புச் சாலையை சீரமைக்க ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) இத்திட்டம் இந்த ஆண்டு நடைமுறைக்கு வருமா?

விடை—

[1983 நவம்பர் 15

(அ) மெதுகும்மல் கிராமத்தில் கூத்தம்விளைக்கும் தளச்சான்விளைக்கும் இணைப்புச் சாலையை சீரமைக்கவும் மற்றும் பால வேலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 6.90 இலட்சம். இதில் இறிய பால வேலைகளுக்கு ஒதுக்கப் பட்ட தொகை ரூ. 1,495 இலட்சம்.

(ஆ) மேற்கண்ட வேலைகள் இந்த ஆண்டு நடைமுறையில் உள்ளன.

செஞ்சி வட்டத்தில் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை.

64 வினா 9817—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில் 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள் வரை முதியோர் உதவித் தொகை கோரி வந்துள்ள மனுக்கள் எவ்வளவு ?

(ஆ) இதுவரை எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி வட்டத்தில முதியோர் உதவித் தொகை கோரி 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை 3,533 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) செஞ்சி வட்டத்தில் 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை 1,007 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1983 நவம்பர் 15]

சானார்பட்டி யூனியனில் சாலை போடும் திட்டம்.

65—வினா 9835 —திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சானார்பட்டி யூனியனில் திண்டுக்கல்லிலிருந்து மதுரை செல்வதற்கு கோபால்பட்டி, அய்யாப்பட்டி, கொறஞ்சன்பட்டி, கோம்பைப்பட்டி, மலப்பட்டி, பெருமாள் கோவில்பட்டி, சின்னக்காலிப்பட்டி, வலையப்பட்டி, அலங்காநல் ஊர் சர்க்கரை ஆலை வழியாக 15 கிலோ மீட்டர் தூரம் சாலை போட திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது திட்டம் எடுத்துக்கொள்ளப் படும் ?

விடை -

(அ) திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பூலுவப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக விரிவுப் படுத்தல்.

66—வினா 9852—திரு. மா. தின்னராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் ஒன்றியம், பூலுவப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ மனையாக விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை -

பூலுவப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் ஆலோசனையில் இல்லை.

[1983 நவம்பர் 15

துவரங்குறிச்சியில் குடிநீர்த் தட்டுப்பாடு நீக்கும் நடவடிக்கை.

67—வினா 9917 —திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவரங்குறிச்சி நகர பஞ்சாயத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்பேரில் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

—

சென்னை நகரில் உள்ள குடிசைகளின் எண்ணிக்கை.

68—வினா 9938 —திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகரில் குடிசைகள் எத்தனை உள்ளது ?

(ஆ) இதில் வாழும் மக்கள் தொகை என்ன ?

விடை—

(அ) சென்னை மாநகரில் 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,202 குடிசைப் பகுதிகளும், 87,210 குடிசைகளும் உள்ளன. 1981 ஆம் ஆண்டு கணக்குப்படி குடிசைப் பகுதிகள் 1,438 ஆக உயர்ந்துள்ளது. குடிசைகளின் எண்ணிக்கையை கணக்கெடுக்க உத்தேசித்துள்ளது. கணக்கெடுப்பு முடிந்த பின்னர் தற்போதைய விவரத்தை கொடுக்க இயலும்.

(ஆ) 1971 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் குடிசை வாழ் மக்களின் எண்ணிக்கை 7,37,531. 1981 ஆம் ஆண்டில் இது 9.95 இலட்சமாக உயர்ந்துள்ளது.

பழனி வட்டத்திலுள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்

69. வினா 9984 —திரு. எஸ். பழனிவேல் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி வட்டத்திலுள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளுக்கு கடன் வழங்கி ஆடுகள் வாங்கி கொடுக்கப்பட்டு விட்டதா ?

விடை —

(அ) பழனி வட்டத்தில் 16 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் 5 சங்கங்கள் மட்டும் கடன் உதவி பெற்று ஆடுகள் வாங்கி உள்ளன. மீதமுள்ள 11 சங்கங்களுக்குத் தேவையான கடன் வசதிகள் குறிப்பிடப்பட்ட வங்கிகள் மூலம் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சங்கங்களின் பெயர்கள், பயன் பெற்றோர் எண்ணிக்கை, கடன் தொகை மானியத் தொகை, வாங்கிய ஆடுகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் a இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

புக்கத்துரை கிராமத்திலுள்ள மேல்நிலை குடிநீர் தொட்டி

70—வினா எண் 9994 —திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் ஒன்றியம் புக்கத்துரை கிராமத்தில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை குடிநீர்த் தொட்டி ஆண்டுகள் பல ஆகியும் முடிவு பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்று தெரிவிக்க இயலுமா ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் புக்கத்துரை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளில் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

@ பக்கம் 492-493-ல் இணைப்பு VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது

கோபியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் பவானி திட்டம்

71—வினா எண் 10040—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் பவானி திட்டம் எப்போது செயலுக்கு வரும் ?

(ஆ) திங்களூர், விஜயமங்கலம், குன்னத்தூர், ஊத்துக்குளி செங்கப்பள்ளி மற்றும் எந்தெந்த ஊருக்கு பயன்படும் ?

விடை—

(அ) பவானி ஆற்றிலிருந்து குன்னத்தூர், கொளப்பலூர், சிறுவலூர், ஊத்துக்குளி மற்றும் வழியோர ஊர்களுக்குக் கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தினால் பயன்பெறும் சிற்றூர்கள் கீழ் வருமாறு :—

1. இலக்கம்பட்டி.
2. கலிங்கியம்.
3. ஆயலூர்.
4. கொளப்பலூர்.
5. சிறுவலூர்.
6. கேட்டித் தழையூர்.
7. குறிச்சி.
8. செட்டிக்குட்டை.
9. நெட்டிச்சிபாளையம்.
10. கமலாகுட்டை.
11. குன்னத்தூர்.
12. சின்ன கவுண்டன் வலசு.
13. சின்ன கவுண்டனூர்.
14. கண்டிக்கம்பாளையம்.
15. விரும்மாண்டம் பாளையம்.
16. செங்கப்பள்ளி.
17. முத்தம்பாளையம்.
18. ஊத்துக்குளி.
19. கவுண்டம்பாளையம்.
20. வடுக்கம்பாளையம்.
21. ஆணைபாளையம்.
22. பல்லவாரா பாளையம்.
23. கருக்கபாளையம்.
24. திங்களூர்.
25. செங்கனிபாளையம்.
26. குன்னம்பட்டி.
27. விஜயமங்கலம்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆலய கலை அரும் பொருளகத்தை விரிவு படுத்தல்

72—வினா 10063— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலகில் பல பாகங்களில் இருந்தும் சுற்றுலாவினர் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலிலுள்ள ஆலய கலை அரும் பொருளகத்திற்கு பார்வையிட வருவதால் இதை விரிவுபடுத்த அறநிலையத்துறையிடம் உத்தேசம் உள்ளதா ?

விடை—

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலிலுள்ள கலை அரும் பொருளகத்தை ரூ. 20,000 செலவினத்தில் விரிவுபடுத்தும் திட்டம் இந்து சமய அறநிலையத் துறையின் பரிசீலனையில் உளளது.

பெரியார் மாவட்டம் கைத்தறி நெசவாளர்களை [கூட்டுறவுத் துறையில் கொண்டு வருதல்

73—வினா 10074 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் அனைவரையும் கூட்டுறவுத் துறையில் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) இதுவரை எத்தனை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) நெசவாளர்களுக்கு பங்கு மூலதன கடன் வசதி அளித்து, அவர்களை கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேர்த்து, அரசு அளிக்கும் பல்வேறு உதவிகளை அவர்கள் பெற்று பயனடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் 132 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

[1983 நவம்பர் 15

திருநெல்வேலி சூப்பர் மார்க்கெட்.

74—வினா 10131—திரு மு. அப்பாதுரை : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கிழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) திருநெல்வேலி சூப்பர் மார்க்கெட்டில் என்.ஜி.ஓ காலனி கிளை பல ஆயிரக்கணக்கான ரூபாய் சரக்கு இருப்பு குறைவு என்ற பேரால் மோசடி நடந்தது, அதனால் அந்தக் கிளை சில மாதங்களாக மூடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை —

(அ) திருநெல்வேலி சிறப்பங்காடியின் என்.ஜி.ஓ. காலனி கிளையின் 31 – 1 – 1981-க்கும் 17 – 4 – 1981-க்கும் இடையில் ரூ. 10,386.78 சரக்கு இருப்பு குறைவு உள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சரக்கு குறைவு காரணமாக இக்கிளை எப்போதுமே மூடப்படவில்லை.

(ஆ) சம்பந்தப்பட்ட விற்பனையாளர் மீது ஒழுங்கு நடவடிக் கை எடுத்து அவரை 18 – 4 – 1981 முதல் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளது. இருப்பு குறைவிற்குண்டான தொகையையும் வசூல் செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

75—வினா 10132 — திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1981 ஆம் ஆண்டு மே திங்கள் அன்று நெல்லை சூப்பர் மார்கெட்டுக்குச் சொந்தமான (Owners Permit) பெற்ற எம்.டி.ஐ. 0414 வேன் நிர்ணயவிலை நோட்டுப் புத்தகங்களை கடத்தி செல்கையில் விபத்து ஏற்பட்டதால் 2 பேர் இறந்தது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட அதிகாரிமீது எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) இறந்தவர்களின் குடும்பத்துக்கு நஷ்டஈடு ஏதும் அளிக்கப்பட்டுள்ளதா?

1983 நவம்பர் 15]

விடை —

(அ) அடைக்கலபுரம், மணப்பாடு, வீரபாண்டியபட்டிணம் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிகளுக்கும் மாணவர் கூட்டுறவு பண்டக சாலைகளுக்கும் குறிப்பேடுகளை விநியோகம் செய்வதற்காக சென்று கொண்டிருக்கும்பொழுது நெல்லை கூட்டுறவு சிறப்பங்காடிக்குச் சொந்தமான எம்.டி.ஐ. 414 எண். உள்ள ஊர்தி ஸ்ரீவைகுண்டம் என்னும் இடத்தில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மிதிவண்டி ஓட்டிச் சென்ற இருவர்களில் ஒருவர் காய முற்று மரணம் அடைந்தார். மற்றவர் பிழைத்துவிட்டார். குறிப்பேடுகளுக்கு உண்டான விலை 30—4—1981 அன்றே முன்னதாகவே வசூலிக்கப்பட்டுள்ளது. குறிப்பேடுகளை கடத்திச் செல்லவில்லை.

(ஆ) ஸ்ரீவைகுண்டம் காவல் துறையினர் ஊர்தி ஓட்டுநர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணையில் உள்ளது. ஊர்த்தி ஓட்டுநர் 9—5—1981 அன்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

(இ) பாதிக்கப்பட்டவர்களுக்கு நெல்லை கூட்டுறவு பண்டக சாலை நஷ்டஈடு ஏதும் வழங்கவில்லை. ஊர்தி இன்சூரன்ஸ் செய்யப்பட்டு இருப்பதால் சட்டப்படி, இன்சூரன்ஸ் கார்ப்ப ரேஷனிடம் நஷ்டஈடு கோரப்படும்.

76—வினா எண் 10133—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி சூப்பர் மார்க்கெட்டில் மதுபானப் பிரிவில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு சரக்கு இருப்புக் குறைந்தது காரணமாக கடந்த 1—6—1981 முதல் அந்தப் பிரிவு மூடப் பட்டிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை —

(அ) சம்பந்தப்பட்ட விற்பனையாளர் கிடங்கிச் சாவியுடன் தலைமறைவாகி விட்டதால் நெல்லை சிறப்பங்காடியின் மதுபான பிரிவு 3—6—1981-ல் இருந்து 14—6—1981 வரை மூடப் பட்டிருந்தது. இப்பிரிவு 15—6—1981 முதல் தொடர்ந்து யங்கி வருகிறது.

(ஆ) சம்பந்தப்பட்ட விற்பனையாளர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இருப்புக்குறைவுக்குண்டான தொகையை (ரூ. 9,858.36) வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளாத்திக்குளம் பயணியர் தங்கும் விடுதிக்குப் புதிய கட்டடம்.

77 —வினா 10170 — திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளாத்திக்குளம் பயணியர் தங்கும் விடுதி மோசமான நிலையிலுள்ளது என்றும் புதியதாக டி.பி. கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும் ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

78 —

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

வினா 10179 — திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் எல்லா ஊழியர்களுக்கும் குடியிருக்க வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் உடன் கட்டி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள கைமுறைக் காகிதத் தொழிற்சாலைகள்

79—வினா 10206—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் கைமுறை காகித தொழிற் சாலை எத்தனை இடங்களில் உள்ளன ?

விடை—

வடாற்காடு மாவட்டத்தில் ' அரப்பாக்கம் ' என்னும் இடத்தில் ஒரு கைமுறை காகித அலகு, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடி பார்வையின் கீழ் இயங்கி வருகிறது.

பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் தலைவர்களுக்கான தகுதி

80—வினா 10241—திருமதி த. இராசாம்பாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்றோர் ஆசிரியர் சங்கங்களது தலைவர் தகுதி அந்தந்தப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் பெற்றோர் களுக்கு மட்டுமே உண்டு என்பதற்கு அரசு விதி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதைச் செயலுக்கு கொண்டு வர அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் செயல்படுவதற் கான புதிய விதிமுறைகளின்படி, பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அடங்கிய பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் பொதுக்குழு, பெற்றோர் பிரதிநிதி களில் ஒருவரைக் கழகத் தலைவராகத் தேர்வு செய்கிறது.

[1983 நவம்பர் 15

(ஆ) பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக விதிமுறைகள் அடங்கிய புத்தகம் எல்லாப் பள்ளிகளுக்கும் இலவசமாக வழங்க அனுப்பப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கும் இது பற்றி தெரியப்படுத்தப்பட்டு புதிய விதிமுறைகளின்படி பெற்றோர் ஆசிரியர் கழகம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மகளிர் பள்ளி ஆய்வாளர் ஆகியோர் பள்ளி ஆய்வின் போது பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகம் புதிய விதிமுறைகளின்படி அமைக்கப் பட்டுள்ளனவா என அறியவும், அப்படி இல்லையெனில் புதிய விதிமுறைகளைப் பின்பற்றி பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் அமைக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பகுதிகள் ஏற்படுத்துதல்.

81—வினா 10257—திரு. இ. ா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் சாலை, தொழிற்சாலை மற்றும் வீட்டு விபத்திற்குள்ளான மக்களுக்கு நல்ல மருத்துவ கவனிப்பிற்கு மாவட்ட மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர நிலைப் பகுதிகள் படுக்கை வசதியுடன் கட்டடங்கள் கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆம். சாலை மற்றும் நெருப்பு முதலியவைகளால் ஏற்படும் விபத்துக்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இம் மாநிலத்தில் திட்டம் ஒன்று முதல் கட்டமாக, மதுரை, திருநெல் வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கும் இரண்டாம் கட்டமாக திருச்சி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், கீழே கொடுக்கப்பட்டுள்ள மருத்துவ மனைகளில் 10 படுக்கைகள் அதற்கான பணியாளர்கள், உபகரணங்கள் கொண்ட தனிப் பிரிவு ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(1) அரசு மருத்துவமனை—நாகர்கோவில்.
(2) அரசு மருத்துவமனை—திண்டுக்கல்.
(3) அரசு மருத்துவமனை—பழனி.
(4) அரசு மருத்துவமனை—பெரியகுளம்.
(5) அரசு மருத்துவமனை—ராஜபாளையம்.
(6) அரசு மருத்துவமனை—இராமநாதபுரம்.

1983 நவம்பர் 15]

(7) அரசு மருத்துவமனை—சிவகெங்கை.
(8) அரசு மருத்துவமனை—தூத்துக்குடி.
(9) அரசு மருத்துவமனை—தென்காசி.
(10) அரசு மருத்துவமனை—கோவில்பட்டி.
(11) அரசு மருத்துவமனை—அருப்புக்கோட்டை.
(12) அரசு மருத்துவமனை—திருச்சிராப்பள்ளி.
(13) அரசு மருத்துவமனை—கரூர்.
(14) அரசு மருத்துவமனை—மணப்பாறை.
(15) அரசு மருத்துவமனை—உடுமலைப்பேட்டை.
(16) அரசு மருத்துவமனை—தாராபுரம்.
(17) அரசு மருத்துவமனை—பெரம்பலூர்.
(18) அரசு மருத்துவமனை—திருப்பூர்.
(19) அரசு மருத்துவமனை—மேட்டுப்பாளையம்.
(20) அரசு மருத்துவமனை—கோபிசெட்டிப்பாளையம்.
(21) அரசு மருத்துவமனை—ஈரோடு.
(22) அரசு மருத்துவமனை—உதகமண்டலம்.

மேலும் முப்பது படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு மருத்துவ மனைகள் ஏற்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1. மதுரை, இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை—மதுரை.
(2) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை—திருநெல்வேலி.
(3) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை—கோயம்புத்தூர்.

இவை அனைத்திலும் கட்டடம் கட்டும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு நடந்து கொண்டு வருகிறது.

மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம்.

82—வினா 10280— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக் காட்டிலுள்ள அருள்மிகு பகவதியம்மன் கோயிலை புதுப்பிக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காட்டிலுள்ள அருள்மிகு பகவதியம்மன் ஆலயத்தில் ரூ. 3.90 இலட்சம் மதிப்பில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் உதவித்தொகை.

83—வினா 10309—திரு. எஸ். டி. உகப்சந்த் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர், விதவைகள் உதவித் தொகை எவ்வளவு ? எத்தனை நபர்களுக்கு ?

(ஆ) அவற்றில் செங்கை மாவட்டத்தில் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது ?

விடை—

(அ)

வருடம்.	பயனடைந்த நபர்கள். முதியோர்.	உடல் ஊன முற்றவர்.	விதவைகள்.
(1)	(2)	(3)	(4)
1979–80 ..	73,442	9,017	17,612
1980–81 ..	95,663	12,145	33,814

வருடம்.	வழங்கப்பட்டதொகை. முதியோர்களுக்கு.	விதவைகள் மற்றும் ஊன முற்றவர்களுக்கு.	மொத்தம் வழங்கப்பட்ட தொகை.
	(5) ரூ.	(6) ரூ.	(7) ரூ.
1979–80	190,67,413.95	60,72,453.25	251,39,867.20
1980–81	248,23,972.37	109,80,621.35	358,04,593.72

உடல் ஊனமுற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் வழங்கப்படும் உதவித் தொகைக்கான செலவினங்கள் ஒரே கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படுகிறது. எனவே தனித் தனியாக செலவினம் கொடுக்க இயலாது.

(ஆ) செங்கை மாவட்டத்தில் உதவித் தொகை பெற்ற நபர்கள்.—

வருடம்.	முதியோர்.	உடல் ஊன முற்றவர் கள்.	விதவைகள்	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1979–80 ..	3,238	171	1,387	4,796
1980–81 ..	6,723	982	1,507	9,212

நிலக்கோட்டை தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கங்கள்.

84—வினா 10406—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் நிலக்கோட்டைத் தொகுதியில் எங்கெங்கு ஆதிதிராவிடர் நிலக் குடியேற்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன? எப்போது ஆரம்பிக்கப்பட்டன? அவற்றிற்கு அரசு தனித்தனியே எவ்வளவு பணம் கொடுத்துள்ளது ? அவை ஒழுங்காக செலவு செய்யப்பட்டனவா? அதனால் அப்பகுதி மக்கள் பயன் அடைந்துள்ளார்களா?

விடை—

கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளர் மதுரை மாவட்டம் நிலக்கோட்டைத் தொகுதியில் இரண்டு ஆதிதிராவிடர் நிலக் குடியேற்ற சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

தின்னமநாயக்கன்கோட்டை.

இங்கு ஆதிதிராவிடர் நிலக்குடியேற்ற சங்கம் 2–3–1961-ல் ஆரம்பிக்கப்பட்டது. கடனாக ரூ. 60,625-ம் மானியமாக ரூ. 39,370-ம் சங்க உறுப்பினர்களுக்கு மாடு மற்றும் விவசாய கருவிகள் வாங்கவும் மாட்டுக் கொட்டகை கட்டவும், புதுக்கிணறு தோண்டவும் அரசு கொடுத்துள்ளது. சங்க உறுப்பினர்களுக்கு

[1983 நவம்பர் 15

பலவிதக் கடனாக அளிக்கப்பட்ட கடன் தொகை 7 ஆண்டுகளாக வசூலிக்கப்படாமலிருந்ததாலும் வறட்சி காரணமாக தோண்டப்பட்ட கிணறுகள் வறண்டு போனதாலும் சங்க உறுப்பினர்கள் அரசு கடனுதவியால் வாங்கிய மாடுகளை விற்று விட்டு வேறு இடங்களுக்கு சம்பாதிக்க சென்றுவிட்டதாலும் உறுப்பினர்களின் ஒத்துழையாமையாலும் சங்கம் சரிவர செயல்பட முடியாமல் கலைக்க வேண்டிய நிலை உருவாயிற்று. எனவே 25–11–1977-ல் சங்கம் கலைக்கப்பட்டது.

சந்தையூர் :

இங்கு ஆதிதிராவிடர் நிலக்குடியேற்ற சங்கம் 7–3–1961-ல் ஆரம்பிக்கப்பட்டது. கடனாக ரூ. 8,750-ம் மானியமாக ரூ. 18,250-ம் சங்க உறுப்பினர்களின் பங்குத் தொகைக்கும் விதைகள், உரம், மற்றும் மாடுகள் வாங்கவும் நிலம் சீரமைக்கவும் மாட்டுக் கொட்டகை கட்டவும் கிணறு தோண்டவும் அரசு கொடுத்துள்ளது. சங்க உறுப்பினர்கள் அரசிடமிருந்து சட னுதவி மற்றும் மானியங்கள் பெற்றதாலும் தோண்டப்பட்ட கிணறுகளில் அதிக ஆழத்தில் நீர் இருந்ததாலும் இதில் உள்ள நீர் விவசாயத்திற்குப் போதுமான அளவு இல்லாததாலும் சங்கத் திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் தரிசு நிலங்களாகவும் சங்க உறுப்பினர்களின் குடியிருப்பிற்கு அதிக தூரத்தில் இருந்ததாலும் உறுப்பினர்களின் ஒற்றுமையின்மையினாலும் சங்கத்தைக் கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே சங்கம் 23–6–1976-ல் கலைக்கப்பட்டது.

மக்கள் விரும்பாத இடங்களில் உள்ள கள்ளு, சாராயக் கடைகளை அகற்றும் நடவடிக்கை.

85—வினா 10533—திரு. கு. ரமணி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளு, சாராயக்கடைகளை நடத்த அரசு உரிமம் வழங்குவதால் வியாபாரிகள் மக்கள் குடியிருக்கின்ற தெருக்கள், ஊர்களுக்கு நடுமத்தியில் அக்கடைகளை ஏற்படுத்துவதால் மக்களிடம் எதிர்ப்பு ஏற்பட்டு புகார்கள் வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மக்கள் விரும்பாத இடங்களில் கள்ளு, சாராயக்கடைகள் வைப்பதை அரசு தடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

1983 நவம்பர் 15]

(ஆ) கடைகள் அமைக்கப்படும் இடங்கள் பற்றியும் ஆட்சேபனைகள் இருந்தால் அவைகளை அகற்றுவது பற்றியும் விதிகள் உள்ளன. இந்த விதிகளின் கீழ் ஒவ்வொரு ஆட்சேபனையும் பரிசீலிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

குளச்சல் தும்புத் தொழிற்சாலைக் கட்டிடத்தை பழுதுபார்க்கும் பணி.

86—வினா 10537—திரு. டி. மணி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) குளச்சலில் உள்ள தும்புத் தொழிற்சாலைக் கட்டிடத்தைப் பழுது பார்க்க, தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் பொதுப்பணித் துறையிடம் 1979-ல் ரூ. 1,54,000-ம் ஒப்படைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் பழுது பார்க்கும் பணி இது வரையிலும் ஆரம்பிக்கப்படாதது ஏன்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விலைவாசி ஏற்றத்தின் காரணமாக திருத்திய மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறவேண்டியிருந்ததால் பொதுப் பணித்துறையில் தவிர்க்க முடியாத தாமதம் ஏற்பட்டது. தற் போது பொதுப்பணித்துறையினரால் கட்டிடம் புதுப்பித்து பழுது பார்க்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்திலுள்ள அரிசி ஆலைகள்.

87—வினா 10564—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் உள்ள அரிசி மில்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள்?

விடை—

[1983 நவம்பர் 15

(அ) 1,211.

(ஆ) 8,670.

பின்தங்கியோர் நிலக்குடியேற்ற சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு.

88—வினா 10591—திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கியவர்கள் நிலக்குடியேற்ற சங்கங்கள் மாநிலத்தில் எத்தனை உள்ளன? மாவட்ட வாரியாக?

(ஆ) 1980-81-ல் இச்சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில், எவ்வளவு?

விடை—

(அ) பின்தங்கியவர்களுக்கென்று நிலக்குடியேற்ற திட்டங்கள் எதுவும் பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை ஊராட்சி ஒன்றிய சாலைகளைச் செப்பனிட சிறப்பு நிதி ஒதுக்கிடும் திட்டம்.

89—வினா 10593—திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த சாலைகளை செப்பனிட சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் திட்டமுள்ளதா?

விடை—

திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

1983 நவம்பர் 15]

சாத்தூரில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

90—வினா 10983—திரு. டி. மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில் சூத்தூரில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம் என்ன நிலையில் உள்ளது?

விடை—

தற்சமயம் கட்டிடப் பணிகள் முடியும் தருவாயிலுள்ளது.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாத இளைஞர்களில் விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்கும் திட்டம்.

91—வினா 10960—திரு. இ. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாத இளைஞர்களில் விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சரியான முறையில் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைமுறையிலுள்ளது.

பழனி தேவஸ்தானத்தின் முடி குத்தகை மூலம் இடைத்த வருமானம்.

92—வினா 11152—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1983 நவம்பர் 15

பழனி தேவஸ்தானத்தின் முடி குத்தகை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் வருமானம் என்ன?

விடை—

பழனி தேவஸ்தானத்தின் முடி குத்தகை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமான விபரங்கள் பின்வருமாறு :—

பசலி ஆண்டு.	முடி டிக்கட் கட்டண வரவு.	முடி குத்தகை மூலம் வரவு.
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
1388	3,39,403·70	2,48,001·00
1389	3,47,355·74	2,98,593·00
1390	3,56,785·00	2,83,878·00

பசலி ஆண்டு.	மொத்தம்.	நாவிதர் பங்குத் தொகை மற்றும் இதர செலவுகள்	நிகர வருமானம்.
(1)	(2)	(3)	(4)
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1388 ..	5,87,404·70	1,98,376·88	3,89,027·82
1389 ..	6,45,948·74	2,41,173·91	4,04,774·83
1390 ..	6,40,663·00	2,58,621·00	3,82,042·00

இங்காநல்லூர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை.

93—வினா 11229—திரு. சு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் இங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் உள்ள அனைத்துப் படுக்கைகளும் பயன் படுத்தப்பட்டு வருகின்றனவா?

(ஆ) மகப்பேறு பிரிவில் எவ்வளவு படுக்கைகள் உள்ளன?

(இ) பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவு செயல்படுகிறதா—

1983 நவம்பர் 15]

விடை—

(அ) கோவை நகரம் இங்காநல்லூரில் உள்ள தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனையில் மொத்தம் 500 படுக்கைகளில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்டு வரை சராசரியாக 410 நோயாளிகள் மருத்துவமனை படுக்கைகளில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

(ஆ) 29 படுக்கைகள் உள்ளன.

(இ) ஆம்.

காட்டம்பட்டி அருகே பாலம் கட்டும் திட்டம்.

94—வினா 11238—திரு. பி. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொய்யலாற்றில் க. பரமத்தி ஒன்றியத்துக்குட்பட்ட காட்டம்பட்டி அருகே பாலம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

காஞ்சிபுரம் நகரில் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க எடுத்துள்ள நடவடிக்கை.

95—வினா 11250—திரு. ப. வெங்கடகப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) இக்குறையைப் போக்க ஜெனரேட்டர் இரண்டும், இரண்டு டீசல் என்ஜின்களும் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

[1983 நவம்பர் 15

(அ) காஞ்சிபுரம் நகரின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க ரூ. 3·12 இலட்சம் செலவில் வறட்சி நிவாரணத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு நகரின் பல இடங்களில் ஆழ் கிணறுகள், துளை கிணறுகள் ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தியும், பழுது பார்த்தும் தண்ணீர் வழங்கப்பட்டன. மேலும் மேடான பகுதிகளுக்குக் கிணற்றில் மோட்டார் அமைத்துத் தொட்டி கட்டி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. காஞ்சிபுரம் நகரின் குடிநீர் பற்றாக்குறை மேற்கூறியவாறு சமாளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஜெனரேட்டர் செட்ஸ் வாங்குவதற்கு தேவையான ரூ. 2 இலட்சத்தை வழங்க கோரும் மதிப்பீடு நகராட்சியால் மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கை மாவட்டம் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சின்னசேலத்தில் அரிசனத்துறை மாணவியர் தங்கும் விடுதி ஏற்படுத்தல்

96—வினா 11343—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலத்தில் அரிசன நலத்துறையால் மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலத்தில் ஆதி திராவிடர் நலத்துறையால் 25 மாணவியர்கள் கொண்ட விடுதி தற்பொழுது இயங்கி வருகிறது.

1983 நவம்பர் 15]

தென்னாற்காடு மாவட்டத்தில் தாதுப் பொருள் கிடைக்கும் இடங்கள்

97—வினா 11344—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் தாதுப்பொருள் எங்கெங்கே கிடைக்கின்றது ?

(ஆ) இது குறித்து அரசு ஆராய்ந்ததா ?

விடை —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் காணப்படும் கனிமங்கள் அவை உள்ள இடங்கள் மற்றும் இதர தகவல்கள் @ இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்

98—வினா 11352—திரு. வேடசந்தூர் ஷி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உள்ளிருப்பு படுக்கைகள் எத்தனை ?

(ஆ) படுக்கைகள் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா ?

(இ) ஆம் எனில் எவ்வளவு ?

விடை—

(அ) 242

(ஆ) மற்றும் (இ) : மொத்த படுக்கைகளின் எண்ணிக்கையை 300 ஆக உயர்த்தி அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை ஆணை எண். 1072, தேதி 16-6-1981-ல் ஆணை இடப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடிந்தபின் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

@ பக்கம் 494-496-ல் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1983 நவம்பர் 15

குளித்தலை தாலுக்கா தேவர்மலை அருள்மிகு உக்கிராண நரசிங்கப் பெருமாள் கோவில்

99—வினா 11362—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுக்கா தேவர் மலையில் உள்ள அருள்மிகு உக்கிராண நரசிங்கப்பெருமாள் கோவில் பராமரிப்பு இன்றி உள்ளதை அரசு அறியுமா ?

(அ) ஆம் எனில் காரணம் என்ன ?

(இ) அக்கோவிலுக்குள்ள நிலம் எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆலயத்தின் நிதி நிலை சரியாக இல்லாததால் திருப்பணி வேலைகள் செய்யப்படவில்லை.

(இ) புன்செய் 9.94 ஏக்கர் தரிசாக உள்ளது.

கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்குச் சொந்தக் கட்டிடம்

100—வினா 11404—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இத்தனை வருடங்களாக கட்டிடம் கட்டாததற்குக் காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இப்பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமுல்படுத்தப்பட்டதாலும், நிதி நிலையினையும் கருத்திற்கொண்டும் கட்டிடம் கட்ட மேல் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

1983 நம்வபர் 15]

இடைப்பாடி தொகுதியில் 1975-76 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை.

101—வினா 11413—திரு இ. கணேசன் : மாண்புமிகு சமூக நலஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதியில் முதியோர் பென்சன் 1975-76ஆம் ஆண்டு முதல், வருடம் வாரியாக எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது ?

(ஆ) எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது ?

விடை—

(அ) இடைப்பாடி தொகுதியில் 1975-76ஆம் ஆண்டு முதல், வருடம் வாரியாக முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வரும் நபர்கள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(1)	(2)	(3)
1.	1975-76	870
2.	1976-77	947
3.	1977-78	1,041
4.	1978-79	1,092
5.	1979-80	1,187
6.	1980-81	1,322
7.	1981-82	1,330

(ஆ) முதியோர் ஓய்வூதியத்திட்ட ஆரம்ப காலத்திலிருந்து (1962) 31-3-1979 முடிய நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வழங்கப்பட்டு வந்தது. இத்தொகையானது 1-4-1979 முதல் 25 ரூ. ஆக உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு செலவு செய்யப்பட்ட தொகை.

102 வினா 11414—திரு. இ. கணேசன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு எவ்வளவு, செலவு செய்யப்பட்டுள்ளது, தொகுதிவாரியாக ?

[1983 நவம்பர் 15

(ஆ) 1975-76 முதல் 1979-80 வரை திட்டங்களுக்கு மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கியுள்ளது ?

விடை —

(அ) மற்றும் (ஆ): சட்டமன்றப் பேரவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு அரங்குகள் அமைக்கும் திட்டம்

103 —வினா 11437 — திரு பி. எஸ். துரைசாமி மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியம்தோறும் விளையாட்டு அரங்கு அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) ஊராட்சி ஒன்றியம்தோறும் உள்ள ஊரக விளையாட்டு மையங்களில் இக்கன விளையாட்டு அரங்கம் ஒன்று நிறுவிட வேண்டும் என்ற திட்டம் அரசிடம் உள்ளது.

(ஆ) இந்தத் திட்டத்தின்படி விளையாட்டு அரங்கம் கட்ட முன்வரும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வழங்கப்படும்:

எல்லா மாவட்டங்களுக்கும் (சென்னை, நீலகிரி நீங்கலாக).	ரூ. 35,000
நீலகிரி மாவட்டம்	ரூ. 25,000

இந்த நிதி உதவி இரண்டு தவணைகளில் வழங்கப்படும். இதற்கான மதிப்பீட்டிற்கு இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறை இயக்குநர் ஒப்புதல் அளிப்பார்.

@ பக்கம் 497–505-ல் இணைப்பு VIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1983 நவம்பர் 15]

திருநெல்வேலி இரயில் சந்திப்பிலுள்ள முற்றத்தை நில ஆர்ஜிதம் செய்தல்

104—வினா 11472 —திருவாளர்கள் நன்னிலம் அ. கலையரசன் மற்றும் கே. குப்புசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை அகல இரயில் பாதை அமைப்பதன் காரணமாக திருநெல்வேலி இரயில் சந்திப்பில் உள்ள முற்றத்தை (சர்வே எண் 23பி/1ஏ2) நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ரூ. 284.50.

Testing Centre for evaluation and testing of Agricultrural Machinery

105 — Q No 11481—**Thiru M. S. Manickam** : will the Hon. the Minister for Agriculture be plaesed to state—

(a) whether there is any proposal for setting up testing centre for evoluation and testing of different types of Agriculture machinery and'

(b) if so the details thereof ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

கிராமிய கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் மூலம் கட்டப்பட்ட வீடுகள்

108 – வினா எண் . 11558 – திரு. நல்லிலம் அ. கலையரசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் 30–7–1981 வரை கட்டியுள்ள , கட்டி முடிக்கப்படாத வீடுகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் ஆதி திராவிடர்களுக்கு எத்தனை வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை —

(அ) 31–7–1981 வரை தமிழ்நாடு முழுவதுமுள்ள கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் வழங்கிய கடன் பணத்தைக் கொண்டு 78,843 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 31–7–1981 அன்று 34,393 வீடுகள் பல்வேறு கட்டும் நிலைகளில் இருந்தன.

(ஆ) மேற்கூறிய வீடுகளில் 60,399 கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளும் 27,774 கட்டும் நிலைகளில் இருந்த வீடுகளும் ஆக மொத்தம் 88,173 வீடுகளும் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப் பட்ட கடன் தொகையினால் கட்டப்பட்டவை.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

107 – வினா 11579 – திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை –

இல்லை.

இளையான்குடி யூனியனில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றும் பணிகள்.

108—வினா 11595 – திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) இளையான்குடி யூனியனில் தன்னிறைவுத் திட்டத் தின் கீழ் தற்போதுள்ள எத்தனைவேலைகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன ?

(ஆ) இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை —

(அ) இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், கீழ்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன :—

1. இணைப்புச் சாலைகள்	.. ..	105 பணிகள்.
2. சிறுபாலங்கள்	.. ..	55 பணிகள்.
3. ஊரக மருத்தகங்கள்	.. ..	1 பணி.
4. தாய்-சேய்- நல விடுதிகள்	.. ..	4 பணிகள்.
5. பள்ளிக் கட்டிடங்கள்	.. ..	26 பணிகள்.
மொத்தம்	..	191 பணிகள்.

(ஆ) இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 50.10 இலட்சம்.

செங்கற்பட்டு ராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரியில் பழைய மரச்சாமான்கள் ஏலம் விடப்பட்டதில் முறைகேடு மீது நடவடிக்கை.

109 – விளா : 11647 – திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு ராஜேஸ்வரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரியில் பழைய மரச்சாமான்கள் ஏலம் விடப்பட்ட தில் தவறுகள் நடந்துள்ளன என்பது உண்மையா ?

[1983 நவம்பர் 15

(ஆ) ஆம் எனில் காரணமானவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : அம்மாதிரி நடந்துள்ளதாகக் கல்லூரிக் கல்வி இயக்குநகரத்திற்குப் பல புகார்க் கடிதங்கள் வந்தன. இயக்குநர் பணித்தபடி கல்லூரிக் கல்வி மண்டலத்துணை இயக்குநர் விசாரணை நடத்தி புகார்களுக்கு ஆதாரம் இருப்பதாகத் தோன்றுவதாக அறிக்கை தந்தார். மேலும் முதுநிலைக்கணக்கு அலுவலர் உள்ளிட்ட ஒரு குழு முன்னறிவிப்பு இல்லாமல் சென்று மரச்சாமான்கள் இருப்பைச் சரி பார்த்ததில் தவறான ஏலமுறை நடந்துள்ளது என்று நம்ப இடமுண்டு என்று தெரிவதாகவும், புகாரில் தொடர்புள்ளதாய்க் கூறப்படும் அலுவலர்கள் மீது முறைப்படி கல்வித் துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தண்டலம் கிராமத்திற்கு பாதை அமைத்தல்.

110 —வினா 11659 —திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம், ஜானகிபுரம் பஞ்சாயத்து தண்டலம் கிராமத்திற்கு, பாதை அமைக்க ரெயில்வே நிர்வாகத்தினரின் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பாதை எப்போது அமைத்துக்கொடுக்கப்படும் ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : தண்டலம் கிராமத்திற்கு ஏற்கெனவே பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தண்டலம் கிராமத்திலிருந்து அரிசன காலனிக்குக் குறுக்கே ரயில் பாதை செல்கிறதால் இக்காலனிக்கு ரயில் பாதையின் குறுக்கே சாலை அமைத்துக்கொடுக்க அனுமதி கோர செங்கற்பட்டு துணை ஆட்சித் தலைவரின் தொடர்பு கொண்டு ஆணையரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1983 நவம்பர் 15]

தஞ்சை மாவட்டத்தில் பாலங்கள் கட்டும் திட்டம்.

111 —வினா : 111671 —திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் கோட்டூர் எல்லையில் கூந்தலூர் கிராம வாய்க்காலில் பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்டம் எப்போது செயல்படும் ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) கூடிய விரையில் ஆரம்பிக்கப்படும்.

112 —வினா 11672 —திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியம் பேரளம் அன்னியூர் சாலையில் கீர்த்திமானாறு வடகோரையாறுகளில் பாலங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்டம் எப்போது செயல்படும் ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

113 —வினா 11675 —திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மவாட்டம் குடவாசல் ஒன்றியம் கடகக்குடி கிள்ளியூர் சாலையில் நூலாற்றில் பாலம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்டம் எப்போது செயல்படும். ?

[1983 நவம்பர் 15

விடை —

(அ) ஆம்.

(ஆ) விரைவில் செயல்படுத்தப்படும்.

114 —வினா 11682 —திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியம் விஷ்ணு வரம் –பரவாக்கரை கிராமங்களை இணைக்க பூங்குடி மூலை கிராம எல்லையில் முட்டையாற்றில் வண்டிப்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசின் மேல் நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : தற்போது இல்லை.

மது பெர்மிட்டுகள் வழங்கப்பட்டோர் எண்ணிக்கை.

115—வினா 11685—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் மது அருந்த அனுமதி (Permit) கேட்டு மனுச் செய்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) எத்தனை பர்ம்மிட்டுகள் வழங்கப்பட்டன ?

(இ) அரசிற்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

	ஆண்டு. (1979-80)	ஆண்டு. (1980-81)	மொத்தம்.
(அ)	67,930 பேர்கள்.	1,63,864 பேர்கள்.	2,31,794 பேர்கள்.
(ஆ)	66,832 பர்மிட்டுகள்.	1,61,839 பர்மிட்டுகள்.	2,28,721 பர்மிட்டுகள்.
(இ)	16,62,610 ரூபாய்கள்.	40,62,655 ரூபாய்கள்.	57,25,26 ரூபாய்கள்.

1983 நவம்பர் 15]

தேவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.

116—வினா 11711—திரு.எம். செல்லமுத்து: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தாலூகா, கீவளூர் ஒன்றியம், தேவூர் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதி கோரி, அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன

விடை—

(அ) மற்றும் (ஆ) : 839, மாணவ மாணவிகள் பயிலும் இப்பள்ளியில் 20 பிரிவுகள் உள்ளன. 14 பிரிவுகளுக்குக் கட்டடங்கள் உள்ளன. இது தவிர இப்பள்ளியின் மேல் நிலை வகுப்புகளுக்கு ஒரு வகுப்பறை மற்றும் ஆய்வுக் கூடம் கட்ட அனுமதிக்கப் பட்டு வேலை நடந்து வருகிறது. இப் பள்ளியின் கட்டடத் தேவையை உணர்ந்து இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட பொதுப்பணித்துறையினரிடம் மதிப்பீட்டுக்கள் கோரப் பட்டுள்ளன. அவை பெறப்பட்டதும் வருமாண்டில் முன்னுரிமை அடிப்படையில் இப் பள்ளியின் கட்டடத் தேவைகள் கருத்திற் கொள்ளப்படும்.

லஞ்ச ஒழிப்பு பிரிவால் விசாரிக்கப்பட்ட வழக்குகள்.

117—வினா 11725—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1981 வரை லஞ்ச ஒழிப்புப் பிரிவால் விசாரிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை முடிவு பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 1977 முதல் 1981 வரை 378 வழக்குகள் லஞ்ச ஒழிப்புப் பிரிவால் விசாரிக்கப்பட்டன.

(ஆ) அவைகளில் 343 வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன. (மேலே கண்ட விடைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட

[1983 நவம்பர் 15

செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கி செயலாளருக்கு நஷ்ட ஈடு வழங்கல்.

118—வினா 11746—திரு. ப.வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட விவாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கியின் செயலாளர் தவறாக நீக்கப்பட்டதால் நஷ்ட ஈடு வழங்க உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளதா ?

(ஆ) இத்தொகை யாரால் கட்டப்பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்படி நஷ்ட ஈடாக ரூ. 12,000 வங்கியின் பொது நிதியிலிருந்து வங்கியால் செலுத்தப்பட்டது.

வடமதுரை வேடசந்தூர் சாலையை அகலப்படுத்தும் செயற் குறிப்பு

119—வினா 11820—வேடசந்தூர் திரு. வீ. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தொகுதியில் வடமதுரை-வேடசந்தூர் செல்லும் நெடுஞ்சாலைத்துறை சாலையை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

சென்னை மாவட்ட மத்திய நூலகச் சொற்பொழிவுக் கூடம்

120—வினா 11836—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

இலக்கிய விழாக்கள் நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட சென்னை மாவட்ட மத்திய நூலகச் சொற்பொழிவுக் கூடம் சென்ற 1980 அக்டோபர் முதல் 1981 சனவரி முடிய, தனியார் ஒருவரின் துணை விற்பனைக்காக விடப்பட்டது உண்மையா

1983 நவம்பர் 15]

விடை—

சென்னை மாவட்ட மத்திய நூலகம் சொற்பொழிவுக்கூடம் குறிப்பிட்ட கால கட்டத்தில் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டது :—

(அ) 7-10-1980 முதல் ஒரு மாத காலத்திற்கு இண்டியன் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு விற்பனைக் கண்காட்சிக்கு ஒதுக்கப்பட்டது.

(ஆ) நவம்பர் 10 முதல் (1980) 30 முடிய அரசு தேர்வுகள் நடத்த ஒதுக்கப்பட்டது.

(இ) 1980 டிசம்பர் 2 முதல் 1981 ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முடிய இண்டியன் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு விற்பனைக் கண்காட்சிக்கு மீண்டும் ஒதுக்கப்பட்டது நூலக ஆணைக்குழுவின் வருமானம் கருதி வேறு யாரும் அதனை வாடகைக்குக் கேட்காத நிலையில் இது விற்பனைக் கண்காட்சிக்கு வாடகைக்கு விடப்பட்டது.

கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலையிலுள்ள மொத்த சாராய விற்பனை கடையை இடமாற்ற கோரிக்கை.

121—வினா 11932—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலையில் (Orme Road) உள்ள மொத்த சாராய விற்பனை கடையை அங்கிருந்து மாற்ற வேண்டுமென கோரி 1981 ஆகஸ்ட் மாதம் பொதுமக்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம், ''சில்வன் லாட்ஜ் காலனி வெல்பேர் அசோசியேஷன்'' என்ற அமைப்பிலிருந்து இது குறித்துக் கோரிக்கை ஒன்று வந்தது. சென்னை மாவட்ட ஆட்சியர் மேற்படி கோரிக்கையில் நியாயம் இல்லை என்று தெரிவித்துள்ளார். புட்டியில் அடைக்கப்பட்ட சாராய மொத்த விற்பனை நிலையத்தை பார்வையிட்ட மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையாளரும் மேற்படி விற்பனை நிலையத்தால் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏதும் இல்லை என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

[1983 நவம்பர் 15

NUMBER OF CENTRES ORGANISED BY THE GOVERNMENT FOR THE PRODUCTION AND SALE OF KHADI.

122—Q.—11991—Thiru P. VENKATASUBRAMANIAM; Will the Hon. The Minister for Khadhi and Public Works be pleased to state—

(a) The number of centres organised by the Government for the production and sale of Khadi in each district with their location;

(b) The staff employed in the depots for production and sale and

(c) The total value of sales during 1980-81.

விடை—

(அ) மற்றும் (ஆ) : கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கதர் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை கீழே வருமாறு :—

பருத்தி கதர் உற்பத்தி நிலையங்கள்.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1 வட ஆற்காடு	1	திருவலம்	1
2 தென் ஆற்காடு	4	சின்ன சேலம்	3
		குகையூர்	3
		சங்கராபுரம்	2
		கண்டாச்சி மங்களம் (சிறுபாக்கம்).	2
3 திருச்சிராப்பள்ளி	5	கரூர்	3
		தென்னிலை	2
		தொட்டாம்பட்டி	2
		அரவக்குறிச்சி	2
		திருச்சி	3

[1983 நவம்பர் 15

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
தஞ்சாவூர்	1	திருவாரூர்	1
கோயம்புத்தூர்	13	திருப்பூர்	4
		குளூர்	4
		மடத்துக்குளம்	3
		குடிமங்களம்	3
		பெங்களூர்	4
		அமராவதிபாளையம்	3
		பெரும்மநல்லூர்	12
		வடுகம்பாளையம்	3
		வட சித்தூர்	3
		செய்யூர்	3
		அம்மாபாளையம்	3
		கரவலூர்	3
		அவினாசி	6
6 பெரியார் மாவட்டம்	19	ரெட்டியபாளையம்	4
		ஓலம் பாளையம்	4
		பெருந்துரை	3
		வெள்ளக்கோயில்	14
		நந்தக்கடையூர்	4
		வேமந்தம்பாளையம்	4
		சின்னமுத்தூர்	4
		கவிலிப்பாளையம்	4
		மூங்கில்பட்டி	3
		புடுப்பை	4
		கெட்டிச்செய்யூர்	3
		அய்யம்பாளையம்	4
		தாராபுரம்	3
		கொளத்துப்பாளையம்	3
		ஆண்டிப்பாளையம்	4
		சன்மாளியம்பட்டி	6
		பட்டுத்துறை	4
		கானிவடி	2
		சங்கரந்தம்பாளையம்	4
7 சேலம்		நாமக்கல்	2
		குமாரபாளையம்	3
		சேலம்	6
		புளியன்குறிச்சி	5

[1983 நவம்பர் 15

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
8 தர்மபுரி	1	பாப்பாரப்பட்டி	3
9 மதுரை	4	நரிக்கல்பட்டி	3
		தொப்பம்பட்டி	3
		இடையன்வலசு	3
		திருமங்கலம்	4
10 இராமநாதபுரம்	6	ராஜபாளையம்	3
		ஸ்ரீவில்லிப்புத்தூர்	11
		வேட்ராப்	3
		அருப்புக்கோட்டை	4
		சாயல்குடி	1
		கமுதி	1
11 திருநெல்வேலி	11	கோவில்பட்டி	2
		தூத்துக்குடி	3
		குருவிக்குளம்	4
		டி. என். புதுக்குடி	3
		கடய நல்லூர்	2
		கிளப்பலூர்	3
		சம்பாவர் வடகரை	2
		பாளையம்கோட்டை	2
		வள்ளியூர்	3
		வீரநல்லூர்	3
		உடங்குடி	2
12 கன்னியாகுமரி	11	அகஸ்தீஸ்வரம்	3
		தங்கம்புத்தூர்	4
		மணவாளக்குறிச்சி	2
		பொட்டல்	3
		நாகர்கோவில்	9
		வில்லுக்குறி	3
		செம்பருத்திவிளை	1
		மார்த்தாண்டம்	7
		புதுக்கடை	2
		பாலப்பள்ளம்	2
		மண்டே மார்க்கட்	4
மொத்தம் ..	80		284

1983 நவம்பர் 15]

பட்டு கதர் உற்பத்தி நிலையங்கள்.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
1 செங்கல்பட்டு ..	1	காஞ்சிபுரம் ..	6
2 வட ஆற்காடு ..	2	ஆரணி ..	2
		வாழப்பந்தல் ..	4
3 தஞ்சாவூர் ..	8	கும்பகோணம் ..	3
		அய்யம்பேட்டை	3
		அம்மாப்பேட்டை ..	4
		அம்மையப்பன் ..	5
		கபிதாளம் ..	3
		திருநாதேஸ்வரம்	2
		பட்டிஸ்வரம் ..	5
		கதிர்மங்களம் ..	5
4 புதுக்கோட்டை ..	1	திருவப்பூர் ..	2
5 சேலம் ..	3	சேலம் ..	3
		ராசிபுரம் ..	4
		பஞ்சுகலிப்பட்டி ..	4
மொத்தம் ..	15		55

கதர் விற்பனை நிலையங்கள்.

1 சென்னை ..	8	கதர் அங்காடி (தலைமை) சென்னை ..	46
		அண்ணாசாலை ..	10
		வாலாஜா ரோடு ..	6
		வில்லிவாக்கம் ..	3
		மைலாப்பூர் ..	5
		தியாகராய நகர் ..	4
		வண்ணாரப்பேட்டை	2
		திருவல்லிக்கேணி ..	2

[1983 நவமபர் 15

கதர் விற்பனை நிலையங்கள் —தொடர்ச்சி.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1)	நிலையங்களின் எண்ணிக்கை. (2)	நிலையங்களின் பெயர். (3)	ஊழியர்களின் எண்ணிக்கை. (4)
2 செங்கல்பட்டு	8	காஞ்சிபுரம்	4
		செங்கல்பட்டு	3
		மதுராந்தகம்	2
		திருக்கழுக்குன்றம்	2
		திருத்தணி	3
		தாம்பரம்	3
		திருவள்ளூர்	2
		பொன்னேரி	2
3 வட ஆற்காடு	16	வேலூர்	2
		குடியாத்தம்	2
		ஆற்காடு	2
		வாணியம்பாடி	1
		ஆம்பூர்	1
		சோளிங்கர்	2
		காட்பாடி	2
		அரக்கோணம்	2
		திருப்பத்தூர்	2
		திருவண்ணாமலை	3
		செங்கம்	2
		போளூர்	2
		ஆரணி	2
		செய்யார்	2
		வந்தவாசி	1
		திருவொட்டியூர்	4
தென் ஆற்காடு	11	கடலூர்	3
		விழுப்புரம்	3
		நெய்வேலி	2
		சிதம்பரம்	2
		திண்டிவனம்	3
		விருத்தாசலம்	1
		உளுந்தூர்பேட்டை	2
		திருக்கோவிலூர்	2
		கள்ளக்குறிச்சி	1
		செஞ்சி	1
		பாண்டிச்சேரி	3

1983 நவம்பர் 15]

கதர் விற்பனை நிலையங்கள் —தொடர்ச்சி.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1)	நிலையங்களின் எண்ணிக்கை. (2)	நிலையங்களின் பெயர். (3)	ஊழியர்களின் எண்ணிக்கை. (4)
5. திருச்சிராப்பள்ளி	12	திருச்சி	8
		லால்குடி	4
		துறையூர்	2
		ஜெயங்கொண்டான்	3
		அரியலூர்	2
		பெரம்பலூர்	4
		கரூர்	3
		குளித்தலை	3
		மணப்பாறை	3
		முசிறி	3
		தொட்டியம்	3
		தில்லைநகர்	8
6. புதுக்கோட்டை	3	புதுக்கோட்டை	4
		ஆலங்குடி	2
		அறந்தாங்கி	2
7. தஞ்சாவூர்	15	தஞ்சாவூர்	4
		பாபநாசம்	3
		கும்பகோணம்	3
		அம்மாபேட்டை	2
		பட்டுக்கோட்டை	4
		திருவையாறு	2
		சீர்காழி	2
		மாயவரம்	3
		திருவாரூர் (விஜயபுரம்)	2
		முத்துப்பேட்டை	2
		நாகப்பட்டினம்	4
		மன்னார்குடி	4
		திருத்துறைப்பூண்டி	2
		காரைக்கால்	2
		வேதாரண்யம்.	2

[1983 நவம்பர் 15

கதர் நிறுவனை நிலையங்கள்—தொடர்ச்சி.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
8. கோயம்புத்தூர் ..	9	திருப்பூர் ..	4
		உடுமலைப்பேட்டை	2
		கோயம்புத்தூர் ..	20
		ஒப்பணக்காரத்தெரு	7
		டி. வி. ரோடு	2
		பொள்ளாச்சி ..	3
		குன்னூர் ..	3
		ஊட்டி ..	3
		கூடலூர் ..	2
9. பெரியார் ..	6	ஈரோடு	
		கொடுமுடி ..	6
		கவுண்டன்பாடி ..	2
		கோபி ..	2
		சத்தியமங்கலம் ..	2
		தாராபுரம் ..	2
			3
10. சேலம் ..	7	ஓமலூர்	
		சேலம் ..	2
		ஆத்தூர் ..	5
		ராசிபுரம் ..	2
		குமாரபாளையம் ..	2
		சங்ரி ..	2
		நாமக்கல் ..	2
			3
11. தர்மபுரி ..	6	தர்மபுரி	
		கிருஷ்ணகிரி ..	2
		ஓசூர் ..	3
		பாலக்கோடு ..	3
		ஹொசூர் ..	3
		ஊத்தங்கரை ..	3
			3

1983 நவம்பர் 15]

பட்டு கதர் உற்பத்தி நிலையங்கள்.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
12. மதுரை ..	21	திண்டுக்கல். ..	3
		பழனி ..	2
		கோபாலப்பட்டி	2
		அய்யம்பாளையம் ..	2
		பெரியகுளம் ..	2
		கம்பம் ..	2
		கூடலூர் ..	2
		தேனி ..	2
		சின்னமானூர் ..	2
		உத்தமபாளையம் ..	3
		கொடைக்கானல்	3
		போடி	2
		ஆண்டிப்பட்டி	2
		மதுரை ..	5
		தமுக்கம் ..	2
		திருமங்கலம்	2
		திருப்பரங்குன்றம் ..	2
		சோழவந்தான் ..	2
		வடிப்பட்டி	2
		உசிலம்பட்டி ..	2
		நிலக்கோட்டை ..	2
			2
13. இராமநாதபுரம் ..	17	ராஜபாளையம் ..	2
		ஸ்ரீவில்லிபுத்தூர் ..	2
		சிவகாசி ..	2
		சாத்தூர் ..	7
		விருதுநகர் ..	3
		அருப்புக்கோட்டை	
		முதுகுளத்தூர் ..	2
		பரமக்குடி ..	2
		ராமநாதபுரம் ..	1
		ராமேஸ்வரம்	2
		மானாமதுரை ..	2
		சிவகெங்கை ..	4
		தேவக்கோட்டை ..	2
		காரைக்குடி	5

[1983 நவம்பர் 15

பட்டு கதர் உற்பத்தி நிலையங்கள்—தொடர்ச்சி.

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	நிலையங்களின் எண்ணிக்கை.	நிலையங்களின் பெயர்.	ஊழியர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)
13. இராமநாதபுரம்—தொடர்ச்சி.		திருவாதனை ..	2
		திருப்பத்தூர் ..	2
		சிங்கம்புணரி ..	3
14. திருநெல்வேலி ..	12	கோவில்பட்டி ..	3
		தூத்துக்குடி ..	4
		சங்கரன்கோவில் ..	2
		நாகலாபுரம் ..	2
		ஸ்ரீ வைகுண்டம் ..	1
		உடங்குடி ..	2
		திருச்செந்தூர் ..	4
		திருநெல்வேலி ..	2
		பாளையங்கோட்டை ..	2
		நாங்குநேரி ..	2
		குற்றாலம் ..	3
		தென்காசி ..	2
15. கன்னியாகுமரி ..	4	நாகர்கோவில் ..	4
		கன்னியாகுமரி ..	3
		தக்கலை ..	3
		மார்த்தாண்டம் ..	3
மொத்தம் ..	155		481

(இ) 1980–81-ம் ஆண்டில் கதர் விற்பனையின் மொத்த மதிப்பு ரூ. 692.22 இலட்சங்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலுள்ள சங்கங்கள்.

123 –வினா 12068—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் எத்தனை சங்கங்கள் உள்ளன?

1983 நவம்பர் 15]

(ஆ) பதிவு பெற்றவை எத்தனை ? அங்கீகரிக்கப்பட்டவை எத்தனை ?

(இ) அங்கீகாரத்திற்கு கடைபிடித்துள்ள முறை என்ன ?

(ஈ) மேலும் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தில் 45 சங்கங்கள் உள்ளன.

(ஆ) பதிவு பெற்றவை நாற்பத்தி ஐந்து. அங்கீகரிக்கப்பட்டவை ஒன்பது.

(இ) தொழில் ஒழுங்குமுறை விதிகள் (Code of Discipline) 1963-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பணியாளர் தொகுதி சங்கங்கள் அங்கீகரிக்கும் விதி, மற்றும் மின் வாரியத்தைச் சார்ந்த தொழில் முறை ஊழியர் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்கான விதிகள் ஆகியவைகளின் அடிப்படையில் தொழிற்சங்கங்கள்/பணியாளர் தொகுதி சங்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஈ) தற்போது இல்லை.

செங்கற்பட்டு மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கும் பணி.

124—வினா 12093—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட காலனி சாலை, புளியர்ணங்கோட்டை சாலை, பையம்பாடி சாலை வேலைகள் முடிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) புளியர்ணங்கோட்டை ஆதி திராவிடர் மயானப் பாதை ரூ. 3,257 செலவில் 19–8–81-லும், பையம்பாடி ஆதி திராவிடர் காலனி சாலை ரூ. 17,126 செலவில் 10–6–1981

[1983 நவம்பர் 15

அன்றும், பையம்பாடி கிராம சாலை ரூ. 10,015 செலவில் 20–10–1981 அன்றும் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட ஆதி திராவிடர் காலனி மயானப் பாதை அமையும் இடம் ஆக்கிரமிப் பில் உள்ளதால் இப்பாதை அமைக்கப்படவில்லை.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்ற தாசில்தார் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். ஆக்கிரமிப்பை வெளியேற்றிய பின் தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இச்சாலை அமைக்க நட வடிக்கை எடுக்கப்படும்.

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்.

125—வினா 12158—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்பு மிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க கைலாச நாதர் கோவிலுக்கு உல்லாச பயணிகள் அதிகம் வரப்பட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

காஞ்சிபுரம் நகரிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலய அமைப்புகள், மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கண் காணிப்பில் உள்ளது. ஆகவே ஆலயத்தை சுற்றுலா பயணிகளைக் கவரும் வண்ணம் சீர் செய்வது தொல்பொருள் ஆய்வுத் துறை யினர்தான் மேற்கொள்ள வேண்டும்.

மேலப்பாளையம்—புலியூர் இடையில் நிரந்தர பெட் ரெகுலேட்டர் அமைக்கும் திட்டம்.

126—வினா 12192—திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அமராவதி ஆற்றில் கரூர் தாலுக்கா மேலப்பாளையத் திற்கும் புலியூருக்கும் இடையில் (Permanent Bed Regulator) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1983 நவம்பர் 15]

விடை—

(அ) மற்றும் (ஆ): அமராவதி ஆற்றில் கரூர் வட்டம், மேலப்பாளையத்திற்கும் புலியூருக்கும் இடையில் பெட் ரெகு லேட்டர் அமைப்பதற்கான திட்டத்தை ஆய்வு செய்து, திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

திருச்சி மாவட்ட குடும்ப நல அலுவலகக் கட்டிடம்.

127—வினா 12225—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்ட குடும்பநல அலுவலகக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், மேற்படி கட்டிடத்தை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளியில் தனியார் கட்டி டங்கள் ஏதும் வாடகைக்கு கிடைக்காததால், அங்குள்ள அரசினர் இராஜாஜி காசநோய் மருத்துவமனையைச் சேர்ந்த கண் காணிப்பாளர் குடியிருப்பின் மாடிப் பகுதியில் விலையுயர்ந்த கருவிகள் மற்றும் தடுப்பு மருந்துகளுடன் திருச்சிராப்பள்ளி, மாவட்ட குடும்பநல அலுவலகம் 15–12–1981 முதல் செயல் பட்டு வருகிறது. மேற்கூறிய மருத்துவ மனையைச் சேர்ந்த சிறப்புப் பகுதி மருந்துக் கிடங்காகவும், மரச்சாமான்கள், விளம் பரப் பலகைகள் மற்றும் பதிவுக் கட்டுகள் வைக்கவும் பயன் படுத்தப்படுகிறது.

திண்டுக்கல் காமராஜ் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு.

128—வினா 12230—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லுக்குக் குடிதண்ணீர் வழங்கும் காமராஜ் நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு மணல் மேவியதால் குறைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

[1983 நவம்பர் 15

விடை —

(அ) நீர்த்தேக்கத்தில் மணல் மேவியது குறைந்த அளவே. அதனால் நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு குறைய வாய்ப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கல்லணை, மேலணையை இணைத்து மேம்படுத்தும் திட்டம்.

129 —வினா 12242 —திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சுற்றுலாத் துறை மூலம் கல்லணை, மேலணைகளை இணைத்து சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வண்ணம் திட்டம் நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) மற்றும் (ஆ) : கல்லணைக்கும், மேலணை என்று அழைக்கப்படும் முக்கொம்புவிற்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 25 கிலோ மீட்டர் ஆகும். தற்சமயம் இத்துறையினால் கல்லணை மற்றும் மேலணைகளை இணைத்து, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் மேம்படுத்தும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திருவண்ணாமலை குடிதண்ணீரை சுத்தப்படுத்தும் நடவடிக்கை.

130 —வினா 12247 —திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலையில் குடிதண்ணீர் 1981-ல் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அசுத்தமாகவும், கலங்கியும் தண்ணீர் இருந்து வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்பட்டார்களா ?

1983 நவம்பர் 15]

விடை—

(அ) மற்றும் (ஆ) : இம்மாதங்களில் ஏற்பட்ட மழையின் காரணமாக உலர்ந்து கிடந்த அணைக்கட்டினால் வழங்கப்படும் நீர் இலேசான செந்நிறமாக மாறியது. இதனால், வழங்கப்பட்ட நீர் பார்வைக்கு கலங்கலாகவும், அசுத்தமாகவும், தெரிந்தது. இந்த நீர் போதிய அளவுக்கு ஆலம் என்ற இரசாயனக் கலவை மூலம் நீர் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பின்பே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. அதனால், பொதுமக்களின் உடல் நலனுக்குப் பாதிப்பு ஏதும் இல்லை. மழையின் காரணமாக லேசான செந்நிறமான நீர் தினமும், நாள் ஒன்றுக்கு 600 கிலோ கிராம் ஆலம் என்ற இரசாயனக் கலவையின் மூலம் நீர் சுத்திகரிக்கப்பட்ட பின்பே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

(இ) இல்லை.

சேலம் மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக்கழக நகர பேருந்துகள் மூலம் இடைக்கும் வருமானம்.

131 —வினா 12265 —திரு. கி. பழனிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து செல்கின்ற வழித் தடங்களில் எந்த வழித் தடம் நாளொன்றுக்கு அதிக வசூல் கொடுக்கிறது ?

(ஆ) அந்த வழித் தடம் யாது ? வசூல் தொகை எவ்வளவு?

(இ) குறைந்த வசூல் வழித்தடம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சேலம் பேருந்து நிலையத்திலிருந்து ஓமலூர் வழியாக தாரமங்கலம் செல்லும் அண்ணா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து வழித்தடம் நாளொன்றுக்கு அதிக வசூல் கொடுக்கிறது. இவ்வழித்தடத்தில் வசூல் தொகை நாளொன்றுக்கு ரூ. 1,450 ஆகும்.

(இ) குறைந்த வசூல் தருவது எடப்பாடி-ஆணைப்பள்ளம் பலமனைத் தடம்—இதன் வசூல் தொகை நொளான்றுக்கு ரூ. 290 ஆகும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

இளையான்குடி தாலுக்காவில் இணறுகளை ஆழப்படுத்த ஒதுக்கிய தொகை.

134—வினா 12283— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தாலுகாவிற்கு வறட்சி நிவாரண வேலையில் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டதா ?

விடை—

(அ) இளையான்குடி வட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தனிப்பட்டோரின் விவசாயக் கிணறுகளை ஆழப் படுத்துவதற்கு தக்காவிக் கடனாக ரூ. 1,25,000 ஒதுக்கப்பட்டு உள்ளது.

(ஆ) ஆம். 83 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் இலைகள், இசைக் கருவிகள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்கும் திட்டம்.

135—வினா 12324— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு, ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், இலைகள், இசைக் கருவிகள் தயாரிக்கும் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ,

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது ?

ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு நிறப்பு மருத்துவப்பட்டம் பெற்ற மருத்துவர் நியமனம்.

132—வினா 12271— திரு. கி. பழனிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு நிறப்பு மருத்துவப் பட்டங்களான M.S., M.D., D.G.O. ஆகிய பட்டங்களைக் கொண்ட மருத்துவரை நியமிக்கும் உத்தேசம் உண்டா—

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நியமிக்கப்படுவார் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் அரசு மருத்துவமனையில் எம் எஸ். பட்டம் பெற்ற ஒரு மருத்துவர் 21—11—1981-லிருந்து பணிபுரிந்து வருகிறார். மற்ற படி எம்.டி., டி.ஜி.ஓ. போன்ற பட்டங்கள் உடைய மருத்துவர்களை பட்ட மேற்படிப்பு முடிந்துவரும் சமயத்தில், பொது மாற்றங்கள் செய்யும் பொழுது நியமிக்க ஆவன செய்யப்படும்.

கடலூர்–சேலம் சாலையில் வசிஷ்ட நதியின் குறுக்கே தரைப் பாலம் அமைக்கும் திட்டம்.

133—வினா 12275— திரு. கி. பழனிமுத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர்-சேலம் மெயின் ரோடில் செல்லியம்பாளையத்திலிருந்து வடக்கே மலை அடிவாரம் வரை உள்ள தார் ரோடின் குறுக்கே வசிஷ்ட நதி செல்வதால் தரைப் பாலம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) திட்டம் எப்பொழுது துவங்கப்படும் ?

[1983 நவம்பர் 15

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டத்தில் சுவாமி மலையில் ஒரு உலோக சிற்பக்கலை பயிற்சி நிலையமும், விக்ரகம் செய்வோர் தொழிற்கூட்டுறவு சங்கமும் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூரில் இசைக் கருவிகள் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது. இசைக் கருவிகள் கூட்டுறவுச் சங்கத்தில் கிராமப்புற கைவினைஞர்கள் திட்டத்தின் கீழ் ஏழு நபர்களுக்கு ஆறுமாதம் பயிற்சியும் அவர்களுக்கு உதவிப் பணமாக மாதம் 75 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. பயிற்சியை முடிக்கும்போது ரூ. 500 பெறுமான வேலைக் கருவிகள் ஒவ்வொருவருக்கும் இலவசமாக அளிக்கப் படும். பயிற்சி முடிந்த பின் அவர்களுக்குச் சங்கத்தில் வேலை அளிக்கப்படும். சுவாமிமலை சிலை செய்வோர் தொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க திட்டம் உளளது.

தஞ்சை மாவட்டத்தில் தேங்காய் நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு.

136—வினா 12325—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு. ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் குத்தாலம் நல்லூரில் தேங்காய் நாரில் இருந்து கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(1) பாபநாசம் வட்டம், நல்லூர் கிராமத்தில் "நல்லூர் தென்னை நார் மற்றும் கயிறு உற்பத்தி மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்" 13—11—1981 அன்று பதிவு செய்யப்பட்டு உள்ளது.

(2) மாயவரம் வட்டம், குத்தாலம் கிராமத்தில் "குத்தாலம் கயிறு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் 24—11—1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

1983 நவம்பர் 15]

சென்னையில் ஆட்டோக்களில் தவறான மீட்டர் கட்டணத்தை வசூலிப்பதை தடுக்கும் நடவடிக்கை.

137—வினா 12330.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகர ஆட்டோக்களில் தவறான மீட்டர் கட்டணத்தை வசூலிப்பதை தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை யாது ?

(ஆ) 1980—81 ஆம் ஆண்டில் எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது?

விடை —

(அ) சென்னை நகர ஆட்டோக்களில் தவறான மீட்டர் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை பறக்கும் படை மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தினமும் நகரில் பல இடங்களிலும் சோதனை செய்து வருகிறார்கள். தவறான மீட்டர் பொருத்தப்பட்ட ஆட்டோ உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

(ஆ) 1—4—1980 முதல் 31—3—1981 வரை சோதனையிட்ட 3,473 வாகனங்களில் 442 வாகனங்களில் தவறான மீட்டர் பொருத்தப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

சென்னை ஆவணக் காப்பகத்தை நவீனப்படுத்தும் திட்டம்.

138—வினா 12365—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சென்னை ஆவணக்காப்பகத்தை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

[1983 நவம்பர் 15

விடை —

(அ) மற்றும் (ஆ) : சென்னை ஆவணக்காப்பகத்திலுள்ள பழைய ஆவணங்களை நவீன முறையில் பாதுகாக்க வசதியாக இரசாயனப் புகையூட்டும் இயந்திரம் (Vacaum fumigation) மற்றும் மேலொட்டும் இயந்திரம் (Laminator) வாங்கி நிறுவப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஆவணங்களுக்கு மறுபிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்றும் (Xerox machine) மற்றும் மின் அணு படிப்பெருக்கி இயந்திரம் ஒன்றும் (Electronic stencil cutter) வாங்கி நிறுவப்பட்டுள்ளன. மேலும், ஒரு நுண்பட கருவி (Miero film unit) ஒன்று வாங்க ரூ. 6,36,000 அனுமதிக்கப்பட்டு அக்கருவியும் வாங்கப்பட்டுள்ளது. அக்கருவி நிறுவப்படவிருக்கும் அறையில் குளிர்சாதன (air condition) இயந்திரங்கள் பொருத்தும் வேலை நடந்து வருகிறது.

கல்லூரிகளில் மீண்டும் செமஸ்டர் முறையை அமுல்நடத்தும் செயற்குறிப்பு

139 —வினா 12374 —திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் சில கல்லூரிகளில் கைவிடப்பட்ட செமஸ்டர் முறை மீண்டும் கலலூரிகளில் அமுல் நடத்துவதற்கு அரசு உத்தேசம் செய்துள்ளதா ?

விடை —

இல்லை.

சமூகவிரோதிகளால் தாக்கப்பட்ட காவல் நிலையங்கள்.

140 —வினா 12382 —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டு எத்தனை இடங்களில் சமூக விரோதிகளால் காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன ?

(ஆ) இச்சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

1983 நவம்பர் 15]

விடை —

(அ) தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டில் (28—11—1981) முடிய ஏழு காவல் நிலையங்கள் தாக்கப்பட்டன. அவை கீழ்வருமாறு : —

	காவல் நிலையத்தின் பெயர்.	தாக்கப்பட்ட நாள்
1	தர்மபுரி மாவட்டம், கடத்தூர் காவல் நிலையம்.	17—3—1981
2	முகவை (கிழக்கு) மாவட்டம், சத்திரகுடி காவல் நிலையம்.	10— 4—1981
3	சேலம் மாவட்டம், இராசிபுரம் காவல் நிலையம்.	1— 7—1981
4	முகவை (கிழக்கு), மாவட்டம் ஆர். எஸ். மங்களம்.	29— 7—1981
5	நெல்லை மாவட்டம், குலசேகரன்பட்டினம் காவல் நிலையம்.	19— 8—1981
6	சென்னை மாவட்டம் எப். 3 நுங்கம்பாக்கம் காவல் நிலையம்.	1—10—1981
7	முகவை (கிழக்கு) மாவட்டம், சிவகங்கை காவல் நிலையம்.	6—10—1981

(ஆ) காவல் துறை அதிகாரிகள் விழிப்புணர்வோடும் இது போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர்களை கண்காணித்து அவசியமேற்படும்போது அவர்களைக் கைது செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட விபத்துக்கள் இல்லாத தொழிற்சாலைகள்.

141 —வினா 12383 —திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டில் 1980 முதல் 1981 அக்டோபர் முடிய விபத்துக்கள் இல்லாத தொழிற்சாலை எத்தனை தேர்வு செய்யப்பட்டன ?

விடை —

8,501.

[1983 நவம்பர் 15

தமிழ்நாட்டிலுள்ள கரும்பாறை குவாரிகள்.

142—வினா 12411—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தற்பொழுது எத்தனை கரும்பாறை குவாரிகள் உள்ளன ?

(ஆ) 1979 முதல் 1981 வரை எவ்வளவு ரூபாய் அந்நிய செலவாணி ஈட்டியுள்ளது ?

(இ) மேலும் புதிய கரும்பாறை குவாரி உருவாக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது 61 கரும்பாறை குவாரிகள் உள்ளன.

(ஆ) 1979 ஆம் ஆண்டு முதல் 1981 ஆகஸ்டு திங்கள் வரை 24.12 கோடி ரூபாய் அந்நிய செலவாணியாக ஈட்டி உள்ளது.

(இ) ஆம்.

டெல்லியில் சென்னை கோ-ஆப்டெக்ஸ நிறுவனத்தின் கண்காட்சி அமைக்கும் செயற்குறிப்பு.

143—வினா 12418—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் டில்லியில் பட்டுப்புடவைக் கண்காட்சி ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆண்டு தோறும் குளிர்காலத தொடரில் டில்லியில் "தமிழ்நாடு இல்லத்தில்" ஒரு வார காலத்திற்குப் பட்டுப் புடவை கண்காட்சியை நடத்தி வருகிறது. இக்கண்காட்சி, தீபாவளி மற்றும் பொங்கல் விழாக் காலங்களுக்குத் தொடர்புடையதல்ல. இந்த விஷேசக் கண்காட்சி

1983 நவம்பர் 15]

அதிக அளவில் கைத்தறித் துணிகள் விற்பனை செய்வதற்காகவே கோவாப்டெக்ஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் பருவகாலக் கண் காட்சியாகும்.

கொல்லிமலைக் காட்டிலிருந்து சந்தன மரங்கள் கடத்தல் மீதான புகார்

144—வினா 12431—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி— அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள கொல்லிமலைக் காட்டிலிருந்து 15-10-1981 அன்று சந்தன மரங்களை கள்ளத்தனமாக வெட்டி கடத்தியதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கொல்லிமலைக்காடு என்று திருச்சி மாவட்டத்தில் எதுவும் இல்லை. மேலும், 15-10-1981 அன்று சந்தன மரங்களை கள்ளத்தனமாக வெட்டி கடத்தியதாக புகார் எதுவும் இல்லை. ஆனால், 17-10-1981 அன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலைக் காட்டில் இருந்து அம்பாசிடார் கார் மூலம் ரூ. 8,000 மதிப்புள்ள 302 கிலோ சந்தனக் கட்டை கடத்த முயன்றதை சேலம் கோட்ட நாமக்கல் சரக அலுவலர்கள் கண்டுபிடித்து, குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மூன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இலவச சட்ட உதவி அளிக்கும் செயற்குறிப்பு.

145—வினா 12443—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு இலவச சட்ட உதவி அளிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

[1983 நவம்பர் 15

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

எனினும், தமிழ்நாடு அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும், தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம், சென்னை, மற்றும் அதன் கிளைகளான மாவட்ட மற்றும், வட்ட குழுக்கள் சாலை விபத்துபற்றி தெரிவித்து சட்ட உதவி வேண்டும் விண்ணப்பதாரருக்கு வேண்டிய சட்ட உதவியும், ஆலோசனைகளையும் அளிக்கின்றன.

மேலும், மோட்டார் வாகன விபத்துக்குள்ளோரின் சந்ததியினர் நட்ட ஈட்டைப் பெற யாரை (எந்த அரசுப் பணியாளரை) அணுகுவது மற்றும் இது குறித்த இதர தகவல்களையும் மாநிலத்திலுள்ள மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் அந்தந்த இடங்களில் உள்ள செய்தித்தாள்களின் மூலம் விளம்பரப்படுத்துமாறு தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளானோரின் சந்ததியினர் சார்பாக நட்ட ஈட்டை பெறுவதில் சட்ட உதவி மற்றும் ஆலோசனைகளை வேண்டிவரும் மாவட்ட காவல் துறை அதிகாரிகளுக்கு (Superintendent of Police) தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குமாறும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையில் மழைக் காலங்களில் தேங்கும் நீரை நீக்க வாக்டர் ஜெட் இயந்திரம் வாங்கும் செயற்குறிப்பு.

146—வினா 12467—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மழை காரணமாக சாலைகளில் தேங்கும் நீரை உடனுக்குடன் வடிகட்ட நீர்ப்பாய்ச்சித்தூர் உறிஞ்சும் வாக்டர் ஜெட் இயந்திரம் வாங்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

1983 நவம்பர் 15]

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைப்பொருள் தொழிற் மையம் அமைக்கும் செயற்குறிப்பு.

147—வினா 12485—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைபொருள் தொழில் மையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

ஆம். இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான திட்டத்தின் கீழ் பனைப் பொருள் தொழிற் மையம் ஆரம்பிக்க தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையத்துக்கு ரூ. 24.566 லட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மாரியூர் கிராமத்தில் 34.74 ஏக்கர் காட்டு நிலத்தை வறட்சிக் குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் பனைப்பொருள் தொழில் மையம் அமைப்பதற்காகக் கேட்டு அம்மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். மேலும் அரசின் அனுமதியை எதிர்பார்த்து மேற்கண்ட இடத்தில் பனைப் பொருள் தொழிற் மையம் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்கு தான் அனுமதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை நகரில் போலியோ வியாதியை தடுக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ள இடங்கள்.

148—வினா 12505—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் போலியோ வியாதியை தடுக்க எங்கு எங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) மேற்படி வசதி மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா ?

விடை— [1983 நவம்பர் 15

(அ) போலியோ வியாதியை தடுக்க சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். 0—2 வயதுள்ள குழந்தைகளுக்கு இதற்காக போலியோ சொட்டு மருந்து மாநகராட்சியின் 120 வட்டங்களிலுள்ள மகப்பேறு நிலையங்கள் மூலம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதைத் தவிர எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையிலும் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டு மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது போலியோ தடுப்பு மருந்து கொடுக்கும் திட்டம் சென்னையைத் தவிர மற்றும் மதுரை, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாளடைவில் இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

மத்திய அரசு அனுமதியளித்துள்ள புதிய அணைகள்.

149—வினா 12523—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் புதிய அணைகள் கட்ட 1981-82-ல் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டில் இதுவரை தமிழக அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ள கீழ்க்கண்ட இரண்டு நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மத்திய அரசின் திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது: —

(1) தர்மபுரி மாவட்டம், அருர் வட்டத்தில் பொன்னையாற்றின் உபநதியான வாணியாற்றின் குறுக்கே ''வாணியாறு அணை'' (நீர்த்தேக்கம்) கட்டும் திட்டம்.

1983 நவம்பர் 15]

(2) தர்மபுரி மாவட்டம், அருர் வட்டத்தில் பொன்னையாற்றின் குறுக்கே ''ஈச்சம்பாடி அணைக்கட்டு'' கட்டும் திட்டம்.

(இ) வாணியாறு அணைத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 560 இலட்சமும், ஈச்சம்பாடி அணைக்கட்டு திட்டத்தின் மதிப்பீடு ரூ. 229.53 இலட்சமும் ஆகும்.

விபத்துக்குள்ளாகிய போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை

150—வினா 12570—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1981ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் முடிய எத்தனை போக்குவரத்து கழகப் பேருந்துகள் விபத்துக்குள்ளாயின ?

(ஆ) அதனால் ஏற்பட்ட இழப்புகள் யாது ?

விடை—

(அ) 6,797.

(ஆ) சுமார் ரூ. 39,48,202.00 (ரூபாய்கள் முப்பத தொன்பது இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து இருநூற்று இரண்டு மட்டும்).

யுனானி சித்தவைத்திய சிகிச்சை தொழில் நுட்ப முறைகளை ஆராய்ச்சி செய்வோரை ஊக்குவிக்கும் திட்டம்.

151—வினா 12572—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டில் யுனானி, சித்த வைத்திய சிகிச்சை முறைகளை நவீனப்படுத்த தொழில் நுட்ப முறைகளை ஆராய்ச்சி செய்வோரை ஊக்கப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1983 நவம்பர் 15

விடை —

தமிழகத்தில் மத்திய அரசின் ஆதரவில் கீழே கண்ட இடங்களில் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன —

(i) சித்த மருத்துவ மத்திய ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(ii) வட்டார யுனானி மருத்துவ நிலையம், சென்னை.

(iii) கேப்டன் சீனுவாசமூர்த்தி ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம், சென்னை.

(iv) சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்து ஆராய்ச்சிப் பிரிவுகள், அறிஞர் அண்ணா அரசினர் இந்தி மருத்துவ மனை, சென்னை.

(v) சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

(vi) சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு, பாளையங்கோட்டை.

(vii) மூலிகைகள் ஆராய்ச்சிப் பிரிவு, பாளையங்கோட்டை

மேற்கூறியுள்ள ஆராய்ச்சிப் பிரிவுகள் அனைத்திற்கும் மாநில அரசு இடவசதியும், கட்டிட வசதிகளும் படுக்கை வசதிகளும் செய்து கொடுத்துள்ளது. இவை தவிர, சென்னையிலுள்ள பொது மருத்துவமனையில் மூலிகை மருத்துவ வேதியியல் ஆராய்ச்சிப் பிரிவு (Medicinal Chemistry Research Unit) ஒன்று மாநில அரசின் ஆதரவில் நன்முறையில் இயங்கி வருகிறது.

அண்மையில் மாற்றியமைக்கப்பட்டுள்ள சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழு பரம்பரைச் சித்த மருத்துவர்களுக்கு மட்டுமே தெரிந்துள்ள மருந்துகள் மற்றும் மருத்துவ முறைகளை ஆய்ந்து சித்த மருத்துவத் தொகுப்பு ஒன்று தயாரிக்கும் பணியினைத் தொடங்கவுள்ளது.

யுனானி மற்றும் ஆயுர்வேத மருத்துவ வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சி மேம்பாட்டுக்காகவும் தேவையான வழி முறைகளை ஆய்ந்து அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி இரு மேம்பாட்டுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1983 நவம்பர் 15]

மதுராந்தகம் ஏரிக்கரையின் மீது பூங்காக்கள் அமைத்தல்

152—வினா 12592—திரு. கி. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஏரியின் கரையின் மீது அழகிய பூங்காக்கள் அமைக்கும் யோசனை அரசுக்குள்ளதா ?

விடை—

இல்லை.

அச்சிறுபாக்கம் செயற்கை விந்து உற்பத்தி நிலையத்திலுள்ள உயர் இனக் காளைகள்.

153—வினா 12595—திரு. கி. கணேசன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் செயற்கை விந்து உற்பத்தி செய்யும் நிலையத்தில் எத்தனை உயர் இனக் காளைகள் உள்ளன ?

(ஆ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு ?

(இ) அது விரிவு படுத்தப்படுமா ?

விடை—

(அ) அச்சிறுபாக்கத்திலுள்ள கால்நடை மருந்தகத்துடன் இணைந்த மையக் கிராம நிலையத்தில் தற்போது ஒரு பொலி காளை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த பொலி காளை நிலையத்தில் தற்பொழுது 7 உயர் இனக் காளைகள் உள்ளன.

(ஆ) அவற்றின் உற்பத்தித் திறன் சராசரியாக மாதத்திற்கு 300 சி. சி. ஆகும். இதன் மூலம் 300 கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் துறையில் இன விருத்தி செய்யலாம்.

(இ) விரிவுபடுத்தும் திட்டம் தற்பொழுது ஒன்றுமில்லை.

[1983 நவம்பர் 15

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் விவரம்.

154—வினா 12610—திரு. ஏ.டி. குலசேகர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு அளவிலும் தரத்திலும் குறைவாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

விடை—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு அளவிலும் தரத்திலும் குறைவாக இல்லை.

(ஆ) இது குறித்து ஏதும் நடவடிக்கை தேவை இல்லை.

(a) Diet supplied to the patients in the Coimbatore Medical College Hospital is neither less nor inferior in quality.

(b) No action is called for in this matter.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாணவர்களுக்கு வகுப்பறையும் பொது ஹாலும் கட்டும் திட்டம்.

155—வினா 12631—திரு. ஏ.டி. குலசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாணவர்களுக்கு வகுப்பறையும், காமன் ஹாலும் கட்ட அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை, பூந்தமல்லி நேரு பூங்கா அருகே விளையாட்டு மைதானம் கட்டும் செயற்குறிப்பு.

156—வினா 12641—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பூந்தமல்லி ஜரோட்டில் நேரு பார்க் அருகே விளையாட்டு மைதானம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம். அரசு ஏற்கெனவே இதற்கு அனுமதி அளித்துள்ளது.

(ஆ) ரூ. 1,65,000 பொருட் செலவில் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. திட்டம் மதிப்பீடு ஆகியவற்றிற்கு ஒப்புதல் தர வேண்டி ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு ஒப்புதலளித்த பின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருட்கள் கிடைப்பதைப் பொறுத்து விரைவில் கட்டி முடிக்கப் படும்.

தமிழ்நாட்டில் புதிய செவிலியர் பயிற்சி பள்ளிகள் துவக்கும் செயற் குறிப்பு.

157—வினா 12662—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் புதிய நர்ஸ் பயிற்சிபள்ளிகள் துவக்கும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு துவக்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

அரக்கோணம் வட்டத்தில் நூல் நிலையக் கட்டிடம் இடிந்ததால் அரசு அளித்த நட்ட ஈடு.

158—வினா 12670—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, அரக்கோணம் வட்டம், கும்பினி பேட்டையில் நூல்நிலையக் கட்டிடம் இடிந்து விழுந்து உயிர் சேதம் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன ?

(இ) அரசு அளித்துள்ள நட்ட ஈடு எவ்வளவு ?

விடை—

(அ), (ஆ) மற்றும் [இ] கும்பினிபேட்டை கிராமத்தில் நூல்நிலைய கட்டிடம் ஏதும் இல்லை. ஆனால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் இருந்த மன மகிழ் மன்ற கட்டிடம் பழுதடைந்து நீண்ட நாட்களாக உப யோகத்தில் இல்லாத நிலையில் இருந்தது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக இக்கட்டிடத்தின் சுவர் கூரை ஆகியவை இடிந்து விழுந்து விட்டன. அதனால் இருவர் விபத்தில் சிக்கி இறந்து விட்டனர். இவர் களுக்கு கணவனோ, மனைவியோ அல்லது வாரிசோ இல்லாத கால் நட்ட ஈட்டுத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

கோவை மாநகராட்சியில் சாலைகளை செப்பனிடும் திட்டம்.

159—வினா 12673—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாநகராட்சியின்கீழ் உள்ள கோவை-சிங்காநல்லூர் நகரங்களின் ரோடுகள் முழுவதும் பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் ரோடுகளை துரிதமாகச் செப்பனிட அரசு ஏதாவது விசேஷ திட்டத்தை தயாரித்துள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கோவை-சிங்காநல்லூர் நகரங்களில் சில பகுதிகளிலுள்ள ரோடுகள் மட்டுமே பழுதடைந்துள்ளன.

வருடா வருடம் பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரோடு பணிகள் செய்யப்பட்டு வரு கிறது. ஆனால் அது போதுமானதாக இல்லை. மேலும் தற் பொழுது பழுதுபட்ட சாலைகளை தீவிரமாகப் புதுப்பிக்கும் விசேஷ திட்டத்தின் கீழ் (Crash Programme) மின் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாக மாற்றம் செய்து அரசு உத்தர வின் பேரில் ரோடு பணிகள் செய்ய திட்டமிடப்பட்டு விரை வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர சில முக்கியமான சாலைகளை (Asphalte Concrete) சாலைகளாக அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டு மேற்படி பணியை செய்ய அரசு மானியம் பெற மாநகராட்சி ஆணையரால் தக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிரான்மலையில் மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

160—வினா 12699—திரு. கு. ரமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரி பஞ்சா யத்து யூனியனைச் சேர்ந்த பிரான் மலையில் பிற்பட்டவர்கள் நலத்துறை சார்பில் ஒரு மாணவியர் விடுதி நடைபெற்று வரு வதற்கு சொந்தக் கட்டிடம் கட்ட மூன்று இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கட்டிட வேலை எப்பொழுது முடிவடை யும் ?

(இ) எத்தனை பேர் மாணவிகள் அதில் தங்கி படிக்க முடியும் ?

விடை—

(அ) இதுவரை நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ): கேள்வி எழாது.

இரும்பேடு, ஜானகிபுரம் ஆதி திராவிட பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் செயற்குறிப்பு.

161—வினா 12718 :—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் இரும்பேடு, ஜானகிபுரம் ஆதி திராவிட பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது உயர்த்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் இரும்பேடு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கான செயற் குறிப்பு மாவட்டக் கல்வி அதிகாரியின் பரிசீலனையில் இருக்கிறது. அது உரிய முறையில் பரிந்துரைக்கப்பட்டு இயக்குநர் வழியாக அரசுக்கு வரும்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஜானகிபுரம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பேதும் பரிசீலனையில் இல்லை.

சென்னை புறநகர் பேருந்து நிலையத்தையும் என். எஸ். சி. போஸ் சாலையையும் இணைக்கும் இடத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் செயற் குறிப்பு.

162—வினா 12719—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

சென்னை புறநகர் பஸ் நிலையத்தையும், என். எஸ். சி. போஸ் ரோடும் இணைக்கும் இடத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

மாயூரம் பழைய கூடலூருக்கு நகர பேருந்து விடல்

163—வினா 12723—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரத்திலிருந்து பழைய கூடலூருக்கு நகரப் பேருந்து விட செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்போது விடப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நகரப் பேருந்து விடுவதற்கு விதிமுறைகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேரழுந்தூர் அரசு மருந்தகத்தில் உள் நோயாளிகளுக்குத் தனிக் கட்டிடம் கட்டும் திட்டம்

164—வினா 12725 —திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் தேரழுந்தூர் அரசு மருந்தகத்தில் உள் நோயாளிகள் தங்கி சிகிச்சைப்பெற தனிக்கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

[1983 நவம்பர் 15

(ஆ) கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

விடை—

(அ) தற்போது ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

செம்பொன்னாடி கரிசல் குளத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான நிலங்கள்

165—வினா 12758—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம், செம்பொன்னாடி கரிசல் குளத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு பாத்தியப்பட்ட நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி நிலங்களை அறநிலையத் துறை கையகப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதி நத்தம்பட்டி பிர்க்காவில் செம்பொன்னாடி கரிசல் குளத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் தற்சமயம் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வடஆற்காடு மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்களாக எடுத்துக் கொள்ளப்பட்ட வட்டங்கள்

166—வினா 12794—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1983 நவம்பர் 15]

(அ) வட ஆற்காடு மாவட்டத் தொழில் மையத்தினால் பின் தங்கிய வட்டங்களாக எடுத்துக் கொண்ட வட்டங்கள் எத்தனை ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டத் தொழில் மையத்தினால் எந்த வட்டமும் பின் தங்கிய வட்டமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. இம்மாவட்டத்தில் மைய அரசால், திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், வாலாசா ஆகிய நான்கு வட்டங்களும் மாநில அரசால் போளூர், செங்கம், வந்தவாசி, செய்யாறு ஆகிய நான்கு வட்டங்களும் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறுமலைப் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்ச்சித் திட்டத்தை தீவிரப்படுத்துதல்

167—வினா 12823—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி சிறுமலை பகுதியில் பட்டுப்பூச்சி வளர்ச்சித் திட்டத்தை தீவிரப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஆம். தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களின் வருங்கால பட்டு முட்டை தேவைகளை கருத்திற் கொண்டும், அப்பட்டு முட்டைகளை அப்பகுதியிலேயே உற்பத்தி செய்திட வேண்டியும், சிறுமலை மற்றும் பாச்சலூர் பகுதிகளில் வெளிநாட்டு இன பட்டுப் பூச்சி வித்து விருத்தி நிலையங்களும் மற்றும் ஆண்டிப்பட்டி வடடாரத்தைச் சேர்ந்த கடமலைக்குண்டு பகுதியில் உள்நாட்டு இன பட்டுப்பூச்சி வித்து விருத்தி நிலையமும் நிறுவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி பண்ணைகளை நிறுவிட சிறுமலையில் அரசு தரிசு நிலம் 30 ஏக்கரும், மயிலாடும் பாறையில் அரசு தரிசு நிலம் 9 ஏக்கரும் தேர்வு செய்யப்பட்டு பட்டுப்பண்ணைகள் அமைக்கும் பூர்வாங்கப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்பட்டுள்ளன. இப்பண்ணைகள் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முழு அளவில் செயல்பட ஆரம்பிக்கும். எனினும் தற்போது சோதனை முறையில் பட்டு வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[1983 நவம்பர் 15

இது தவிர சிறுமலைப் பகுதியில் 12 விவசாயிகள் 14·65 ஏக்கர் பரப்பளவிலும், ஆண்டிப்பட்டி பகுதியில் 15 விவசாயிகள் 14·60 ஏக்கரா பரப்பளவிலும் வித்து பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்வதற்காகப் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

வெள்ளையம்பட்டு ஸ்ரீராம மலைக்குகை பிடாரி அம்மன் கோவில் சிலை திருட்டு பற்றிய புகார்.

168—வினா 12824—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம், செஞ்சி அருகே வெள்ளையம்பட்டு கிராமத்தில் உள்ள ஒரு மலைக் குகையில் உள்ள பிடாரி அம்மன் கோவிலில் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள சிலை திருடு போனதாக அரசுக்கு பொதுமக்களிடம் இருந்து 1981ஆம் ஆண்டு இறுதியில் புகார் வந்துள்ளதா ?

விடை—

அரசுக்குப் புகார் ஏதும் வரவில்லை. எனினும் காவல்துறை யினருக்கு தகவல் கொடுக்கப்பட்டு குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. சிலையின் மதிப்பு ரூ. 1,000 மட்டுமே.

வணிகவரித்துறை அலுவலர்களுக்கு தனிப்பயிற்சி கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

169—வினா எண். 12855—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித்துறை அலுவலர்களுக்கு தனிப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): வணிக வரித்துறை அலுவலர்களுக்கு தனிப் பயிற்சி நிறுவனம் ஒன்றை நிறுவி 6—2—1982 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் பயிற்சி வகுப்புகள் துவக்கப் பெறும்.

1983 நவம்பர் 15]

இராமேஸ்வரம் கடலில் மூழ்கி இறந்த மீனவர்களுக்கு உதவி

170—வினா எண் 12856—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 25—11—1981 அன்று மூன்று மீனவர்கள் இராமேஸ்வரம் கடற்கரைக்கு அப்பால் புயல் காற்றில் சிக்கி படகு மூழ்கி விட்டதால் இறந்துவிட்டதாக அரசுக்கு தகவல் வந்துள்ளதா ?

(ஆ) அவர்கள் குடும்பத்திற்கு ஏதேனும் உதவி அளிக்கப் பட்டுள்ளதா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 25—11—1981 அன்று இராமேஸ்வரம் கடலில் மூன்று மீனவர்கள் சிக்கி இறந்ததாக தகவல் ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் 26—11—1981 இல் இப்பகுதியில் இருந்து சென்ற மூன்று மீனவர்கள் கடலில் இறந்ததாக தகவல் வந்துள்ளது. அவர்களின் குடும்பத்தாருக்கு உதவித் தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கைக் கடிகாரப் பட்டைத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

171—வினா எண் 12857—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கைக்கடிகாரப் பட்டைத் தொழிற்சாலை ஆரம்பிக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1983 நவம்பர் 1

சென்னை நகரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்.

172—வினா எண். 12907—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் நூலகக் கட்டிடங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

அரசு இது பற்றி கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. படிப்படியாக இது நிறைவேற்றப்படும்.

அம்பத்தூர் நகர வாரியம்.

173—வினா எண் 12949—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு ஜில்லா அம்பத்தூர் நகர வாரியம் எப்போது அமைக்கப்பட்டது ?

(ஆ) அவ்வாரியத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் ?

(இ) ஆதிதிராவிடர் மலைவாழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) 1-7-1971 இல் அமைக்கப்பட்டது.

(ஆ) 26 உறுப்பினர்கள்.

(இ) ஆம்.

1983 நவம்பர் 15]

நீலகிரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மக்களுக்கென கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் நிறுவுதல்.

வினா எண் 12975—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு ளிப்பாரா—

லகிரி மாவட்டம் கோத்தகிரி குன்னூர் ஆகிய இடங்களில் ஆதி திராவிட மக்களுக்காக கல்லுடைக்கும் தொழிற் சாலைகள் நிறுவும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம். மேற்கண்ட செயற் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கப் பட்டு மேற்படி தொழில் நிறுவ அரசு ஆணையும் வெளியிடப் பட்டுள்ளது.

திருக்கழுக்குன்றம் கோவில் கோபுரத்தை பழுது பார்க்கும் பணி.

175—வினா எண் 12796—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் கோயில் கோபுரத்தின்மீது 3-12-1981 ஆம் தேதி அன்று இடி விழுந்து கோபுரத்தில் சேதம் ஏற்பட்டு சிற்பங்கள் உடைந்து கோபுரம் மிகவும் பலவீனம் அடைந்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேத புரீஸ்வரர் ஆலயத்தின் வடக்கு ராஜகோபுரத்தின் மீது இடி விழுந்ததினால் கோபுரத்தில் ஒன்றாம் நிலையிலிருந்து ஐந்தாம் நிலை வரை விரிசல் ஒன்று செங்குத்தாக ஏற்பட்டுள்ளது. இதனால் கோபுரம் பலவீனம் அடையவில்லை. இந்த விரிசலை சிறுகற்கள் (Bond Stone) வைத்து சிமென்டினால் மூடி சரி செய்யும்படி கோட்டப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

[1983 நவம்பர் 15

பந்தலூரில் பாலிதின்பைகள் உற்பத்தி கூட்டுறவு தொழிற்சாலை அமைத்தல்.

176—வினா எண் 12986—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பந்தலூரில் பாலித்தீன் பைகள் உற்பத்தி செய்யும் கூட்டுறவு தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

நீலகிரி மாவட்டம் பந்தலூரில் பாலிதீன் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அனுமதி அளித்துள்ளது.

வடாற்காடு மாவட்டம் வேலூரில் கூட்டுறவு முறையில் பாலிதீன் பைகள் தயாரித்தல்.

177—வினா 12987—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் கூட்டுறவு முறையில் பாலிதீன் பைகள் செய்யும் (தொழிற்சாலை) அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பாலிதீன் பைகள் உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனுமதி அளித்துள்ளது.

சின்னாளப்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக்குதல்.

178—வினா 12982—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டும் என பொது மக்களிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா?

விடை—

ஆம்.

1983 நவம்பர் 15]

மருத்துவ மனைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல்

179—வினா 13005—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள வட்ட, மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு ஆலோசனை குழுக்கள் எத்தனை அமைக்கப்பட்டுள்ளன, மாவட்ட வாரியாக?

விடை—

தற்போது மதுரையில் உள்ள அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மட்டும் ஆலோசனைக் குழு அமைப்பதற்கான அரசு உத்திரவு இட்டுள்ளது. பிற மாவட்டங்களில் உள்ள வட்ட, மாவட்ட மருத்துவமனைகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டவுடன் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும்.

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு அளிக்கும் கேளிக்கை வரி பங்கை உயர்த்திக் கொடுக்க கோரிக்கை மீது பரிந்துரை.

180—வினா 13009—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மாநில அரசு ஏற்கெனவே கொடுத்து வரும் கேளிக்கை வரியின் பங்கை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையின் மீது அரசு என்ன பரிந்துரை செய்துள்ளது?

விடை—

உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இணக்கமற்ற பகுதிகளில் (Non-Compounding) வசூலிக்கும் கேளிக்கை வரியின் பங்கை 90 சதவீதத்திலிருந்து 95 சதவீதமாக உயர்த்திதர வேண்டுமென்ற நகர நிதி ஆய்வுக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்கவில்லை.

[1983 நவம்பர் 15

காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவமனையில் நவீன சலவைக் கூடம் கட்டுதல்.

181—வினா 13049—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவமனையில் நவீன சலவைக் கூடம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

இதன் சம்பந்தமாய் அரசிடம் எந்த செயற் குறிப்பும் தற் போதைக்கு இல்லை.

காஞ்சீபுரம் மருத்துவமனையில் நவீன சமையற் கூடம் கட்டுதல்.

182—வினா 13050—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரம் மாவட்ட மருத்துவமனையில் நவீன சமையற் கூடம் கட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

தற்சமயம் யாதொரு செயற் குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

183—Q. 130588—Thiru. P. VENKATASUBRAMANIAN : Will the Hon. the Minister for Health be pleased to State whether the Government will take steps to provide Generator to Government Headqnarters Hospital at Kancheepuram?

Ans :

This is under the consideration of Director of Medical Services and Family Welfare. On receipt of proposals from him, Government will examine it and take a decision.

1983 நவம்பர் 15]

இது மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குநரின் ஆய்வில் உள்ளது. இதற்கான செயற் குறிப்பு அவரிடமிருந்து கிடைத்ததும், அரசு இதை ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கும்.

கல்லார் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு.

184—வினா எண். 13072—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் K.K. புதூர் வீராணகுன்னம் சாலையில் கல்லார் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

மதுராந்தகம் தொகுதியில் ஒரு விளக்குத் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கல்.

185—வினா எண். 13079—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுராந்தகம் தொகுதியில் எத்தனை குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

31—1—1982 வரை 6,756 குடிசைகளுக்கு மதுராந்தகம் தொகுதியில் ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்கப் பட்டுள்ளன.

[1983 நவம்பர் 15

மதுராந்தகம் தொகுதியிலுள்ள ஆடுவளர்ப்பு சங்கங்கள்.

186—வினா எண். 13098—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் எத்தனை ஆடு வளர்ப்பு சங்கங்கள் உள்ளன ?

(ஆ) மேலும் கூடுதலாக எத்தனைச் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) மதுராந்தகம் தொகுதியில் கீழ்க்கண்ட 8 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன :—

(1) சீதாபுரம் ; (2) மொரப்பாக்கம் ; (3) மதுக்கரை ; (4) அனந்தபுறங்கலம் ; (5) பெரும்பாக்கம் ; (6) 220 புதூர் ; (7) நெடுமறம் ; (8) எலப்பாக்கம்.

(ஆ) மேலும் கூடுதலாக 4 சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(1) கருங்குழி ; (2) மேலவலம்பேட்டை ; (3) முகுண்டகிரி ; (4) புதுப்பட்டு.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிய கோழிப் பண்ணைகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு.

187—வினா எண். 13134—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மேலும் புதிய கோழிப்பண்ணைகள் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

விடை—

இல்லை.

1983 நவம்பர் 15]

காலஞ்சென்ற அரசவைக் கவிஞர் கண்ணதாசனின் மருத்துவச் செலவுத் தொகை.

188—வினா எண். 13141—திரு. எம். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமீபத்தில் காலமான அரசவைக் கவிஞர் கண்ணதாசனின் மருத்துவச் செலவுக்கு அரசு செலவழித்தத் தொகை எவ்வளவு ?

விடை—

அமெரிக்காவிலுள்ள, சிக்காக்கோ நகரில் புனித சிலுவை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த மறைந்த அரசவைக் கவிஞர் கண்ணதாசனின் மருத்துவச் செலவுக்கு அரசு ரூபாய் 9,04,875 செலவழித்தது.

சங்கனூர் மயானப் பகுதியை துப்புரவு செய்யும் செயற்குறிப்பு.

189—வினா எண். 13187—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி சங்கனூர் மயானப் பகுதியில் மாநகராட்சி குப்பைக் கூளங்களைக் கொட்டுவதால், மயானம் அசுத்தப்படுவதோடு அதனால் பல நோய்கள் உருவாவதற்கு காரணமாக இருப்பது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை அப்புறப்படுத்தி, சுகாதார மயமாக்க அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

விடை—

(அ) சங்கனூர் மயானப் பகுதியில் மாநகராட்சி குப்பைக் கொட்டப்படுவதில்லை என ஆணையர் தெரிவித்துள்ளார். கடந்த 30 ஆண்டு காலமாக மாநகராட்சி மயானப்பகுதிக்கு அருகிலுள்ள சதிசாலையில் துணை உரக்கிடங்குகளில்தான் குப்பை கொட்டப்படுகிறது. இந்தத் துணை உரக்கிடங்கிலிருந்து லாரிகள் மூலம் உரம் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு குப்பை எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே, துணை உரக்கிடங்கிலிருந்து நோய் பரவ எவ்வித சாத்தியக்கூறும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

[1983 நவம்பர் 15

190 —வினா எண். 13221 —திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981—82-இல் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொதுமக்களுக்கு பர்மிட் முறையில் கொடுக்க ஒதுக்கப்பட்ட சிமெண்டின் அளவு எவ்வளவு?

(ஆ) அதிகமாக எந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது?

விடை—

(அ) ஒரு விவர @ அறிக்கை அவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை நகரத்திற்கே அதிக அளவு சிமெண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னிக்கோனேந்தலில் மருத்துவமனை ஏற்படுத்தல்.

191 —வினா எண் 13325 —திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் கன்னிக்கோனேந்தல் என்ற கிராமத்தில் ஒரு மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என்று மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

@ பக்கம் 506-507 இல் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது

1983 நவம்பர் 15]

சங்கரன் கோவில் நகரப்பகுதியில் புதிய பேருந்து பணிமனை நிறுவுதல்.

192 —வினா எண் 13327 —திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் நகரப் பகுதியில் ஒரு புதிய பேருந்து பணிமனை நிறுவுவதற்கு செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை —

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

இருஞ்ஞகிரி —பருகூர்க்கு நகரப் பேருந்துகள் விடும் செயற் குறிப்பு.

193 —வினா எண் 13243 —திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இருஞ்ஞகிரியிலிருந்து பாகிமானூர், அச்சமங்கலம் வழியாக பருகூர்க்கு (டவுன் பஸ்) விடும் செயற் குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது விட முடியும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1983 நவம்பர் 15

194—வினா எண் 12344—திரு. பி. எஸ். துரைராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருஷ்ணகிரியிலிருந்து எலந்தகிரி, வரட்டணபள்ளி வழியாக பருகூர்க்கு டவுன்பஸ் விடும் செயற்குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

195—வினா எண் 13245—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கிருஷ்ணகிரியிலிருந்து பருகூர் வரை வரும் டவுன் பஸ் (வழி கொத்தூர்) ஒப்புதவாடி வரையில் நீட்டிக்க அரசுக்கு எண்ணமுண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரைப்படத் தணிக்கைக் குழுவில் அந்தந்த மாநிலத் தாய்மொழி தெரிந்தவர்கள் நியமனம் செய்யப்படுதல்.

196—வினா எண் 13267—திரு. ப. வெங்கட் சுப்பிரமணியம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திரைப்படத் தணிக்கைக் குழுவில் அந்தந்த மாநிலத் தாய் மொழி தெரிந்த நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதை மாநில அரசு மத்திய அரசுக்கு கருத்துரை வழங்குமா ?

1983 நவம்பர் 15]

விடை —

ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்படும் திரைப்படங்களை தணிக்கை செய்ய அந்த மொழி தெரிந்த உறுப்பினர்கள் தணிக்கை ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

தஞ்சையில் நடைபெற்ற தமிழ்ப்பல்கலைக் கழகம் துவக்க விழாவிற்கு செலவிடப்பட்ட தொகை.

197—வினா எண் 13297—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சையில் நடந்த தமிழ்ப் பல்கலைக் கழகத்துவக்க விழாவிற்காக அரசு செய்த செலவு எவ்வளவு ?

(ஆ) பொதுமக்களிடமிருந்து இவ்விழாவிற்காக நன்கொடை வசூல் செய்யப்பட்டதா ?

விடை —

(அ) தஞ்சையில் நடந்த தமிழ்ப் பல்கலைக் கழகத் துவக்க விழா செலவினத்திற்காக அரசாணை நிலை எண் 1949, கல்வி, நாள் : 3-9-1981-ன்படி அரசு ரூ. 6.23 இலட்சங்கள் அனுமதித்துள்ளது.

(ஆ) இல்லை.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் உல்லாசப் பயண முயற்சிகள் நடத்தும் திட்டம்.

198—வினா 13312—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு போக்குவரத்துக் கழகத்தால் உல்லாச பயண முயற்சிகள் ஏதேனும் நடத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு எந்தப் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்படுகிறது ?

விடை —

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களால் உல்லாச பயண முயற்சிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டத்தின் முதற்படியாக இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உல்லாச பயண மையத்தை, அந்த மாவட்டத்தின் பேருந்துகளை இயக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் மேம்படுத்திய பிறகு, அங்குள்ள நகராட்சி அல்லது ஊராட்சியின் கீழ் அந்த உல்லாசப்பயண மையத்தை கண்காணிப்பதற்காக விட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

சங்கரன் கோயில்-சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்து விடல

199—வினா 13328—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் நகரிலிருந்து சென்னைக்கு நேர்வழியில் திருவள்ளுவர் பேருந்துவிட வேண்டுமென்று கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

வெங்கடாசலபுரம்-கவுஞ்சி வழித்தடத்தில் மீண்டும் பேருந்து விடல

200—வினா 13333—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெங்கிடாசலபுரம்-கவுஞ்சி (வழி) பெரியகுளம் வழித்தடத்தில் மீண்டும் பஸ் விடப்படுமா ?

விடை—

தற்போது மேற்படி வழித்தடத்தில் ஒரு பேருந்து ஓடிக் கொண்டிருக்கிறது. தேவை அதிகரித்தால் மேலும் ஒரு பேருந்து விட ஏற்பாடு செய்யப்படும்.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்களுக்குக் மருத்துவ மனைகளில் முதல் வகுப்பு அறைகள் ஒதுக்கப்பெறுதல்

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை அங்கத்தினர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது உங்களுடைய கடமையென்று கருதுகிறேன். எங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகிற நேரத்தில்நீங்கள்தான் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இதிலே நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மருத்துவ மனைக்குச் சென்றால், முதல் வகுப்புக்கு தகுதியற்றவர்கள், காரணம் சம்பள அடிப்படையில் என்று கூறுகிறார்கள். அதைக் கூறினால்கூட பரவாயில்லை. சம்பள அடிப்படையிலே மருத்துவ மனையிலே இருக்கிற நர்சுகளுக்கு முதல் வகுப்பு உண்டு. அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் சென்றால், ஒரு அறைதான் காலியிருக்கிறது என்று சொன்னால், அந்த நர்சுகளுக்குத்தான் கொடுப்போம், நீங்கள் பதிந்து வைத்துவிட்டு மறுநாள் 10 மணிக்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள் அந்த மருத்துவ மனையிலே 10, 20 நர்சுகள் இருந்தால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அங்கே மருத்துவ மனையிலே சேர முடியவில்லை. முதல் வகுப்பு பெற தகுதியற்றவர்கள் சம்பள அடிப்படையிலே என்று கூறுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர் அவர்களைக்கூட சம்பள அடிப்படையிலே பார்த்தால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைவிடக் குறைவாக வாங்குகிறீர்கள் அப்படியிருக்கும்போது தலைவர் அவர்களும் மருத்துவ மனைக்குச் சென்றால், அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டுதான் கொடுப்போம் என்ற நிலையிருக்கிறது. சமுதாயத்திலே சட்ட மன்ற உறுப்பினர்கள் நர்சுகளைவிட, சம்பள ரீதியிலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரையும் மருத்துவ மனைக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டாம். கருக்கமாகச் சொன்னால், 'எ' பிளாசிலே இடம் வேண்டும். அவ்வளவுதான். இதை ஏன் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.....

திரு. எஸ். ஆண்புத் தேவர் : சம்பள அடிப்படையிலே பார்த்தால், காங்கிரஸ் காலத்திலேயிருந்த சட்டமன்ற உறுப்பினர் ரு. 250 தான் வாங்கினார்கள். முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொல்லி, அங்கே சென்றால், அவர்கள் கடைநிலை வகுப்பிற்குக்கூட தகுதியற்றவர்கள். அந்த முறையில் மருத்துவ மனையில் நுழைவதற்குக்கூட தகுதியற்றவர்கள் என்ற அவல நிலை சமுதாயத்திலே ஏற்படுமானால், நாங்கள் எல்லாம் எங்களுடைய பணியை ஆற்றுவதற்கு மேலே யாருக்குச் சொல்ல வேண்டுமென்றால், மருத்துவமனையிலை உள்ள நர்சுகளிடம்தான்

(திரு. எஸ். ஆண்டித்தேவர்)

[1983 நவம்பர் 15

தர் எங்களுடைய மனுவைக் கொடுக்க வேண்டுமென்ற நிலை சமுதாயத்திலே ஏற்படுகின்ற அளவுக்கு வந்து விட்டது. அதிலே அனைவரின் சார்பாக, நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : இந்தப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் சட்டமன்ற உறுப்பினருக்குக் கிடைக்கவில்லை, அங்கே இருக்கிற ஒரு செவிலியருக்கு இடம் கொடுத்ததாகச் சொன்னார்கள். நான் விசாரித்தேன். அத்தச் செவிலியர் முன்கூட்டியே பதிவு செய்து விட்டார்கள். பிரையாரிட்டி பேசிலே அவர்களுக்குக் கிடைத்து விட்டது. செவிலியர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும், இந்த மாதிரி ஒப்பிட்டுப் பார்ப்பது நன்றாக இருக்காது என்று நான் கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் இடம் ஒதுக்கி (குறுக்கீடு) ஏ பிரிவு, பி பிரிவு என்று இருக்கிறது. ஏ பிரிவிலே இடம் குறைவாக இருக்கிறது. ஏ பிரிவு காலியாக இருக்கிற நேரத்திலே, இல்லாவிட்டால், அங்கே அவசரமான நோயாளி இல்லாமல், காலியாகும் நேரம் நமக்கு வாய்ப்பு இருக்குமானால், உடனடியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். ஆனால், போட்டியாக நாம் வைத்துக் கொண்டால் சரியாக இருக்காது. செவிலியர்களுக்கும் மற்ற சிப்பந்திகளுக்கும் நல்ல வகையிலே இடம் கொடுக்கப்படும். மாண்புமிகு திரு. ஆண்டித் தேவர் சொன்ன மாதிரியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல் பிரிபரன்ஸ் அங்கே கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சம்பள விகிதாசாரத்தில் முதல் வகுப்பிற்கு தகுதியில்லை என்று சொல்கிறார்கள். நர்சுகள் 1,200 ரூபாய் வாங்குகிறார்கள் ; சட்டமன்ற உறுப்பினர்கள் 1,050 தான் வாங்குகிறார்கள்., என்று சொல்லி சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் வகுப்பிற்கு தகுதியில்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களும், நாங்களும் அங்கே பதிவு செய்தால் அவர்களுக்குத்தான் முன்னுரிமை என்றும் சொல்கிறார்கள். இந்த அவல நிலை மாற வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் போனால், அந்த அதிகாரிகள் பதிந்திருந்தாலும் உறுப்பினர்களுக்கு முதல் வகுப்பு கிடைக்க வேண்டும் என்ற நிலைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். நான் அனைத்து உறுப்பினர்களின் நலனிற்காக பேசிக்கொண்டிருக்கிறேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டும்.

1983 நவம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை பிரச்சினையாக்கினால் வேறு சில பிரச்னைகள் வரும் என்பதால் நான் அதை விரிவாகச் சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு முறை கூறியது உங்களுக்கு நினைவிருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வி.ஐ.பி.ஸ். அல்ல, அவர்கள் வி.வி.ஐ.பி-ஸ்என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் நாம் செயலாற்றுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 9—11—1983 அன்று இராமேஸ்வரத்திலிருந்து இரண்டு மீன்பிடி விசைப் படகுகள் சென்றிருக்கின்றன. அவற்றை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொடுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எடுத்துக் கொள்கிறேன். ஆனால் இன்ன தேதிக்குள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தாதீர்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நான் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் தொகுதியிலே 400 குடிசைகள் எரிந்திருக்கின்றன. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்வோமா அல்லது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கொடுத்திருப்பதை எடுத்துக் கொள்வோமா ? வரிசையாக ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பொன்னுரங்கம் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. அதை எடுக்கிறபோது பேசலாம். உட்காருங்கள்.

[1983 நவம்பர்

3. அறிவிப்புகள்.

(அ) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவை (சென்ட்)க்கு இரண்டு இடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பாரதியார் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. இரு உறுப்பினர்களை தீர்மானம் முன் மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும்.

இதற்கான தீர்மானம் நாளைக்குள் (16—11—1983) கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவை (சென்ட்)க்கு இரண்டு இடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பாரதிதாசன் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. இரு உறுப்பினர்களை தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்.

இதற்கான தீர்மானம் நாளைக்குள் அதாவது 16—11—1983-க்குள் கொடுக்கப்பட வேண்டும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆழ் குழாய் கிணறுகள் தோண்டுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. சிவஞானம் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் இதை மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஆழ் குழாய்க் கிணறுகள் போடுவதற்கு 12 கோடி ரூபாய் அரசு அனுமதி அளித்திருந்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததால் விவசாயம் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1983 நவம்பர் 15]

மாண்புமிகு திரு. தி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் புதிய ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் 1,750 ஆழ் குழாய்க் கிணறுகள் ரூபாய் 12 கோடி செலவில் தோண்டுவதற்கும், மேற்படி திட்டத்தை 3 வருட காலத்தில் செயல்படுத்தவும், 8—8—1983 ஆம் தேதியிட்ட அரசு வருவாய்த்துறை நிலை ஆணை எண் 1377-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், முதல் கட்டமாக மேற்படி 1750 ஆழ் குழாய்க் கிணறுகளில் 100 குழாய்க் கிணறுகள் மட்டும் இப்பொழுது தோண்டலாம் எனத் தீர்மானிக்கப்பட்டு வடிமுனைக் குழாய்த் திட்டத்தில் மீதமுள்ள தொகையிலிருந்து ரூபாய் 50 இலட்சம் செலவு செய்வதற்காக மேலே குறிப்பிடப்பட்ட அரசு ஆணையில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை மாவட்ட நில்வள வங்கி மற்றும் ஆதார நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். கடன் தொகைகளை வழங்குவதற்கும் கடன்களை வசூல் செய்வதற்கும், குழாய்க் கிணறுகள் இறக்கும் பணியை வேளாண்மை பொறியியல் துறை ஏற்பது பற்றியும் உண்டான வரைமுறைகள் ஆராயப்பட்டு அதற்கு உண்டான அரசு ஆணை 9—11—1983 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இனி கடன் மனுக்கள் ஆழ் குழாய்க் கிணறு தோண்ட விரும்பும் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, வேலைகள் துவங்கப்படும். ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணியின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5,000, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் விவசாயம் பாதிக்கப்படவில்லை.

(முற்பகல்—10-30)

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயி என்றாலே அவன் கடனாளியாக இருக்கிறான். அவன் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலேயும் கடனாளியாக இருப்பதால் விதிகளைத் தளர்த்தி தகுதியுள்ள விவசாயிகளுக்கு இந்தக் கடன் கிடைக்குமா? மேலும் இந்த வட்டி வீதத்தைக் குறைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள விவசாயிகள் அனைவருக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படும். வட்டி விகிதத்தைப் பொறுத்தவரையிலும் பத்து சதவீதமாக வட்டி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இது குறைந்த வட்டிதான்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த போர்வெல்களைப் போடுவதற்கு விவசாயப் பொறியியல் துறை மூலம் துளை போடும் கருவிகள் குறைந்த வாடகைக்குக் கிடைக்கின்றன. ஆனால், டி. வி. எஸ். போன்ற தனியார்

நம்பெனிகள் இலைகளுக்கு அதிக வாடகை கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, விவசாயப் பொறியியல் துறையின் மூலமாக தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் இந்த போர்வெல்கள் போட்டுக் கொடுக்கப்படுமா ? இது உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் என்பதால் இதற்கு வருவாய்த்துறை, பொறியியல் துறை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை போன்ற துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு இதற்கென்று தனி அதிகாரிகள் போடப்பட்டு இந்தத் திட்டம் போர்க்கால அடிப்படையில் நடைபெறுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா அல்லது செயலாளர் அந்தஸ்தில் தனி அதிகாரியை நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஸ்டேட் அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் என்ற விவசாயத் துறையைச் சேர்ந்த பொறியியல் பிரிவு பிரத்தியேகமாக இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த கால தமிழக வரலாற்றில் இல்லாத அளவிற்குப் பஞ்சம், வறட்சியிலிருந்து உழவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, நிதியைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் அதிக அளவிற்கு 12 கோடி ரூபாய் என்ற அளவிற்கு நிதியை ஒதுக்கி 5,000 பில்டர் பாயிண்ட் டியூப் வெல்ஸ் போடப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடையில் கொசுக்களின் தொல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, '' கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடையில் கொசுக்கள் தொல்லையால் யானைக்கால் வியாதி பரவும் நிலைமையுள்ளதால் அப்பகுதி மக்கள் பாதிக்கப் பெற்றுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முன்சிறை பஞ்சாயத்து ஒன்றிய பகுதியில் அடங்கிய புதுக்கடை பஞ்சாயத்துப்

பகுதியில் யானைக்கால் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டி ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,800 செலவினம் கொண்ட ஒரு திட்டத்திற்கு அரசு 31—12—1977-ல் அனுமதி வழங்கியுள்ளது. இப்பகுதியில் பெருகி வரும் யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்த மேற்கூறியத் திட்டத்தை விரிவு படுத்த வேண்டியுள்ளது. கோயம்புத்தூரிலுள்ள முதுநிலை பூச்சி இயல் நிபுணர் அவர்கள் இதுபற்றி ஆய்வு செய்து ஆண்டு ஒன்றுக்கு தொடரும் செலவினம் ரூபாய் 24,000-மும் தொடராச் செலவினம் ரூபாய் 750-ம் கொண்ட ஒரு மாற்றுத் திட்டத்தைத் தயாரித்து இதை முன்சிறை ஒன்றிய ஆணையருக்கு ஒப்புதலுக்காக அனுப்பி உள்ளார். மொத்தச் செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்கை ஏற்க இவ்வொன்றியம் ஒப்புதல் அளித்தவுடன் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு அனுமதி வழங்க மேல் நடவடிக்கை எடுக்கும்.

இது தொடர்பாக தக்க நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே மேற்கொண்டுள்ளதால், எந்தவிதமான பதட்டமும் அடைய வேண்டிய நிலை இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தப் புதுக்கடை வட்டாரத்தில் யானைக்கால் வியாதி பரவியது சம்பந்தமாக மக்களின் கோரிக்கை அடிப்படையிலே அரசு அதிகாரிகளைக் கொண்டு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் 10 சதவீதம் மக்களுக்கு இந்த நோய் பரவியுள்ளதாகவும், கொசுக்களைப் பிடித்துச் சோதனை பிட்டதில் 50 சதவீதம் கொசுக்கள் இந்த நோயைப் பரப்பும் தன்மையைக் கொண்டிருப்பதாகவும் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் மக்கள் மத்தியில் இது குறித்து ஒரு அச்சுறுத்தல் இருந்து கொண்டிருக்கிறது. 320 பேர்களுக்கு நோய்த் தடுப்பு மாத்திரைகளை வீடு வீடாகச் சென்று கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே பாதிக்கப்பட்ட 204 பேர்களுக்குப் போதுமான மருந்துகள் கொடுப்பதற்கு இயலாத நிலை உள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மூன்று மாத குழந்தைகளுக்கு எந்தவிதமான மருத்துவ உதவியும் அளிக்கப்படவில்லை. எனவே அங்கே பல்வேறு காரியங்களைச் செய்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த தகவல்களுக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் ஒரு மைக்ரோஸ்கோப் கண்ட்ரோல் யூனிட் அந்தப் பகுதியிலே இருந்தால் நான் அந்த வியாதியினைப் பரிபூரணமாகத் தடுக்க முடியும். எனவே ஒரு மைக்ரோ யூனிட் அமைக்க அரசாங்கம் முன்வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, 50 சதவீதம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது முற்றிலும் தவறான தகவல். 50 சதவீதத்திற்கு மேலே இருந்தால் எண்டமிக் ஏரியா என்று சொல்வார்கள். எனவே அது அவ்வாறு இல்லை. மேலும் நோயால்

ஃபைலேரியா ஆர்கனைசேஷன் என்ற ஒன்று மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. அவர்களும் இந்தியா முழுவதும் சென்று ஆங்காங்கே உள்ள நிலைமைகளைப் பார்க்கிறார்கள். மேலும் டபிள்யூ.எச்.ஒ. நிறுவனமும் பல்வேறு பகுதிகளில் இதுபற்றி, கவனித்து வருகிறார்கள். 5 சதவீதத்திற்கு மேலே போனால் மைக்ரோ பைலேரியல் ரேட் என்று சொல்வார்கள். 50 சத வீதத்திற்கு மேலே போனால் என்டமிக் ஏரியா என்று சொல் வார்கள். ஆனால் அது அந்த அளவுக்கு இல்லை. அப்படி என்ட மிக் ஏரியாவாக இல்லை என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கக் கூடிய கோரிக்கையின் அடிப்படையில் ஏற்கனவே நாம் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு

To reduce Filaria it is proposed to establish one Filaria Control Unit and Night Clinic in Kanyakumari District என்று சொல்லியிருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. 1984-85-ஆவது நிதியாண்டிலே நாம் இந்த கோரிக்கையை ஏற்று அங்கே ஒரு பைலேரியா கண்ட்ரோல் யூனிட் ரோல் யூனிட்டையும் நைட் கிளினிக்கையும் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். ஏனென்றால் இரவில்தான் அது அதிகமாக வருகின்றது என்பதால் அந்த வகையில் அமைக்க ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறோம்.

திரு. டி. மனி : தலைவர் அவர்களே, நான் சொன்ன தகவல் ஏற்கெனவே அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வந்த தகவல்தான். அதுமட்டுமல்ல. இந்த மூன்றாண்டு காலத்திலே குழித்துறை நகராட்சிப்பகுதி, சுசீந்தரம், இடலாக்குடி, இரணியல் போன்ற பகுதிகளில் இது அதிகமாக ஏற்பட்டு கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் இருக்கின்றது. எனவே இதனை அவசரமாகவும், தீவிரமாகவும் கண்காணித்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் பதிலளிக்கும்போது விரிவாகச் சொல்லி இருக்கிறேன். எனவே ஒரு பைலேரியா கன்ட்ரோல் யூனிட் ஒன்றை அங்கே ஏற்படுத்த நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

நில உரிமைப் பதிவேடு (பட்டா பாஸ் புக்) வழங்கல் சட்டமுன்வடிவு 1981 மீதான கூட்டாய்வுக் குழு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு

(பட்டா பாஸ் புக்) வழங்கல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/1981) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு

இனாம் எடுத்துவிடுதல் தொடர்பான (நடவடிக்கைகளைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இனாம் எடுத்து விடுதல் தொடர்பான (நடவடிக்கைகளைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராமச்சந்திரன் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் கொண்டுவர முயன்று இருக்கிறார்கள் என்றாலும் அந்த வாய்ப்பை முதலிலே பெற்றுக்கொண்டவர் என் அன்பு நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மேல் எதிர்க்கட்சி களைச் சேர்ந்தவர்கள் பேசியபோது அதை மிக மிக உன்னிப்பாக நான் கவனித்தேன். அவர்களுடைய பேச்சிலிருந்து எனக்கு ஒரு மன மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்ற பெயரில் ஒரு நம்பிக்கை பெறும் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். ஏனெனில் அவர்கள் சொல்லிய, எடுத்து வைத்த சுருத்துக்கள். குற்றச் சாட்டுகள் எல்லாம் 3 ஆண்டுகளுக்கு முன்னால் பதில் சொல்லி தீர்ந்து விட்டவை என்பதையும், அதிலே ஒருசிலதான் அன்றாடம் நிகழ்ச்சிகளில் உள்ளதைத்தான் புதிதாக கொண்டு வந்திருக் கின்றாரே தவிர மற்ற அனைத்தும் மூன்றாண்டு காலத்திற்கு முன்பு பேசியதுபோல் அந்தப் பேச்சின் தொடர்ச்சி தான் என் பதை நான் நினைவுபடுத்திக் கொள்கின்றேன்.

(முற்பகல் 10.40)

அந்த வகையில், இந்த மன்றத்தின் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது நான் எந்தக் கருத்தைச் சொன்னாலும் அது நியாயமானதாகவும், உண்மையானதாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு சில செய்திகளை மக்களுக்குச் சொல்வதற்கு இந்த வாய்ப்பைத் தந்து இருக்கிறார்கள் என்றே நான் கருது கின்றேன். ஒரு வேளை அண்மையில் தேர்தல் வந்து விடும் என்ற நினைப்போடு அந்தத் தேர்தலுக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற கருத்துக்கள் விளம்பரமாக அமை யட்டும் என்பது அதற்கு பயன்படுத்தலாம் என்ற நினைப்பில் இதைக் கொண்டு வந்தார்களோ என்று கூட நான் ஐயப்படு கிறேன்.

ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் ஒவ்வொருவர் பேசிய போதும் அவருடைய பேச்சில் என்ன வந்தது என்றால், எந்தக் கட்சி எந்தக் கட்சியோடு சேரப்போகிறது, எந்தெந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கலாம், நிர்யம் எது, பொருத்தம் எது, சரி தானா என்பது தான் அதிகமாக இங்கே விவாதம் நடந்தது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது கருத்துக்களைச் சொல்வதில் மிகக் குறைந்த அளவிலே தான் சொல்லியிருக்கிறார் கள் என்பதை நான் இங்கே உங்கள் மூலமாக அவையினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல் அறிவிக்கப்படாத இந்த நேரத்தில் யாரோடு கூட்டு என்று பேசும்போது பல பத்திரிகைகள் தேர்தல் வரப்போகிறது, தேர்தல் வரப் போகிறது, மார்ச்சிலே வரலாம், மேயிலே வர லாம். இல்லை, பிப்ரவரியிலே வந்து விடலாம், இல்லை இல்லை டிசம்பரிலே வந்து விடலாம் என்று எழுதப்பட்டு, பேசப்பட்ட விஷயங்களின் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டதோ என்று நான் கருதுகின்றேன். ஆகவேதான் 3 ஆண்டுகளாக இல்லை, நாங்கள் இந்த அவையிலே வந்து பிறகு இப்போதுதான் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறினார்கள். நாங்கள் எங்களை

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவபர் 15

பொறுத்தவரையில் எங்கள் நிலைமையை விளக்குவதற்காகவும் ரங்களுடைய செயல்முறைகளில் மக்களுக்கு நன்மை விளைந்ததா ன்பதை எடுத்துக்காட்டவும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர் மானம் முக்கியமாக உதவுகிறது என்று நான் எண்ணுவதால் ட்டம் அனுமதிக்கின்ற வரையில், எத்தனை ஆண்டுகள் நாங்கள் இங்கே இருப்பதற்கு மக்கள் வாக்களித்து இருக்கிறார்களோ, இந்த நாட்டில் அடுத்த தேர்தல் வருகிற வரையில் அவர்கள் அடிக்கடி இதைக்கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி இருந்தால் எங்களுடைய சூழ்நிலைகளையும் உண்மை நிலைமைகளையும், நாங்கள் எங்கள் கடமையை எப்படிச் செய்கிறோம் என்பதையும், எங்கள் தேர்தல் அறிக்கைக்கும், நாங்கள் செயல்படுகின்ற முறைக்கும், கடமைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா, இல்லையா, சொன்னதைச் செய்கிறோமா இல்லை, சொன்னதைச் செய்ய முடிந்ததா, சொன்னதைச் செய்ய முடியவில்லையா என்பதை இங்கே எடுத்து வைத்து, அதை உண்மையாக, அப்படியே எந்தெந்தப் பத்திரிக்கைகளில் வெளியிடுகின்றார்களோ அதன் விளைவாக தமிழக மக்களுக்கு உண்மை நிலையை தெரிந்து கொள்ளச் செய்வதற்கும் இந்தத் தீர்மானம் எங்களுக்கு பயன்படுகிறது என்பதால், இந்தத் தீர் மானத்தை முன் மொழிந்த மாண்புமிகு என்னுடைய நண்பர், அன்பர் உமாநாத் அவர்களுக்கு நான் நன்றிக் கூறிக்கொள்கிறேன். ஏனெனில் முதலில் எவ்வளவோ பிரச்சனைகளைச் சொல்லி யிருந்தாலும் தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் நடக் கிறோம் என்ற குற்றச்சாட்டு, முக்கியமான குற்றச்சாட்டு அவரைப் பொறுத்தவரையில், அதை நான் முதலிலே எடுத்துக் கொண்டு அவருக்குப் பதில் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அவர்கள் சொன்ன பல குற்றச் சாட்டுகளை நான் திரும்பச் சொல்ல வேண்டாமென்று கருது கிறேன்; குறிப்பில் இருக்கின்றன. அவற்றிற்கு பதிலை மாத் திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த கூலி கொடுக்கப்படவில்லை என்ற புகார் அரசுக்கோ அல்லது சம்பந் தப்பட்ட துறைக்கோ இதுவரை வரவில்லை. அப்படி இருந்தா லும் இந்த அரசு அவ்வப்போது பொதுவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில் நாங்கள் எச்சரிக்கை யாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அங்கே இருக்கிற அதி காரிகளுக்கு முன்னமே சொல்லியிருப்பதால் இந்தப் பிரச்சன வரவில்லை என்று நான் கருதுகிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் போனஸ் சம்பந்த மான ஒப்பந்தம் போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்னிலையில் மத்தியத் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் நிர்வாகத்துடன்

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

பேச்சுவார்த்தை நடத்தி ஏற்பட்ட உடன்பாட்டை தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிலாளர் நலத்துறை ஆணையர் முன் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ளனர். இதில் ஏதும் தவறு நடக்கவில்லை. ஏதாவது தவறு இருக்கிறது, இந்தப் பதில் சரியில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் என்னுடைய பேச்சுக்குப் பிறகு ஏதாவது குறிப்பிட்டால் அதற்கும் நான் பதில் வைத்திருக்கிறேன். அதற்கு பிறகு என்னுடைய பதிலைச் சொல்கிறேன்.

டாட்டா கம்பெனித் தொழிற்சங்கத் தொழிலாளர்களில் ஒரு பிரிவுக்கு திரு. குசேலர் தலைவராகவும் மற்றொரு பிரிவுக்கு திரு. சிந்தன் தலைவராகவும் இருக்கிறார்கள். திரு. சிந்தன் தலைமையில் உள்ள தொழிற்சங்கம் எழுப்பிய தொழில் தகராறில் தொழிலாளர் நலத் துறை துணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் விளைவாக நிர்வாகத்திற்கும் திரு சிந்தன் தலைமையிலான தொழிற்சங்கத்திற்கும் இடையே ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தால் ஏற்கெனவே திரு. குசேலர் தலைமையில் உள்ள தொழிற்சங்கம் நிர்வாகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படியான அக விலைப்படியை படிப்படியாக குறைக்க வகை செய்தது. இதை திரு. குசேலர் தலைமையிலுள்ள தொழிற்சங்கம் ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால் தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் தொழிலாளர்களின் ஒரு பகுதியினருக்கு பாதகம் விளைவிக்கும் என்று எண்ணுவதால் தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 18 (1)-ன் படி தொழிலாளர்களுடன் தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளும்படி அறிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி ஒரு தொழில் தகராறு நியாயமான்தாகவும் விவேகமானதாகவும் இருந்தால் அப்போது மட்டுமே தொழில் தகராறு சட்டம் 12 (3) கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தலாம் என்று கூறியுள்ளார். இந்நிலையில் சமரச அதிகாரி தீர்ப்பில் அரசு தலையிடுவது சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பானது. எனவே இதில் அமைச்சர் தலையீடு எதுவும் இல்லை என்று நான் சொல்லியிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் நன்மைக்காக கொண்டுவந்த சட்டத்தை தனிப்பட்ட மூலாளிகள் (மாஸ்டர் வீவர்ஸ்) எதிர்த்து உயர் நீதி மன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றனர். இவ்வழக்கில் தடையை நீக்கி, வழக்கை விரைவில் முடிக்கும்படி அரசு வழக்கறிஞரிடம் வலியுறுத்தியிருக்கிறது. இது சில உண்மைகளை விளக்குகின்ற செய்தியாகும். அதே சமயத்தில் இந்த அரசு தொழிலாளர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை நான் இந்தக் குறிப்பின்படி விளக்கவும் தெளிவாக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

ஏனெனில் ஒரு பெரிய தொழிற்சங்கத்தை என்று குறிப்பிடாமல் தொழிலாளர் வர்க்கத்திற்கே நாங்கள் எதிரிகள் என்ற அளவில் இங்கே வார்த்தைகள் பரிமாறப்பட்ட காரணத்தால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய நியாயமான கடமை. அதிலும் ஏதோ நினைவில் வைத்துக்கொண்டு சில விஷயங்களைச் சொல்லாமல் புள்ளிவிவரங்களோடு சொல்வது அவசியம் என்று நான் கருதுவதால் அதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி திட்டம் மூலம் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, விசாரணையில் உள்ள பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி 1-1-1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இது இதுவரையில் யாரும் செய்யாத சட்டம். இது வேலையிலிருந்து நீக்கவும், அதுவும் தற்காலிகமாக பணி நீக்கம் என்று சொல்லி அவர்கள் துன்பப் படுவதைத் தடுக்கும் சட்டம் என்பதை இங்குள்ள நியாயமான உணர்வு உள்ள எல்லோரும் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்குதல்) சட்டம். 1982 முதல் 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்களை பணி நீக்கம் செய்ய முடியாது. பணி நிரந்தரம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் 1-1-1983 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த சட்டமும் முக்கியமான சட்டம். தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் சட்டம். அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நன்மை உண்டாக்கும் சட்டம் என்பதை இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் வேலை முறை மற்றும் இதர வகைகள் சட்டம், 1981-ன் மூலம் தொழிலாளர்கள். தொழில் அதிபர்கள் உறவு, ஊதியம் குறித்த விதிமுறைகள், பணியில் தொடர்ச்சி சுகாதாரம் ஆகியவை போன்ற நலன்களை கைத்தறி நெசவாளர்கள் பெறுவதற்கு வகை செய்யப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே நெசவாளர்கள் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட முதல் சட்டம் இதுதான். 12-3-1982 முதல் நடைமுறையில் வந்துள்ளது. ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தில் —நமது அனுதாபம் தான்— தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேல் இதைப்பற்றி நான் கூற விரும்பவில்லை. நாங்கள் சில சமயம் கருத்துக்களைச் சொல்லும் போது, சில தடைகள் விதிக்கப்படும்போது எவ்வளவு நஷ்டத்தை மக்களுக்கு அளிக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

என்ற கருத்தினை இங்கே சொன்னால், நீதியுதிகளுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை அவமதிக்கும் எண்ணத்தோடு சொல்லு கிறார்கள் என்றெல்லாம் வெளியே பேச ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவேதான் மிக எச்சரிக்கையோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இந்தக் குற்றச்சாட்டை என்மீது சுமத்து கிறீர்களே, அதற்குப் பரிகாரம் காண நாங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி நீதியின் பெயரால் தடைச்செய்யப்பட்டிருக் கிறது என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள நான் பெரி தும் விரும்புகிறேன்.

1982ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல், சட்டத்தின் மூலம் அமைப்பு ரீதியில் இணைக்கப்படாத உடல் உழைப்பு தொழிலாளர்கள் பணி நிலைமைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரையி லும், அது இல்லை. அவர்களை இங்கே கேட்பாரும் இல்லை. ஆனால் அவர்கள் அநாதைகளைப் போல அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கவேண்டுமென்ற நிலையில் இருப்பதற்கு பாதுகாப்பு அளிக்க இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின் றது. 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும் என்பதை மாற்றி 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங் களுக்கும் பொருந்துமாறு 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடைச் சட்டம் திருத்தப்பட்டது. 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந் தும் என்ற நிலைமையை மாற்றி 50 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களுக்கும் பொருந் துமாறு 1956 ஆம் ஆண்டு தொழில், பணி நிலை ஆணைகள் சட்டம் திருத்தப்பட்டது. எல்லாத் தொழிலாளர்கள் சட் டத்தின் கீழும் தொழில் வழக்குமன்றங்கள், தொழில் தீர்ப்பு மன்றங்கள் மட்டும் அரசு முன்பாக தொழிலாளர் சார்பில் தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளித்திருக்கின்றோம். இது தொழிலாளர்களுக்கு ஏற் படுத்துகின்ற சட்டம் இல்லை என்று யாரும் சொல்லமாட் டார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீட் டைச் செய்யும்போது வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சம் மன் அனுப்பும் அதிகாரத்தை அலுவலர்களுக்கு வழங்கும் வகை யில் 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் இருத்தப்பட் டது. இதுவும் நல்ல சட்டமல்ல என்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். அநியாயமான சட்டம் என்று சொல் கிறீர்களா? (குறுக்கீடு) தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக் கும் நிறுவனங்கள், கடைகள் மற்றவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் பணிக் காலம், பெறுகின்ற ஊதியம் ஆகியவை

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

குறித்து பணி சிட்டு, அல்லது நேர அட்டை கட்டாயமாக வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. தொத் தடிமை முறை போல எத்தனை மணி நேரமானாலும் வேலை செய்ய வேண்டுமென்ற நிலையை மாற்றி, அவர்களுக்கு அதி கார வரம்புக்கு உட்பட்ட வகையில் பாதுகாப்பு அளித்துள்ளது. அச்சட்டத்தின்மூலம் என்பதை, தொழிலாளர் விரோத சர்க் கார் என்று இங்கே என்மீது பழி சுமத்தவில்லை, ஒரு குற்றத் தைச் சாட்டி இந்த உண்மை மக்களுக்குத் தெரியட்டும் என்ற ஒரு வாய்ப்பு தந்தீர்களே, அதற்கு நன்றி கூறி, இந்த விளக் கத்தை நான் வெளியிட விரும்புகிறேன்.

குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங் களில் உள்ள தொழிலாளர்களுக்கும் தேசியப் பண்டிகை விடு முறை நாட்கள் பெற உரிமை அளிக்கும் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர்கள் நிறுவனங்கள் தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 5 நபர்கள், அதற்குமேல் பணியாற்றும் உணவு விடுதிகள், மற்றும் கடைகள் நிறுவனங்கள் ஆகியவற்றில் தொழிலாளர் நல நிதிச் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதை இங்கே சொல்லும்போது, தொழி லாளர்களுக்காக எனவே, என்ன செய்திருக்கிறோம் என்பதை இந்த அளவில் இப்போது குறிப்பிட்டு, பின்னால் விளக்க மாகத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இதில், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற திரு. ஹூரா செரீப் அவர்கள் தமிழ்நாட்டில் மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரித் துறையைப் பற்றி சொல்லி, அதிகமாக நிதி கொடுக்கிறார்கள். இவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்த வில்லை என்றும், குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்காகத் தரப் படுகின்ற பணத்தைக் கூட ஒழுங்காக அதற்குப் பயன்படுத்த வில்லை என்றும் இங்கே சொல்லி, சில குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள்.

1977 முதல் 1982 வரை தமிழ்நாட்டில்கூட்டு நிறுவனங்கள் வரி, ஆயத் தீர்வை, வருமான வரி ஆகியவைகளில் மொத்தம் ரூ. 3,702 கோடி தமிழகத்திலிருந்து மத்திய அரசால் வசூலிக்கப் பட்டது. இவ்வகையில், மத்திய அரசு ரூ. 1,165 கோடி மட்டுமே தமிழ்நாட்டுக்குப் பங்குத் தொகையாகக் கொடுத்துள்ளது. மத திய அரசுக்குத் தமிழ்நாட்டின் வழியாக கிடைக்கும் தொகை அதிகமாக இருந்தும் கடந்த 5 ஆண்டுகளில் மத்திய அரசு மிருந்து நமக்கு 30 சதவீதத்திற்கும் குறைவாகவே மத்திய அரசு அளித்துள்ளது. இதைத் தவிர வருமான வரி மீதுள்ள மேல் வரி—சர்சார்ஜ்—கூட்டு நிறுவனங்கள் வரி—கார்ப்பரேஷன் டாக்ஸ்—போன்றவைகளை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள் வதில்லை.

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

மேலும் தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது வசூல் செய்யப்படும் சுங்க வரி மிகப் பெரியதாக இருந்தாலும் மாநிலத்திற்கு இத்தொகையிலிருந்து எதுவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

வருமான வரியும், மேல் வரியும் ரூ. 529 கோடி; மத்திய ஆயத் தீர்வையும், கூடுதல் ஆயத் தீர்வையும் ரூ. 2,697 கோடி. கூட்டு நிறுவன வரி ரூ. 426 கோடி. மொத்தம் ரூ. 3,702 கோடி. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது ரூ. 1,165 கோடி. அதைக் கொஞ்சம் நாம் மனதில் நிலைநிறுத்திக் கொண்டு, இந்தப் புள்ளி விவரத்தையும் நீங்கள் மனதில் பதித்துக் கொண்டு, பால் அல்லது பதிய வைத்துக் கொண்டால், மத்திய அரசு தமிழ் நாட்டுக்குத் தர வேண்டிய அளவு நிதி ஒதுக்கித் தரவில்லை என்பதை நாம் நன்றாகப் புரிந்து தெரிவிப்போம். இதில் கடன், மானியம், இரண்டும் சேர்த்தது. மத்திய அரசிடமிருந்து நாம் கடன் உதவி, மானிய உதவி என்று இரு வகைகளில் உதவிகளைப் பெறுகிறோம். கடன் என்ற வகையில் நாம் மத்திய அரசிடமிருந்து பெற்ற தொகையும் திருப்பிச் செலுத்திய தொகையும் வருமாறு:

1980-81 கடன் ரூ. 154.57 கோடி; திருப்பிச் செலுத்தியது ரூ. 40.16 கோடி. 1981-82 ரூ. 154.61 கோடி; ரூ. 47.57 கோடி திருப்பிக் கொடுத்துள்ளது. 1982-83 ரூ. 175.89 கோடி; ரூ. 89.15 கோடி. 1983-84 ரூ. 158.26 கோடி — ரூ. 61.19 கோடி. இதன்படி பார்த்தால், திருப்பிச் செலுத்தும் தொகை போக மைய அரசிடமிருந்து ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ. 100 கோடிதான் கிடைத்தது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நான் கருதுகின்றேன்.

(மு.ப. 11—00)

மானிய உதவி 1980-81ல் 116.52; 1981-82ல் 125.65 1982-83ல் 133.25; 1983-84ல் 132.95. மொத்தமாக ஐயா 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து அரசிடமிருந்து ஆறாவது கால்திட்டத்தில், 732 கோடி. நதாயாகும் கிடைக்கும். என்பதை நான் இங்கே தொகை தில் வைக்க விரும்புகிறேன். ஆனால் மைய அரசு ஒதுக்கியதை விட நாம் அதிகமாகச் செலவு செய்து வருகிறோம், என்ற உறுப் பினர் குற்றச்சாட்டு எந்த அடிப்படையில் எழுந்தது என்று தெரிய வில்லை. (குறுக்கீடு) எதிர்கட்சித் தலைவர் பேச்சை கொடர்ந்த தால் அவர் சுட்டிக்காட்டிய இன்னொரு கேள்விக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். திட்டு. சென்னை, நகரமாக இல்லை. நரகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள் வோம். யாராவது ஒருவர், நாங்கள் வரி செலுத்துகிறோம்,

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

ஆனால் எதிர்கள் செய்து தொடுக்கப்படவில்லை என்று கோர்ட் ஒக்குப் போனால்; உங்களுடைய பாடு மிகவும் கஷ்டமாகப் போய் விடும்.

அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு என்னுடைய அனுதாபம். ரயினில் ஏதோ நூற்றுக் கணக்கான கோடி, ரூபாய்கள் மாநகராட்சியிலே வருவாயாக வருவது போலவும், அள்ளஎவு வரு பாயம் இருக்கும்போது அதை வைத்துக் கொண்டு, மக்களுக்கு நன்மையே செய்யாமல்லவோ என்று சொல்வது போலவும், அவர் அந்தக் கருத்தை வெளியிட்டார். உண்மையிலேயே அனுதாபத் துகூடு சொல்லிக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சியின் வருமானம் மற்ற மாநிலங்களிலேயே உள்ள மாநகராட்சிகளின் வருமானத்தை விட மிகக் குறைவு.

உதாரணமாக, நுழைவு வரி போடுவதால் பம்பாய் மாநகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 300 கோடி கிடைக்கிறது. சென்னையை விட சிறிதான அகமதாபாத் மாநகராட்சிக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. ஆனால் சென்னை மாநகராட்சியின் வருமானம் ரூபாய் 20 கோடியைக் கூட எட்டு வதே கஷ்டமாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன். இப்படி 300, 400 கோடி ரூபாய் வருமானம் உள்ள மாநகராட்சிகளும் இருக்கின்றன. சில இடங்களில் 1,000 கோடி ரூபாய் வருமானம் கூட இருக்கிறது. ஆனால் தமிழ்நாடு மாநக ராட்சி மன்றம் என்னென்ன பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

வடிகால் வாரியம் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும், இங்கே போடப்பட்டிருக்கிற குழாய்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது என்பதை நாம் எல்லோரும், கொஞ்சம் கலைத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குழாய்களில், கழிவு நீரும், நன்னீரும் போகின்ற குழாய்கள் இருக்கின்றன. கேள்வி நேரத்திலே கூட, அது கேட்கப்பட்டு பதில் வந்திருக் கிறது. கழிவு நீர் கலக்காமல் இருக்க, குடிதண்ணீர் குழாய் அந்தன் பக்கத்திலேயே இருப்பதை மாற்றுவதற்கு ஏதாவது வகை செய்ய முடியாதா என்று கேட்டார்கள். நகரங்களிலே மட்டும் அல்ல, வெளியிலேயும் அந்த நிலைமை இருக்கிறது.

ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குழாய்களை மாற்றி அமைக்க உலக வங்கியிடம் நாம் 3 ஆண்டு களுக்கு முன்பு கேட்டபோது, 50 கோடி ரூபாய் இதற்கென்று செலவிட்டாலுதான், அதை சீர்படுத்த முடியும் என்று சொன்னார் கள். காரணம் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரமே அல்ல சென்னை மாநகரம் என்பதையும் நாம் எல்லோரும் தயவுசெய்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

வீடுகள் தோன்றி தோன்றி, வீதிகள் வீடுகளாக மாறி, அது சிறு சிறுபகுதிகளாக ஆகி, பெரிய பெரிய நகரங்களை எல்லாம் தோற்றுவிக்கக்கூடிய அளவுக்கு மக்களுடைய வளர்ச்சியும், மக்களுடைய வருவாயும் இருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால், ஒரு பாதகராட்சி, 20 கோடி ரூபாய் வருமானம் உள்ள பாதகராட்சி, 10 கோடி ரூபாய் செலவிட்டால் தான் இந்தக் குழாய்களை சீர்திருத்த முடியும் என்று சொல்கிற ஒரு திட்டத்தில், அது எத்தனை காலம் கழித்து நிறைவேற்ற முடியும் என்று நினைத்துப் பார்க்க வேண்டும், இதில் கட்சி என்ன சொல்கிறார்கள் என்றால், குடிதண்ணீர் கொண்டு வருகிற குழாய்களை ஒழுங்கு படுத்துவதற்காக, 50 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால், அவர்களுடைய பதில் என்னவென்றால், குடிதண்ணீர் எங்கேயிருந்து வரும் என்பதைப் பற்றி சொல்லுங்கள், அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைச் சொல்லுங்கள், அதற்குப் பிறகு குழாய்களைப் புதுப்பிப்பது பற்றி யோசிப்போம் என்று பதில் வருகிறது. 3 ஆண்டுகளுக்கு முன்பு, நாங்கள் வீராணம் திட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது, நான் உங்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு காரணம் நகரைச் சுத்தம் செய்யும் வேலைக்கு 4 கோடி ரூபாய் தான் செலவிட முடியும். குப்பைகளை விஞ்ஞான முறைப்படி தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவவும் குப்பைகளை அகற்றவும் திட்டங்களை அமல்படுத்தும் நிலையில் வெளியில் என்றாலும் அதற்கு அரசு கடன் கேட்க வேண்டியிருக்கிறது.

இதை இங்கே நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த நகரத்திலே இருந்து இந்த நகரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை இவ்வளவு எளிதாக அல்ல, மிகச் சகாரணமாக, நரகமாக இருக்கிறது என்று சொன்னால் — உண்மையாக நரகமாகத்தான் இருந்திருக்க வேண்டியது — ஆனால் அதிகாரிகள், மக்கள் ஒத்துழைப்பு இவைகள் மூலமாக இந்த அளவுக்கு சுகாதார கேட்டிற்கு ஆளாகாமல் இருக்கிறோமே என்பதை நினைத்து மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே எங்களுடைய 1980ம் ஆண்டு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை வைத்துக் கொண்டு, என்ன என்ன சொன்னீர்கள் என்ன என்ன செய்தீர்கள் என்றெல்லாம் தன்னுடைய பேச்சிலே ஒவ்வொருவரும் மிகத் தெளிவாக விளக்கம் கூறி எங்களை விட அதிகமாக அந்த தேர்தல் அறிக்கையைப் படித்துச் இல விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

நலிவுற்ற விவசாயப் பொருளாதாரத்தைச் சீரடையச் செய்ய அதற்கு முன்னேற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வழியில் ஒரு அமைப்பு வேண்டும் என்று நாம் சொன்னோம். அமைக்கப் படும் என்று சொல்லப்பட்டது. அது திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அவர்கள் அரசால் என்ன என்ன செய்ய முடியுமோ அதுபோல் அவர்கள் கொஞ்சமாகச் சொன்னாலும் அதிகமாகச் சொன்னாலும் முழுமையாக செய்ய முடியாவிட்டாலும் ஓரளவுக்கு அந்தப் பணியை இந்த அரசு நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதை எங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னோம் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆங்காங்கே மாவட்டங்களிலே திரு முனு ஆதி அவர்கள் சென்று அவர்களுடைய தலைமையிலே இருக்கிற நண்பர்களையும் சென்று ஆங்காங்கு குழுக்களை அமைக்க முயற்சித்து பற்றாடுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளைபொருட்களுக்கு நியாய விலை கிடைக்கவும், இடு பொருள்கள் எளிதில் கிடைக்கவும் நடவடிக்கை. இது குறிப்பு. அதிலே விவரமாக இருக்கும். அந்த தேர்தல் அறிக்கையிலே அது இருக்கிறது. நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 132 ரூபாய் என்னமய அரசு விலை நிர்ணயித்த போதும் இந்த அரசு வற்புறுத்தியால் பரிந்துரைக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்திற்கு வெளிச்சக்காக ரூ. 20-ம் மின் கட்டணத்திற்காக ரூபாய் 15-ம் தனிச் சலுகையாக வழங்கி வருகிறது. கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூபாய் 130 என்னமய அரசு நிர்ணயித்தது. இந்த அரசு ரூ. 175 கொடுக்க உத்தரவிட்டுள்ளது.

(முற்பகல் 11-10).

உரம், பூச்சி மருந்து போன்றவை எளிதில் கிடைக்க சிறப்பான நடவடிக்கை எடுத்துவருகிறது. சென்ற ஆண்டு கூட 12 ஆயிரம் டன் யூரியா பெற்று பயிர்களுக்கு விநியோகித்தது. ரூபாய் 181·22 கோடி விவசாய கடன் நிலுவை செய்தது. ரூபாய் 24.44, கோடி வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்தது. விவசாயப் பணியில் ஈடுபட்டுள்ள விவசாய தொழிலாளர்கள் பணி செய்து கொண்டு இருக்கும் போது மரணம் அடைந்தால் 5 ஆயிரம் ரூபாய் நிதி அளிக்கப் படுகிறது. மின் கட்டணம் பெரிய விவசாயிகளுக்கு 16 காசிலிருந்து 15 காசாகவும், சிறிய விவசாயிகளுக்கு 14 காசிலிருந்து 12 காசாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மீட்டர் வாடகை முறை அறவே நீக்கப்பட்டுவிட்டது. 20 ஏக்கர் வரை விவசாய வருமான வரித்து. பணப் பயிருக்கு விதிக்கப்பட்ட வரி தள்ளுபடி. குத்தகைத் தொகையைக் குறைக்கும் வகையில்

75—25 என்ற விகிதத்தில் புதியச் சட்டம். இங்கே பாராட்டினோர்கள். பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக செயல்படுத்தப் படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறை, எண்ணெய் வித்துத் துறை தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் விற்பனைத் துறை, விதை சான்றிதழ் துறை ஆகிய புதிய துறைகள் தொடங்கப் பட்டது. 60 வயதைக் கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வு ஊதியம் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் முதல் கட்டமாக 3 ஆயிரம் ஆதரவு அற்ற வேளாண்மைத்தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 35 ரூபாய் உதவித் தொகையும், 90 பைசா மதிப்புள்ள ஒரு வேளை மதிய உணவும், வாரம் 1/2 கிலோ அரிசியும், ஆண்டு ஒன்றுக்கு 2 வேஷ்டிகளும், 2 சேலைகளும் வழங்கப்படுகிறது. இங்கே நான் ஒன்றை கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்காக நாங்கள் எதையுமே செய்யவில்லை. தேர்தல் அறிக்கையில் சொன்னதில் எதையும் செய்ய முற்படவில்லை என்று சொல்வது எவ்வளவு தவறான செய்தி. அந்த தவறானச் செய்தியை நம்பி சொல்கின்ற கருத்துக்கள் என்பதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

கிராம வளர்ச்சிக்காக சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப் படும். அது நான் தன்னிறைவுத் திட்டம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுவார்கள். இங்கே சிலர் பேசினார்கள், தன் நிறைவுத் திட்டம் என்று எல்லாம் தெளிவாக பேசினார்கள். அவர் அவர்களுக்கு தனியாக என்று சொல்லினார்கள். நான் இறுதியில்புள்ளி விவரங்கள் பற்றிக் காண்பிக்க இருக்கிறேன். எத்த எத்த கட்சி அந்த ஒப்பந்தப் புள்ளியில் கலந்துகொண்டு இருக்கிறார்கள். எந்தெந்த பேர்களுக்கு அதில் இடம் கிடைத்து இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை பின்னால் எடுத்துக் கூறவிரும்புகிறேன். ஆகவே இப்போது அந்த இடத்திற்குப் போகாமல் நேரவிக்கு மட்டும் பதிலை நான் குறித்து வைத்துள்ளதை படித்துவிட்டு நானாக கருத்துக்களை விளக்கிப் போகும்போது அவைகளை பயன் படுத்திக்கொள்கிறேன் என்ற வகையில் மேலும் சில உண்மை களை வெளியிட விரும்புகிறேன்.

பதினாறாயிரம் கிராமங்களில் உள்ள ஆடவர்கள் பெண்டிர்கள் இரு பாலருக்கும் தனித்தனியாக குழிப்பிடங்கள் கட்டவேண்டும் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். அதற்காக, ஒரு குழிப்பிடத்திற்கு ரூபாய் 14,100 வீதம் 22 கோடியே 56 இலட்சம் செலவில் திறனெய்ற்ற திட்டமிட்டு முதலில் 8 ஆயிரம் கிராமங்களில் கட்ட ரூபாய் 11 கோடி ஒதுக்கியுள்ளோம். இது தேர்தல் வாக்குறுதியை நாங்கள் செய்ய முற்படவில்லையா? நிறைவேற்ற முன்வரவில்லையா? என்பதற்கு பதிலாகச் சொல்லி அதை அவரவர்களே தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தூய்த்தப்பட்டோருக்கு மலைவாழ் பட்டா, வீடு கட்டிக் கொடுத்தல், குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூடங்கள், அடிப்படை மருத்துவ வசதி, கழிவு அறை வசதி போன்ற புதிய குடியிருப்புகள் கிடைக்க பாடுபடுவோம் இது நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியது. 1976-க்கு முன் ஒரு வீடு கட்ட தேவைக 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை தான் வேண்டும். ஆனால் தற்போது ஒரு வீடு கட்டி முடிக்க ரூபாய் 14 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் வரை உயர்ந்துள்ளது. அதாவது 3 மடங்கு உயர்ந்துள்ளது. முன்னால் ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுத்தார்கள் என்றால் இப்போது 300 வீடுகள் கட்டிக்கொடுத்தாலே அந்த தொகை வந்துவிடுகிறது. என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். அப்படி இருந்தும் இதுவரை 11,385 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன என்பதை நான் கூறவேண்டியுள்ளது.

(மணிபாறை மாற்றுத் திறனாளர் தொழிலகம்.)

இராமாபுரம் விட்டு வசதித் திட்டத்தின் கீழ் 94 ஆயிரத்து 256 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இன்னும் 2 இலட்சம் வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1977 மார்ச் வரை ஆதிதிராவிடர் களுக்கு வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் 42,548. 1977-ம் ஆண்டு முதல் 1982-ம் ஆண்டு முடிய வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் 1 லட்சத்து 78 ஆயிரத்து 203. ஆதி திராவிடர் களுக்கு பள்ளிக்கூடம் கட்ட 1980-81, 1981-82-ல் 1 கோடியும் 1982-83, 1983-84-ல் 1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 11 இலட்சத்து 72 ஆயிரத்து 636 ஆதி திராவிட மாணவர் களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆதி திராவிடர்கள் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் இணைப்புகள் தோண்டப்படுகின்றன. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ரூ. 4,300 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 18-9-1978 முதல் இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், இந்தக் கணக்கை எல்லாம் முன்பே நான் படித்து விட்டேன். ஆனால் 3 ஆண்டு களுக்கும் சேர்த்து இப்பொழுது நான் படிக்கிறேன். இதற்கு முன்னால் படித்தது. அப்பொழுது குறைந்திருக்கிறது. இப் பொழுது அதிகமாகச்சேர்த்துப் படித்திருக்கிறேன்.

இவைத்தவிர, தொழில் கருவிகள் இலவசமாக வழங்குதல், சிறு தொழில் கடன் வசதி, ஆடு வளர்ப்பு, குடிசைத்தொழில் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொடுத்துள்ளது, மலைவாழ் இனமக்கள் சாலைகள், உழவு மாடுகள் வாங்கக் கடன் உதவி, மாசுக்கட்டுப்பாடு இணைப்பு தொண்டு நிறுவனம் மூலம் தொழில் ஒரு பங்கு மானியத்துடன் கடன் உதவி, ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதி முன்னுரிமை அடிப்படையில் மின் வசதி, சமுதாயக் கிணறுகள் போன்ற திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 1

ஆதி திராவிடர் இறுதிச் சடங்குச் செலவிற்கு ரூ. 50 நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதை நான் இங்கே சொல்லும் போது இன்னொரு விவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இங்கே இருக்கிற ஒரு உறுப்பினர் பேசினார், யார் என்று எனக்கு நினைவில்லை. 3 இலட்சம் பேர்களுக்கு மேல் சிறையிலிருக்கிறார்கள் என்று (குறுக்கீடு) மீசு உமாநாத் சொல்லியிருக்கிறார், அப்படி இருப்பதாக ஒரு நீதிபதி சொல்லியிருக்கிறார், என்று.

திரு. ரா. உமாநாத்: ஜெயிலில் அல்ல, அன்டர் டிரையல்களாக இருக்கிறார்கள். சிலர் பெயிலில் இருப்பார்கள் சிலர் ஜெயிலில் இருப்பார்கள். ஆனால், விசாரணைக் கைதிகளாக, கேசே முடிக்காமல் வருஷக் கணக்காக இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : விசாரணையில் இருப்பார்கள். விசாரணைக் கைதிகளாக விசாரணை மாட்டார்கள் என்று அதுவும் சொல்லுங்கள். இருக்க

திரு. ரா. உமாநாத் : ஒரு பகுதி கைதிகளாகவும்; இன்னொரு பகுதி அன்டர் டிரையல்ஸ், விசாரணைக் கைதிகளாக வருவைக் கணக்கில் இருப்பார்கள். 3 இலட்சம் பேர்கள் சிறையில் இருந்தால், இடம் எங்கே இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : உங்களுடைய பேச்சில் அது வந்திருக்கிறது அதைக் குறிப்பேட்டில் திருத்தச் செய்யுங்கள் (குறுக்கீடு) இருக்கிறது அதைத் திருத்த வேண்டும். இப்பொழுது சொன்னதை நான் ஏற்றுக் கொள் கிறேன் ஆனால், 11,000-க்கு மேல் வைக்க இடமே இல்லை, தமிழ்நாட்டிலே.

திரு. ரா. உமாநாத் : ஆகவே, 3 இலட்சம் என்று எப்படி நான் சொல்வேன்? 3 இலட்சம் அன்டர் டிரையல்ஸ்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : சில சமயம் அரசியல் உணர்வுகளாலே என்ன என்னமோ சொல்லலாம். நான் ஒரு சமயம் பதில் சொல்ல மறந்து விட்டேன் என்று வைத்து கொள்ளுங்கள் அது பத்திரிக்கையிலே வந்தது, அப்படியே இருக்கும்.

திரு. ரா. உமாநாத் : அன்டர் டிரையல்ஸ் என்ற வார்த் தையை உபயோகப்படுத்தியிருக்கிறேன் அன்டர் டிரை யல்ஸ் உள்ளேயும் இருக்கலாம் வெளியேயும் இருக்கலாம் சார்ஜ் ஷீட் பைல் பண்ணாமல் 17 வருஷம்.....

1983 நவம்பர் 1]

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தமிழில் குறிப்பெடுத்திருக்கிறார்கள் (குறுக்கீடு) அது தப்பாக இருந் தால் இப்பொழுது திருத்திக் கொள்வார்கள். உங்களுக்கு நன்மை அது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வழக்கு மன்றங் களிலே, வழக்குகள் இருக்கின்றன, சில வழக்குகள் இருக் கின்றன. அதிலே அதிகமான வழக்குகள் சாராய வழக்குகள். அதைத் தயவு செய்து தெரிந்து கொள்ளவேண்டும் அதை விசாரிப்பதற்குக் குடித்தவர்களாக இருந்தாலும், விற்றவர்களாக இருந்தாலும், நாட்களாகின்றன. நமக்கு பெசிலிட்டீஸ் இல்லை. லாப் இல்லை. ஆகவே தாமதமாகிறது என்பதால், எப்படி விடுவிப்பது என்று நாங்கள் யோசனை செய்து கொண்டி ருக்கிறோம். ஒட்டுமொத்தமாக பழைய வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று கூட எங்கள் யோசனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்

(முற்பகல் 11-20.)

மலிவு விலையில் உணவுப் பொருட்கள், நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்க புதிதாக 17,915 நியாய விலை கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 85,000 டன் அரிசி பொது விநியோகத்திற்கும் சத்துணவுத் திட்டத்திற்கும் மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதும் 118 இலட் சம் குடும்ப அட்டைகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. உற் பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், எல்லா மக்களுக்கும், போதுமான அளவிற்கு அவர்கள் கடைகளிலே போய் வாங்க அரிசி இருந்தால், அப்படி இருந்திருக்குமானால். 20 கிலோ அரிசி எங்கே என்று கேட்கிறார்களே, அவர்களுக்கு இந்த உண்மை தெரியாமல் இல்லை. அரிசி இல்லை. பற்றாக்குறை தான். வெளியே வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசிலேயிருந்து கொஞ்சம்தான் வருகிறது. அப்படியிருந்தும் கூடுமானவரையில் நியாய விலைக் கடைகளிலே அந்த விலையை அதிகமாக்காமல் விற்றும், தவறு செய்பவர்களை தண்டித்தும். அந்த நடவடிக்கை களை இந்த அரசு எற்படுத்தி, இந்த 1½ ஆண்டுகாலம் வறட்சியில் இந்த நிலையை நாங்கள் பாதுகாத்து வந்திருக் கிறோம் என்றால் எல்லா உறுப்பினர்களும் தயவு செய்து நினைத்துப் பார்க்க வேண்டும். அதிகாரிகள எவ்வளவு பொறுப்புணர்வோடு தங்கள் பணியை செய்திருக்கிறார்கள்; நாங்கள் எவ்வளவு கவனத்தோடு இருந்திருக்கிறோம் என்பதை

(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்) [19 வம்பர் 15

நீங்கள் உணர்ந்திருக்க முடியுமென்றாலும், இந்த நன்மையை வெளியே சொல்வதற்காக நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்று நான் முன்பே சொன்னேனே, அதற்கு இது பயன்படுகிறது என்பதை நான் வெளியிட விரும்புகிறேன். காரணம் மக்களுக்கு அரிசி இல்லை. வெளியிலே இருந்து கொண்டு வர வேண்டும். 180 ரூபாய், 175 ரூபாய் வாங்கக்கூடியதை 375, 370 ரூபாயில் வாங்கு வேண்டியிருக்கிறது என்ற நிலைமையில் அவைகளை வாங்கி ரூ. 1·75, ரூ. 1·85-க்கு கொடுப்பதென்றால் எத்தனை கோடி ரூபாய்கள் தமிழக அரசிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்பதையும், எத்தனைக் குழுக்களை வைத்து நாங்கள் அந்தப் பணியை செய்திருப்போம் என்பதையும் மன்றத்து உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அந்த வகையிலே மத்திய அரசு இப்போது கூடுதலாக 10 ஆயிரம் டன் கொடுத்தாலும் கூட, மேலும் கூடுதலாக பாமோலின் போன்று கொடுத்தாலும் கூட, ஒவ்வொரு லிட்டராகக்கூடினாலும் அது இந்த தமிழகத் திற்குச் செய்கிற நன்மை என்று நான் எடுத்துக் கொள்வேனே தவிர, போட்டி போட்டுக் கொண்டு, இன்னமும் கொடுத்தால் தான் வாங்க வேண்டும்; இல்லாவிட்டால் வாங்க மாட்டேன், இங்கே விலை அதிகமானாலும் சரி, என்று சொல்ல மாட்டேன். எவ்வளவு கொடுத்தாலும் அவை மக்களுக்கு போய் கிடைக்க வேண்டும். இதற்காக நாங்கள் ஒரு காரியம்செய்தோம். அரிசி வெளியிலேயிருந்து கொண்டு வருபவர்களை தடுக்க வேண் டாம் என்று ஒரு உத்தரவு போட்டோம். அது கூடாது தான்; ஆனால் அதைப் போடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி யில்லை. நாங்கள் போய் வாங்கவே முடியவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமிருந்து தான் வாங்கவேண்டும் என்று நாம் உத்தரவு போட்டது தான் மிச்சமே தவிர எங்கேயும் கிடைக் வில்லை. அதற்கு பிறகு தலைமைச் செயலாளர் திரவியம் இருந்த போதும், இப்போது இருக்கிற தலைமைச்செயலாளர் தலைமையி லும் குழுவை அமைத்து அவர்கள் பேசி முடிவெடுத்து, அதை வாங்க வேண்டுமென்று தீர்மானம் செய்து, இதற்கு எத்தனைக் கோடி ரூபாய் தமிழக அரசிற்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதை நீங்கள் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். உங்களுக்கு தெரியாத தல்ல; ஆனாலும் அவ்வளவு பெரிய வறட்சியில், தண்ணீர் கிடை யாது; குடிதண்ணீர் பம்புகள் வைக்க வேண்டும்; தண்ணீர் கிடை வெட்ட வேண்டும்; வெளியேயிருந்து தண்ணீர் கொண்டு வர கிணறுகள் வேண்டுமென்றால் அதைச் செய்ய வேண்டும்; லாரிகளில் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்க வேண்டும்; தமிழகத்தில் முதல் பணி தண்ணீர் கொடுக்கிற பணி என்று திட்டம் போட்டு மற்ற வேலை களை நிறுத்தாமல் இதை நடத்தியிருக்கிறோம். இயற்கை ஒத்து ழைத்ததன் விளைவாக மக்களுக்கு நிம்மதி கிடைத்திருக்கிறதென் றால் அந்த இடைக் காலத்தில் மக்கள் எவ்வளவு கஷ்டப்படு கிறார்களோ, அதைவிட நாங்கள் பொறுப்பிலே இருப்பவர்கள்

[1983 நவம்பர் 15 (டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க முடியும் என்பதை கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். எங்கே 20 கிலோ? கேட்டு விடலாம், வீட்டிலே 60 கிலோ இருந்தால் 20 கிலோ கொடுக்கலாம். பொது மக்களுக்கு சாப்பாட்டிற்கு வழியில்லை என்கிற நிலைமையில் நாங்கள் கிலோ, 1 கிலோ கொடுத்தாலும், 85 ஆயிரம் பேருக்கு சத்துணவுப் போட்டாலும், அதை நிறுத்தாமல் நாங்கள் தொடர்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்தால் இந்தக் குற்றச்சாட்டுக் களை எல்லாம் நீங்கள் சுமத்த மாட்டீர்கள். இது பெரிய குற்றச் சாட்டு அல்ல; துணிந்து நமது அதிகாரிகள் செய்த நல்லகாரியம்; அவர்களது திறமை இதிலே மிளிர்கிறது என்பதை ஒவ்வொரு வரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்த அரசு வந்தபிறகு எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்தது என்று கேட்கிறார்கள். நான் முன்பு ஒரு கணக்கைச் சொன்னேன். உணவிற்கு வேலைத் திட்டம், வேலைக்கு உணவு என்று இரண்டு பெயர்களை வைத்து நடத்தப்பட்டதே. அந்த சமயத்தில் எத்தனை லட்சம் பேர்கள் வேலை பெற்று தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றினார்கள் என்பதையெல்லாம் புள்ளி விவரங்களோடு சொல்லியிருக்கிறேன். இங்கே குறிப்புப் புத்தகத் தில் இருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்ததைப் பற்றி, மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததைப் பற்றி எந்தெந்த வகைகளில் எத்தனை பேர்களுக்கு என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கி றேன்.

தயவு செய்து அதை மாமன்ற உறுப்பினர்கள் குறித்துக் கொள் வது நல்லது. இந்தப் புள்ளி விவரம் தவறு என்று யாராவது சொன்னால், நிரூபித்தால் இதைக் கொடுத்த அதிகாரியை உட னடியாக டிஸ்மிஸ் செய்வேன் என்ற வகையில் சொல்லிக்கொண்டு இந்தக் குறிப்பை நான் வாசிக்கிறேன்.

1977முதல் 1983வரை துவங்கப்பட்ட நெசவாளர்கள் கூட் டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 3,95,802 பேர்கள்.

இப்படி நாங்கள் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வில்லையா? நெசவாளர்களுக்கு உதவவில்லையா? நாங் கள் என்ன சொன்னோம்? வேலைவாய்ப்புக்களை அதிகரிப்போம், வேலைவாய்ப்புக்களை உருவாக்குவோம் என்று. 1977 முதல் இந்த நிலைமையிருக்கிறது என்பதை நான் சொல்கிறேன்.

பாரதி கூட்டுறவு நூற்பாலை மூலம் 400 பேர்; விசைத்தறி மூலம் 400 பேர். கூடுதல் வேலைவாய்ப்பு 800. கூட்டுறவு நூற் பாலைகளின் மூலம் 10,128. கோவாப்டெக்ஸ் மூலம் 3,200

(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்) [1983 நவம்பர் 15

கிராமத் தொழில் வாரியம் மூலம் 1981-82இல் உருவான கூடுதல் வேலை வாய்ப்பு 33,417.

நீலகிரி தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 39,000.

தீக்குச்சித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 47,900 பேர்.

ஜவ்வரிசித் தொழில் மூலம் கிராம மக்கள் பயன் அடைந்தது 25,000 பேர்.

சேலம், தர்மபுரி, தென்னார்க்காடு, குமரி மாவட்ட மக்கள் அதில் பயன் பெற்றிருக்கிறார்கள்.

மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் 3,05,666 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

பட்டுத் தொழில் மூலம் 1977-இலேயிருந்து 83 வரை—1—4—83 வரை—2,75,710 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

1977 முதல் 82 வரை துவக்கப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 636. அதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்ற மக்கள் 1,68,000 பேர்கள்.

1977 முதல் 81 வரை சான்றிதழ் வழங்கப்பட்ட சிறுதொழில்கள் 30,815. அதன்மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 3,61,000 பேர்கள்.

போக்குவரத்துக் கழகங்களில் 1978 முதல் 82 வரை வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 21,424 பேர்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழ் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி பெற்றவர்கள் 80,81,82 வரை 1,29,578 பேர்கள். தற்போது பயிற்சியில் இருப்பவர்கள் 16,703.

கடந்த ஆறாண்டுகளில் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 2,92,794 பேர்கள்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் 1,77,379 பேர்கள்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வேலை வாய்ப்பு தவணை முறை கொள்முதல் திட்டம் மூலம் 22,500 பேர்கள்.

1983 நவம்பர் 15] (டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்)

மனை வழங்கும் திட்டத்தின் மூலம் 19,670 பேர்கள்.

சிறு தொழில் நிலையங்களில் 19,640.

வேலைவாய்ப்பற்ற படித்தவர்களுக்கு பத்து சதவிகித நிதி உதவி மூலம் 11,680.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் மூலம் 63,298 பேர்கள்.

இதற்கிடையே நாங்கள் துவக்கிய தொழில்கள் 843. கிடைத்த வேலைவாய்ப்பு 31,645 பேர்கள்.

1977-83 வரையில் நிரந்தர சான்றிதழ்கள் வழங்கப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை 36,645. இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 4,40,000 பேர்கள்.

1977-83 வரையில் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 702.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

இதன்மூலம் வேலை வாய்ப்பு 2,05,000 பேர்களுக்கு என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தோராயமாகக் கணக்கிட்டால் ஏறத்தாழ 31,32,925 பேர்கள் இந்த ஆட்சி வந்த பிறகு வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

இந்தக் கணக்கிலே, தன்னிறைவுத் திட்டத்திலே ஆங்காங்கே காண்ட்ராக்டர்கள் மூலம் வேலை செய்திருப்பார்களே அவர்களுடைய கணக்கு சேர்க்கப்படவில்லை. இந்த நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று ஜனதா ஆட்சி இருந்தபோது உணவுக்கு வேலைத் திட்டம் கொண்டு வந்தார்களே அப்பொது ஏறத்தாழ 20 இலட்சம்; 21 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது என்பதைத் தயவு செய்து மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்போது அது வேறு பெயரில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிவாரணப் பணியில் எத்தனை பேர்களுக்கு புதிய வேலை கிடைத்தது என்பது தெரியும். இல்லையானால், அவர்கள் அந்தப் பணமும் பெறாமல் இருந்தால் அவர்கள் நிச்சயமாக எப்போதோ இந்த நாட்டில் உருவமே இல்லை என்ற நிலைமைக்கு ஆளாகி இருப்பார்கள். எனவே, வறட்சி நிவாரணப் பணியில் அவர்களுக்குக் கிடைத்த வேலைவாய்ப்பால் அவர்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்

[டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

கிறேன். இந்த 31 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்றால் 31 இலட்சம் குடும்பங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் சொல்கிறீர்கள் 'எல்லா தரப்பினரும் உங்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள், ஆகவே, தான் நாங்களும் நம்பிக்கையை இழந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம்' என்று. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் திட்டத்தை இப்போதுதான் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஒரு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்றால் 31 இலட்சம் குடும்பத்தினரும் ஒருவேளை உணவையாவது சாப்பிடுவதற்காகவாவது அந்தப் பணம் உதவி இருக்கின்றது என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதை நான் குறிப்பிடுவதோடு 31—12—1982 நிலவரப்படி மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் பற்றி நான் சொல்லியாக வேண்டும். எத்தனை கிராமங்கள் என்றால் 15,627. கிற்றூர்கள் 17,485. கிராமங்களில் நாங்கள் யாருக்கும் உதவி செய்யவில்லை. எதையுமேசெய்யவில்லைஎன்றெல்லாம் சொல்கிறார்களே, ஆனால் கிராம மக்கள் அப்படி சொல்லமாட்டார்கள். கண்ணால் பார்த்தவர்கள் எப்படி இல்லை என்பார்கள்? ஆனால் ஒன்று சொல்கிறேன். இன்னும் 108 கிராமங்களுக்கும் 353 கிற்றூர்களுக்கும்தான் மின்வசதி செய்து தரவேண்டி இருக்கிறது. மலைப்பகுதியில் அவை அமைந்து உள்ளதால் காலதாமதம் ஏற்படுகின்றது. ஏனெனில் அந்தத் தொடர்பைக் கொண்டு செல்வதற்குரிய வசதிகள் குறைவு.

இங்கே மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் அவருக்கே உரிய பாணியில் ஆடுகள் செத்துப்போய்விட்டன; ஆடுகள் கொடுத்தார்கள், இப்போது ஆடுகளே, இல்லை; இப்போது கழுதைகளைக் கொடுக்கிறார்கள், அதுவும் பாதி மானியத்தில் என்கிறார்கள். ஆனால் மனிதனால் நடக்க முடியாத இடத்தில் மேடு பள்ளம் உள்ள இடத்தில் சுமையைத் தூக்கிக்கொண்டு செல்வதற்குக் கழுதைகள் தான் பயன்படுத்தப்படுகின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எத்தனை ஆடுகள் உயிரோடு இருக்கின்றன; எத்தனை மறைந்து போய் விட்டன என்ற கணக்கை பின்னால் நான் சொல்கிறேன்.

31—12—82 முடிய 51,481 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

31—12—82 முடிய 5,03,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. இங்கே மின் திட்டங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, நான் அதைபற்றி குறிப்பிடவில்லை.

1983 நவம்பர் 15] [டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்]

மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் பேசியதற்காக நான் அதை குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் அந்த குறிப்புகளை நான் எடுத்து வைக்கத் தயாராக இருக்கிறேன்.

இன்னும் புள்ளிவிவரங்களைப் படிப்பதற்கு முன் கொஞ்சம் அரசியல் பேசலாம் என்று நான் கருதுகிறேன். அரசியல் என்பதை அரசு, இயல் என்று நாம் பிரித்துப் பார்க்கவேண்டும். அது ஒரு கலை. இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, என்றெல்லாம் சொல்கிறார்களே அதுபோல் இந்த அரசு இயல் என்பதும் ஒரு கலை. அந்தக் கலையை மிகவும் எச்சரிக்கையாக நாம் கையாளவேண்டி இருக்கின்றது. சிலர் ஏனோ அவசரப்பட்டு சில உவமைகளை எல்லாம் கூறுகிறார்கள். இன்னும் எனது நண்பராக இருக்கும் திரு. நெடுமாறன் அவர்கள் 'இரட்டைக் குதிரையில் சவாரி செய்யாதீர்கள், அது ஆபத்தானது' என்றார்கள். எவ் வரையில் நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களைத்தான் செய்துக்கொண்டிருக்கிறேன் – இதை எல்லாம் அவர் கேட்டுக் கொண்டிருப்பார் என்று நான் நினைக்கிறேன் (குறுக்கீடு) அவர் இல்லையா ? (குறுக்கீடு) –மனதைக் குதிரை என்று சொல்லலாம், குரங்கு என்று சொல்வதுபோல நான் அண்ணாவின் கொள்கையான பகுத்தறிவை ஒரு குதிரையாகவும், என் மனச்சாட்சியை ஒரு குதிரையாகவும் வைத்து கொண்டு தான் என்னுடைய கடமைகளைச் செய்கிறேன் ' என்பதைத் தயவுசெய்து அவர் நம்பவேண்டும். அவர் பகுத்தறிவுவாதி என்று எனக்குத் தெரியும் ஒரு வகையிலே என்னைப்போல. ஆகவே, அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இரண்டு படகிலே போகக்கூடாது என்று சொன்னார்கள். அவர் ஒரு படகிலே போவதுதான் தவறு (சிரிப்பு) இரண்டு படகில் போவதைப் பற்றி அனுபவம் இல்லை, சொல்லியிருக்க மாட்டார்கள். இரண்டு படகுகளையும் ஒன்றாக இணைத்து, அதைச் செய்து விடுவார்களானால் அதுவும் சீக்கிரம் சாயாமல் பாதுகாப்பாக இருக்கும். அதை நான் சொல்லும்போது அவர்களுக்குக் கொஞ்சம் கோபம் வந்து இருக்கிறது. அதனால்தான் எதையெல்லாம் சொல்ல வேண்டாமோ, அவர் வாயிலிருந்து வரக்கூடாத வார்த்தைகள் எல்லாம் நான் கேட்டேன். அதனால் தான் சிரித்துக்கொண்டே இருந்தேன். திரு. நெடுமாறன் அவர்கள் தான் பேசுகிறார்களா ? அல்லது வேறு யாராவது அவர் உருவில் வந்து பேசுகிறார்களா என்று கூட நான் ஐயுற்றேன். (சிரிப்பு) ஏன் இப்படி சொல்கிறேன் என்றால் அவர் பல பிரச்சினைகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் நாம் புள்ளி விவரம் கொடுக்க வேண்டும். அதேசமயத்தில் நான் என்னுடைய கடமையில் எடுத்துச் சொல்லவேண்டும்.

[டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

இலங்கைப் பிரச்சினை, மிகப் பெரிய பிரச்சினை. ஒரு பிரச்சினை வரும்போதுதான் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'நீதானமாக இப்போது நாம் செய்கிற காரியங்களின் விளைவாக என்ன நேரும், ஏற்படும் என்பதை துணிந்து எண்ணிப் பார்த்த பிறகு, வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்து, அந்தப் பாதையில் நீ செல் ' என்று அவருடைய தமிழ் பாணியில் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அவ்வளவு தான் தமிழ் தெரியும். கலைஞரைப்போல் இலக்கியேத்தோடு நான் எல்லாவற்றையும் பாராட்டக்கூடிய அளவிற்கு அவர் போல் எனக்கு தமிழ் தெரியாது. ஆகையால் நான் இப்படித்தான் பேச முடியும். ஆகவே, ஒன்றை நான் சொல்லவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் யார் தீர்ப்பு சொல்வது என்பது பெரிய கஷ்டம். யார் ஒரு முடிவு எடுப்பது என்பதும் சாதாரண விஷயம் அல்ல. தமிழ்நாடு பிரச்சினை பற்றி தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவு எடுக்கவேண்டுமே தவிர, அங்கே இருக்கின்ற, வங்காளத்திலே இருக்கின்ற, ஆந்திராவிலே இருக்கின்ற அல்லது கருநாடகத்திலே இருக்கின்ற தமிழர்கள் முடிவு எடுக்க முடியாது. அது சரியாக வராது. தமிழ் நாட்டிலே இருக்கின்ற தமிழர்கள் ஒன்று கூடி, எங்களுக்கு இது தான் சரி, எங்களுக்கு இப்படித்தான் எங்களுடைய ஆட்சி அல்லது வாய்ப்பு அல்லது தொழில் எதுவாக இருந்தாலும் அவர்கள் முடிவு எடுத்தால்தான் அது சரியான முடிவாக இருக்குமே தவிர, அவர்களில் யார் பிரிந்து இருக்கிறார்களோ அவர்களை வைத்துக்கொண்டு, அவர்களைப் பயன்படுத்தி, கருநாடகத்திலே இருந்து வந்த தமிழர்கள் ஆந்திராவில் இருக்கும் தமிழர்கள் சொன்னால் அது நியாயமானதாக இருக்கும் என்று நாம் கருதவில்லை. அதேபோல் ஆந்திராவிலே இருக்கின்ற தமிழர்கள் எப்படி இருக்கவேண்டும், அதேபோல் கோலாரில் இருக்கும் தமிழர்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்கவேண்டும் என்று சொல்லாமே தவிர, இப்படித்தான் நீங்கள் அமைப்பு முறை வைத்து இருக்கவேண்டும் என்று நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்படி சொல்லாதவன் தமிழனாக இருக்க முடியுமா ?

தமிழ் உணர்ச்சி இல்லை, தமிழ் உணர்வு இல்லை என்று கூறுகிறார்கள், ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். உணர்ச்சி என்பது வேறு. உணர்வு என்பது வேறு. எனக்குத் தெரிந்த வரையில், எனக்குக் கொஞ்சம் தான் தமிழ் எழுதப் படிக்கத் தெரியுமே தவிர, நான் இலக்கிய வித்தகன் அல்ல. ஆகவே, இப்படித்தான் சொல்ல முடியும். கை மறத்துப் போய் இருக்கிறதா இல்லையா என்று அறிவதற்கு ஊசியைக் குத்தினால், அவன் எந்தவிதமான உணர்ச்சிகளையும் வெளியே காட்டாமல் பேசாமல் பார்த்துக்கொண்டு இருந்தால், அங்கே மறத்துப்போய் விட்டது என்று பொருள். அல்லது, உடனே அவன் ஆபத்து, என்னை ஊசியால் குத்துகிறார்கள் என்று கூறினால் அவன்

[டாக்டர். எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

உணர்ச்சியோடு இருக்கிறான் என்று பொருள். அது உணர்ச்சி. உணர்வு என்பது கை, கால்கள் மறத்துப் போனாலும் கூட உள்ளத்திலே இருக்கின்ற உணர்வு அப்படியே இருக்கும். அது மறத்துப் போகாது. அந்த உணர்வு மறத்துப் போகவேண்டுமானால், அவனை அந்த இடத்திற்கு ஆட்கள் கொண்டு செல்ல வேண்டும். நான் கேட்கிறேன், எனக்கு உணர்ச்சியில்லையா, உணர்வு இல்லையா ? இந்த அரசைத் தவிர இந்த தமிழக அரசைத் தவிர இந்த இலங்கைப் பிரச்சினையில் இவ்வளவு தூரம் முன் வந்து காரியங்களைச் செய்தது யார் என்று கேட்க ஆசைப்படுகிறேன். எங்கள் மீது குறை பேசுகிறார்கள், குறை சொல்கிறார்கள், பழி சுமத்துகிறார்கள். அவர்கள் சொல்லட்டும். எங்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது.

(முற்பகல் 11—40)

நான் ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாக ஒரு கருத்தைச் சொல்ல முடிகிறதா? இது என்னுடைய தாழ்மையான கேள்வி. தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை, அறிந்துகொள்ள முயற்சிக்கின்றவனுடைய கேள்வி. நான் இன்னமும் சொல்கிறேன். அதில் பல பிரிவினர் இருக்கிறார்கள். விடுதலை வேண்டுமென்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்கிற வர்கள் இருக்கிறார்கள். பெடரல் சிஸ்டம் வேண்டுமென்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எப்படியும் இலங்கை அரசின் கீழ் அடிமையாக இருக்க அவர்கள் விரும்பவில்லை என்ற அடிப்படைக் கொள்கையில் இந்தக் கருத்துக்கள் எல்லாம் வெளியே வருகின்றன.

அப்போது நாம் என்ன செய்ய வேண்டும் ? அவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு புகலிடம் தமிழ்நாடு தான். அங்கே உயிரோடு இருக்க முடியாது. அங்கே அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இங்கே தான் அவர்களுக்கு பாதுகாப்பு என்றால் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய நாம் அவர்களுக்கு என்ன வழி சொல்ல வேண்டும் ? நீங்கள் ஒற்றுமையாக இருங்கள் என்று சொல்ல வேண்டும், நீங்கள் ஒன்று சேர்ந்து பாடுபடுங்கள் என்று சொல்ல வேண்டும். நீங்கள் ஒன்றுசேர்ந்து முடிவு செய்யுங்கள் என்று சொல்லவேண்டும். இல்லாவிட்டால் தங்களுக்குச் சாதகமாக ஒரு கட்சியோ, நண்பர்களோ, தனி மனிதரோ, இருந்தால் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால் அது இந்த நாட்டுக்கும் நல்லதல்ல ; தமிழர்களுக்கும் நல்லதல்ல.

நான் இன்னும் துணிந்து கேட்கிறேன். திரு. அமிர்தலிங்கம் அவர்களை என்னைவிட அதிகமாகப் போற்றினார்கள் : என்னை விட அதிகமாக நெருக்கம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எல்லாம் அவர்மீது குற்றம் சொல்கிறார்கள்

[டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

காரணம் இவர்கள் கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற சந்தேகம். இப்போது அந்தக் குற்றத்தை அவர்மீதே சுமத்துகிறார்கள். இன்னும் கூடியவரைவில் என்னவெல்லாம் அவரைப் பற்றிச் சொல்வார்களோ எனக்குத் தெரியாது. இந்தப் பிரிவை நாம் செய்தால் அவர்கள் எங்கே போவார்கள் ?

இரண்டு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொண்டார்கள். நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. ஏதோ சொல்கிறார்களே தமிழன், தமிழன், தமிழன் என்று ? அங்கிருந்து பாதுகாப்புக்காக வந்த இடத்தில் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்ளுகின்ற நிலைமையை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ? அவர்கள் ஒற்றுமையாக இருந்து, நாம் பாதுகாக்கின்ற முறையில் அவர்கள் செயல்களைச் செயலாக்கி, செயல்படுத்திக்கொண்டு, செயலாக்கத்தை உருவாக்கிக் கொண்டு, அவற்றைத் தேடும் வகையில் இப்படியெல்லாம் வாழவேண்டும், வளரவேண்டும், என்ற நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவருவதை விட்டுவிட்டு, அவர்களிடையே இருக்கின்ற பிரிவைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு பிரிவினரை தன் கையில் வைத்துக்கொண்டு இதைச் சொல்லுங்கள் இப்படிச் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். இன்னொரு பிரிவினர் எங்கே போவது, எப்படி போவது என்று தெரியாமல் தவிப்பதை நான் இங்கே சொல்லும்போது வெளியே இருப்பவர்களும் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொண்டவர்களும் யாரும் உனக்கு தமிழ் உணர்வே இல்லை என்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஒருவரைக் கைது செய்து, அவர்மீது வழக்குத் தொடர்ந்து, வெளியே வரவேண்டியிருந்தது. என்ன அவசியம் ? இங்கே நடுவீதியிலே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டால் அவரை நாம் விட்டுவிட முடியுமா ? அவர்மீது நாம் நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியுமா ?

இன்னொன்றை கேட்கிறேன். ஒரு மடாதிபதி—மதுரையில் இருக்கிற மடத்தின் அதிபதி. அந்த மடாதிபதி சொல்கிறார், அங்கே பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் கத்தி வைத்து கொண்டிருந்தால் நான் துப்பாக்கி ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது என்று. அனுமதி வாங்கி வைத்துக் கொள்ளட்டும். யார் வேண்டாம் என்று சொன்னது ? அதிலே ஒரு சட்டம், விதி இருக்கிறது. பொதுக் கூட்டங்களுக்குப் போகிறபோது கையில் துப்பாக்கி வைத்துக் கொள்ளக் கூடாது என்று இருப்பதாக எனக்கு ஞாபகம். பொதுமக்களிடம் துப்பாக்கியைக் காட்டி, 'சுட்டுவிடுவேன்' என்று சுடக்கூடாது என்றால் என்ன அர்த்தம் ? எந்தத் தமிழனை எதித்த தமிழன் சுடுவது ? இலங்கையிலே தமிழன் துன்பப்படுகிறான். அவர்களுக்கு இடையே இருக்கின்ற எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கே தமிழன் சண்டை போடுவதா ?

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

திரு. நெடுமாறன் அவர்களுக்கு பெரிய கோபம் என் மேல். அவர் படகிலே இலங்கைத் தீவுக்குப் படை எடுத்துச் செல்ல முயன்றாரே அப்போது நான் கைது செய்யவில்லை என்ற கோபம் அவருக்கு நிறைய இருக்கிறது. இப்போதே சொல்கிறார்கள். எனக்குத் தமிழ் உணர்வு இல்லை என்று. என்னைத் தமிழனே இல்லை என்று சொல்லி விட்டார்கள். சொந்தமாக இருந்தபோது தமிழனாக இருந்தேன். வெளியே அனுப்பிய பிறகு நான் தமிழன் இல்லை என்று ஆகிவிட்டேன். அது பற்றி கவலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பிரிந்து போய் விட்டார்கள் என்று. பிரிந்து போகவில்லை, எம். ஜி. ராமச்சந்திரனை வெளியே அனுப்பினீர்கள். (குறுக்கீடு) நீங்களும் வந்து விட வேண்டியது தானே ? (கைத்தட்டல், ஆரவாரம்).

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால்—இது அரசியல் தான் மன்னிக்கவும்—திராவிட முன்னேற்றக்கழக பொதுக் குழுவில் ஒரு குழு அமைத்து அவர்கள் விசாரிக்க வேண்டும் என்பது. அவர்கள் யார் யார் தவறு செய்தார்கள் என்று சொன்னால் அவர்களைக் கட்சியில் இருந்து நீக்க வேண்டும். வெளியே இருக்கிறவர்கள் எல்லாம் பழி சுமத்துகிறார்கள். அது இல்லை என்று நிரூபிப்பதற்கு யார் மீது குற்றம் இல்லையோ அவர்களை மேடையில் நிறுத்தி மாலை போட்டு பாராட்ட வேண்டும். என்னுடைய பேச்சின் முழு வாசகத்தின் குறிப்பு. அதற்காக கட்சிக் கட்டுப்பாட்டை மீறினேன் என்று வெளியே சொல்லும் அளவிற்கு—அதுவும் எப்படி 15 நாட்களுக்குள் என்னுடைய பதில் வேண்டும் என்பது கடிதம். 4—5 நாட்களுக்குள்ளேயே வெளியே தள்ளி விட்டார்கள். மூன்று தான்கு நாட்கள் பொதுக்குழு நடந்தது. உடனே பொதுக் கூட்டம். வண்டு துளைத்து விட்டது. அந்த மாங்கனியைத் தூக்கி எறிந்து விட்டேன். எவ்வளவு சாதாரணமாக தூக்கி எறிந்து விட்டார்கள் ! பரவாயில்லை. ஆனால், வண்டு துளைத்த மாங்கனி என்றைக்கும் நன்றாக இருக்கும். அது மக்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அண்ணாவின் இதயத்திலே இருந்த கனியல்லவா ? (கைத்தட்டல், ஆரவாரம்), ஏற்றுக் கொண்டார்கள். அது தான் நியாயம். நான் சொல்வது நீங்கள் எல்லாம் இங்கே வந்து விடுங்கள் என்று கோரிக்கை விடுவதற்காக என்ற தோரணையிலே நான் கேட்டுக் கொள்ளவில்லை. குற்றம் சொன்னவர்கள் வெளியே அனுப்பியவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்றால் அப்படி அவர்களே அதை உணர்ந்து விட்டார்கள் என்றால் நீங்களும் உணரவேண்டியது தானே என்று நான் சொல்கிறேனே தவிர அதில் குற்றம் ஒன்றும் இல்லை. நான் அழைப்பதாக அர்த்தம் ஆகாது. அதை இங்கே ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் ஆகாது. அதைப் பற்றி வரையறைப்படி தெரிவோம்.

[டாக்டர் எம். ஜி. இராமசந்திரன்] [1983 நவம்பர் 15

இதைச்சொல்லும்போது, நெடுமாறன் அவர்கள் கைது செய்யட்டும், என்னை வேண்டுமானால் கைது செய்யட்டும் என்று சொல்லிப் பார்த்தார்கள். இப்போதே என்ன சொல்கிறார்கள். படகுகளையெல்லாம் இல்லாமல் செய்து விட்டார் ராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்து. ஆகவே என்னால் போக முடியவில்லை. எவ்வளவு பெரிய துரோகம் என்கிறார்கள். ஒரு நெடுமாறனை நாம் இழந்து விட்டால் இன்னொரு நெடுமாறனை நாம் உற்பத்தி செய்ய முடியுமா? இதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? எத்தனையோ காலம் தியாகம் செய்தபிறகு இந்திரா காந்தி அம்மையாருக்கு வந்த ஆபத்தை தான் தாங்கிக் கொள்கிற ஆற்றல் பெற்றிருந்த பெற்றிருக்கிற அந்த நெடுமாறன் அவர்கள் அங்கே போய், இடையிலே யாராவது துப்பாக்கியால் சுட்டு—அவரிடம் துப் பாக்கி இருக்கிறதா, அல்லது தடுப்புக் கருவி இருக்கிறதா ஒன்றும் இல்லை, மனம் தான் துணிவோடு இருக்கிறது. அவர் அங்கே போய் ஆபத்து ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது ஆகவே படகுகள் இல்லாமல் செய்தோம். படகுகள் இருந் தால் தான் போக முடியும். அதிலும் நீந்தத் தெரியாது அவருக்கு. ஆகவே படகில் தான் போக வேண்டும். அங்கே இருக்கக்கூடாது என்று செய்தோம். யாரோ ஒருவர் ஏமாந்து வைத்து விட்டார். அதிலே போய் ஏறிவிட்டார்கள். (சிரிப்பு) சிரிப்போடு சொன்னாலும், வேதனையோடு சொல்கி றேன். எனக்குத் தகவல் வரும். இந்த இடத்தில் பேசப் போகிறாராம், இலங்கை பற்றி. அங்கே கூட்டம் சேரும். அங்கே இன்னும் கொஞ்சம் கூட்டம் மாகலாம் போவதற்கு. பரவாயில்லை. ஆட்கள் அதிக மக்கள் பெறட்டும். அவர் பேசுவதை அந்த உணர்வை கள். அந்த மடாதிபதி ருத்திராட்ச மாலையைத் தூக்கி எறிந்து விட்டாராம். உடனே அங்கே போய் சண்டை போடுவதற்கா? அந்த உணர்ச்சியை கட்டுப்படுத்துவது தான் உணர்வு. (குறுக்கீடு) நான் அதற்குத்தான் வருகிறேன். அந்த உணர்ச்சி அவ்வப்போது வந்து போய்விடும். உணர்வு தன் நினைவு இருக்கும் வரை இருக்கும். அந்த உணர்வு இருக்க வேண்டும். நாம் செய்வது என்ன காரியம்? அது சரியா தவறா? என்ன விளைவு? நான் எண்ணினேன். நான் போய் பிரச்சாரம் செய்ய முடியாது. நெடுமாறன் செய்கிறார். ஆட் கள் வருகிறார்கள். தினமும் பத்திரிகையில் வருகிறது. அது வெளி வரட்டும். அது அந்த நாட்டுக்கு நல்லதாக அமையட்டும். அந்த உணர்வுகள் பெருகுமானால் பெருகட்டும் என்பதற்காக அவரைக் கைது செய்யாமல் விட்டு விட்டேன். அதற்கு என் மீது கோபம். ஏதோதோ சொல்கிறார்கள். (குறுக்கீடு). பல ஹீரோக்களிலே அவர் ஒருத்தர். ஒவ்வொரு வகையிலே ஒவ்வொரு ஹீரோக்கள் இருக்கிறார்கள். அது மாதிரி அவரும் ஒரு ஹீரோ. அதை நான் மறுக்கவில்லை. என்ன

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

I accept it. He is one of the Heroes.

படத்திலேயும் ஒரே ஹீரோவா வருகிறார்கள்? மாறி மாறித் தான் ஆட்கள் வருகின்றார்கள். அதேமாதிரி ஒவ்வொரு போராட்டம், பிரச்சினையிலே ஒவ்வொரு ஹீரோ வரலாம். இதிலே குமரி அனந்தன் போய்ச் சேர்ந்து கொண்டார். நெடுமாறன் கேட்டார், போலீஸ் அதிகாரிகளிடம். அவரை. கைது செய்தீர்களே? என்னை ஏன் கைது செய்யக்கூடாது. உத்தரவில்லை. உங்கள் முயற்சி நல்ல முயற்சி என்கிறீர்கள், எற்றாலும் நீங்கள் போக வேண்டாம்; முடியாது என்றால நீங்கள் போங்கள். இதுதான் சொல்ல முடியும். அவர்கள் படகுகளிலே கவிழ்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் பாதுகாப்பு அளித் தார்கள். இதற்காக என் மீது ஒரு குற்றச்சாட்டா?

(முற்பகல் 11—50.)

தமிழ் உணர்ச்சியே இல்லை; தமிழ் உணர்வே இல்லை, தமிழனே இல்லை என்றால் எவ்வளவு பெரிய நியாயம் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த அரசியல் எங்கிருந்து வருகிறது? சில நண்பர்களை நாம் பெறுகிறோம் அல்லது நம்மை நம்பி வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கி றோம். அவர்கள் வசதியோடும் வருகிறார்கள். ஆயுதத் தோடும் வருகிறார்கள். அல்லது அன்போடும் வருகிறார்கள். கொஞ்சம் வசதியோடு வந்தவர்கள் அல்லது ஆயுதத்தோடு வந்தவர்கள் உண்மையிலேயே தொண்டாற்ற விரும்பி வந்த வர்கள், நமக்குச் சொந்தமாகி விட்டால், நம்மால் அவர்களை விட்டுக் கொடுக்க முடியாது. அந்த வகையில் நெடுமாறன் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு நெருங்கிய ஈழத்தழிழர்கள் இருக்கிறார்கள். அவர்களாக அந்தச் சொல்லைப் பயன்படுத்தினாராலால் நான் பாராட்டுவேன். ஆனால் அதேநேரத்தில் அவர்களை ஒன்றுபடுத்தமுடியவில் லையே, அந்த ஈழத்தில் இருந்து வந்திருக்கிற தமிழக மக் களை விடுதலை வேண்டும் என்ற வேட்கையிலே இருப்பவர் களை ஒன்றுபடுத்த முடிந்திருந்தால் நான் அவர்கள் தான் ஹீரோ என்று கூறியிருப்பேன். இப்போது ஒன் ஆப் தி ஹீரோஸ் என்று சொல்வதற்குக் காரணம் இதுதான். சாதா ரண ஹீரோக்கள் எத்தனையோ ஹீரோக்கள் இருக்கலாம். சாதாரண ஹீரோக்களில் இவர் ஒரு ஹீரோ. முதலிலே எவ்வளவு வசதியாக இருந்தார். இவருக்கு என்று கூட்டம். இவருக்கு என்று ஒரு தலைமை இருந்தது. இவர் தலைமை யிலே இருந்த கட்சிக் கூட்டம் போய், இவர் இன்னொரு கட்சித் தலைமையிலே போயிருக்கிறார். இது உயர்வா?

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

தாழ்வா ? வளர்ச்சியா ? அல்லது குறைவா ? இந்த எண் ணத்தை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், என்னை அவ்வளவு இழிவாகப் பேசி இருக்கிறார்கள். வெண்சாமரம் வீசுகிறேனாம். நாடகத்திலே, படத்திலே நான் விரிறியிருப் பேன். ஆனால் வெண்சாமரம் வீசுவது என்பதற்கு பல கோணத்திலே பார்க்க வேண்டும். யாருக்கு வெண்சாமரம் வீசலாம் ? ராஜாவுக்கு மந்திரி வீசமுடியாது. அதற்காக இருக்கும் • சேவகன் வீசலாம். நான் எந்த ராஜாவுக்கும் சேவகனாக இல்லை. (குறுக்கீடு) நான் எந்தப் புலவனோடும் தொடர்பு இல்லாமல் இருக்கிறேன். ஏன் என்றால் இப்போது இருக்கிற சந்தர்ப்பத்திலே நிறைய பேசுகிற புலவர்கள் இருக்கிறார்கள். அந்தப் புலவர்களோடு நானும் பேசினால் விடுதலைப் புலியாகிவிடுவேன். புலவர் கள் புரவலர்களாக இருக்க வேண்டும். இலக்கியத்திலே; தமிழில், ஆராய்ச்சியில். இதிலே இல்லை. அவர்கள் புரட்சியில் இருக்கிறார்கள். எனக்கு யாரோ புரட்சித் தலை வர் என்று வைத்துவிட்டார்கள். (சிரிப்பு, ஆரவாரம்), உண் மையில் திரு. நெடுமாறன் அவர்கள் முன்பு இருந்ததைப் போல் இருந்து அவர் தன்னைத்தானே இயக்குகின்ற அந்தச் சக்தியை இழக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அவருக்கு வெண்சாமரம் வீசுவேன். எந்த மந்திரிக்கும் அல்ல. அல்லது எந்தப் பெரிய அதிகாரிக்கும் அல்ல. எனக்கு மேலே இருக் கின்ற எந்தப் பதவியிலே இருந்தாலும் அவர்களுக்கு நான் வெண்சாமரம் வீசமுடியாது. அதை அண்ணா அவர்கள் கற்றுத்தரவில்லை. அதனால்தான் வேதனையோடு சொல்கி றேன். 1972-லே நான் வெளியே வந்தபோது எவ்வளவு வேதனைப்பட்டு இருப்பேன் என்பது எனக்குத் தெரியும். அப்படி அனுப்பப்பட்டேனே என்பதால், ஏன் என்றால், எத்தனை தேர்தல்களில், எத்தனை அவசரமானத் தேவை களில் நான் என்னை ஈடுபடுத்திக்கொண்டு இருப்பேன். அவர் களோடு இணைந்து ஒரு இலையில் சாப்பிட்டு இருப்பேன் என்பதை எண்ணும்போது அங்கேயிருந்து விரட்டப்பட்டேனே என்கிற வேதனை இன்னும் இருக்கிறது. ஆனால் சிலர் நினைக்கிறார்கள். திராவிட இயக்கத்தில் இருக்கின்ற நம்மை (குறுக்கீடு) அரசியல் பலிகடாக்களாக ஆக்கமுடியும் என்று யாராவது கருதினால், தயவுசெய்து சொல்கிறேன், தமிழகத் தில் மீண்டும் திராவிட . ஆட்சிதான் வரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேசையைத் தட்டல், ஆரவாரம்.)—

மேசையைத் தட்டாதீர்கள் அவர்களுக்கு கோபம் வரும். (சிரிப்பு) (குறுக்கீடு) அந்த உணர்ச்சி அல்ல. இது உணர்வு. நல்ல தைச் சொன்னாலும் அதையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று எண்ணுகிறார்கள். அல்லது என்னை எதிரியாக்கிவிட்

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

டால், உண்மையாகவே நான் நல்லதை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்பதைப் போலத்தான் இப்போது உணர்வு இருக்கிறது. அதை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். (குறுக்கீடு.) அவைக்குத்தான், தமிழக மக்களுக்குத்தான் சொல்கி றேன். என்னைத் தமிழன் இல்லை என்கிறார்களே, தமிழ் உணர்வு இல்லை என்று சொல்கிறார்களே, தமிழ் உணர்ச்சி இல்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்குச் சொல்கி றேன். நாங்கள் தான் திரும்பவும் ஆட்சிக்கு வருவோம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி.) இதை நான் சொல்கிற நேரத்தில், அகந்தையில் சொல்லவில்லை. மக்களை சந்திக் கின்ற முறையில் சொல்கிறேன். மக்களை தெரிந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். ஆகையினால் எங்கள் மீது நம் பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவது நல்லதுதான் என்றாலும் இதற்காவது உதவும். (குறுக்கீடு) இந்தப் பிரச் னையை எல்லாம் நெடுமாறன் பேசினார்கள். அதற்குப் பிறகுதான் உங்களுடையது வரும்.

உலகத் தமிழ் சங்கம் என்ன ஆயிற்று ? அங்கேயிருந்த 100-க் கணக்கான குடிசைகளை அழித்து விட்டீர்களே, அவர் களை எல்லாம் ஒரே நாளில் வெளியேற்றி விட்டீர்களே, இது அநியாயம் இல்லையா என்று கேட்டார்கள். மாண்புமிகு காளிமுத்து அவர்களும், பட்டுராஜன் அவர்களும்—மதுரை மேயர் மற்றும் அதிகாரிகளும் போய் பார்த்து, இந்த இடம் தான் பொறுத்தம், மதுரை நகரத்திற்குள் இருக்கிறது. இதில் அமைத்துவிட வேண்டும் என்றும், இதற்கு திட்டமிட வேண் டும் என்று நேரில பார்த்து, அவர்கள் சொன்ன இடத்திலே தான் அதை நாங்கள் நிறுவ இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வறட்சி நிவாரண வேலைகள் நடக்கிற நேரத்தில் இத்தகைய விழாக்கள் அங்கே கூடாது என்ற காரணத்தால் தான் தள்ளி வைத்தாமே தவிர, இந்த உலகத் தமிழ் சங்கம் எங்களுடைய ஆட்சியில் எப்படியும் வந்துதான் தீர வேண்டும், அது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் சரி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்களை அனுப்புகிறேன் என்று சொன்னீர்களே அனுப்பினீர்களா என்று கேட்டார்கள். கேள்வியை நேரிடை யாகக் கேட்டிருந்தால் இதே பதிலையே அப்போதும் சொல்லி யிருப்பேன். மொரீஷியஸ் தீவுக்கு தமிழ் ஆசிரியர்களை அனுப்பு கிறேன் என்று மொரீஷியஸ் பிரதமரிடம் நேரிலேயே சொன் னேன். ஆளுநரை வைத்துக் கொண்டு சொன்னேன். மைய அரசுக்கு எழுதிப் பெறலாம் என்று அவர்களும் சொன்னார்கள். ஆனால் பிறகு அங்கே தேர்தல் வந்து பிரச்சினை வேறாக

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

முடிந்தது. அதற்குப் பிறகு இன்னும் நாங்கள் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறோம். அமெரிக்காவுக்குக் கூட நாங்கள் அனுப்பப் போவதாகச் சொல்லியிருக்கிறோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஊட்டியிலே வண்ணப்பட தயாரிப்பிற்கான தொழிற் சாலை ஒன்றை கொண்டு வருவதற்கு உங்களால் முடியவில்லையே என்றார்கள். நான் பணிவோடு கூறுகிறேன். அந்த வண்ணப் படப்பிடிப்புக்கு கருவியாக இருக்கிற பிலிம் இருக்கிறதே அந்தப் படச் சுருள், அதை அங்கே உற்பத்தி செய்ய வேண்டும் என்பது குறித்து எப்பொழுது சொன்னேன் என்றால் ஊட்டியிலே இந்த பிலிம் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைக்கான திட்டத்தை இங்கே கொண்டு வந்து, இந்த அசெம்பிளியிலே நிறைவேற்றி மேலவைக்கு கொண்டு வந்தபோது பெரியவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இருந்தார்கள். நான் எம்.எல்.சி.-யாக இருந்த நேரம். என்னுடைய பேச்சில் அதைச் சொன்னேன். கூட்டுறவு முறையில் இணைப்புத் திட்டம் ஒன்றை இங்கே நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். வெளிநாடுகளில் வண்ணப் படங்கள் ஆரம்பித்து விட்டன. இதை நீங்கள் உற்பத்தி செய்து 10 15 ஆண்டு கழித்து வளருவதற்குள் அங்கே வண்ணப் படங்களின் சக்தி தான் உயர்ந்திருக்கும், மிகுதியாக இருக்கும். ஆகவே இது அந்த தொழிற்சாலைக்குட் பயன்படாது. நீங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என்று நான் சொன்னேன் எனக்குக் கிடைத்த தகவலின் படி. அதற்குப் பதில் இல்லை. இப்பொழுது கிடைக்கவில்லை என்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் அவரவர்கள் தங்களுடைய மாநிலத்திற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி திட்டமிட்டிருக்கிறார்கள். அதைச் செய்கிறார்கள். தமிழகத்திற்கு அப்படிச் செய்வதற்குரிய பிரதிநிதித்துவம் இல்லை. ஆனால் இருக்கிற பிரதிநிதியும் வேறு ஒரு இலாகாவில் இருப்பதன் மூலம் அவர்களை இதில் ஈடுபடச் செய்ய முடியவில்லை என் பதை நான் அறிந்த பின்பு சொல்கிறேன். ஆனாலும் வேறு வகையில் பல தொழிற்சாலைகள் ஊட்டியில் வர இருக்கின்றன என்ற செய்தி வந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதுமட்டுமல்ல. காவிரிப் பிரச்சினையை நான்காண்டு களாக முடிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார். இதே நெடுமாறன் அவர்கள் இதே மன்றத்தில என்ன என்னவோ பேசினார். காவிரி ஏன் வரவில்லை? அதை விட்டு விட்டார்கள்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

1983 நவம்பர் 15]

1974-லேயே தொடங்கியிருக்க வேண்டும். அதற்கு முன்னாலேயே பேசியிருக்க வேண்டுமென்று சொன்னவர் திரு. நெடுமாறன். நாங்கள் வந்த பிறகு பேசவில்லை என்பது மட்டுமல்ல அவர் சொன்ன குற்றச்சாட்டு முயற்சி எடுக்கவும் இல்லை என்பது. அதுமட்டுமல்ல திரு. குண்டுராவினுடைய தேர்தலுக்குப் போய் இதைச் சொல்லிவிட்டீர்களே, அவர்கள் சொல்லாமல் அங்கே போய் இந்திரா காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கிறீர்களே, அது எந்த மனிதத் தன்மையை என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை—எப்படி ஏற்றுக் கொள்வது, எப்படி நாங்கள் ஏமாறப்படாமல் இருக்க முடியும், குறைபடாமல் இருக்க முடியும் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். நாங்கள் பேசாமல் இல்லை. முதலில் தேவராஜ் அர்ஸ் இருக்கும் பொழுது அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதை இருவரும் சேர்ந்து சென்று பார்க்கலாம் என்று சொன்னார்கள். அது நடைபெற முடியாமல் போயிற்று. காலங்கள் கடந்தன. நிலைமைகள் மாறின. அவர் மறைந்துவிட்டார். திரு. குண்டுராவ் ஆட்சியில் இருந்தார். அவரும் ஆங்காங்கு விவாதிக்கும்பொழுது எல்லாம் அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருந்தார். சீக்கிரப் கையெழுத்துப் போடலாம், சீக்கிரம் கையெழுத்துப் போடலாம், பேசுவோம் அங்கே 1976-இல் பேசி முடித்தபடி அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடலாம் என்றார்கள். அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருக்கிற பாசனத்திற்குப் பாதுகாப்பு வேண்டும். அந்தப் பாதுகாப்பைத் தருவதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டால் கையெழுத்துப் போடலாம் என்பதுதான் பிரச்சினை. நாம் திரு. ஹெக்டே அவர்களுடனும் பேசாமல் இல்லை. அந்தத் தேர்தலிலே நான் பேசிய பேச்சு தமிழர்களுடைய வாக்குகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றுதான். அங்கே நான் பேசிய பேச்சு இதுதான். நீங்கள் குண்டுராவ் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் முதல்வராக வந்தால் காவிரிப் பிரச்சினை தீரும். தமிழக மக்களுக்கு அது ஒரு காமதேனுவாக அமையும் என்று நான் பேசிய பேச்சை வேண்டுமானால் யாராவது கேட்டுக் கொள்ளுங்கள் நான் என்ன சொன்னேன் என்பதை. அதை நான் சொல்லக் கூடாது.

நாங்கள் மீண்டும் பேச இருக்கிறோம். பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே இந்த அவையிலே சொல்கிறேன். இதைப் பெரிதாக்கி நடைபெற இருக்கிற ஒப்பந்தம் எதுவாக இருந்தாலும், தமிழகத்திற்கு நன்மை பயக்கிற ஒப்பந்தமாக இருந்தாலும் அதற்குக் கேடு பயக்கும்படி வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று நான் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

]டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

இன்னொரு பெரிய குற்றச்சாட்டு. மத்தியில் எந்த ஆட்சிக்கும் ஆதரவு தருகிறீர்கள் என்று சொல்கிறார்கள். நான் அவர்களை ஒன்றுதான் கேட்க விரும்புகிறேன். மத்தியில் ஒரு ஆட்சி இருக்கிறது, மாநிலங்களில் ஆட்சிகள் இருக்கின்றன. அப்படியானால் மத்திய ஆட்சியை ஆதரிக்க வேண்டிய காலத்திலே ஆதரிக்காமல் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்று சொல்வது நியாயமாகாது, முறையாகாது. அதைப் பற்றி நான் மிகவும் ஆழமாக கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். நான் எந்த நிபந்தனையும் இல்லாமல் ஜனதா ஆட்சியை ஆதரித்தேன் என்கிறார்கள். ஏன் ஆதரிக்கக் கூடாது ? தமிழகத்திற்கு அவர்கள் காவிரி வாங்கித் தந்தார்களா என்று கேட்டார்கள் மாண்புமிகு திரு. நெடுமாறன். அங்கே ஜனதா ஆட்சி வந்த 2 மாதத்திற்குள் என்று கருதுகிறேன், எங்களை அழைத்துக் கொண்டு திருவனந்தபுரம் சென்று—அங்கே திரு. அந்தோணி, அப்போது அவர்கள் தான் முதலமைச்சராக இருந்தார்கள், அவர்களிடம் பேசி உடனே ஒப்பந்தம் செய்ய வேண்டும், நீங்கள் செய்யவில்லையென்றால் நாங்கள் தலையிட்டு அதை முடிவு செய்ய வேண்டி இருக்கும் என்று சொன்னார்கள். அதன் பிறகு திரும்பி வந்தோம். அதன் பிறகு எங்களை அவர்கள் அழைத்துப் பேசினார்கள். முடிவு வரவில்லை. இந்த நிலைமையை நான் ஏன் மறைக்க வேண்டும் ? நான் ஏன் கேட்கிறேன் என்றால் அவர் கேட்கிறார் ஜனதாவை ஏன் ஆதரிக்கிறீர்கள் என்று ஆதரிக்கக் கூடாதா ? உணவுக்கு வேலைத் திட்டம் கொண்டு வந்தார்களே, ஆதரிக்கக் கூடாதா ? கன்னியாகுமரியிலே இரயில் பாதை அமைத்துத் தந்தார்களே, ஆதரிக்கக் கூடாதா ? இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம். நல்லது செய்கிறார்கள், ஆதரிக்கிறோம். இந்தி மொழிப் பிரச்சினை வந்தபோது நாங்கள் எதிர்த்தோம், தமிழ் தான் வேண்டும், ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்கலாம் அல்லது 14 மொழிகள் இப்போது சேர்ந்து இருக்கிற அனைத்து மொழிகளும் சேர்த்து அத்தனை மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்று சொல்லாமல் இல்லையே.

நாங்கள் அதற்கும் ஆதரித்தோம். அதன் பிறகு திரு. சரண்சிங் அமைச்சரவை வந்தது. அதில் நாங்கள் ஏன் அமைச்சராகக் கூடாது, ஒரு கட்சி இங்கே ஆட்சியில் இருக்கும் போது அந்த கட்சியில் உள்ள பிரதிநிதிகள் மத்தியில் ஆட்சியில் இருக்கக் கூடாதா ? பெடரல் சிஸ்டம் என்று சொல்கிறார்களே என்ன அர்த்தம். பல கட்சிகள் சேர்ந்து அங்கே கூட்டணி அமைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் இங்குள்ளவர்களுக்கு அழைப்பு வந்தால் போக மாட்டீர்களா ? உங்கள் கட்சியின் பிரதிநிதிகள் வேண்டும் என்றால் ஏற்க மாட்டீர்களா ? அதைப் போல நாங்கள் என்ன நிபந்தனையின் மீது ஏற்றோம்

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

அதை ஏன் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் மறைத்து விட்டார்கள். நாங்கள் அங்கே பதவிக்காக வரவேண்டும் என்றால் ஒரு உத்திரவாதம் தர வேண்டும் என்றோம். பார்வியபெண்டு கூட்டும் போது பிற்பட்டவர்களுக்கு இத்தனை சதவீதம் என்ற திட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு வர வேண்டும் என்று கடிதம் எழுதிக் கொடுத்து அதற்கு ஒப்புதல் கிடைத்த பிறகு தான் நாங்கள் அங்கே இணைந்தோம். என்ன தப்பு ? இங்கே இருக்கின்ற தமிழர்கள் 2 பேர் அங்கே அந்த ஆட்சியில் இருக்கக் கூடாதா ? ஒருவர் கிறிஸ்த்துவர். ஒருவர் ஆதி திராவிடர். ஏன் வேறு யாரையாவது பிடித்து அனுப்பினோமா ? இதில் என்ன அவமானப் பட வேண்டியிருக்கிறது. இந்திரா காந்தி வந்தார்கள், அவரையும் ஆதரிக்கிறீர்கள் என்றால் என்ன செய்யச் சொல்கிறீர்கள். அவர்சள் வந்து ஆட்சியில் அமர்ந்த வுடன் ஒழிக என்று கோவும் போட வேண்டுமா ? இங்கு இருந்து கொண்டே வருகின்ற அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்ட வேண்டுமா ?

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் முதலமைச்சர் பொறுப்பில் இருந்த போது அவர்கள் மறைவதற்கு முன்பாக எழுதிய கடைசி கட்டுரையில் மத்திய அரசோடு எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்பது பற்றி தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எரிச்சல் ஊட்டுவதோ, டெல்லியுடன் சச்சரவில் ஈடுபடுவதோ, நமது நோக்கம் அல்ல. அத்தகைய போக்கு எவருக்கும் நன்மை தராது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். 'ஹோம் ரூல்' என்ற ஆங்கில வார ஏட்டில் 1969 ஆம் ஆண்டு ஜனவரி பொங்கல் சிறப்பிதழில் தம்பிக்கு என்ற கட்டுரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். ஏட்டு அளவில் கூட்டாட்சி தன்மையும் நடை முறையில் மேன் மேலும் மத்திய அரசை நோக்குவதாகவும் அமைந்துள்ள ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் நமது மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பதில் நான் என்றும் மகிழ்ச்சியோடு இல்லை. ஆனால் அதற்காக எனது இனிய நண்பர் திரு. இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அவர்களைப் போல் மத்திய அரசுக்கு எரிச்சல் ஊட்டுவதும், டெல்லியோடு சண்டையிட்டுக் கொண்டு இருப்பதும் தான் என்னுடைய நோக்கம் என்று அறிவிக்கவும் நான் விரும்பவில்லை. அது யாருக்கும் உதவி செய்யாது. நெருக்கடியான நேரத்தில் மனதுறுதியோடு விளங்கிட வேண்டும் என்பது தான் முக்கியம். இது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரை. நான் கேட்கிறேன் நமக்கு உதவி செய்ய முன் வந்தால், தமிழகத்திற்கு நன்மை செய்ய முன் வந்தால் அந்த ஆட்சியை ஏன் ஆதரிக்கக் கூடாது ? ஆதரிக்காமல் இருப்பதன் மூலம் நாம் என்ன நன்மையைப் பெற்று விடப் போகிறோம் ? அந்த

[டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

தன்மைகளைப் பெற முடிந்ததா ? இன்னும் சொல்கிறேன் பகிரங்கமாக இங்கே நான் சொல்கிறேனை கலைஞர் கருணாநிதி அவர்கள் அன்றைய தினம் குட்டிமணியைப் பிடித்துக் கொடுத் திருப்பாரானால் இந்தியப் பேரரசோடு மோதல் வரவேண்டாம் என்ற காரணமும் அடிப்படையாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.10).

அதுபோல, இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்த போதெல்லாம், அதிலும் இந்திராகாந்தி அம்மையார் இலங் கைக்குப் போகும்போது அண்ணாவைச் சந்தித்த நேரத்தில் அண்ணா சொல்லி இருக்கிறார்கள், நீங்கள் என்ன முடிவெடுத் திருக்கிறீர்களோ, அதை நான் ஏற்றுக் கொள்வேன் என்பதை அவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலை மையில் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசில் யார் வந்தாலும் அங்கே தொடர்பு வைத்துக் கொள்கிறது என்றால், நம்முடைய அரசியல் சாசனம் என்ன சொல்கிறது ? சட்டம் என்ன சொல்கிறது ? தேவைக் காகப் போராடுவோம். அதை எடுத்துக் கொள்ளுங்கள். சொல்கிறார்கள், வெண் சாமரம் வீசினீர்கள், நன்மைக்காக வீசுவதானால் நாங்களும் அதிலே சேருகிறோம், என்கிறார்கள் .....

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களை, பார்லிமெண்ட் ஆப் ஆர்டர் .....

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தயவு செய்து கடைசியிலே பேசலாம். இன்றைக்கு ஒரு நாளைக்கு எனக்கு சான்ஸ் கொடுங்கள். தீர்மானத்தைக் கொண்டு வந்த என்னுடைய அருமை நண்பர் திரு. உமாநாத் பேச வேண்டும். திரு. துரைமுருகன் பேசத் தயாராக இருக்கிறார் ; அது சபா நாயகர் கையிலே இருக்கிறது. ஆனால், அப்படி ஒரு எண்ணம் அவருக்கு இருக்கிறது. முகத்தைப் பார்த்தாலே தோன்றுகிறது. அவ்வளவு அவசரமாகக் குறித்துக் கொண்டிருப்பதால் சொல் கிறேன்.

இந்த நிலையில் நாங்கள் எதிர்க்க வேண்டிய நேரத்தில் எதிர்க்கின்றோம். நாடாளுமன்றத்தில் மாநிலங்கள் பட்டியலி லிருந்து விற்பனை வரி நீக்கம் பற்றிய விவாதம் வந்தபொழுது விற்பனை வரியை மாநிலப் பட்டியலிலிருந்து நீக்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து பேசப்பட்டது என்பதையும் இந்தக் கூட்டத்திலேயும் நாங்கள் எதிர்த்துப் பேசினோம் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், அதிலே

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

தீர்மானம் வெளி வந்தவுடனே, அந்தத் தீர்மானத்தை எழுதி வங்காளத்தின் நிதியமைச்சரிடம் கொடுத்து, நிதி அமைச்சர் என்னிடத்தில் காட்டி, அதற்குப் பிறகு திரு. ஹெக்டே அவர்களிடம் காட்டி, அதற்குப் பிறகு ஆந்திராவின் நிதி யமைச்சரிடம் காட்டி, அதற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அதனால்தான் விற்பனை வரியைப் பற்றிய பிரச்னையே இல்லாமல் இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் எதிர்க்கின்ற நேரத்தில் எதிர்க்கின்றோம்.

அது மட்டுமல்ல, மாநிலங்களில் எந்தப் பகுதியிலாவது கல வரம் என்றால், அந்தக் கலவரத்தை அடக்க மத்திய போலீசை அனுப்புவது என்றும் அப்படி அனுப்பும்போது கலவரம் அடங் கும் வரை அந்தக் கலவரப் பகுதியை மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வருவதும் பற்றி விவாதித்தபொழுது கடுமையாக எங்கள் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது என் பதை நீங்கள் எல்லோரும் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கோதுமைக்கு மட்டும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொண்டே போவதுபற்றியும் நெல்லுக்குக் கொள்முதல் விலையை உயர்த்தித் தராதது பற்றியும் தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுவதாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் சுமார் 80-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட பொழுது, தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மாவட்டங்கூட தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படாததற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பிரச்னை, தமிழகத்திற்கு மட்டுமான பிரச்னை அல்ல, இந்தியாவினுடைய பிரச்னை என்பதை எடுத்துக் கூறி, இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம். மொழிப் பிரச்னையில் எப்போதுமே நாம் விட்டுக் கொடுப்பதில்லை. இந்தித் திணிப்பைத் தீவிரமாக எதிர்த்து வருகிறோம், இன்னும் எதிர்ப்போம் என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன் எங்கே வெண்சாமரம் வீசுகின்றோம் என்று எனக்குப் புரியவில்லை அவர்கள் ஏதாவது சினிமா படத்தைப் பார்த்து விட்டு, தூங்கும்போது கனவு கண்டிருப்பாரோ என்று கூட எனக்குச் சந்தேகம். நான் நடித்த படம் இருக்கிறது. எனக்கு யாராவது போட்டிருப்பார்கள். அதைக் கொண்டு எம்.ஜி.ஆர் ஐ மனசிலே நினைத்திருப்பார். இதுவரையில் யாருக்கும் வெண் சாமரம் வீசியதில்லை. வீச விரும்பினால் அண்ணா ஒரு வருக்குத்தான் வீசி இருப்பேன் (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

ஆனால் அண்ணா அதை எதிர்பார்த்தவர் அல்ல. யாரும் தனக்கு வெண்சாமரம் வீச வேண்டுமென்று எண்ணியவர் அல்ல, ஏற்றுக்கொண்டவரும் அல்ல என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பற்றி தயவு செய்து தப்புக் கணக்கு போடாதீர்கள்.

எனக்குச் சட்டம் தெரியாமல் இருக்கலாம். ஓரளவு படித் திருக்கலாம். சட்ட நுணுக்கங்கள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் மனதில் நுணுக்கங்கள், அவர்களின் உணர்வுகள் எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் எதை வேண்டுகிறார்கள், எதைத் தேடுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். வெளியே பேசியிருக்கிறார்கள், ரூ. 250 கோடி தமிழக அரசு அர்த்தமில்லாமல் செலவு செய் திருக்கிறது என்று ஒருவர் பேசி இருக்கிறார். நான் சொல் கிறேன், தமிழக மக்களுக்கு அதைக் கேட்டவுடனே புரிந் திருக்காதா ? அவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தால் நமது குழந்தைகள் மீண்டும் பட்டினி கிடக்க வேண்டும் என்பது தெரியாமலா போய்விடும் ? அதை எப்படி ஏற்றுக்கொள் வார்கள் ? எங்கும் போய்ப் பாருங்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே—அதற்கு என்ன அளவு வைத்திருக்கிறார்கள் ? ஒரு குழந்தைக்கோ, ஆணிற்கோ, பெண்ணிற்கோ வயதிற்கு தகுந்தபடி ஊட்டச்சத்துள்ள உணவு உண்ண முடியாமல் இருந்தால் அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் என்று ஒரு கணக்கை எடுக்கிறார்கள். அந்தக் கணக்கு உண்மை யானால் தமிழ் நாட்டினுடைய நிலைமை என்ன ? நான் ஒரு மருத்துவ மனையை ஆரம்பித்தேன் ; இலவச மருத்துவ மனை ; சத்யா கார்டனில், கோடம்பாக்கத்தில் ஆரம் பித்தேன். என்னுடைய குடும்ப டாக்டர் இலவசமாக வைத் தியம் பார்க்கிறேன் என்று சொன்னார். அதேபோல ஐந் தாறு டாக்டர்கள் ஸ்டான்லி ஆஸ்பிட்டலில் அவரோடு வேலை செய்கிறவர்கள், நாங்களும் இலவசமாக பணி செய்கிறோம் ; கார் வசதி மட்டும் செய்து கொடுத்து விடுங்கள் என்று சொல்லி வந்தார்கள். ஏறத்தாழ ஒரு ஆண்டிற்குள் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் காலி, எப்படி போயிற்று ? வந்தவர்களுக்கெல்லாம் அனிமியா ; உடம்பில் ரத்தம் இல்லை ; சத்து இல்லை ; அதற்காக இன் ஜெக்ஷன் போட்டே அந்தப் பணம் காலி. பிறகு தான் ஒரு சிறிய கட்டிடத்தைக் கட்டி அதை பஞ்சாயத்து போர்டிடம் ஒப்படைத்து விட்டேன். இதை ஏன் சொல்கிறேன் ? இது எத்தனையோ வருஷமாக இருக்கிறது. நான் திராவிட முன் னேற்றக் கழகத்திலிருந்த போது, மதுரை வீரன் படத்தில் என்று நினைக்கிறேன், அந்தப் படத்தில் நான் நடித்த போது அந்த நிகழ்ச்சி நடந்திருக்கும். அந்தக் காலத்திலிருந்து மக்களுக்கு இன்னுமா அந்த நிலை இருக்கிறது என்றால், ஏதா வது செய்ய வேண்டாமா ? எங்கோ பல்லி விழுந்தது என்று

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

சொல்லி, பல்லி விழுந்த சாப்பாடு போட இருநூறு கோடி ரூபாய் செலவு என்று சொல்வது, மரத்துப் போன உணர்வு என்று தான் நான் சொல்வேன். உணர்வு நன்றாக இருந் திருக்கும். எப்படியோ எல்லோரும் சேர்ந்து பேசிப் பேசி அவரை மரத்துப் போகச் செய்திருக்கிறார்கள் என்று நினைக் கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை மக்கள் ஏற்க மாட் டார்கள். அந்தத் துணிவோடு நான் சொல்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம்;, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்றெல்லாம் கொண்டு வந்து அதை நிறைவேற்றுகிற வகையிலே—நிறைவேற்றத் தான் போகிறோம்—நாங்கள் அதை செய்கிறபோது அதை அனுபவிக்கிற மக்கள் எங்களை வெறுக்கவே மாட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். எங்கே இராமச் சந்திரன் என்று கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். நான் எங்கே இருக்கிறேன் என்றால், நான் பெருமைக்காகச் சொல்ல வில்லை ; குடிசை வாழ் மக்கள், உழைக்கின்ற மக்கள் ஆகிய வர்களோடு நான் வாழ்கிறேன் என்பதை தயவுசெய்து தெரிந்துகொள்ளுங்கள். நான் சினிமாவில் இருந்தபோது இருந்த செல்வாக்கு—மக்களிடம் இல்லை—என்னுடைய ஃபீட் டிலே வசதியோடு இருந்தது இப்போது இல்லை. அதற்கு என்ன காரணமென்று நான் சொல்ல விரும்பவில்லை. அப்படி வைத்துக்கொள்ளவில்லை ; மற்றவர்களுக்கு அந்த ஆசை வந்து விடக்கூடாது என்பதற்காக ; இதுவரை நான் பேசிய போது சொன்ன கருத்துக்களோடு, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஏதோ, தி.மு. கழகத்திலிருந்து என்னை வெளியேற்றியதற்கு காரணம், நான் வெளியே போனதற்கு காரணம் பேசுகிறார்கள். யாரிடமோ நான் பேசி, ஏதோ நன்மையை எதிர்பார்த்து, அங்கேயிருந்து வந்து விட்டதாக ஒரு பொய் செய்தியை—பொய் செய்தி என்று சொல்லக் கூடாது—உண்மைக்கு மாறான செய்தியை மக்களிடம் திரும்பத் திரும்பச் சொன்னால் நம்பிவிடுவார்கள் என்று கருதுகிறார்கள்.

நான் திரும்பவும் சொல்கிறேன். நான் கட்சியை விட் விலக்கப்பட்ட பிறகு, தனி ஒருவனாக கட்சியை ஆரம்பித்து என்னை பின்பற்றியவர்களை, என்னை நம்பியவர்கள் அவர்களுக்கு வேறு வீட்டிற்கு போக இடமில்லை ; இந் இயக்கம் எங்கே இருக்கிறதோ, அந்த இடத்திற்கு வருவதற் ஆசை ; அங்கே வந்தார்கள். அவர்களோடு நான் வளர்ந்தே அவர்களும் வளர்ந்திருக்கிறார்கள். நான் இன்னு சொல்கிறேன். இந்த இளைஞர்களையோ, சகோ களையோ, மற்றவர்களையோ இன்னொரு ஆட்சி இ திருந்தால் இவர்களை மந்திரிகளாகப் பார்த்திருக்க முடியும் இத்தனை மந்திரிகள் எதற்கு ? ஜாதி இல்லையென்று சொ தீர்கள் ! பகுத்தறிவுவாதிகள் என்று சொல்கிறீர்க [illegible]

[டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

றெல்லாம் கேட்கிறார்கள். நான் கேட்கிறேன். நான் முன்பே சொல்லிய உங்கள் பகுத்தறிவு மனச்சாட்சியை தொட்டுப்பார்த்து பேசுங்கள். எத்தத் தேர்தலை நடத்தினாலும் அதில் ஜாதியை மூன் வைத்து, பணத்தை பின்வைத்து நடத்துகிறார்களா, இல்லையா ? என்னையும், மற்றவர்களையும் சேர்த்து கேட்டுக் கொள்கிறேன். மக்கள் எவ்வழி மன்னன் அவ்வழி. அப்போது சாதாரண தொண்டன் எந்த வழி போக முடியும் ? தலைவன் வழி தான் போக முடியும். தலைவன் என்ன செய்வான் ? மக்களுடைய பிரதிநிதியும் வேண்டும். என் பெயரை வைத்துக் கிறார்கள். என்னிடமே கேட் கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். மன்றத்தினருக்குப் பதவி கிடையாதா ? என்று; அப்புறம் நான் யார் என்று கேட்டேன். இப்படி ஒவ்வொருவர் மனதிலும் ஜாதி உணர்வுகள் பெரிதும் அதிகப்பட்டு விட்டன. அதை யாரும் மறக்காதீர்கள். இல்லையென்று சொல்லாதீர்கள்.

(பிற்பகல் 12-20)

எத்தனை முறை வன்னியர் ஒருவருக்கு நீதிபதி கிடைக்க வில்லை என்று இங்கே பேசியிருப்பார்கள் ; வெளியிலேயும் பேசியிருப்பார்கள் ? அந்த வன்னிய குலத்தவருக்கு எவ்வளவு வெட்கமாகவும், வேதனையாகவும் இருந்திருக்கும் ? எங் களிலே படித்தவர்கள் நீதிபதியாக வர முடியாதா, வரக் கூடாதா என்று எவ்வளவு நாள் கஷ்டப்பட்டிருப்பார்கள் ? ஒருவர் வந்து விட்டால் எவ்வளவு பேர் திருப்தி அடைகிறார்கள்?

இது இராமச்சந்திரனுடைய திறமை என்று சொல்ல வில்லை. இந்த மன்றத்தினுடைய ஒத்துழைப்பினால் அந்தப் பணியைச் செய்ய முடிந்தது. அந்த ஒத்துழைப்பினால் அந்தப் நான் எதிர்பார்க்கிறேனே தவிர, இந்தத் தீர்மானத்தான் கொண்டு வருவதால் அந்த ஒத்துழைப்பை நீங்கள் தராமல் இருக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்.

ஜாதியைப் பற்றி நான் உண்மையிலேயே வெறுக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் என்னுடனேயே இருந்து பணி யாற்றிக் கொண்டிருக்கின்றவர்களைக்கூட என்ன ஜாதி என்று நான் கேட்டிருக்க மாட்டேன். தவறிக் கேட்டிருந்தால் அல்லது சொல்லியிருந்தால் சந்தர்ப்பங்கள் இவர் இன்னார், இவர் இன்னார் என்று ஒருவர் வரும்பொழுது அப்படித்தான் எனக்குத் தெரியும். அப்படித்தான் நான் அறிந்து கொண்டிருக்கிறேன்.

1983 நவமபர் 15] [டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்]

ஜாதியைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் எனக்கு அறிவு வந்த பருவம் முதல் அந்த வாய்ப்பு இல்லை. ஏழாவது வயதில் நாடகக் கம்பெனிக்கு வந்தவன் நான் அங்கே இன்னின்ன ஜாதியார்கள் இருக்கிறார்கள் என்று இல்லாமல் பல ஜாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுப் பழகக்கூடிய முறையில் வளர்ந்தவன் நான். எனவே, பிறகுதான் பகுத்தறிவு வந்தது என்பது அல்ல, பிறகுதான் அந்த எண்ணம் என்பது வந்தது அல்ல. அப்பொழுதே என்உள்ளத்திலே அந்த எண்ணம் ஊறியிருக்கிறது, உணர்விலே அது இணைந்து விட்டது. அதே உணர்வுதான் இன்னைக்கும் என்னிடத்திலே இருக்கிறது.

அமைச்சர்சளை நியமிக்கிறேன். என்றால் வருங்காலத் தலை முறைகளை நான் வளர்க்க வீரும்புகிறேன். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க நான் விரும்புகிறேன். தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றாலும், இன்னும் பதினைந்து ஆண்டுகள் இருந்தாலும், என்றாவது ஒருநாள் இளைஞர்கள் இந்தப் பொறுப்புக்களை யெல்லாம் ஏற்றுத்தீர வேண்டும். ஒருவருக்கே பதவி சொந்தமாக இருக்கக்கூடாது. ஆகவேதான் நாங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறோம்.

சகோதரிகள் எந்த அளவிற்கு இங்கே இருக்கிறார்களோ, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு அந்தத் தகுதிக்குரிய மதிப்பை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இதைத் தான். எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

என்னைப் பார்த்து ஜாதி உண்டா என்று கேட்டால், என்னு டன் சாப்பிட்டவர்கள்தான், என் முன் உட்கார்ந்து சாப்பிட்டு என்னோடு பழகியவர்கள்தான் இந்தக் கேள்ளிவியைக் கேட்பார் கள் என்று என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

ஆதி திராவிடர்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட் கிறார்கள். நாங்கள் இவைகளை ஆதி திராவிடர்களுக்குச் செய் கிறோம் என்று சொல்லிவிட்டுச் செய்தால்தானா அவர்களுக்குச் செய்கிறோம் என்று பொருள்? எல்லோரும் சொல்கிறார்கள், சட்டமும் சொல்கிறது, அதனால்தான் ஆதி திராவிடர்கள் என்று நாங்களும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

இங்கே தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். எங்கே பஞ்சாயத்துத் தேர்தல் என்று கேட்கிறார்கள். குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள் என்று சொல் கிறார்கள். ஆனால் இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள்.

[டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

எப்பொழுது தேர்தல் என்று எங்களிடம் கேட்பது. ஆனால் வெளியே பேசிக் சொல்வதோ இவர்கள் தேர்தலையே கொண்டு வர்மாட்டார்கள், ஏனென்றால் தோற்று விடுவார்கள் என்று.

நாங்கள் தோற்றதே இல்லையா ? அண்ணாவே தோற்றார், காமராஜரே தோற்றார், நான் தோற்றால் என்ன ? என்ன குடிமுழுகிப் போய்விடப் போகிறது ? திரும்பவும் அண்ணா வரவில்லையா ? அதுபோல் நாங்களும் வந்து விட்டுப் போகி றோம்.

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏதோ ஜாதி உணர்விலே சிலரைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, தேர்தலுக்காக ஜாதி உணர்வுடன் போடுகிறோம் என்றால் அதை நான் அடியோடு மறுக்கிறேன் என்பதை உணர்த்துவதற்காகத் தான்.

மீனவர் ஒருவரை அமைச்சராகப் போட்டோம் என்றால் அவர் ஒரு பி.ஈ., அவர் எனக்குப் படகு கொடுத்தார் என்பதற் காக அவருக்கு ஒரு பதவி கொடுக்க வேண்டுமென்றால், 77 ஆம் ஆண்டிலேயே கொடுத்திருக்கலாமே, ஏன் இத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் ? திரு. எட்மண்ட் இருந்தார், மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது.

எத்தனை தந்திகள் எனக்கு வந்தன , மீனவர்களுக்குப் பிரதி நிதித்துவம் கொடுங்கள், மீனவர்களுக்குக் கொடுங்கள் என்று. சரி, முன்பு கிறித்தவராக இருந்தார், இப்பொழுது இந்து என்று அழைக்கப்படுகின்ற நம்மவர் இருக்கட்டும் என்று நான் எண்ணி னேன். இதிலே ஜாதி எங்கே வந்தது ?

கிறித்தவர்களுக்கு ஏதாவது உதவி செய்தால் உடனே கிறித் தவர்களின் ஓட்டை வாங்கப் போகிறேன் என்றும், நாடார் களுக்கு ஏதாவது உதவி செய்தால் உடனே அந்த நாடார்களின் ஓட்டை வாங்கப் போகிறேன் என்றும் எண்ணினால் இந்த ஆட்சி யைப் பற்றி அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள இந்த ஆட்சி மக்களைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியாது ; முடியாது ; நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதில் பயனில்லை. எனவே,

அந்த அளவிற்கு இந்த ஆட்சி ஜாதிக்கு அப்பாற்பட்டு, திறமை, வேகம், இளமை, நாட்டுக்குத் தொண்டு செய்து பழகிய வர்கள், நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டியவர்கள் என்பதையெல்லாம் பார்த்து அவர்களுக்குத்தான் வாய்ப்பை அளிக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து அந்தக் குட்டையில் போய் நாம் விழுந்து விட வேண்டாம்.

1983 நவம்பர் 15] [டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்]

இங்கே திரு. நெடுமாறன் அவர்கள் கேட்டார்கள், கண்ணகி கோயிலை விட்டு விட்டீர்களே என்று. ஏன் அதற்குள் இந்த அவசரம் ? விட்டு விட்டோம் என்று எப்படிச் சொல்ல முடியும் ? நமக்கு உரிமை இருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கும் பொழுது கடைசிவரையில் நாம் போராடித் தீர வேண்டுமே தவிர விட்டு விட்டீர்களே என்று சொல்வது நமக்கே அவமானம். அது விடமுடியாத காரியம். அது விடப்படக்கூடாது ; அது கண்டிப்பாக தமிழகத்துக்குச் சொந்தமாக வந்து சேரவேண்டும் என்பதை இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கருத்தினை இங்கே சொல்ல வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி கூறுகிறேன்.

மரியாதைக்குரிய திரு. நாயனார் அவர்கள் அங்கே முதலமைச்சராக இருந்தபோது அவரிடம் இந்தக் கருத்தை நான் சொன்னேன். இது எங்கள் பகுதிக்குச் சேரவேண்டியது, 10, 15 அடி அல்லது 20 அடிக்கு உள்ளே தான் இருக்கும் ; எல்லை வகுக்கப்பட எல்லை வகுக்கப்படவில்லை ; ஆகவே வேண்டும் ; இன்றைக்கு கோவில் கிடைத்தால் போதும், எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னேன். கூடாது என்று சொன்னார் கள். அப்படிச் சொல்லி என்ன காரணத்தைச் சொன்னார்கள் தெரியுமா ? மிருகங்கள் எல்லாம் மேளவாத்திய சத்தம் கேட்டு ஓடிப் போகின்றது என்று சொன்னார்கள். அப்படி போகிற மிருகம் நமக்கு எதற்கு பார்ப்போம் என்று சொன்னபோது திரு நாயனார் அவர்களுக்கு ஏகப்பட்ட தொல்லைகள் இருந்த அந்த நேரத்தில் அவரால் அதை நிறைவேற்ற முடியவில்லை. பிறகு திரு. கருணாகரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்டிருக் கின்ற இந்த அரசு அதை நிச்சயமாக ஏற்று பரிசீலனை செய்து நல்ல முடிவைத் தரும் என்று எதிர்பார்க்கிறேன். எதிர் பார்ப்பு தான், நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமையில் நாம் இல்லை. இது அப்படிப்பட்ட நாடும் அல்ல. எல்லோரும் சேர்ந்து நன்மை பயக்கக்கூடிய காரியங்களை விட்டுக்கொடுத்து செய்யவேண்டி இருக்கின்றது.

இங்கே கேட்டார்கள் நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள். 'கூட்டலூரிலே வந்து குடியேறினார்கள் ; நீங்கள் அனுமதித்து விட்டீர்களே, யாரோ அமைச்சர் வந்து பேசினார், உடனே நீங்கள் அனுமதித்து விட்டீர்களே' என்று கேட்டார்கள். அவர் களுடைய தவறான எண்ணத்திற்காக நான் அனுதாபம் தெரி விக்கவேண்டியனவாக இருக்கிறேன்.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது 12—6—71 அன்று கேரள முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள், அதில் குறிப்பிட்டிருந்தார்கள் ' 'எந்தொரு வகையில் தமிழகத் திற்கு இது சேர வேண்டும், எப்படி இருந்தாலும் நீங்கள் தமிழகத்

[டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

திற்குத் தரவேண்டும் ; நீங்கள் விடுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். இவர் கண்ணியமாகக் கேட்டதை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு விட்டார்கள்., ஓகோ நமக்குத் தான் அது சொந்தம் போலும் என்று. பீர்மேடு பகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தால் அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொன்னார்கள். கேரள அமைச்சருக்கு, கல்வி அமைச்சரின் கடிதம் 16—6—1971 ; 25—7—1971 கேரள முதல்வர் அவர்களின் கடிதம் ; கேரள முதல்வரின் கடிதம் 3—8—1971 ; 23—10—1971 கேரள முவல்வர் எழுதிய கடிதம் ; கேரள முதல்வருக்கு எழுதிய கடிதம் 26—1—1973 ; இவ்வளவு முயற்சிகளையும் அவர்கள் செய்தார்கள்.

(பிற்பகல் 12-30).

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 7—8—1975, 14—9—1976 மன்னிக்கவும் — மத்திய உள்துறை அமைச்சரின் கடிதம், வருவாய்த்துறை அமைச்சரின் கடிதம் 1976-ல் அவர்கள் அரசு இருக்கும்போது அனுப்பப்பட்டது. நாங்கள் 1980ல் பிரதம அச்சமைருக்கு எழுதிய கடிதம் 27—12—1980 ; மத்திய உள் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதம் 14—5—1981 ; மத்திய அமைச்சர், உள்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதம் 28—7—1981 ; மத்திய என்ன வேடிக்கை என்றால் முன்பு திரு. ஜெயில்சிங் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார். நாங்கள் பதவிக்கு வந்த பிறகு அவரிடம் சென்று பேசி அவர் டிதம் எழுதியபோது நான் இதை கேரள முதல்வருக்கு அனுப்புவேன், அவர் வேண்டி யதைச் செய்வார் என்று சொன்னார்கள். அவரும் அனுப்பினார். அதற்கு அவர்கள் கடிதம் எழுதினார்கள். எங்களுக்கும் எழுதினார்கள் பரிசிலிக்கிறோம். என்று பிறகு திரு. சேத்தி வந்தார்கள். அவருக்கும் போல. அதன் னோம். அவர்களும் கேரள முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி னார்கள். இப்படி இந்த கோப்பிலே பல கடிதங்கள் இருக் கின்றன. இவ்வளவு கடிதப் போக்குவரத்து இருப்பற்றி நாம் நடத்தினோம். கடைசியாக உலகத் தமிழ் மாநாடு சமயத்திலும், அதற்கு முன்பும் எழுதினோம். அந்த நேரத்திலும் எழுதினோம். உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகின்ற பேராளர்கள் அங்கே சென்று அதைப் பார்க்கவேண்டும். ; அது வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம் ; அதைப் பார்ப்பதில் பெருமையும் உண்டு, இலாபமும் உண்டு ; இந்த நாட்டைப் பற்றிய நல்லெண்ணமும் மதிப்பும் உயரும் என்றெல்லாம் சொன்னோம். கேட்கவில்லை. கிடைக்கவில்லை. அதே நிலைதான் இன்றும் இருக்கிறது, அதை நாங்கள் நிச்சயமாக உங்களுடைய உதவி மைய அரசின் முயற்சியால், அதை தமிழ் நாடு பெற முடியும் என்று நான் நம்புகிறேன்.

1983 நவம்பர் 15] [டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன்]

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட வேண்டும்.. அதற்குத்தான் முதலில் நான் இலங்கைப் பிரச்னையைத் தொடங்கினேன். கூடலூரில் வந்து குடியேறினவர்களை விட்டு விட்டீர்களே, என்று சொன்னர்கள். ஆமாம், விட்டுவிட்டோம். முன்பு எடுத்ததை விட நடவடிக்கை அதிகமாக, கணிசமாக, கடுமையாக எடுத்தது இந்த அரசாங்கம் தான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏறத்தாழ 1,000 போலீசுக்கும் மேல் அனுப்பி வைக்கப்பட்டு, அங்கேயிருந்து வெளியேற்றப்பட் டார்கள். வெளியேற்றப்பட்ட பிறகு திரும்பவும் ஒரு வரத்திற் குள் மீண்டும் குடியேறினார்கள். அப்போது அனுப்பி வைக்கப் பட்டார்கள். ஆனால் என்ன நடந்தது ? இன்று என்னைக் கேட்கின்றார்களே தமிழ் உணர்ச்சி எங்கே, தமிழ் உணர்வு எங்கே என்று, பக்கத்து மாநிலத்தில் இருந்து வந்து குடியேறி விட்டார்களே, ஏன் தடுக்க வில்லை என்று கேட்கி றார்களே, அன்றைக்கு தர்ணா, உண்ணா நோன்பு,, போராட்டம் இதையெல்லாம் நடைபெறவில்லையா ? நாயுடு தலைமையில் போராட்டம் நடத்த வில்லையா ? தி.மு.க.. போராட்டம் நடத்தவில்லையா ? மற்ற கட்சிக்காரர்கள் எல்லாம் போராட்டம் நடத்த வில்லையா ? அப்போது இருந்த தமிழ் உணர்வு எனக்கு அதிகம் அவர்களுக்குக் குறைவா ? அது அல்ல. என் மீது இருக்கும் தனிப்பட்ட ஆத்திரத்தை, இந்த அமைச் சரவை இருக்கிறதே, இதைப் பற்றி தமிழ் மக்களுக்கு ஒரு தவறான கருத்து தெரிவிக்க அவர்கள் முயற்சி எடுத்து, விவசாயி களை வெளியேற்றுகிறோம் என்று சொன்னார்களே தவிர கேரளத்தவர்களை நாங்கள் வெளியேற்றுகிறோம் என்று அவர்கள் பேசவில்லை.

இன்னும் சொல்கிறேன். எங்கள் முயற்சி நிற்காது. இதை தான் பிரதம அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிவிட்டேன். எங்களுடைய இடத்தில், அங்கேயிருந்து யாராவது வருவார் களானால், வெளிநாட்டில் இருந்து தமிழர்கள் தேயிலை தோட் டத்தில் வேலை செய்பவர்கள், அவர்களுக்கு அந்த இடம் ஒதுக்கி வைக்கப்பட்டு இருக்கிறது, நாங்கள் அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க விரும்புகிறோம். அவர்கள் அங்கே பணி செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்தத் தொழில் தான் தெரியும். அதனால் விடமாட்டோம் என்று சொன்னதற்கு, அது உங்கள் உரிமை செய்யலாம், தவறில்லை என்று சொல்லியிருக் கிறார்கள். இங்கே அவர் சொன்ன பிறகு தான் மறுபடியும் அந்தப் பிரச்னை. உண்ணா நோன்பு, ருப்புக்கொடி போராட்டம். அந்த தமிழ் உணர்வு இல்லை என்று இங்கே குற்றம் சொல் கிறார்களே. அப்போது அங்கே வெளியேற்றியபோது இரு. நெடுமாறன் அவர்கள் தமிழகத்தில் இருக்கவில்லையா ? இரு. நெடுமாறன் அவர்கள் என் மீது இவ்வளவு குற்றம் சுமத்து கிறார்களே அவர்கள் இங்கே இருக்கவில்லையா ? அதைப் பற்றி என்ன செய்தார்கள்? இந்த அரசுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

சொல்லி இருக்க வேண்டாமா ? அவர்கள் செய்தது நியாயம் தான், கேரளத்தில் இருந்து குடியேறியவர்களுக்கு இங்கே இடம் இல்லை, ஆகவே, வெளியேற்றப்படவேண்டியவர்களுக்கு இங்கே இடம் சொல்லியிருக்க வேண்டாமா ? அப்போது பேசாமல் இருந்து விட்டு இப்போது வந்து உங்களுக்கு தமிழ் உணர்வு இல்லை, இத்தனை பேரை வெளியேற்றிவிட்டீர்களே என்று சொல் கிறார்கள்.

இன்னும் சொல்கிறேன், வெளியேற்றப்படவேண்டியவர் கள், வெளியேற்றப்படவேண்டும். இந்த அரசு நிச்சயமாக விட்டுக்கொடுக்காது. இன்னொன்றையும் கூட செய்தார்கள். பட்டா கேட்டார்கள். கொடுக்க மாட்டோம் என்று சொல் னோம். ஜென்ம நிலங்கள் அதிகம் அங்கே. அரசு நிலங்கள் குறைவு. அந்த ஜென்ம நிலங்களை அவர்களாகவே விட்டு விட்டுச் சென்றார்கள். அதில் ஊட்டியில் இருந்து கூட பலர் அங்கே சென்று பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் தான் அங்கே தூண்டி விட்டது. அவர்கள் தான் விவசாயிகள் என்று சொன்னார்களே தவிர, தமிழர்கள். மண், நிலம், நீர் எதுவாக இருந்தாலும் அதிலே ஆக்கிரமிப்பு எங்கே இருந்தாலும் அது அகற்றப்படவேண்டும் என்று அவர்கள் ஏன் சொல்லவில்லை? ஏன் அவர்கள் எங்களுக்கு உதவி செய்து இருக்கக்கூடாது? அரசு செய்தது சரி என்று சொல்லியிருக்க வேண்டாமா ? அப்போது உணர்வு இல்லாமல் பேசாமல் இருந்தவர்கள். இப்போது உணர்வு பொங்கப் பேசினால் அது சரியாக இருக்காது. தயவு செய்து இந்த அரசியலை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அவர்களுக்கு நடப்பது என்ன என்று தெரியும். நடந்தது என்ன என்று தெரியும். நாங்கள் இதுவரையில் செய்து வந்த கடமைகள் எல்லாம் தெரியும், நடக்கப்போவது என்ன என்று தெரியும். அதை வைத்துச் சொல்கிறேன்.

இந்த நேரத்தில் நான் குறிப்பிட்ட சில விஷயங்களை, பல உணர்வுகளை வெளியிட்டாக வேண்டும். ஏன் காஷ்மீருக்குப் போகவில்லை என்று கேட்டார்கள். எப்படி காஷ்மீருக்குப் போவது ? பெங்களூரில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேறியது. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலுள்ள பிரச்னையை நமக்குள்ளே பேசிக் கொண்டு ஒருமுகமாக மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, நல்ல சுமுகமான உறவுகளை ஏற்படுத்தி, நமக்குள்ள உரிமைகளை அதிகம் பண்ணுவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டும்.

மாண்புமிகு கேரள முதலமைச்சர் கருணாகரன் அவர்கள் வருவதாக ஒப்புக் கொண்டார்கள். பிறகு அவர் வரவில்லை. அப்போது அவர் அழைக்கப்படவில்லையா ? காஷ்மீர் முதலமைச்சருக்கு நான் சொன்னேன். அதைத்தான் வுக்கு நாங்கள் மூன்றுபேர் முதலமைச்சர்கள் போனோம். அங்கே

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

வேறு யார் யாரோ கட்சியில் சேர்ந்தவர்கள் உட்கார்ந்திருந் தார்கள்; எதிர் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்று சொன் னார்கள். நான் கேட்டேன். அப்படி என்றால் தமிழ்நாட்டில இருக்கின்ற எதிர்க்கட்சிகளையும் நீங்கள் அழைத்திருக்க வேண்டாமா ? ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சி களையும் அழைத்திருக்க வேண்டாமா ? நீங்களாக இப்படி எதிர்க்கட்சிகளை அழைத்து வைத்துக் கொண்டு, அவர்கள் எதிர்க்கட்சிகள் என்றால் அது எப்படி இருக்கும் ? அவர்கள் எல்லாம் நிச்சயமாக வரவேண்டுமென்று இல்லை, இதைத்தான் முதலமைச்சர் பருக் அப்துல்லா அவர்களுக்கு நான் எழுதினேன்.

ஏதோ, யார் யாருக்கோ பயந்துகொண்டு நான் ஸ்ரீநகர் மாநாட்டுக்குப் போகவில்லை என்று ஒரு கற்பனைக் கதையை மனதிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீநகரிலிருந்து எனக்கு வந்த கடிதங்கள், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்த கடிதங்களை எல்லாம் இங்கே வையுங்கள் என்று கேட்டார்கள் (திரு. ரா. உமாநாத் —குறுக்கீடு) அதைக் கேட்டதும்—நீங்கள் தானா ! அந்தக் கடிதம் இதுதான்.

அன்புள்ள திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு,

மைய மாநில உறவு குறித்து இந்திரா காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகளைக் கொண்டு மாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்கனவே முடிவு செய்து அதனை ஸ்ரீநகரில் நடத்தத் திட்ட மிட்டிருக்கிறோம். (இந்தத் தீர்மானம் எங்கே எடுக்கப்பட்டது ? டெல்லியில் நடந்த மாநாட்டில்) இந்த மாநாட்டிற்கு தங்களை அன்புடன் வரவேற்கிறேன். இந்த மாநாடு செப்டம்பர் 16 ஆம் தேதி அன்று பிற்பகலிலும், செப்டம்பர் 17 ஆம் தேதியன்றும் நடைபெறவிருக்கிறது.

தாங்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தாங்கள் தெரிவிக்கும் நல்ல பல கருத்துக்களைக் கேட்க விழை கிறோம்.

தாங்கள் இங்கு எவ்வாறு வருகிறீர்கள், எந்த நேரத்திற்கு ஸ்ரீநகருக்கு வந்து சேருகிறீர்கள் என்பதை தயவு செய்து எங்க ளுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். டெல்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு வருவதற்கு தேவைப்படக்கூடிய தகவலை அல்லது உதவி யினைத் தங்களுக்கு அளிக்குமாறு புதுடில்லி—5, பிருதிவிராஜ் சாலையில் உள்ள எங்கள் தொடர்பு அலுவலர் அலுவலக த்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

தங்கள் வசதிக்காக எங்களுடைய தொடர்பு ஆணையாளர் திரு. எம். ஏ. பட் அவர்களை 611108, 611506, 611210 மற்றும் 611556 ஆகிய தொலைபேசி எண்களில் டில்லியில் தொடர்பு கொள்ளலாம். ஸ்ரீநகரில் என்னுடைய முதன்மைச் செயலாளர் திரு. எம். ரகுமான் அவர்களை 71093, 73102 ஆகிய அலுவலகத் தொலைபேசி எண்களிலும், 73134, 74651 ஆகிய வீட்டுத் தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

அன்பு கலந்த வாழ்த்துக்கள்.

அங்கிருந்து வந்த வேறு ஒரு கடிதம்.

அன்புமிக்க திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு,

1—9—1983 அன்று நான் தங்களுக்கு எழுதிய தி.எம்.எஸ். (தி.எஸ்.ஆர்.) 83 ஆம் எண் தேர்முகக் கடிதத்தினைத் தொடர்ந்து இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். இந்த மாநாட்டை ஒத்திப்போட வேண்டுமென்று பலரிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால் அம்மாநாடு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

சில நண்பர்கள் சுருத்துத் தெரிவித்ததை அடுத்து இந்த மாநாட்டை இப்போது 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5, 6, 7 ஆம் தேதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தாங்கள் தயவுகூர்ந்து இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், தாங்கள் இங்கு வருவது பற்றியும் வந்து சேருகின்ற நேரத்தையும் புதுடில்லியிலுள்ள எங்களுடைய தொடர்பு ஆணையாளருக்கோ அல்லது என்னுடைய முதன்மைச் செயலாளருக்கோ தெரிவிக்கும்படியும் வேண்டுகிறேன்.

அன்பு வாழ்த்துக்கள்.

(மிற்பகல் 12-40)

நான் எழுதிய கடிதம்.

அன்புமிக்க திரு. பருக் அப்துல்லா அவர்களுக்கு,

மைய — மாநில உறவு குறித்து இந்திரா காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகளைக் கொண்டு நடத்தவிருக்கும் மாநாட்டிற்கு எனக்கு அழைப்பு விடுத்து தாங்கள் எழுதியிருந்த கடிதம் கிடைக்கப் பெற்றேன். ஆனால் அந்த மாநாட்டிற்கான விவாதக் குறிப்பு விளக்கம் (Agenda) வந்து சேரவில்லை. மைய மாநில உறவு தொடர்பான திட்டவட்டமான பிரச்சினைகள் எவையும் அங்கு விவாதிக்கப்படவிருக்கிறதா அல்லது இந்திரா

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

காங்கிரஸ் அல்லாத மற்ற எதிர்க்கட்சிகளைக் கொண்ட இம் மாநாட்டில் அரசியல் பிரச்சினைகளை மட்டுமே விவாதிக்கப் போகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயினும், விவாதிக்க இருக்கின்ற பொருள்பற்றி முன்னதாகவே முடிவு செய்யாவிட்டால் அங்கு வந்து உரை நிகழ்த்துவதால் விரும்பிய பலன் கிட்டாது.

பெங்களூர் மாநாடு தென் மாநில முதலமைச்சர்களை மட்டும் கொண்ட கூட்டமாக இருந்தாலும் அங்கு நடந்த விவாதங்கள் பயனுள்ளவையாக இருந்ததோடு அதன் முடிவும் ஊக்கமளிப்ப தாய் இருந்தது. எல்லா மாநிலங்களுக்கும் இதுபோன்ற வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும், எல்லா மாநில முதலமைச்சர்களையும் இக்கூட்டத்திற்கு அழைக்க வேண்டுமென்றும் அப்போது தான் பொதுவான, பரஸ்பர ஈடுபாடுடைய பிரச்சினைகள் குறித்து பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தி கருத்துக்களைப் பரி மாறிக்கொள்ள இயலும் என்று அந்த மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது. பன்மாநில பிரச்சினைகளை அத்தந்த மாநிலங்களுக் கிடையே விவாதித்து அதற்கு நல்லதொரு தீர்வு காணலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆயினும் விஜயவாடாவில் நடந்த கூட்டம் பெங்களூர் மாநாட்டு முடிவுகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது. முதலமைச்சர்கள் மாநாடாக துவங்கியது இங்கே எதிர்க்கட்சித் தலைவர்களின் மாநாடாக மாறியது. முதலமைச்சர்கள் இதில் பெரும்பங்கு வகிக்கவில்லை. இந்த மாநாட்டில் அவர்கள் தீர்மானம் எதுவும் நிறைவேற்ற வில்லை. இம்மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலை வர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களும் பயனுள்ளவையாக இல்லை.

மாநில அரசுகளின் தலைவர்களைக் கொண்ட கூட்டமாக இராமல், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கொண்ட கூட்டமாக இதனை நடத்துவது நோக்கமாக இருப்பின் அப்போதும்கூட மாநிலங்களிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் இம்மாநாட்டிற்கு அழைக்கப்படாததால் இது முழுமை பெறவில்லை என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டில்லியில் நடந்த கூட்டத்திற்கும், எங்கள் மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் திரு. மு. கருணாநிதி அவர்களும் (தி.மு.க.) திரு. நெடுமாறன் அவர்களும் (தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்) மற்றவர்களும் அழைக்கப்படவில்லை. இந்த மாநாட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ற முறையில் கருதப்பட்டு அழைக்கப்பட்டு பங்கு கொள்வதற்கு தகுதிபெற என்ன அடிப் படைகள் பின்பற்றப்படுகின்றன என்பதும் எனக்குத் தெரிய வில்லை.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

டில்லி மாநாட்டிற்கு முன்பு அனைத்திந்திய பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி நான் என்னுடைய ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததோடு அவற்றை விவாதிப்பது உடனடி அவசியம் என்பதை வலியுறுத்தி திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். விஜயவாடா மாநாட்டில் பங்கு கொண்ட மற்ற தலைவர்களுக்கும் அக்கடிதத்தின் நகலை நான் அனுப்பியிருந்தேன். டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் என்னுடைய கடிதம் பற்றி விவாதிக்கப்பட்டதா ? அம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் பரிசீலனைக்கு அக்கடிதம் வைக்கப்பட்டதா என்பதும் எனக்கு இதுவரையில் தெரியவில்லை.

தவிர, இப்போது அரசியல் சூழ்நிலையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பாரதீய ஜனதா கட்சியும் லோக்தள கட்சியும் கூட்டுச் சேர்ந்துள்ளன. ஜனதா கட்சியும் ராஷ்டிரிய காங்கிரஸ் கட்சியும், ஜனநாயக சோசலிஸ்ட் கட்சியும், காங்கிரஸ் (எஸ்.) கட்சியும் ஒன்று சேர்ந்து கூட்டணியை அமைத்துள்ளன. தென் மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தன்னுடைய கட்சி தேர்தல் உடன் பாடு வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதாக திரு. அத்வானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களும் இதனை மறுக்கவில்லை. மாறியுள்ள இந்த அரசியல் சூழ்நிலையில், ஸ்ரீநகரில் நடத்தத் திட்டமிட்டுள்ள இந்த மாநாட்டின் திட்ட வட்டமான நிலை என்ன என்பது பற்றி நான் தெரிந்து கொள்ள விழைகிறேன். ஏனெனில், பெங்களூர் மாநாட்டிற்குப் பின்னர், இந்தக் கூட்டத்தின் தன்மையில், நோக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நான் அறிகிறேன். பெங்களூர் மாநாட்டின் போது மைய — மாநில உறவு பற்றியும், மாநிலங்களும் வளர்ச்சி பற்றியும், மாநிலங்களின் மத்திய அரசும் வருவாயைப் பகிர்ந்து கொள்வது பற்றியும் முக்கியமாகக் கவனம் செலுத்தப் பட்டது. ஆனால் இந்த நோக்கங்களுக்கு முரணான விசயங்கள் பற்றி அதாவது அரசியல் உடன்பாடு தேர்தல் உடன்பாடு பற்றி இப்போது கவனம் செலுத்தப்படுவதாக நான் எண்ணுகிறேன். நோக்கத்திலும், அணுகுமுறையிலும் இந்த மாற்றம் ஏற்பட்டி ருக்கும் இந்த நிலையில், வரையறுக்கப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும் உள்ள மாநில முதலமைச்சர்கள் இந்த மாநாட் டில் தங்கள் அரசின் சார்பாகவும் தங்களுடைய கட்சியின் சார் பாகவும் இதில் பங்கேற்க இருப்பதால் இந்த மாநாட்டில் அவர் களுக்குரிய சிக்கலான (Delecate) நிலைமை பற்றி அவர்கள் முடிவு செய்ய வேண்டும். எனவே மாநாட்டில் விவாதிக்க இருக்கிற பொருள் என்னென்ன என்பது பற்றி முன்னதாக அறிந்துகொள்வது அவசியம் என நான் கருதுகிறேன். அரசியல்

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

உடன்பாடு பற்றியும், தேர்தல் உடன்பாடு பற்றியும் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படுமாயின் என்னுடைய சக அமைச்சர்களுடனும் என்னுடைய கட்சியுடனும் கலந்து ஆலோசித்த பின்னர்தான் அதுபற்றி நான் முடிவு செய்ய இயலும். ஆகவே, இக்கருத்துக்கள் பற்றி எனக்குத் தெரிவித்து நிலைமையை தெளிவுபடுத்தும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். தங்களி டமிருந்து பதில் வந்தவுடன் எங்களுடைய கட்சி நடவடிக்கை எடுக்கும்.

காஷ்மீர் முதலமைச்சர் எனக்கு எழுதிய கடிதம்.

அன்புமிக்க திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு,

25—9—1983-ஆம் நாளிட்ட உங்களுடைய கடிதம் கிடைக் கப்பெற்றேன். தங்களை இந்த மாநாட்டிற்கு அழைத்து நான் எழுதியிருந்த கடிதத்தில், ஸ்ரீநகரில் 1983-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5, 6, 7-ஆம் தேதிகளில் நடைபெற இருக்கும் மாநாட்டின் முக்கிய நோக்கம், மைய மாநில உறவு பற்றி விவாதிப்பதுதான் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இந்த நிகழ்ச்சி நிரலில் எந்தவித மாற்றமும் இல்லை. தாங்கள் எழுதியிருந்த கடிதத்தில் முக்கியமான சில பிரச்சினைகள் பற்றி குறிப்பிட்டு இருந்தீர்கள். அதுபற்றி நான் சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். ஆனாலும் இந்த நேரத்தில் அதனால் எந்தப் பலனும் ஏற்படாது என நான் எண்ணுகிறேன்.

இதுதான் முக்கியமானது.

நம்முடைய அரசியலமைப்பு இயற்றப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் மைய மாநில உறவு பற்றி மீண்டும் ஆராய வேண்டிய அவசியம் பற்றி நாடு முழுவதும் கடந்த சில காலமாக விவாதிக்கப்பட்டு வந்திருப்பதை தாங்கள் அறிவீர்கள். மைய — மாநில உறவினை வலுப்படுத்தி அதன் மூலம் பொருளாதாரத் தினை மேம்படுத்தவும் நாட்டின் ஒருமைப்பாட்டினைக் கட்டிக் காக்கவும் வேண்டிய இப்போது மாறியுள்ள சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு மைய மாநில உறவினை விவாதிக்க வேண்டு மென்று கூறப்படுகிறது. எனவே தாங்கள் இந்த மாநாட்டிற்கு அன்புகூர்ந்து வந்து கலந்து கொள்ளவேண்டுமென்று வேண்டு கிறேன். மைய மாநிலங்களின் வருங்கால நிர்வாகத்திற்கு வழி வகுக்கும் மைய மாநில உறவு பற்றி ஒருமித்த கருத்தினை இந்த மாநாட்டில் மேற்கொள்ள முயன்றுவருவதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட் டுள்ள அனைவரும் ஒப்புக் கொள்வதற்குட்பட்டு இப்பிரச்சினை தொடர்பான மற்ற எல்லா விஷயங்களையும் இம்மாநாட்டில் தெரிவிக்கலாம். மைய மாநில உறவு இனிமேல் புது வடிவு கொண்டு மிளிர தங்கள் உதவியும் அன்பான கருத்தும் இம் மாநாட்டிற்குப் பெரிதும் உதவுமென நான் நம்புகிறேன்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

இந்தக் கடிதம் நேரடியாகத் தரப்பட்டது.

காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்களுக்கு நான் எழுதிய கடிதம்.

27—9—1983 நாளிட்ட தங்களது கடிதத்தைக் காண்க. இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் திட்டவட்டமான பிரச்சினைகள் பற்றிய விரிவான குறிப்புக்களை நான் அறிந்துகொள்ள விரும்பினேன். ஆனால் தாங்கள் அனுப்பி இருந்த பதிலில், மைய மாநில உறவு பற்றிய மாநாடே இது என்று மீண்டும் கூறியதை தவிர வேறு எதைப்பற்றியும் குறிப்பிடவில்லை.

மைய மாநில உறவு போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பற்றிய பயனுள்ள விதத்தில் விவாதிக்க எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த மாநிலங்களில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டியது அவசியம் என என்னுடைய கடிதத்தில் தெரிவித்திருந்தேன். அதனை தாங்கள் ஏற்றுக்கொண்டீர்களா இல்லையா என்பதைத் தாங்கள் குறிப்பிடவில்லை. இந்த மாநாட்டிற்கு யார் யார் அழைக்கப்படுகின்றனர் என்பதும் எனக்கு இதுவரை தெரியாது. எல்லா மாநிலங்களும் இம்மாநாட்டில் பங்குகொண்டு விவாதிக்காவிட்டால் மைய மாநில உறவு பற்றிய இந்த விவாதம் முழுமை பெறாது. மேலும், பலதரப்பட்ட கட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வது நோக்கமாயிருந்தால் ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும் இம்மாநாட்டிற்கு அழைப்பது மிகவும் அவசியம். ஒரு சில முதலமைச்சர்களை மட்டும் இம்மாநாட்டிற்கு அழைத்திருப்பதோடு தென் மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை அழைக்காதது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை. நான் தெரிவித்துள்ள இப் பிரச்சினைகள் பற்றி உங்களுடைய தெளிவான கருத்தை எனக்குத் தெரிவித்த பின்னரே என்னுடைய கட்சியின் கருத்தினை நான் பெற இயலும். உங்களுடைய கருத்து எனக்குத் தெரியாத வரையில் இந்த மாநாட்டில் என்னால் கலந்து கொள்ள இயலாது.

நான் சம்பந்தப்பட்ட மற்ற முதல்வர்களிடம் விவாதித்த போது இந்தக் கடிதத்தைக் காண்பித்து நான் சொன்னேன். அனைத்து இந்திய மாநிலங்களிலே உள்ள முதல்வர்களைக் கூட்ட வேண்டும். அவர்களுடைய முடிவுகளைப் பெறவேண்டும். வேண்டுமானால், அதற்குப்பிறகு அரசியல் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரையும் கூட்டி ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்த இரண்டு முடிவுகளையும் வைத்து மறுபடியும் முதல் அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி உட்கார்ந்து ஒரு தீர்மானத்தை வடிவாக்கி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி அவர்களுக்கு சொல்லி, நாம் அந்த உரிமைகளைக் கேட்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சியிலே சிலரை விட்டு

1983 நவம்பர் 15] [டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்]

விடுவது, முதல் அமைச்சர்களிலே சிலரை விட்டுவிடுவது, ஒரு கட்சியையே மதிக்காமல் விட்டுவிட்டு, வேறு மாநில முதல் அமைச்சர்கள் என்றால், நம் கொள்கையை ஏற்கிறார்களா, இல்லையா என்பதை இங்கு வந்து சொல்லிவிட்டுப் போகட்டும். அதற்குப் பிறகு நாம் ஒரு முடிவு எடுப்போம். அதற்கு வாய்ப்பு கிடைக்காமல் நாம் மறுபடியும் இதையே பேசிக் கொண்டு இருப்பது என்பது சரியாக இருக்காது. முதல் கூட்டம் நியாயமான கூட்டம் : நியாயமான முடிவு. அதேபோல் டெல்லியிலே நடை பெறவில்லை. விஜயவாடாவிலே நடைபெறவில்லை. ஆகவே, காஷ்மீரில் நடக்கின்ற இந்த மாநாடாவது அனைத்து இந்திய முதல் அமைச்சர்கள் மாநாடு, அல்லது அனைத்து இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் மாநாடு என்று அப்படிக் கூட்டுங்கள், பிரித்துக் கூட்டுங்கள்.

(பிற்பகல் 12—50)

அமைச்சர்களாக இருந்தால் பெரிய பொறுப்பு உண்டு. கட்சித் தலைவர்களாக இருந்தால் வேறு விதத்தில் மிகப் பெரிய பொறுப்பு உண்டு. இரண்டையும் பிரித்து வைக்காமல் அனைவரையும் அழைக்க வேண்டும். எதிர்த்துக் கூறக்கூடியவர்கள் இருப்பார்கள். ஆதரித்துக் கூறக்கூடியவர்கள் இருப்பார்கள். அவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, அவர்களுடைய எண்ணத்தை வெளியிட்டு, அந்தக் கருத்துக்கள் முழுமையாக வெளிப்படுத்தப் பட்டால் தான் இந்த நாட்டுக்கு நல்லது என்று சொன்னேன். அது தான் நிலைமை. அந்த நிலைமையிலேயிருந்து நாங்கள் வழுவ வில்லை. இதுவரையில் அவர்கள் யாருக்கும் தெரிந்திருக்காது. கருணாநிதி அவர்களை அழையுங்கள். நெடுமாறன் அவர்களை அழையுங்கள் தமிழகத்திலிருந்து என்று சொன்னேன். சொல்ல வேண்டிய அவசியம் என்ன ?

இதை விளம்பரப்படுத்த எண்ணியிருந்தால். மற்றவர்களிடம் நல்லபேர் எடுக்க வேண்டும் என்று விரும்பியிருந்தால், அப்போதே இதை வெளியிட்டிருக்கலாம். காஷ்மீர அரசாங்கம் அனுமதிக்கிறவரையில் வெளியிட மாட்டேன் என்று சொல்லியிருந்தேன். இப்போது சட்டசபையில் சொன்னபிறகு. வெளியிலேயும் கூட்டத்திலே வெளியிடலாம். ஆனால், கருணாநிதியைச் சொல்வேன் என்று யாராவது எதிர் பார்த்திருப்பார்களா? நெடுமாறன் அவர்களைச் சொல்வேன் என்று யாராவது எதிர் பார்த்திருப்பார்களா? கம்யூனிஸ்ட் கட்சியினரை அவர்களே அழைத்து விட்டதால், அவர்களைக் கூறவில்லை; மற்றக்கட்சித் தலைவர்களை அழையுங்கள் என்று சொன்னேன். இவ்வளவு நேர்மையாக நான் நடத்துக் கொள்ளும்போது என்மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை. என்றால் நம்பிக்கை உண்டு என்று சொல்ல வைப்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1983 நவம்பர் 15

எதையும் நான் மறைக்கவிரும்பவில்லை. யாருக்கும் பயந்து இந்தக் கடிதத்தை எழுதவில்லை. அனைவரும் எனக்கு நண்பர்கள் தான். ஆந்திர முதல்வர் அவர்கள். கர்நாடக முதல்வர் அவர்கள் அனைவரும் எனக்கு நண்பர்களே, அரசியல் வாழ்வில் அன்பு சகோதரர்கள். ஆனால் பிரச்னை என்று வந்தால் கண்ணகி கோயில் எங்களுக்குத்தான் என்று சொல்வதற்கு நான் பின் வாங்க மாட்டேன். இந்தி மொழி வந்தால், தமிழ் தான் வேண்டும் என்று சொல்ல நான் பின் வாங்க மாட்டேன். அது போன்ற கருத்துக்களில் அண்ணாவின் கொள்கைகளிலிருந்து நான் பின் வாங்க மாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் தம் உரையை முடித்துக்கொண்டு விட்டார்களா ?

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : இன்னும் நிறைய இருக்கிறது. இன்னும் நிறைய பேர்களுக்குப் பதில் சொல்லவே இல்லை. துரைமுருகனுக்கு சொல்லவில்லை, சகோதரி யாசோதா அவர்கள் பேசியிருக்கிறார்கள் அவர்களுக்குச் சொல்ல வில்லை. தாய்மார்களுக்கு கண்டிப்பாக நான் பதில் சொல்லியாக வேண்டும். எனக்கு இன்னும் 2 மணி நேர அவகாசம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்பிக்கையில்லாத் தீர் மானத்தின் மீது விவாதம் நாளை தொடர்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 16—11—1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

218. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை யின் 25—3—1983 ஆம் நாளிட்ட 783 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

50. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு (Patta Pass Book) வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கை (ஆங்கிலம் மற்றும் தமிழாக்கம்).

51. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நில உரிமைப் பதிவேடு (Patta Pass Boop) வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1981) மீதான கூட்டாய்வுத் குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள் (தொகுப்பு II.)

52. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) நகலும், இணைப்பும்.

53. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக் கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுஎண் 51/1983 நகலும், இணைப்பும்.

54. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 52/1983) நகலும், இணைப்பும்.

55. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 53/1983) நகலும், இணைப்பும்.

56. 1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/ 1983) நகலும், இணைப்பும்.

57. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (1 முதல் 200 வரை) (ஐந்தாவது பட்டியல்).

58. தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்பு குழுவின் பதினைந்தா வது ஆண்டறிக்கை (ஏப்ரல் 1980 முதல் மார்ச்சு 1981 வரை) (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I.

286–287-ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க

வரிசை எண்ணும், ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
1. அ. மி. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பசலிக் குட்டை.	1. திரு. டி. என். ராம்செட்டி, த./பெ. நல்ல செட்டியார், திம்மனாமுத் தூர் கிராமம், திருப்பத்தூர் வட்டம். 2. திரு. வி. என். சேன், த./பெ. நல்லா கவுண்டர், பரமுத்தம்பட்டி, திருப்பத் தூர் வட்டம். 3. திரு. கே. அண்ணாமலை, த./பெ. கண்ணன், வெங் கிராபுரம், திருப்பத்தூர், வட்டம். 4. திரு. கே. மாணிக்கம், (அறங்காவலர் குழுத் தலைவர்), த./பெ. கரிய கவுண்டர், பசலிக்குட்டை, திருப்பத் தூர் வட்டம். 5. திரு. மே. பரமசிவம், த./பெ மேச்சேரி கவுண்டர், பர முத்தம்பட்டி, திருப்பத் தூர் வட்டம்.
2. அ. மி. அங்கநாதீஸ்வரர் ஆலயம், மடவாளம்.	1. திரு. டி. ப்மராஜ், த./பெ. துரைசாமி முதலியார், புதுத்தெரு, செவந்தம் பள்ளி, திருப்பத் தூர் வட்டம். 2. திரு. சௌ. கூனன், த.பெ செந்தபையன், மடவாளம் திருப்பத்தூர் வட்டம்.

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
	3. திரு. ஏ. ஆர். சீனிவாசன், த./பெ. ராஜா நைனார், அகரம், திருப்பத் தூர் வட்டம்.
3. அ. மி. தர்மராஜா திருக் கோயில், திருப்பத் தூர் நகரம்.	திரு. டி. கே. ராஜா, த./பெ. கிருஷ்ணசாமி நாயுடு, 46, புதுப்பேட்டை ரோடு, திருப்பத் தூர் வட்டம். 2. திரு. டி. லோகநாதன், த./பெ. தங்கவேல், 9, சுப்பிரமணிய சுவாமி கோயில் தெரு, திருப்பத் தூர். 3. திரு. எம். லோகநாதன், 66, சாமியார் கொட்டாய், திருப்பத் தூர் நகர் மற்றும் வட்டம்.
அ. மி. எல்லையம்மன் திருக்கோயில், ஆம்பூர் கஸ்பா, வாணியம்பாடி, திருப்பத் தூர் வட்டம்.	1. திரு. நடேச செட்டியார், த/பெ. குன்னப்ப செட்டி யார், 22, பரணக்கார தெரு, ஆம்பூர். 2. திரு. வெங்கடேச செட்டி யார், 23, கருமதின்கொல்ல வீதி, ஆம்பூர். 3. திரு. வி. சக்கரவர்த்தி, 15, வாணிய வீதி, கஸ்பா, ஆம்பூர்.
அ.மி. கஜேந்திர வரதராஜ் பெருமாள் கோயில், அக்ரஹாரம்.	1. திரு .எ. கே. சுப்பிரமணி. 2. திரு .எம். பெருமாள் 3. திரு. கே. முனுசாமி. அக்ரஹாரம் கிராமம், வழி புதுப்பேட்டை. 4. திரு. ஏ.எம். கனகராஜ். 5. திரு. எஸ். ராஜூ. அக்ரஹாரம் கிராமம், திருப்பத் தூர் வட்டம்.

188-103—83

[1983 நவம்பர் 15

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
6 அ. மி. ராமச்சந்திர பெருமாள், அச்சமங்கலம்.	1 திரு. ம. மங்குண்டு. 2 திரு. கு. கலைவாணன். 3 திரு. அண்ணாமலை, அச்சமங்கலம் கிராமம்.
7 பட்டாளம்மன் ஆலயம், ஆதியூர்.	1 திரு. கே. விநாயகம். 2 திரு. எம். துரைசாமி முதலியார். 3 திரு. எ. சாமிநாதன், யூர் கிராமம்.
8 சென்னகேசவ மற்றும் லட்சுமி நாராயணப் பெருமாள், அண்ணாண்டபட்டி.	1 திரு. வி. செல்வராஜு. 2 திரு. வி. லோகநாதன். 3 திரு. ஜி. சிவலிங்கம், அண்ணாண்டபட்டி, கப்பலூர் அஞ்சல்.
9 பொன்னியம்மன் ஆலயம், அம்மனாங்கோயில்.	1 திரு. கு. ரங்கப்ப செட்டி, 2 திரு. ம. மைசூர் கவுண்டர். 3 திரு. க. கண்ணன், அம்மணாங்கோயில், புதுப்பேட்டை போஸ்ட்.
10 முத்துவேடியப்பன் மற்றும் ஓங்காரப்பன், ஆவல் நாயக்கன்பட்டி.	1 திரு. சி. கோவிந்தன், கோல்கோரலூர், காக்கங்கரை, போஸ்ட் மற்றும் அஞ்சல். 2 திரு. எஸ். பி. ரங்கசாமி கவுண்டர், கந்திலி கிராமம் மற்றும் அஞ்சல். 3 திரு. கே. அனுமுத்து, பரதேசிபட்டிபாளையம், காக்காங்கரை போஸ்ட்.
11 சென்றாயசாமி, சந்திராபுரம்.	1 திரு. மு. பெருமாள் கவுண்டர். 2 திரு. சி. சென்னப்ப செட்டி, சந்திராபுரம், புதுப்பேட்டை வழி.

[1983 நவம்பர் 15

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
2 சாமுண்டியம்மன், சந்திராபுரம்.	1 திரு. வே. சீனுநாயுடு 2 திரு. கே. சின்னபைய கவுண்டர், சந்திராபுரம் கிராமம், புதுப்பேட்டை வழி.
3 அ. மி. பெருமாள் வகையறா, சின்ன கம்மியம்பட்டு.	1 திரு. போ. ராஜகோபால், பெரிய கம்மியம்பட்டு. ரெட்டியூர், போஸ்ட்.
4 கோபாலகிருஷ்ணசாமி, இலவம்பட்டி.	1 திரு. பி. கோபால் நாயுடு. 2 திரு. எஸ். அப்பாவு கவுண்டர். 3 திரு. எம். கோலன், எல்ரம்பட்டி கிராமம், கொரட்டி அஞ்சல்.
5 மலையம்மன் ஆலையம், ஏலகிரி.	1 திரு. கே. சிவநாதன், 2 திரு. பி. ராஜேந்திரன், 3 திரு. எம். ராமச்சந்திரன், ஏலகிரி கிராமம் மற்றும் அஞ்சல்.
16 சென்னகேசவ பெருமாள், செல்லியம்மன், இலவம் பட்டி.	1 திரு. கே. சிவநாதன், 2 திரு. டி. ராஜேந்திரன், 3 திரு. எம். ராமச்சந்திரன், ஏலகிரி கிராமம் மற்றும் அஞ்சல்.
17 சென்னகேசவசாமி, ஏலகிரி.	1 திரு. எஸ். நடராஜன், 2 திரு. கா. காந்தி, ஏலகிரி கிராமம்.
18 பூங்காவனத்தம்மன், கும்மிடிகாம்பட்டி.	1 திரு. என். டி. துரைசாமி, நார்சாம்பட்டி கிராமம், கந்திலி அஞ்சல்.
19 வேணுகோபாலசுவாமி, கதிரம்பட்டி.	1 திரு. கே. முனியம்மாள், 2. திரு. கே. ஆர். வேணுகோபால் ரெட்டி. 3 திரு. கே. ஆர். முனிசாமி, கதிராம்பட்டி கிராமம், அகரம் அஞ்சல்.

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
20 கட்டேரியம்மன், கட்டேரி.	1 திரு. எஸ். பொன்னுசாமி, பச்சைமிளகாய் வட்டம், அம்மையப்பன் நகர், பக்கிரி தக்கா அஞ்சல். 2 திரு. பலராமன், கட்டேரி. 3 திரு. எம். சென்றாயன், கட்டேரி.
21 செல்லியம்மன், காக்கங் கரை.	1 திரு. கே. பி. பவுன்ராஜ், 2 திரு. கே. கிருஷ்ணன், 3 திரு. ஜி. சாமிநாதன் காக்கங்கரை கிராமம், சுந்தரம்பள்ளி வழி
22 சென்னகேசவ பெருமாள், காக்கங்கரை.	1 திரு. ஜே. சதானந்தம், 2 திரு. டி. வேலாயுதம், காக்கங்கரை கிராமம், சுந்தரம்பள்ளி வழி.
23 சென்னகேசவபெருமாள் கொண்டப்ப நாயக்கன் பட்டி.	1 திரு. கே. ஜி. சுந்தரேசன், 2 திரு. ஆ. (எ) பெரியண்ணன் 3 திரு. கே. கண்ணன், கொண்டப்ப நாயக்கன் பட்டி, நரியனேரி அஞ்சல்.
24 காளத்தீஸ்வரர் கொரட்டி. ஆலயம்,	1 திரு. தனபால். 2 திரு. என். செல்வராஜ். 3 திரு. எ. தங்கவேல், கொரட்டி கிராமம்.
25 சென்னகேசவபெருமாள், குரும்பேரி.	1 திரு. பி. ராஜி கவுண்டர், 2 திரு. கி. ராஜி கவுண்டர், குரும்பேரி கிராமம்.
26 வெங்கட்ரமணபெருமாள் ஆலயம், குனிச்சி.	1 திரு. கே. என். பச்சையப் பன். 2 திரு. கி. வெங்கடேசன், 3 திரு. அப்புனு, குனிச்சி கிராமம்.

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
27 திம்மராயசாமி, கந்திலி ..	1 திரு. கி. வெங்கடாசலம், 2 திரு. கே. நடராஜன், 3 திரு. தி. திம்மராயப்பன், தோப்புலகவுண்டனூர், கந்திலி அஞ்சல், கந்திலி கிராமம்.
28 தர்மராஜா கந்திலி. ஆலயம்,	1 திரு. கே. கி. நல்லவேங்கி, 2 திரு. கே. ஜி. கிருஷ்ண மூர்த்தி, 3 திரு. கே. முனியன், கந்திலி கிராமம், திருப்பத்தூர்.
29 செல்லியம்மன் கொத்தூர். ஆலயம்,	1 திரு. பெரிய கவுண்டர், 2 திரு. மு. முனிராஜி, 3 திரு. கே. கி. சாமிநாதன், கொத்தூர் கிராமம். நாட்ரம்பள்ளி வழி.
30 சென்னகேசவபெருமாள், கந்தகுப்ப கிராமம், கிழக்கு பதனவாடி குரூப்.	1 திரு. எம். சின்னசாமி, கந்தகுப்ப கிராமம், கந்திலி அஞ்சல்.
31 மல்லேஸ்வர மழலைமலை. சுவாமி,	1 திரு. வி. அருணகிரி, 2 திரு. கே. வெங்கடாசலம், 3 திரு. எஸ். நாராயணன், மழலைமலை கிராமம், புதூர் நாடு அஞ்சல். ஜவ்வாது மலை.
32 ஜுரதேஸ்வரர் நத்தம் கிராமம். ஆலயம்,	1 திரு. கே. ஜி. மனோகரன், 2 திரு. என். ஆர். கோபால் சாமி. 3 திரு. என். எ. கண்ணன், நத்தம் கிராமம்.

[1983 நவம்பர் 15]

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)		அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
33 நந்திராயசாமி, பண்டா.	நந்தி	1 திரு. வி. பெருமாள் கவுண்டர், மேல்புதூர் கிராமம், மண்டலநாயனகுண்டா, மதுரா, தோக்கியம் அஞ்சல். 2 திரு. கோ. முனிசாமி, வெலக்கல்நத்தம் அஞ்சல், புதுப்பேட்டை வழி. 3 திரு. சு. முனியன்.
34 பட்டாளம்மன், பெண்டா.	நத்தி	1 திரு. தி. கவுண்டப்பன், 2 திரு. சி. நத்திமலை, 3 திரு. எஸ். அண்ணாமலை, நந்திபெண்டா, வெலக்கல்நத்தம் அஞ்சல்.
35 பெருமாள் ஆலயம், சாம்பட்டி, கும்மிடிகாம் பட்டி குரூப்.	நார்	1 திரு. டி. துரைசாமி, 2 திரு. எஸ். சென்னகவுண் டர், 3 திரு. பி. குன்னன், நார்சாம்பட்டி கிராமம், கந்திலி அஞ்சல்.
36 பெருமாள் ஆலயம், நரி யனேரி.		திரு. எ. சுப்பிரமணியம், நரியனேரி கிராமம் அஞ்சல்.
37 காளத்தீஸ்வரர் ஆலயம் பாரண்டபள்ளி.		1 திரு. பி. கே. நடராஜ முதலியார், 2 திரு. பி. எஸ். செல்வராஜ், 3 திரு. பி. சாம்ராஜ், பாரண்டபள்ளி கிராமம், வழி புதுப்பேட்டை
38 வெங்கடேசபெருமாள், பணியாண்டபள்ளி.		1 திரு. எ. கண்ணப்ப நாயுடு, 2 திரு. பெ. மாணிக்கம், 3 திரு. வி. கண்ணன், பணியாண்டபள்ளி கிராமம்.

1983 நவம்பர் 15]

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)		அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். 2)
39 திம்மராயசாமி பொம்மிகுப்பம்.	ஆலயம்,	1 திரு. பெ. பன்னீர்செல்வம், 2 திரு. ப. கோபா, 3 திரு. என். சிவானந்தம், பொம்மிகுப்பம் அஞ்சல், வழி வெங்களாபுரம்.
40 பொன்னியம்மன், செல்லி யம்மன், கங்கையம்மன் ஆலயங்கள், ராவுத்தம் பட்டி.		1 திரு. பொ. கண்ணன், 2 திரு. சி. சேட்டு, ராவுத்தம்பட்டி, கொரட்டி அஞ்சல்.
41 கோதண்டராமசாமி ஆலயம், ராச்சமங் கலம்.		1 திரு. கோ. வெங்கடாசலம், 2 திரு. கே. சுப்பிரமணி, 3 திரு. ரா. முனிசாமி, ராச்சமங்கலம், வெங்களாபுரம் அஞ்சல்.
42 சோமேஸ்வரசுவாமி ஆலயம், அநேரி கிராமம், ராச்சமங்கலம், மதுரா.		1 திரு. த. திருப்பதி கவுண் டர். 2 திரு. டி. வீராக நாட்டார், அநேரிகிராமம், வெங்களா புரம் வழி.
43 பெருமாள் சுண்ணாம்புக்குட்டை மல்லபள்ளி, மதுரா.	ஆலயம்,	1 திரு. கே. ஆனந்தன். 2 திரு. வி. பாலகிருஷ்ணன், சுண்ணாம்புக்குட்டை, மல்லபள்ளி போஸ்ட்.
44 பெருமாள் சித்தேரி.	ஆலயம்,	1 திரு. எ. முருகேசன். 2 திரு. பி. வீரபத்திரன். 3 திரு. எ. சிவாஜி, சித்தேரி கிராமம், விஷமங்களம். அஞ்சல்.
45 காமாட்சியம்மன் திருப்பத்தூர் நகர்.	ஆலயம்,	1 திரு. டி. ஆர். அன்புக்கரசு, 17, குரும்பர் தெரு, திருப்பத்தூர். 2 திரு. எஸ். குணசீலன், 34, கச்சேரி தெரு, திருப்பத் தூர்.

வரி.

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	[1983 நவம்பர் 15 அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
33 [illegible]	
46 ராமலிங்க சுவாமி அம்மன், திருப்பத்தூர் நகர்.	1 திரு. பழனி செட்டியார் 24, புதுப்பேட்டை ரோடு, 4-ஆவது சந்து, திருப்பத்தூர்.
47 வரதராஜபெருமாள் ஆலயம் (எ) பிரம்மேஸ்வரர் ஆலயம், திருப்பத்தூர் நகர்.	1 திரு. எ. எஸ். ராதாகிருஷ்ணன், 4, சோமன் லட்சுமண அய்யர் வீதி, திருப்பத்தூர் நகர். 2. திரு. ஆர். திருஞானமூர்த்தி 26, கண்டபாணி கோயில் தெரு, திருப்பத்தூர். 3 திரு. டி. எல். லோகநாதன் 8, ஆறுமுக செட்டி ரோடு, வண்டிபாட்டனை, திருப்பத்தூர் நகர்.
34 [illegible]	
35 [illegible] 48 ரேணுகாம்பாள் (எ) சின்னகுளம் மாரியம்மன் ஆலயம், திருப்பத்தூர் நகர்.	1 திரு. எம். ஜெராமசாமி, 13, அரசமரதெரு, திருப்பத்தூர். 2 திரு. டி. பி. வடிவேல், 3 திரு. டி. கி. சிவராஜ் (எ) சொக்கன்.
6 [illegible] 49 பெருமாள் ஆலயம், தாமலேரிமுத்தூர், திருப்பத்தூர் வட்டம்.	1 திரு. பே. பெருமாள், 2 திரு. கி. வி. ஜெராமச்சந்திரன், கோலோரி வட்டம், தாமலேரிமுத்தூர் வழி ஜோலார்பேட்டை.
7 [illegible] 50 சுப்பிரமணியசுவாமி, திருப்பத்தூர் நகர்.	1 திரு. கே. ஜெராமச்சந்திரன் 25, குரும்பர் தெரு, திருப்பத்தூர் நகர்.
51 சுந்தரவிநாயகர் சின்னகடை வீதி, ஆலயம் புத்தூர் நகர்.	1 திரு. பி. என். சிவப்பிரகாசம், 19, பூங்காவனத்தம்மன் கோவில் தெரு, திருப்பத்தூர் நகர். 2 திரு. என். ராதாகிருஷ்ணன் 38, ராசன் வீதி, திருப்பத்தூர் நகர். 3 திரு. டி. கே. செல்வராஜ், கவுதம்மபேட்டை, திருப்பத்தூர்.
38 [illegible]	

1983 நவம்பர் 15] வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர். (1)	அறங்காவலர்கள் பெயரும் விலாசமும். (2)
52 கதிரி நரசிம்மசாமி ஆலயம், மண்டலநாயனகுண்டா, திருப்பத்தூர்.	1 திரு. ஏ. சின்னசாமி. 2 திரு. எஸ். முனிராஜ். 3 திரு. அத்தியூரான் (எ) திம்மராயன், மண்டலநாயனகுண்டா கிராமம், திருப்பத்தூர் வட்டம்.
53 சென்ன கேசவ பெருமாள் ஆலயம், கிழக்கு பதனவாடி, திருப்பத்தூர் வட்டம்.	1 திரு. தி. துரைசாமி. 2 திரு. ஆர். மாணிக்கம். 3 திரு. சி. கண்ணப்பன், கிழக்கு பதனவாடி. திருப்பத்தூர் வட்டம்.
54 லட்சுமி நாராயண பெருமாள் ஆலயம், ஆதிபூர், திருப்பத்தூர் வட்டம்.	1 திரு. கே. விநாயகம். 2 திரு. என். ஆர். வடிவேல். 3 திரு. எம். சுப்பிரமணி.
55 சோமநாதீஸ்வரர், சோமநாத பெருமாள் கரம் கிராமம்.	1 திரு. பி. ஜி. மணிவண்ணன். 2 திரு. எ. சின்னராஜி. 3 திரு. பி. எம். சாமுடி.
56 சாமுண்டி அம்மன் ஆலயம்.	1 திரு. எ. கோவிந்தன். 2 திரு. பி. முனிசாமி. 3 திரு. எ. கண்ணுபையன்.
57 சாமுண்டி அம்மன் நாயனதெருவு கிராமம்.	1 திரு. டி. கனகராஜ். 2 திரு. பி. கோவிந்தசாமி. 3 திரு. என். கோபால்.
58 பம்மாண்டி அம்மன் ஆலயம், லக்கிநாயக்கன்பட்டி.	1 திரு. எம். கண்ணன். 2 திரு. டி. முருகேசன். 3 திரு. எ. முனிசாமி.
59 செல்வ விநாயகர் ஆலயம், காவாய்ப்பட்டரை.	1 திரு. ஆர். வடிவேலு.
60 விநாயகர் ஆலயம், பிச்சனூர் சின்னசமுத்திரம்.	1 திரு. பி. கே. கணபதி, 2 திரு. பி. கிருஷ்ண கவுண்டர் 3 திரு. பி. சிவபெருமாள்.

வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயர் மற்றும் ஊர்.	அறங்காவலர்கள் பெயருரை விவரமும்.
(1)	(2)
61 சென்ன கேசவ பெருமாள் ஆலயம், பேரம்பட்டு.	1. திரு. கே. அண்ணாமலை. 2. திரு. பி. இராமசாமி கவுண்டர். 3. திரு. எ. ராமன்.
62 சுப்பிரமணியசுவாமி ஆலயம், பேரம்பட்டு, திருப்பத்தூர்.	1. திரு. துரை. செல்வராஜ். 2. திரு. எஸ். ஆர். இராமசாமி செட்டியார். 3. திரு. எ. ராமன்.

இணைப்பு II

[295-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க.]

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் சாப்டூர் கிராமத்தில் உள்ள சுந்தரமகாலிங்கம் திருக்கோயில், சந்தன மகாலிங்கம் திருக்கோயில் ஆகிய கோயில்களின் நிர்வாக அலுவலர் அலுவலகங்களைத் தற்போதுள்ள வத்திராயிருப்பில் இருந்து சாப்டூருக்கு மாற்றும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா என்பது பற்றிய குறிப்பு —

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம், சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி ஆலய தொகுப்பில் கீழ்க்கண்ட ஆலயங்கள் உள்ளன : —

ஆலயங்களின் பெயர் ஊர் —

1. அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயம், சதுரகிரி, மதுரை மாவட்டம்.

2. அருள்மிகு ஆத்தங்கரை சித்தி விநாயகர் ஆலயம், வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம்.

3. அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி ஆலயம், வத்திராயிருப்பு, இராமநாதபுரம்.

1983 நவம்பர் 15]

4. அருள்மிகு முத்தாலம்மன் ஆலயம், வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம்.

5. அருள்மிகு சேதுநாராயண பெருமாள் ஆலயம், வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம்.

மேற்படி தொகுப்பு ஆலயங்களில் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி ஆலயம், மதுரை மாவட்டத்திலும் இதர நான்கு ஆலயங்கள் இராமநாதபுரம் மாவட்டம், வத்திராயிருப்பு கிராமத்திலும் உள்ளது. இந்த ஐந்து ஆலயங்களின் செயல் அலுவலரின் தலைமையிடம் இராமநாதபுரம் மாவட்டம் வத்திராயிருப்பு கிராமத்தில் உள்ளது.

1. மேற்படி ஆலயங்களின் நிர்வாக அதிகாரியின் தலைமையிடத்தினை ஒரு மாவட்டத்திலுள்ள கிராமத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திலுள்ள கிராமத்திற்கு (அதாவது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வத்திராயிருப்பு கிராமத்திலிருந்து மதுரை மாவட்டத்திலுள்ள சாப்டூர் கிராமத்திற்கு) மாற்றும் போது ஆலயங்களின் தொகுப்பினையும் இரு பிரிவாக பிரிக்க வேண்டியுள்ளது.

	வருமானம் (ரூபாய்.)
1. அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயம், சதுரகிரி, மதுரை மாவட்டம்	23,071
2. அருள்மிகு ஆத்தங்கரை அனுமார் ஆலயம் மற்றும் இதர மூன்று ஆலயங்கள், வத்திராயிருப்பு, இராமநாதபுரம்	18,045

2. மதுரை மாவட்டம் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயத்துடன் இப்போதுள்ள இதர நான்கு ஆலயங்களை யும் பிரித்து இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் ஆலயத்துடன்தான் இணைக்கவேண்டும். மேற்படி நான்கு ஆலயங்களுக்கு மட்டும் வருமானம் ரூபாய் 18,045 இதற்கு ஒரு தனி நிர்வாக அதிகாரி நியமனம் செய்ய இயலாது. இது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

3. மேற்படி நான்கு ஆலயங்களை பிரித்த பின்பு மதுரை மாவட்டம் சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயத்தின் ஆண்டு வருமானம் மட்டும் ரூபாய் 23,071 ஆகும். எனவே, மேற்படி ஒரு ஆலயத்திற்கு மட்டும் தனியாக செயல் அலுவலர் நியமனம் செய்தால் அவரது சம்பளம் மற்றும் இதர படிகளை இந்து சமய அற நிலையங்கள் சட்டம் பிரிவு 12-இன்கீழ்

திருப்ப செலுத்துவதில் சிரமங்கள் எழக்கூடும். எனவே, அருகி
லுள்ள உசிலம்பட்டி வட்டம் மேல திருமாணிக்கம் அருள்மிகு
மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு சட்டப் பிரிவு 45(1)-இன்
கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்து சதுரகிரி அருள்மிகு
சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயத்தின் தொகுப்பு ஆலயமாக்கும்
செயற்குறிப்பு ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

4. மேலும், தற்போது தலைமையிடத்தை மாற்றம் செய்
யக் கேட்டுக் கொண்டுள்ள சாப்டூரில், ஆலயம் ஏதும் இல்லை.
ஆலயம் இல்லாத ஒரு ஊரில் செயல் அலுவலரின் அலுவலகத்தை
மட்டும் வைத்துக் கொள்வது என்பது அவ்வளவு பொருத்தமாக
தோன்றவில்லை. எனவே, தற்போது திருமாணிக்கத்தில்
உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை இத்துடன்
இணைத்து தொகுப்பு ஆலயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருவதாலும், மேற்படி ஆலயம் உள்ள மேல திருமாணிக்கம்
கிராமம் சாப்டூரிலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் உள்ளபடி
யாலும் சதுரகிரி சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயச் செயல் அலு
வலரின் அலுவலகத்தை வத்திராயிருப்பிலிருந்து மாற்றம் செய்து
மேல திருமாணிக்கம் கிராமத்தில் வைத்துக் கொள்வது குறித்து
பரிசீலனையில் உள்ளது.

சதுரகிரியில் அருள்மிகு சந்தனமகாலிங்க சுவாமி ஆலயம்
என்று ஒன்று சதுரகிரி மலையில், அருள்மிகு சுந்தரமகாலிங்க
சுவாமி ஆலயத்திலிருந்து மலை மீது 2 மைல் தொலைவில் அமைந்
துள்ளது. மேற்படி ஆலயத்தின் நிர்வாகம், நியமனம் செய்யப்
பட்ட அறங்காவலர்களால் நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி
ஆலயத்தின் உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூபாய் 1,312.
மேற்படி ஆலயத்திற்கு திருவிழாக் காலங்களில் மட்டுமே பக்தர்
கள் சென்று வருகிறார்கள். மேற்படி ஆலயத்தின் நிர்வாகத்
திற்கும், சதுரகிரி அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி ஆலயத்தின்
நிர்வாகத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனவும் தெரி
வித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு III.

299-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க.]

சிவபுரத்திலுள்ள அருள்மிகு சிவகுருநாத சுவாமி ஆலயத்தில்
திருடு போனதாக எனும் திருடு போனதில்லை எ. ஆனால், சிவபுரம் கிரா
மத்தில் சர்வே எண். 407/6-இல் உள்ள நிலத்தை தோண்டும்
போது தடராஜர், திருஞானசம்பந்தர், சோமாஸ்கந்தர்,
பிரளயபரர், சுவுரி அம்மன், சிவகாமி அம்மன் ஆகிய 6 சிலைகள்
கண்டெடுக்கப்பட்டன. இவைகள் சிவபுரம் சிவகுருநாத சுவாமி

ஆலயத்தினைச் சேர்ந்தவை என்று தெரிய வந்து, மேற்படி கோயில்
நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சிலைகளை பழுது
நீக்கி புதுப்பித்துத்தர, கும்பகோணத்தைச் சேர்ந்த இராமசாமி
ஸ்தபதி என்பவரிடம் 1954-ல் ஒப்படைக்கப்பட்டது. இராம
சாமி ஸ்தபதியும் மற்றும் சிலரும் சேர்ந்து பிள்ளையார் சிலை
தவிர மற்ற ஐந்து சிலைகளுக்குப் பதில் மாற்று சிலைகள் செய்து
ஆலயத்திடம் கொடுத்து விட்டனர். நடராஜர் சிலை விற்கப்
பட்டு தற்போது அமெரிக்காவில் நார்ட்டன் சைமன் நிறுவனத்தில்
இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. மத்திய அரசும் நியூயார்க்
கில் உள்ள நார்ட்டன் சைமன் நிறுவனமும் செய்து கொண்ட
ஒப்பந்தத்தின்படி 1986 ஆம் ஆண்டு மே மாதம் நடராஜர் சிலை
இந்தியாவுக்கு திரும்பக் கிடைக்கப் பெறும். மற்ற சிலைகள் பற்
றிய எந்த தகவலும் தெரியவில்லை.

இணைப்பு IV.

(310-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க.)

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் கன்னியாகுமரி மாவட்ட
ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்திடமிருந்து ஒரு மனு
அரசுக்குக் கிடைக்கப் பெற்றது. அம்மனுவில் அரசு ரப்பர்த்
தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்களிட
மிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வருங்கால வைப்பு நிதித்
தொகைக்கான ரசீதுகள் தரப்படவில்லை என்று புகார் செய்யப்
பட்டிருந்தது. இம் மனுவின் நகல் ஒன்றினை வட்டார வருங்
கால வைப்பு நிதி ஆணையாளருக்கு அனுப்பி உரிய நடவடிக்கை
எடுக்கவும், சங்கத் தலைவருக்கு பதில் ஒன்றினை அனுப்புமாறும்
கேட்டுக் கொள்ளப்பட்டது.

2. வனத் துறைத் தலைவரின் கீழ் இயங்கி வரும் அரசு ரப்பர்த்
தோட்டங்களுக்கு 1952 ஆம் ஆண்டின் தொழிலாளர் வருங்கால
வைப்பு நிதி மற்றும் பல்வகைச் சட்ட விதிகள் 1970 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்கள் முதல் அமுல் செய்யப்பட்டது. அதன் பின்
னர் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசு உரு
வாக்கிய தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவித் தொகை
பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் இத்தொழிலாளர்
கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதால், இவர்களுக்கு 1952 ஆம் ஆண்
டின் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசின் தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவித்
தொகை பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் இவர்கள்
உறுப்பினர்களாக்கப்பட்டுள்ளார்கள். இந்நிதித் திட்டத்தினைச்
சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள முதுநிலைக்
கணக்கு அலுவலர் நிர்வகித்து வருகிறார்.

3. நாகர்கோவில் வனத் துறை தலைவரின் கண்காணிப்பின் கீழ் அரசு ரப்பர்த் தோட்டங்கள் கிழக்கு, மேற்கு என்று இரண்டு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மொத்தம் 2,270 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

கிழக்கு வட்டம் —

1. கீரிப்பாறை ரப்பர்த் தோட்டம்.
2. கீரிப்பாறை ரப்பர்த் தொழிற்சாலை.
3. பரளியாறு.
4. காளிகேசம்.
5. மணலோடை.

மேற்கு வட்டம்—

1. மைலாறு.
2. மருதம்பாறை.
3. சித்தாறு.
4. கல்லாறு.
5. சூதியாறு.

மேற்கண்ட பிரிவுகளில் உள்ள ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வருங்கால வைப்பு நிதிக் கணக்கு ரசீது கள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

1. சித்தாறு பிரிவு	1979-80 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.
2. கன்னியாகுமரி அரசு ரப்பர்த் தொழிற்சாலை.	1979-80 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.
3. கீரிப்பாறை பிரிவு	1979-80 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.
4. மணலோடைப் பிரிவு.	1977-78 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.
5. மருதம் பாறை பிரிவு.	1980-81 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.
6. சூதியாறு பிரிவு	1979-80 ஆம் ஆண்டு வரையிலான	கணக்கு ரசீதுகள்.

கல்லாறு பிரிவு, காளிகேசம் பிரிவு மற்றும் மைலாறு பிரிவுகளில் இருந்து விவர அட்டவணைகள் கிடைக்கப் பெறாததாலும், பணம் குறைவாகக் கட்டப்பட்டிருப்பதாலும் தொழிலாளர்களுக்கு கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநரால் கணக்கு ரசீதுகள் வழங்கப்படவில்லை. பரளியாறு பிரிவிலிருந்து தொழிலாளர்கள் பற்றிய அறிக்கைகள், பணம் கட்டிய விவரங்கள் போன்றவை இன்னும் வரவில்லையாதலால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இது குறித்து நினைவூட்டு ஒன்றினை கருவூலம் மற்றும் கணக்குத் துறை அலுவலர் அனுப்பியுள்ளார்.

அரசு ரப்பர்த் தோட்டங்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கைத் தொகுக்கும்போது கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்பட்டன :—

(1) தொழிலாளர் துறை நியமனப் படிவம், அறிக்கை போன்றவை கிடைக்கப் பெறவில்லை. கணக்கு எண்கள், ரசீது முதலியவை வழங்க இவ்விவரங்கள் தேவை.

(2) பணம் பிடித்தம் செய்யப்பட்டதற்கான அட்டவணைகள் எந்தப் பிரிவில் இருந்தும் முழு வடிவத்தில் கிடைக்கப் பெறவில்லை. பன்னிரண்டு மாதங்களுக்குமான இவ்வட்டவணைகள் கிடைத்தால்தான் ஓர் ஆண்டிற்கான கணக்குகளைத் தொகுக்க இயலும். பிரிவு அலுவலர்கள் சில மாதங்களில் பணத்தைக் கட்டவில்லை. அவர்கள் பணம் கட்டியிருந்தால் ஒட்டு மொத்தமாகக் கட்டியுள்ளனர். இதற்கான விவரங்கள் மாத வாரியாகக் கொடுக்கப்படவில்லை. தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் தொகை 65/6 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக தொகை 11/6 சதவீதம்—வகையில் பிரிவு அலுவலர்கள் பணம் கட்டியதற்கான பங்குகள் பிரித்துக் காட்டப்படவில்லை.

மேற்கூறிய குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி நாகர்கோவிலி உள்ள வனத் துறைக் கர்ப்பாளருக்குக் கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர் கடிதம் எழுதியுள்ளார். சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களிடமிருந்து இதற்கான முழு விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், இதுவரை வழங்கப்படாத தொழிலாளர்களுக்கு கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநரால் வருங்கால வைப்பு நிதித் தொகைக்கான கணக்கு ரசீதுகள் வழங்கப்படும்.

இணைப்பு V.

[318-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான 9237-க்கான விடையைக் காண்க.]

சேலத்தில் உள்ள உருளை மாவு ஆலைகளுக்கு 1981—ஆண்டு வழங்கப்பட்ட கோதுமையின் அளவும் அவை உற்பத்தி செய்த விவரமும்.

(1)	சேலம் உருளைமாவு ஆலை. (2)	கிருஷ்ணப்ப உருளைமாவு ஆலை. (3)	ப்ரீமியர் உருளைமாவு ஆலை. (4)	ரத்தினா உருளைமாவு ஆலை. (5)
1. 1—5-1981இல் கோதுமையின் ஆரம்ப இருப்பு.	283.726	16.536	..	622.90
2. மே 1981-க்கான ஒதுக்கீடு ..	1,906.000	750 மெ. ட.	602 மெ. ட.	592 மெ.ட.
3. ஏப்ரல் ஒதுக்கீட்டில் மே மாதத்தில் எடுக்கப்பட்ட கோதுமையின் அளவு—				
முதல் வாரம்	217.488	64.000	51.199	52.000
இரண்டாவது வாரம் ..	258.057	115.000	89.714	87.853
மூன்றாவது வாரம்	594.605	237.639	163.822	198.398
நான்காவது வாரம்	835.454	333.333	297.219	254.715
மொத்தம் ..	1,905.604	749.972	601.954	592.966

(1)	சேலம் உருளைமாவு ஆலை. (2)	கிருஷ்ணப்ப உருளைமாவு ஆலை. (3)	ப்ரீமியா உருளைமாவு ஆலை. (4)	ரத்தினா உருளைமாவு ஆலை. (5)
4 மே மாத ஒதுக்கீட்டில் எடுக்கப்பட்ட அளவு	..	..	..	..
5 மே மாதத்தில் அரைத்த கோதுமையின் அளவு :—				
முதல் வாரம்	314.530	75.612	51.199	67.230
இரண்டாவது வாரம் ..	287.980	113.758	42.442	107.850
மூன்றாவது வாரம் ..	397.900	87.278	121.272	98.290
நான்காவது வாரம்	412.460	297.946	183.200	144.630
மொத்தம்	1,412.870	574.594	398.113	418.00
6 மே மாதத்தில் ஆலைகள் இயங்காத நாட்கள் (விடுமுறை நாட்கள் நீங்கலாக)	1 நாள்	8 நாட்கள்	9 நாட்கள்	5 நாட்கள்
7 காரணம்	இயந்திரக் கோளாறு.	கோதுமை இருப்பு இல்லை.	கோதுமை இருப்பு இல்லை.	இயந்திரக் கோளாறு.

இணைப்பு VI.

331-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க.)

ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், பழனி, வட்டம், மதுரை மாவட்டம்.

வரிசை எண்ணும், சங்கத்தின் பெயரும்.	பதிவு எண்.	பதிவு செய்யப்பட்ட நாள்.	பயன் பெற்றோர்.	கடன் தொகை.	மானியத் தொகை.	வாங்கிய ஆடுகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
				(ரூபாய்)	(ரூபாய்)	
1 பெரியகளையம் புதூர்.	(எ.எச்.டி. 78)	19-1-77	171	4,28,000	1,22,416	3,591
2 காட்டுப்பட்டி	(எ.எச்.டி. 32)	21-4-79	15	60,000	19,450	315
3 அய்யம்புளி கரும்பப்பட்டி.	(எ.எச்.டி.59)	12-9-80	53	2,12,000	66,662	1,325
4 கீரனூர் ..	(எ.எச்.டி. 61)	22-11-80	60	2,40,000	79,980	1,500
5 அம்பளிகை ..	(எ.எச்.டி. 108)	18-7-81	101	4,01,000	..	2,121
6 புளியம்பட்டி ..	(எ.எச் டி. 77)	19-1-77	..	ஐ.ஓ.பி. வங்கி.	..	..
7 ஆய ..	(எ.எச்.டி.71)	22-11-80	..	ஷி	..	..
8 கணக்கன்பட்டி	(எ.எச்.டி. 94)	22-11-80	..	ஷி	..	..

வரிசை எண்ணும், சங்கத்தின் பெயரும்.	பதிவு எண்.	பதிவு செய்யப்பட்ட நாள்.	பயன் பெற்றோர்.	கடன் தொகை.	மானியத் தொகை.	வாங்கிய ஆடுகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
9 கேதையுறம்பு	(எ.எச்.டி.115)	25-8-81	..	*இந்திய வங்கி.	..	..
10 அப்பியபாளையம்.	(எ.எச்.டி.113)	25-8-81	..	*கூட்டுறவு வங்கி.	..	..
11 புங்கமுத்தூர்	(எ.எச்.டி.114)	25-8-81	..	ஷி	..	..
12 கரியாம்பட்டி	(எ.எச்.டி.111)	16-9-81	..	ஷி	..	..
13 எஸ். அத்திக் கோம்பை.	(எ.எச்.டி.119)	30-9-81	..	*ஐ.ஓ.பி. வங்கி.	..	..
14 பெத்தேல்புரம்	(எ.எச்.டி.120)	30-9-81	..	*இந்தியவங்கி	..	..
15 ஓடைப்பட்டி	(எ.எச்.டி.121)	1-10-81	..	ஷி	..	..
16 கே. அத்திக் கோம்பை.	(எ.எச்.டி.122)	30-9-81	..	*லட்சுமி விலாஸ் வங்கி.	..	..

* கடன் உதவிக்கு ஏற்பாடு.

[349-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுகளான விடையைக் காண்க]

பரிசை எண்ணும் நாதுவின் பெயரும்.	இடம்.		மூல. இ அளவு.	தரம்.	கனிமத்தை தோண்டி எடுக்கும் நிறுவனத்தின் பெயர்.	குறிப்புரை.
	கிராமம்.	வட்டம்.				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 அடிப்படை உலோகங்கள் (செம்பு, சயம், துத்தநாகம்).	மாமண்டூர்	கள்ளக்குறிச்சி	1 மில்லியன் டன்கள்.	0.6 சதவீதம் செம்பு 2 சதவீதம் சயம். 2.7 சதவீதம் துத்தநாகம்.	..	பாரத தங்க வயல் நிறுவனம் சுரங்க சோதனைகளை மேற்கொண்டது.
2 மழுப்பு நிலக்கரி.	நெய்வேலி ..	விருத்தாசலம் சிதம்பரம் கடலூர்.	3,000 மில்லியன் டன்கள்.	22.2 சதவீதம் அளவு கார்பன 24.8 சதவீதம் ஆவியாகும் மேட்டர். 3 சதவீதம் சாம்பல் (Ash) 50 சதவீதம் ஈரக்கசிவு.	நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன்.	இரண்டாவது சுரங்க வேலை நடைபெற்று வருகிறது.
3 கனிமண் ..	குறுக்கை மெருலுப்பு சேருப்பு மளிகம்பட்டு மேலமாம்பட்டு பனிக்குப்பம் திருவடிபாளையம் விளையல்பட்டு வேதாரண்யம்குப்பம் வானமாதேவி சூரியம்பட்டி சிட்டக்குப்பம். மேலரெட்டிப்பாளையம் திருவேடிபுரம்.	கடலூர் பண்ருட்டி திண்டிவனம்.	ஏறக்குறைய 3 மில்லியன் டன்கள்.	ஆர். 23, 30–33 சதவீதம் FC. 203 2,5–4.9 சதவீதம். SI 02 50–53 சதவீதம்	தமிழ்நாடு மினரல்ஸ் தொழில் நிறுவனம். தமிழ்நாடு கனிம நிறுவனம் டால்மியா இண்டஸ்ட்ரியஸ்.	..
4 வெப்பந்தாங்கும் களிமண்.	திருவாக்கரை குமிளம்பட்டு ஒதுக்கீடு காடு.	திண்டிவனம்	டன்கள். 2·5 லட்சம்	..	தனியார் சுத்தகைதாரர்கள் கனிமங்களைத் துறுவுகிறார்கள்	..
5 வெள்ளைக் களிமண்.	நெய்வேலி ..	விருத்தாசலம்	..	பீங்சான் தொழிலுக்கு ஏற்றது.	நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன்.	..
6 சுண்ணாம்புக்கல்	வலுதலூர் துருவை ஆகாசப்பட்டு ராயப்புதுக்குப்பம் ஆலப்பாக்கம் அகஸ்திக்காடு அவாமண்டி வானூர், இராசேதாரப்பட்டு	விழுப்புரம் திண்டிவனம்.	2.5 மில்லியன் டன்கள்	தரக்குறைவு சுண்ணாம்பு எரிப்பு, சுண்ணாம்பு காரைக்கு தகுதியானவை.	..	கடல் கிளிஞ்சல் சுண்ணாம்புக்கல்.

வரிசை எண்ணும், தாதுவின் பெயரும்.	இடம்.		மூல அளவு.	தரம்.	கனிபத்தை தோண்டி எடுக்கும் நிறுவனத்தின் பெயர்.	குறிப்புரை.
	கிராமம்.	வட்டம்.				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
	திருமாநல்லூர்.		2.0 மில்லியன்.	டி	..	தெளிந்த சுண்ணாம்புக் கற்கள்.
7 கிளிஞ்சல் சுண்ணாம்பு.	மரக்காணம் கண்டாடு.	திண்டிவனம்	2.0 இலட்சம் டன்கள்.	..	..	..
8 கண்ணாடி மணல்	மரக்காணம் அகரம், ஒதுக்கீடு சாடு.	..	7.0 மில்லியன் டன்கள்.	கண்ணாடி செய்வதற்கு.	தமிழ்நாடு கனிம நிறுவனம்.	நீலக்கற்கள் கள்ளக்குறிச்சி திண்டிவனம் வட்டங்களில் கிடைக்கிறது.
9 கருப்புக் கற்கள்	குன்னம் ..	டி	..	மெருகிடுவதற்கு நல்ல தர முள்ளது.	..	..
0 இரும்புத்தாது	போலிக்குன்னம் குன்று. மன்மாளவிகுன்று காவன்காடு மலை ராட்டநல்லூர் குன்று நெடுமணலூர் குன்று.	..	..	35—52 சத விதம் இரும்பு.	..	..

இணைப்பு VIII.

352–ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினாவுக்கான விடையைக் காண்க).

(அ) சேலம் மாவட்டத்தில் வறட்சி பகுதி திட்டம் அமுல் படுத்தப்படவில்லை. சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டங்களின் கீழ் செலவு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரம் பின் வருமாறு :—

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்.

வருடம்.	வட்டாரத்தின் பெயர்.	தொகுதியின் பெயர்.	செலவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1975–76	1 வாழப்பாடி.	ஏற்காடு.	25.30	வட்டார அளவில்
	2 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி.		செலவு கணக்கு வைக்கப் படவில்லை,
	3 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்.		எனவே ஆண்டிற் கான மொத்தச்
	4 சேலம்	சேலம் 1,11		செலவு கொடுக்கப் பட்டுள்ளது.
	5 ரவீபாண்டி.	வீரபாண்டி		

வருடம்.	வட்டாரத்தின் பெயர்.	தொகுதியின் பெயர்.	செலவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4) (ரூபாய் இலட்சத்தில்).	(5)
1976–77	1 வாழப்பாடி.	வாழப்பாடி	25.12	வட்டார அளவில் கணக்கு வைக்கப் படவில்லை. எனவே ஆண்டிற் கான மொத்த செலவு கொடுக் கப்பட்டுள்ளது.
	2 ஆத்தூர்	ஆத்தூர்		
	3 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர் சேலம் 1, மற்றும் 11 பனமரத்துப்பட்டி		
	4 சேலம்			
	5 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி		
	6 பனமரத்துப்பட்டி	வீரபாண்டி.		
	7 வீரபாண்டி.	தலைவாசல்.		
	8 கங்கவல்லி	தலைவாசல்		
	9 தலைவாசல்	ராசிபுரம்		
	10 நாமகிரிப்பேட்டை	ஓமலூர்		
	11 ஓமலூர்	எடப்பாடி.		
	12 மகுடஞ்சாவடி.			
1977–78	1 வாழப்பாடி.	வாழப்பாடி.	29.49	வட்டார அளவில் செலவு கணக்கு வைக்கப்பட வில்லை. எனவே ஆண்டிற்கான மொத்தச் செலவு கொடுக்கப் பட்டுள்ளது.
	2 ஆத்தூர்	ஆத்தூர்		
	3 பெத்தநாயக்கன் பாளையம்.	ஆத்தூர் சேலம் 1, மற்றும் 11 பனமரத்துப்பட்டி		
	4 சேலம்			
	5 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி		
	6 பனமரத்துப்பட்டி.	வீரபாண்டி.		
	7 வீரபாண்டி			

வருடம்.	வட்டாரத்தின் பெயர்.	தொகுதியின் பெயர்.	செலவு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4) (ரூபாய் இலட்சத்தில்.)	(5)
	8 கங்கவல்லி	தலைவாசல்		
	9 தலைவாசல்	தலைவாசல்		
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்		
	11 ஓமலூர்	ஓமலூர்		
	12 மகுடஞ்சாவடி	எடப்பாடி.		
1978–79	1 வாழப்பாடி	வாழப்பாடி	37.21	ட்டார அளவில் செலவு கணக்கு வைக்கப்பட வில்லை. எனவே ஆண்டிற்கான மொத்தச்செலவு கொடுக்கப் பட்டுள்ளது.
	2 ஆத்தூர்	ஆத்தூர்		
	3 பெத்தநாயக்கன் பாளையம்.	ஆத்தூர் சேலம் 1, 11 பனமரத்துப்பட்டி		
	4 சேலம்			
	5 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி		
	6 பனமரத்துப்பட்டி	வீரபாண்டி		
	7 வீரபாண்டி	தலைவாசல்		
	8 கங்கவல்லி	தலைவாசல்		
	9 தனலவாசல்	ராசிபுரம்		
	10 நாமக்கிப்பேட்டை	ஓமலூர்		
	11 ஓமலூர்	எடப்பாடி		
	12 மகுடஞ்சாவடி			

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர். (3)	செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்).	குறிப்பு. (5)
1979–80	1 வாழப்பாடி.	வாழப்பாடி.	17.21	வட்டார அளவில் செலவு கணக்கு வைக்கப்பட வில்லை, எனவே ஆண்டிற்கான மொத்தச்செலவு தொடுக்கப் பட்டுள்ளது.
	2 ஆத்தூர்	ஆத்தூர்		
	3 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்		
	4 சேலம்	சேலம் 1 மற்றும் 11		
	5 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி		
	6 பனமரத்துப்பட்டி.	பனமரத்துப்பட்டி		
	7 வீரபாண்டி	வீரபாண்டி		
	8 கங்கவல்லி	தலைவாசல்		
	9 தலைவாசல்	தலைவாசல்		
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்		
	11 ஓமலூர்	ஓமலூர்		
	12 மகுடஞ்சாவடி.	எடப்பாடி.		

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1978–79	1 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி	2.55	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் சேலம் மாவட்டத்தில் 1978–79-ல் 12 வட்டாரங் களில் அமுல் நடத்தப்பட்டது.
	2 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்	2.58	
	3 தலைவாசல்	தலைவாசல்	2.75	
	4 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	2.22	
	5 வாழப்பாடி	ஏற்காடு	2.50	
	6 ஆத்தூர்	ஆத்தூர்	2.05	
	7 கங்கவல்லி	தலைவாசல்	2.64	
	8 ராசிபுரம்	ராசிபுரம்	2.11	

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர் (3)	செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்).	குறிப்பு. (5)
1978–79	9 சேந்தமங்கலம்	சேந்தமங்கலம்	2.10	
	10 எலச்சிப்பாளையம்	சங்கரி	1.89	
	11 மல்லசமுத்திரம்	சங்கரி	2.11	
	12 கொளத்தூர்	மேட்டூர்	2.00	
			27.50	
1979–80	1 அயோத்தியா பட்டினம்.	பனமரத்துப்பட்டி	3.88	இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 10 இலட்சம் மார்ச் மாத முடிவில் ஒதுக்கீடு செய்யப் பட்டதால் அவ்வளவு தொகையையும் செய்ய இயல வில்லை.
	2 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்	2.13	
	3 தலைவாசல்	தலைவாசல்	3.48	
	4 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	4.70	
	5 வாழப்பாடி	ஏற்காடு	3.17	
	6 ஆத்தூர்	ஆத்தூர்	2.69	
	7 கங்கவல்லி	தலைவாசல்	2.43	
	8 ராசிபுரம்	ராசிபுரம்	2.00	
	9 சேந்தமங்கலம்	சேந்தமங்கலம்	0.79	
	10 எலச்சிப்பாளையம்	சங்கரி	1.41	
	11 மல்லசமுத்திரம்	சங்கரி	1.31	
	12 கொளத்தூர்	மேட்டூர்	0.70	
	13 திருச்செங்கோடு	திருச்செங்கோடு	1.59	
	14 புதுச்சத்திரம்	சேந்தமங்கலம்	1.60	
	15 கடையம்பட்டி	ஓமலூர்	..	
			31.88	

(இ) 1975–76 முதல் 1979–80-ஆம் ஆண்டுகள் வரை இத்திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒதுக்கீடு பின்வருமாறு :—

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர். (3)	செலவு. (4) (ரூபாய் இலட்சத்தில்).	குறிப்பு. (5)
1975–76	1 வாழப்பாடி	ஏற்காடு	25.00	
	2 அயோத்தியா பட்டினம்	பனமரத்துப்பட்டி		
	3 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்		
	4 சேலம்	சேலம் 1 மற்றும் 11		
	5 வீரபாண்டி	வீரபாண்டி		
1976–77	1 வாழப்பாடி	வாழப்பாடி	26.00	
	2 ஆத்தூர்	ஆத்தூர்		
	3 பெத்தநாயகன் பாளையம்.	ஆத்தூர்		
	4 சேலம்	சேலம் 1 மற்றும் 11		
	5 அயோத்தியா பட்டினம்	பனமரத்துப்பட்டி		
	6 பனமரத்துப்பட்டி	பனமரத்துப்பட்டி		
	7 வீரபாண்டி	வீரபாண்டி		
	8 கங்கவல்லி	தலைவாசல்		
	9 தலைவாசல்	தலைவாசல்		
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்		
	11 ஓமலூர்	ஓமலூர்		
	12 மகுடஞ்சாவடி	எடப்பாடி		

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர் (3)	மத்திய அரசு ஒதுக்கீடு. (4) (ரூபாய் இலட்சத்தில்)
1977–78	1 வாழப்பாடி	வாழப்பாடி	28.00
	2 ஆத்தூர்	ஆத்தூர்	
	3 பெத்தநாயகன்பாளையம்	ஆத்தூர்	
	4 சேலம்	சேலம் 1 மற்றும் 11	
	5 அயோத்தியாபட்டினம்	பனமரத்துப்பட்டி	
	6 பனமரத்துப்பட்டி	பனமரத்துப்பட்டி	
	7 வீரபாண்டி	வீரபாண்டி	
	8 கங்கவல்லி	தலைவாசல்	
	9 தலைவாசல்	தலைவாசல்	
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	
	11 ஓமலூர்	ஓமலூர்	
	12 மகுடஞ்சாவடி	எடப்பாடி	
1978–79	1 வாழப்பாடி	வாழப்பாடி	37.00
	2 ஆத்தூர்	ஆத்தூர்	
	3 பெத்தநாயகன் பாளையம்	ஆத்தூர்	
	4 சேலம்	சேலம் 1 மற்றும் 11	
	5 அயோத்தியாபட்டினம்	பனமரத்துப்பட்டி	
	6 பனமரத்துப்பட்டி	பனமரத்துப்பட்டி	
	7 வீரபாண்டி	வீரபாண்டி	
	8 கங்கவல்லி	தலைவாசல்	
	9 தலைவாசல்	தலைவாசல்	
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	
	11 ஓமலூர்	ஓமலூர்	
	12 மகுடஞ்சாவடி	எடப்பாடி	

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர். (3)	மத்திய அரசு ஒதுக்கீடு. (4) (ரூபாய் இலட்சத்தில்.
			7.5
1979–80	1 வாழப்பாடி	வாழப்பாடி	
	2 ஆத்தூர்	ஆத்தூர்	
	3 பெத்தநாயகன்பாளையம்	ஆத்தூர்	
	4 சேலம்	சேலம் I மற்றும் II	
	5 அயோத்தியாபட்டினம்	பனமரத்துப்பட்டி	
	6 பனமரத்துப்பட்டி	பனமரத்துப்பட்டி	
	7 வீரபாண்டி	வீரபாண்டி	
	8 கங்கவல்லி	தலைவாசல்	
	9 தலைவாசல்	தலைவாசல்	
	10 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	
	11 ஓமலூர்	ஓமலூர்	
	12 மகுடஞ்சாவடி	எடப்பாடி.	
	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.		
1978–79	1 அயோத்தியாபட்டினம்	பனமரத்துப்பட்டி	11.50
	2 பெத்தநாயகன்பாளையம்	ஆத்தூர்	
	3 தலைவாசல்	தலைவாசல்	
	4 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	
	5 வாழப்பாடி	ஏற்காடு	
	6 ஆத்தூர்	ஆத்தூர்	
	7 கங்கவல்லி	தலைவாசல்	
	8 ராசிபுரம்	ராசிபுரம்	
	9 சேந்தமங்கலம்	சேந்தமங்கலம்	
	10 எலச்சிப்பாளையம்	சங்ககிரி	
	11 மல்லசமுத்திரம்	சங்ககிரி	
	12 கொளத்தூர்	மேட்டூர்.	

வருடம். (1)	வட்டாரத்தின் பெயர். (2)	தொகுதியின் பெயர். (3)	மத்திய அரசு ஒதுக்கீடு. (4) (ரூபாய் இலட்சத்தில்.)
	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்—தொடர்ச்சி.		
1979–80 ..	1 அயோத்தியாபட்டினம்	பனமரத்துப்பட்டி	24.45
	2 பெத்தநாயகன்பாளையம்	ஆத்தூர்	
	3 தலைவாசல்	தலைவாசல்	
	4 நாமகிரிப்பேட்டை	ராசிபுரம்	
	5 வாழப்பாடி	ஏற்காடு	
	6 ஆத்தூர்	ஆத்தூர்	
	7 கங்கவல்லி	தலைவாசல்	
	8 ராசிபுரம்	ராசிபுரம்	
	9 சேந்தமங்கலம்	சேந்தமங்கலம்	
	10 எலச்சிப்பாளையம்	சங்ககிரி	
	11 மல்லசமுத்திரம்	சங்ககிரி	
	12 கொளத்தூர்	மேட்டூர்	
	13 திருச்செங்கோடு	திருச்செங்கோடு	
	14 புதுச்சத்திரம்	சேந்தமங்கலம்	
	15 கடையம்பட்டி	ஓமலூர்.	

இணைப்பு IX.

[408–ம் . . . பக்கத்திலுள்ள வினாவுக்கான விடையைக் காண்க.]

பல்வேறு மாவட்டங்களுக்கு 1981–82 ஆம் ஆண்டுகளுக்கு பொது விநியோகத்திற்கென ஒதுக்கப்பட்ட சிமெண்ட் பற்றிய பட்டியல்

வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	1981.				1982.
	முதல் காலாண்டு.	இரண்டாம் காலாண்டு.	மூன்றாம் காலாண்டு.	நான்காம் காலாண்டு.	முதல் காலாண்டு.
(1)	(2)				(3)
1 சென்னை	40,000	40,000	35,000	34,000	34,000
2 மதுரை	15,000	15,000	13,000	11,000	11,000
3 வடாற்காடு	11,000	11,000	9,700	8,000	8,000
4 தென் ஆற்காடு	5,000	5,000	4,400	4,000	5,500
5 தஞ்சாவூர்	8,000	8,000	7,000	5,000	5,500
6 செங்கல்பட்டு	30,000	30,000	26,500	25,000	25,000
7 திருச்சிராப்பள்ளி	15,000	15,000	13,000	11,000	11,000
8 திருநெல்வேலி	8,000	8,000	7,000	5,000	5,500
9 சேலம்	15,000	15,000	13,000	11,000	11,000
10 இராமநாதபுரம்	12,000	12,000	10,500	9,000	5,000
11 கோயம்புத்தூர்	15,000	15,000	13,000	11,000	11,000
12 பெரியார்	8,000	8,000	7,000	5,000	5,500
13 தர்மபுரி	6,000	6,000	5,300	4,000	4,000
14 புதுக்கோட்டை	5,000	5,000	4,400	3,000	3,500
15 கன்னியாகுமரி	5,000	5,000	4,400	3,000	3,000
16 நீலகிரி	2,000	2,000	1,800	1,000	1,500
மொத்தம் ..	2,00,000	2,00,000	1,75,000	1,50,000	1,50,000

1984, பிப்ரவரி 17, வெள்ளிக்கிழமை ருத்ரோத்காரி
மாசி 5, திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

" உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுத்தான்
உள்ளியது உள்ளப் பெறின். "

ஒருவர் தாம் அடைய எண்ணியதை மனச்சோர்வு இல்லாமல் தொடர்ந்து நினைந்துவரக் கூடுமானால், தாம் எண்ணியதை அடைதல் அவருக்கு எளிய செயலாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 1, 2 மற்றும் 3 ஆகியவை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க அவருடைய வினாக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

தமிழ்நாட்டில் பதிவுப்பெற்றுள்ள ஹோமியோபதி டாக்டர்கள்.

10—(*வினா எண் 5281)—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பதிவுபெற்றுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) பதிவு பெறாதவர்கள் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 15,384.

(ஆ) பதிவு பெறாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற விபரம் சேகரிக்க இயலாது.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி மருத்துவர்களில் பதிவு பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்தார்கள். அதிலே அரசாங்கத்திலுடைய மருத்துவமனைகளில் பணிபுரியக்கூடிய மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? மேலும் இந்த ஆண்டு எத்தனை பேருக்கு அத்தகைய வாய்ப்பு அளிக்க இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் பணிபுரிகின்றவர்களின் எண்ணிக்கை யைப் பற்றிய புள்ளிவிவரம் தற்போது சேகரிக்கவில்லை. பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கையைத்தான் நான் இப்போது சொல்லியிருக்கிறேன். அதற்காக ஒரு சட்டம் போடப்பட்டு இருக்கிறது.

The Government have enacted the Tamil Nadu Homeopathy Medicine (Practitioners of Homeopathy) Act, 1971 for the development of Homeopathy system in the State. It was enforced with effect from 4-5-1972.

அந்தச் சட்டத்தின்கீழ் ஏ கிளாஸ், பி கிளாஸ், சி கிளாஸ் என்று 3 பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் பதிவு செய்த டாக்டர்கள் இருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஹோமியோபதி டாக்டர்கள் பதிவு பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் கொடுத்தார்கள். இவர்களை அரசு அங்கீகரித்து இருக்கிறது என்றும் சொன்னார்கள். அவர்கள் அலோபதி மருத்துவ முறையில் ஊசிபோடுகிறார்கள். அதற்கு அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறதா? இப்படி அவர்கள் ஊசிபோடுவதால் பல்வேறு நோயாளிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது? இப்படி அவர்கள் செய்வதைத் தடைசெய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அது தடை செய்யப்பட்டு இருக்கிறது. அவர்கள் ஊசி போடக்கூடாது என்றும், அலோபதி மருந்துகள் பயன்படுத்தக்கூடாது என்றும் திட்டவட்டமாகச் சட்டம் போட்டு இருக்கிறோம். அதற்குத் தடையும் இருக்கிறது. அப்படி அதை யாராவது மீறுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப் பதற்குச் சௌகர்யமாக இருக்கும். ஹோமியோபதி மருந்தே ஒரு சிறந்த மருந்தாக இருப்பதால் இப்போது படிப்படியாக ஹோமியோபதி மருத்துவ முறையை எல்லா இடங்களிலும் கொண்டு வருவதற்கு தமிழக சர்க்கார் திட்டமிட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து காண்டு வருகிறோம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலோபதி மருத்துவம் முழுமையான பலனைத் தரவில்லை என்பதை அறிந்துதான் ராமுவேல் ஹானிமேன் இந்த ஹோமியோபதி மருத்துவ முறையைக் கண்டு பிடித்தார். அப்படிப்பட்ட மருத்துவ முறையை எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் நடைமுறைக்குக் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நாம் ஆண்டுதோறும் 6 டாக்டர்களை நியமிக்கக்கூடிய ஒரு முறையை வைத்து இருக்கிறோம். சென்ற இரண்டு ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் 6 டாக்டர்களை அரசாங்க மருத்துவமனை களில் நியமித்து இருக்கிறோம். இதிலே ஏ கிளாஸ் மருத்துவர்கள் 230 பேர் (அதாவது இன்ஸ்டிடியூஷனலி டிரெயின்ட் அண்ட் குவாலிபைட் டாக்டர்கள்) பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் படிப்படியாக எல்லா மருத்துவ மனைகளிலும் இந்த ஹோமியோபதி மருத்துவ முறையைக் கொண்டு வருவதற்கு நாம் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

திரு. ப. நெடுமாறன்: துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ஹோமியோபதி ரெஜிஸ்டர் முறை இருக்கிறது. ஆனாலும் கூட நேற்றையதினம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை யில் 'சென்னையில் போலி பட்டம், அலோபதியில் எம்.பி.பி.எஸ்., எம்.டி. போன்ற பட்டங்களை எல்லாம் வழங்கும் ஒரு நிலையம் இருப்பதாக, செய்தி வந்திருக்கிறது. போலி பட்டம் வழங்கும் ஒரு நிலையம் சென்னை மாநகரிலேயே இயங்கிக்கொண்டிருப்பது பற்றி செய்தி வந்திருக்கிறதே. இப்படிப்பட்ட போலியான நிலையங்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் படித்தேன். அதனுடைய 'கட்டிங்' எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தச் செய்தியைக் கொடுத்ததற்காக அந்தப் பத்திரிகைக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: துணைத் தலைவர் அவர்களே, அலோபதி மருத்துவத்திற்கும் ஹோமியோபதி மருத்துவத்திற்கும் என்ன வேறுபாடு? அரசு கொள்கை அளவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஹோமியோபதி மருத்துவமனை அமைக்கும் முடிவினை எடுத்துள்ளது. அதன்படி எல்லா ஊராட்சி ஒன்றியங் களிலும் அமைக்கப்பட்டுவிட்டனவா? இன்னும் எத்தனை ஒன்றியங்களில் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவ மனைகளிலும் உடனடியாக ஹோமியோபதி வைத்திய முறையைக் கொண்டுவர முடியாது. எந்த எந்த இடங்களில் மக்கள் விரும்பி, ஹோமியோபதி மருத்துவமனை வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கே மக்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப கொண்டுவருகிறோம். First of all we must have a climate for accepting Homeopathic system of medicine. அந்த வகையிலே நாம் வேண்டுமென்று கேட்கிற இடங்களுக்கு முதலில் செய்வோம். சில இடங்களில் ஹோமியோபதி முறையை எதற்காக கொண்டுவந்தீர்கள் என்று கேட்கிறார்கள். ஆகையால் கொஞ்சம் எச்சரிக்கையாக, மற்றத் துறைக்கும் பாதிப்பு இல்லாமல் படிப்படியாக வேண்டுமென்பதை நான் முதலிலே தெளிவாக்கிவிடுகிறேன். அதுதான் அரசாங்கத்தின் கொள்கை. இந்த முறையை ஒரு ஜெர்மன் டாக்டர் கண்டுபிடித்தார். அதுபற்றிய விளக்கங்களை எல்லாம் இங்கே சொல்லிக்கொண்டிருப்பது அவ்வளவு பொருத்த முடையதாக இருக்காது என்பதால் விட்டுவிடுகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 'ஏ கிளாஸ், பி. கிளாஸ், சி கிளாஸ்' என்று வைத்திருக்கிறோம், இன்ஸ்டிடியூஷனலி ட்ரெயின்ட் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்ஸ்டிடியூஷனலி ட்ரெய்ன்ட் அல்லாமல் புத்தகங்களைப் படித்து வைத்தியம் செய்பவர்களும் இருக்கிறார்கள். அப்படியானால் முறையான கல்வி கற்று, தேர்ச்சி பெற்றவர்களை மட்டுமே அனுமதிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : துணைத்தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொன்ன மாதிரி இன்ஸ்டிடியூஷனில் படித்தவர்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இன்ஸ்டிடியூஷனலி குவாலிஃபைடு—ஏ. கிளாஸ் 230 பேர்கள் இருக்கிறார்கள். பி-கிளாஸ் 12,934 பேர்கள் இருக்கிறார்கள். Experience of more than ten years of practice.

C. Class 2,200 Experience of more than 4 years but below ten years of practice. இந்த விவரங்களை ஒட்டுமொத்தமாக முதலிலே கொடுத்திருக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவரவர்களே, ஹோமியோபதி வைத்திய முறையை ஊக்கப்படுத்துவது அரசின் நிலை என்று சொன்னார்கள், இன்று வைத்தியத் துறையில் நல்ல முறையில் ஹோமியோபதி முறையைக் கையாள முடியும் என்று சொல்லப்படுகிறது. குறைந்த அளவில்தான் மருத்துவத் துறையில் டாக்டர் பட்டம் பெறுகிறார்கள், கிராமங்களின் தேவை அதிகமாக இருக்கிறது. ஆகையால் கிராமப்பகுதிகளில் ஹோமியோபதி டாக்டர்களை பகுதிநேர மருத்துவர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சனை எப்போது வரும் என்றால், இப்போது முழுமையாகப் படித்து பட்டம் பெற்றிருக்கக் கூடியவர்களுக்கு நாம் வேலை வாய்ப்புக் கொடுத்து இன்னும் தேவை என்று இருக்கும்போதுதான் அது வரும். அப்போது அதுபற்றி நாம் சிந்திக்கலாம்.

We have already excess number of doctors who are prepared to do full time work.

முழுமையாகப் பணியாற்றத்தயாராக இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திய பிறகு இதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பி. வின்சென்ட்: துணைத் தலைவரவர்களே, பயிற்சிப் பெறாமல் போலி பட்டத்தை வைத்துக்கொண்டு, மருத்துவம் செய்யத் தெரியாமல் நோயாளியை கொலை செய்யும் மருத்துவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் மீது கொலை குற்றம் சாட்டி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதுபற்றி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

வலிவலம் கனகா மருத்துவ மனையை அரசே ஏற்றுக் கொள்ளும் திட்டம்.

11—(*வினா எண்.11709) திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலிவலம் கனகா மருத்துவமனையை அரசே ஏற்கக் கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 940, நலம், நாள் 8-6-83-ல் இம்மருத்துவமனை அரசினால் ஏற்றுக்கொள்ள பெற ஆணையிடப்பெற்றது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாக அதை எடுத்து செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்த ஆணையை நாம் போட்டிருக்கிறோம். 8-6-83—ல் உடனடியாக சில நிபந்தனைகளை கொடுத்து இருக்கிறோம், இவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்று.

(முற்பகல் 9-10)

A sum of Rs. 1,51,600 being the compensation amount for the surplus land

அந்தப் பணத்தை கொடுக்க வேண்டும் என்று, 2, 3 நிபந்தனைகளைப் போட்டு இருக்கிறோம். அதையும் கவனித்து செய்கிறோம் என்று ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே வெகு விரைவில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வலிவலம் கனகா மருத்துவமனையை அரசு எடுத்துக் கொள்கின்ற நேரத்தில் அதற்கு பப்ளிக் பண்ட், பொதுமக்கள் நிதி கொடுக்க வேண்டுமென்றோ, அல்லது நிலம் கொடுக்க வேண்டும் என்றோ அரசாங்கம் சில கட்டளைகளை விதித்து இருப்பதாக அறிகிறேன். பொதுவாக மருத்துவமனை சில இடங்களில் வேண்டும் என்று கேட்கிறபோது, டொனேஷன் கொடுக்க வேண்டும் என்றோ, நிலம் கொடுக்க வேண்டும் என்றோ அரசாங்கம் கேட்கிறபோது அப்படிப்பட்ட நிலம் கொடுக்க முடியாத இடத்தில், பப்ளிக் பண்ட் ரெயிஸ் புண்ண முடியாத இடத்தில், அரசாங்கமே இனாமாக பணம் கொடுத்து, நிலம் ஆர்ஜிதம் செய்து, மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியை மனதிலே வைத்துக்கொண்டு கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். இங்கே அதைப் பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்காது. ஏன் என்றால், மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒரு சமாதானத்தைச் சொல்கிறேன். அந்தப் பிரச்சினையும் கவனிக்கப் படும்.

பலநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் சிறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம்.

12—(*வினா எண். 17081) திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

2740

1984 பிப்ரவரி 17]

பலநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் (Multi-purpose Scheme) சிறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பலநோக்கு சுகாதார திட்டத்தின் கீழ் சிறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த மாவட்டத்திலும் அமைக்கப்படவில்லை. ஆனால் (Sub-centres) துணை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மையங்கள் ஏற்கனவே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பக்கத்திலே அமைக்கப்படுகிறதா? அல்லது மருத்துவமனையே இல்லாத கிராமப் புறங்களில் அமைக்கப்படுகிறதா? இந்தத் துணை மையங்கள் அமைப்பதற்கு என்ன நார்ம்ஸ் அரசாங்கம் பின்பற்றுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் 5 ஆயிரம் ஜனத்தொகை உள்ள அந்தப் பகுதிக்கு ஒரு தாய் சேய் நல விடுதி இல்லை என்றால் ஒரு துணை மையம் கட்ட வேண்டும் என்று திட்டமிட்டு இருக்கிறோம். இதிலே ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால், நம்முடைய மாநிலம் தான், இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு டார்கெட் ஒரு இலக்கு வைத்திருக்கிறார்களே, அந்த இலக்கை எட்டி விட்டிருக்கிறோம். 1-4-78—லே 2,964 தாய் சேய் நல விடுதிகள் சப்-சென்டர்ஸ் திறந்திருக்கிறோம் 1982—83-ல் 754 திறந்திருக்கிறோம். இந்த ஆண்டு 912 திறக்க இருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக 5,500 கிளை நிலையங்கள் நாம் தமிழகத்திலே ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அளவிலேதான் இருந்து வருகின்றன. இதிலே சப்-சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தோடு குடும்ப நலமும், அதற்குண்டான அந்த மருத்துவ அதிகாரிகளும், சிப்பந்திகளும் ஒன்றாகவே இருக்கிறார்களே, அதைப் பிரித்து குடும்ப நலத்தையும், ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தனித்தனியாகப் பிரித்து, ஒவ்வொரு இடத்திலேயும் தனித்தனியாக அமைத்தால், பொதுமக்களுக்கும் அதைப் பயன்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப்பு வசதிகள் ஏற்படுமே: அதை அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதாரநிலையம் என்று இருக்கிறது. சில இடங்களில் 2 கட்டிடங்களாக இருக்கின்றன. இதிலே நம்முடைய அரசாங்கத்

தின் நோக்கம் என்னவென்றால், எல்லாம் ஒரே இடத்திலே இருக்கவேண்டும் என்பதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கவேண்டும் என்று சொல்வது புதிதாக இருக்கிறது. நம்முடைய அரசுக்கு கோரிக்கைகள் வருவது எப்படி இருக்கிறது என்றால், ஆரம்ப சுகாதாரம் ஒரு கட்டிடத்திலேயும், மற்றவைகள் இன்னொரு இடத்திலேயும் இருக்கக்கூடாது என்றுதான் கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. இரண்டும் ஒரே இடத்தில் இருந்தால்தான் நலமாக இருக்கும் என்று கோரிக்கைகள் வருகின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கருத்தை வேண்டுமானால் ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித்தேவர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொது சுகாதாரத்திற்காக பல கோடி ரூபாய்கள் செலவழித்துக் கொண்டு வருகின்ற நேரத்திலே, என்னுடைய தொகுதியில், கமுதியிலே தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டி, 4 ஆண்டுங்காலம் ஆகியும் இன்னும் அந்தக் கட்டிடம் பூர்த்தி அடையாத நிலையில் இருக்கிறது—என்னுடைய பகுதி பின்தங்கிய பகுதி, ஆஸ்பத்திரி இல்லாத காரணத்தால், பிரசவத்திற்காகச் செல்லுகின்ற மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்—எனவே அந்தக் கட்டிடம் முடிவு அடையாத நிலையில் இருந்துக்கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டுகின்ற கான்ட்ராக்டர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் அதிகாரிகள் எடுக்காமல் இருக்கிறார்கள். எனவே அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் பல சுகாதார நிலையங்கள், பல மருத்துவ மனைகள் கட்டப்படுவதற்கு கால் கோள்கள் நடப்பட்டன. 10 ஆண்டுகள் 12 ஆண்டுகளாக அப்படியே வைக்கப்பட்டிருந்த நிலையை மாற்றி படிப்படியாகப் பணிகளைச் செய்துக் கொண்டு வருகிறோம். ஒட்டன்சத்திரம் பகுதியிலே ஆரம்பித்ததை என்னால் உதாரணத்திற்கு குறிப்பிட முடியும். யாரால் அங்கே கால்கோள் நடப்பட்டது என்பது அவ்வளவு பேருக்கும் தெரியும். ஏன் சொல்கிறேன் என்றால், மானாமதுரையிலும் மருத்துவ மனையை உடனடியாக கட்ட வேண்டும் என்று ஆரம்பித்தோம். ஆனால் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கி விட்டார்கள். கோர்ட்டிலே ஸ்டே வாங்கிவிட்டால் அதிலே ஒன்றும் செய்ய முடியாது. அதேபோல காண்டிராக்டர்கள் தவறு செய்கிறார்கள் என்பது தெரிந்தவுடன், அவர்களை நீக்குவதற்கு ஏற்பாடு செய்தால் அவர்களும் கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஆகவே, இவ்வளவையும் நாம் மனதிலே வைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். ஆனால் திட்டவட்டமாகச் சொல்கிறேன், எந்த உத்தரவுப் போட்டாலும் அதாவது அரசாங்

கத்தின் மூலமாக எந்த ஜி.ஓ. போட்டாலும் அதை உடனடியாக நிறைவேற்றத்தின் மூலமாக எந்த ஜி.ஓ. போட்டாலும் அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும், அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லி, அதனை செக்ரட்டேரியட்டில் இருந்து மானிடரிங் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒன்று வீதம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போதுமானதாக இல்லை. ஏனென்று சொன்னால், சில இடங்களில் ஊராட்சி ஒன்றியம் என்பது 30 மைல் நீளத்திற்கெல்லாம் இருக்கிறது. ஆகவே, மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியக் கூடிய டாக்டர்கள் இரண்டு பேர் மட்டுமே இருப்பதால் ஒருவர் எப்படியும் லீவு போட்டு விடுகிறார், அப்போது ஒருவர் மட்டும் இருந்து மருத்துவமனையை கவனித்துக் கொள்வது என்பது மருத்துவமனைக்குரிய தகுதியைக் குறைப்பதாக உள்ளது. ஆகவே 3 மருத்துவர்களை ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். முதலாவது கேள்வி, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார மருத்துவமனை என்று இருந்ததை இப்போதுதான் அதுவும் 4 ஆண்டுகளாகத்தான், இரண்டாக உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். பல இடங்களிலே கட்ட ஆரம்பித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும் சென்ற இரண்டு ஆண்டுகளில் 30 இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நம்முடைய நோக்கம் என்னவென்றால், ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்ட வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். ஆகவே படிப்படியாக நிதி நிலைமைக்கு ஏற்ப நாம் செய்துக் கொண்டு வருகிறோம். இரண்டாவதாக ஒவ்வொரு மருத்துவ மனையிலும் 3 டாக்டர்களைப் போட்டிருக்கிறோம். அதாவது கட்டாயமாக லீவு எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அண்மையிலே கூட ஒரு கடுமையான உத்தரவுபோட்டதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நினைவில் வைத்திருப்பார் என்றும், அதனால் தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்றும் நினைக்கிறேன்.

புற்றுநோய்க்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய மருந்து

13—(*வினா எண். 1853)—**திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புற்று நோய்க்குப் புதிதாக மருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா?

[1984 பிப்ரவரி 17

(அ) அம்மருந்து தமிழ்நாட்டிலுள்ள புற்றுநோய் மருத்துவ மனையில் பயன்படுத்தப்பட்டு நல்ல பலனைக் கொடுத்துள்ளதா?

(இ) சித்தா முறையில் புற்றுநோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) இல்லை.

திரு. வேதரத்தினம் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புற்றுநோய்க்கு சித்த வைத்திய முறையில் மருத்துவம் இல்லை என்று மாண்புமிகு உடல்நலம் மற்றும் குடும்ப நலம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சித்த வைத்திய முறைகள், மூலிகைகள் போன்றவை பல்வேறு வைத்திய முறைகள், மூலிகைகள் போன்றவை இதழில் ரகசியங்களாக மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. புற்று நோய்க்கு மட்டும் அல்லாமல், வேறு பல நோய்களுக்கும், சித்த வைத்திய முறைகள் மறைவாக வைத்து இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட தொழில்ரகசியங்கள் அறிந்தவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அந்த முறைகளையும், மூலிகைகளையும், மாநில அரசிடம் அறிவித்தல், அவர்களுக்கு ஏதாவது பரிசு வழங்கும் வகையில், மறைவாக இருக்கும் சித்த வைத்திய தொழில் ரகசியங்களை அறிவிப்பவர்களுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று அறிவிக்கை அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் அதற்கான வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அண்மையில் நாம் ஒரு சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபிஸரை டைரக்டர் ஆப் இன்டிஜினஸ் மெடிசின்ஸ் என்று சித்த வைத்தியத்திற்காக ஒரு உயர்மட்ட அதிகாரியை பொறுப்பேற்றுக்கொள்ளச் செய்திருக்கிறோம். நிசர்ச் செய்து, ஆராய்ச்சி செய்து உடனடியாக தம்மிடம் மருந்து இருக்கிறது என்று யார்சொன்னாலும் உடனடியாக அந்தமருந்துவ மனைக்குச் சென்று நீங்கள் சாம்பிள் கொடுங்கள், அதற்காக உங்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறோம். அதற்காக படுக்கைகள் கொடுக்கிறோம், நிசர்ச்சுக்காக என்ன வசதிகள் செய்து தர வேண்டுமோ அத்தனையும் செய்யத் தயாராக இருக்கிறோம் என்று அவர்களுக்கு ஊக்கம் தரக்கூடிய அளவிற்கு உத்தரவு போட்டிருக்கிறோம். பரிசோதனை செய்துக் கொண்டிருக்கிறோம். பத்திரிக்கை வாயிலாக தெரிவித்திருக்கிறோம். இங்கே இந்தப் பதில் கொடுப்பதும் அதற்கு வாய்ப்பாக இருக்கும். சில நேரங்களில் ஒரு மருந்தை வைத்துக் கொண்டு இந்த மருந்தால் பெரிய பெரிய வியாதிகளைக் குணப்

1984 பிப்ரவரி 17]

படுத்த முடியும் என்று தவறான வகையில்கூட சில இடங்களில் இப்படி வரக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆக இரண்டையும் பார்த்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, புற்றுநோய்க்கு புதிதாக மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் புற்றுநோய் வந்தால் குணமாகாது என்ற எண்ணம் பரவலாக மக்கள் மத்தியில் உள்ளது. அந்த எண்ணத்தைப் போக்க அரசு ஏதாவது விளம்பரப் பணியை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, புற்றுநோயைப் பொறுத்தவரையில் உடனடியாக ஸ்க்ரீன் செய்து, ஆரம்பக் கட்டத்திலேயே பரிசோதனை செய்தால் நிச்சயமாகக் குணப்படுத்த முடியும். அதற்கான விளம்பரங்கள் கொடுக்கிறோம். அதற்காக பிட் நோட்டீஸ் மாதிரி போடுகிறோம். மருத்துவமனைகளிலும் பிரசுரித்துக் கொண்டிருக்கிறோம். In Bernard Institute of Radiology "Cancer is curable" என்று நாங்கள் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியும் அதற்குத் துணையாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. ஜி. கிருபாநிதி: துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைப் பகுதியில் சித்தா முறையில் புற்றுநோயைக் குணப்படுத்தக்கூடிய மூலிகைகள் அதிகமாகக் கிடைப்பதாகத் தெரிகிறது. எனவே அந்தப் பகுதியில் தனியாக ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து அங்கே கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு புற்றுநோய்க்கான மருந்து தயாரிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட மூலிகை நமக்குக் கிடைக்க உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களானால் நம்முடைய அண்ணா நகர் மருத்துவமனையில் அதை ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், புற்றுநோயை சித்த வைத்திய முறையில் குணப்படுத்துவதற்கு ஒரு ஐ. ஏ. எஸ். ஆபிசரைப் போட்டிருப்பதாகவும், பல வசதிகளை செய்துகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அதற்காக என்றும் சொன்னார்கள். ஆராய்ச்சிக்கான வசதிகள், படுக்கை வசதிகள் செய்து கொடுக்கிறோம் என்றும் சொன்னார்கள். ஆனால் நோயாளிகளை சித்த டாக்டர்களுக்காகக் கொடுக்கமுடியுமா என்று கேட்கிறேன். Does the Government of Tamil Nadu want to submit all the people of Tamil Nadu as guinea pigs for the experiment by Siddha medicines?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் சௌரிராஜன் சொன்ன கருத்தைத்தான் நான் கொஞ்சம் ஜாடையாகக் காண்பித்திருக்கிறேன். Tall claims that we can cure diseases by certain medicines, cannot be accepted. அந்தப் பாயிண்டைத்தான் சொன்னேன். அவர்கள் சற்று வேகமாகச் சொன்னார்கள். க்ரடிபிலிட்டியை எஸ்டாப்ளிஷ் செய்யாமல் அனாவசியமாக டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னமாதிரி நோயாளிகள் மீது எக்ஸ்பெரிமெண்ட் செய்வது நியாயம் அல்ல. ஐ. ஏ. எஸ். ஆபீசரை டைரக்டர் ஆப் இன்டஜினஸ் மெடிஸின்ஸ் என்று போட்டிருக்கிறோம். ஜாக்கிரதையாக இரண்டு விஷயங்களையும் பார்த்து, We should take a proper perspective of this problem.

திரு. க. பாலசுப்பிரமணியன் : இந்த புற்றுநோயைக் குணப்படுத்த நாட்டு வைத்தியத்தில் நித்திய கல்யாணி என்ற மூலிகை நடைமுறையில் இருந்து வருகிறது என்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? கிராமப்புறங்களில் அதற்குப் பெயர் குதிரைக் குளம்பு என்பார்கள். குதிரையின் கால் பாதம் போல் அந்த இரண்டு இலைகள் இருக்கும். அப்படி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருந்தால் அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுத்து அந்த நாட்டு மூலிகை மூலம் மக்கள் பயன் பெற முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதனுடைய முழு விவரங்களையும் உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களானால் அதற்கு எந்தளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்த பிறகுதான் அதைப்பற்றி சிந்திக்க முடியும்.

மூளைக் காய்ச்சல் நோய் ஏற்படுவதைத் தடுக்கும் திட்டம்.

14— (*வினா எண். 19835)—**திரு. தா. வேணுகோபால் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது மூளைக்காய்ச்சல் அதிகம் ஏற்பட்டு இருப்பதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தமிழகத்தில் மூளைக் காய்ச்சல் நோய் 1981—ம் வருடம்தான் அதிகம் ஏற்பட்டது. சுகாதாரத் துறையால் எடுக்கப்பட்டுள்ள தீவிர நடவடிக்கையின் காரணமாக அந்நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1982, 1983 ஆண்டுகளில் கணிசமாக குறைந்துள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூளைக் காய்ச்சல் நோய் நெல்லை மாவட்டத்தில் நிறைய இருக்கிறது. குறிப்பாக, குழந்தைகளுக்கு அல்லது குறைந்த வயதுள்ளவர்களுக்கு வந்து இறந்திருக்கிறார்கள். இந்த மூளைக் காய்ச்சல் நோய் உருவாவதற்கு அடிப்படை காரணம்

என்ன? வைரஸ் என்று சொல்லக்கூடியது வெளிநாட்டிலே இருந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. அதை முற்றுமாக ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு மூலகாரணம் கொசுக்கள், பன்றி, மாடுகள் போன்ற பிராணிகளின்மீது உட்கார்ந்து சாப்பிடும் போது, அவைகள் வெக்டராக மாறிவிடுகின்றன. நோயை எடுத்துக்கொண்டு போகக்கூடிய ஒரு கருவியாக' The object which transmits diseases from one place to another does it by augmenting its virus or capabilities by going from one place to another என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அப்படி வெக்டராக மாறி விடும் போது, அந்தக் கொசு கடித்தால், உடனடியாக வியாதி வந்துவிடும். ஆகவே, இதற்கு எல்லாவகையான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். 1½ ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வியாதி ஆந்திராவிலே ஜாஸ்தியாக இருந்தது; கர்நாடகத்திலே அதிகமாக இருந்தது. புதுவை மாநிலத்திலே இருந்தது பின்னர் தமிழகத்திலேயும் பரவியது; சென்னை, கோட்டையிலே மத்திய சுகாதார அமைச்சர் மாண்புமிகு டாக்டர் சங்கரானந்த் அவர்கள் வந்து, ரீஜினல் கான்பரன்ஸ் நடத்தியிருக்கிறார்கள். இப்போது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருவதன் காரணமாக, குறைந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1981—ஆம் ஆண்டு 115 குழந்தைகளும், 82—ஆம் ஆண்டு 50 என்றும், 83 ஆம் ஆண்டு 56 என்றும் குறைந்திருக்கிறது. இருந்தாலும், நாம் இதிலே அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. மிக ஜாக்கிரதையாக பல நோக்கு திட்டத்தின் அடிப்படையில் இதற்கு ஏற்பாடு செய்தால், நமக்கு வெற்றி கிடைக்கும்.

திரு. பெ. கு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோய் சுகாதார நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் காரணமாக குறைந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், சுகாதாரக் குறையைப் போக்க கிராமங்களில் தனி நடவடிக்கை எடுத்ததாக எங்களைப் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. இரண்டாவது, குழந்தைகளுக்குத் தான் இந்த வியாதி பெரும்பாலும் வருமென்று சொன்னார்கள். சமீபத்தில், போளூர் நகரத்தில் 25 வயது மதிக்கத்தக்க ஒருவருக்கு இந்த மூளைக் காய்ச்சல் நோய் வந்து, அவர் சி. எம். சி. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டும் இறந்துவிட்டார். எனவே, பெரியவர்களுக்கும் இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் பீடியின் காரணமாக இந்த நோய் வந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். அது மட்டுமல்ல; வேறு காரணங்களாலும் இறந்து போவார்கள்.

ஆனால், மூளைக் காய்ச்சல் நோய் என்ற பீதி இருக்கிறது. ஆனால் உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1981—ஆம் ஆண்டு 203 பேர்களும், 1982—ஆம் ஆண்டு 49 குழந்தைகளும், 83—ஆம் ஆண்டு 49 குழந்தைகளும் என்று குறைந்து கொண்டு வருகிறது. இன்னும் குறைக்க வேண்டுமென்பது நம் நோக்கம். இந்த ஜப்பானிய வைரஸ் நோய் பெரியவர்களுக்கு சாதாரணமாக வராது; அப்படி வருவது ரொம்ப ரொம்ப ரேர் ஆகும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் நோய் கொசுவின் காரணமாக வருகிறதுஎன்று சொல்லப்பட்டது. கொசுவின் காரணமாக அது டிரான்ஸ்மிட் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்திலே நமது மாநிலத்திலே இந்த மூளைக் காய்ச்சல் நோய் குறைந்து வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இதற்கு பிரதான காரணம் கொசுதான் என்று சொல்லப்படுவதால், இந்த கொசுக்களை ஒழிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிப்பதோடு, கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி, நமது ஸ்டவிலே கூட கொசுக்கள் தொல்லை அதிகமாக இருப்பதால், இதை ஒழிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொசுக்களை ஒழிக்க வேறு தனியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நான் கொசுதான் ஒரே ஒரு காரணம் என்று சொல்லவில்லை. கொசு வெக்டராக மாறும்போது தான் இந்த வியாதி ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980—81 ஆம் ஆண்டு நடைப்பெற்ற சந்தனமரக் கடத்தல் சம்பவங்கள்.

4—(*வினா எண் 12580) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் இருந்து சந்தன மர ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடைவிதித்துள்ளதால் சந்தனமரக் கடத்தல் அதிகரித்துள்ளதாக அரசுக்கு வனத்துறை இலாகாவிடம் இருந்து தகவல் வந்துள்ளதா?

(ஆ) 1980—81 ஆம் ஆண்டு எத்தனை கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளன?

(இ) கடத்தல் அதிகரிக்காமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) 1980—81 ஆம் ஆண்டில் மொத்தம் 510 சந்தன மரக் கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளன.

(இ) கடத்தல் நடைபெறாமல் இருக்க ஒன்பது வனப் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வனச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு தண்டனை கடுமையாக்கப்பட்டுள்ளது. மற்றும் கடத்தல் சம்பந்தமான தகவல் தருவோருக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது. சமீபத்தில் டீ. ஐ. ஜி. தரத்தில் போலீஸ் அதிகாரி தலைமையில் ஒரு போலீஸ் படையும், வனத் துறைத் தலைவரின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-30)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலிருந்து சந்தன மர ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்து உள்ளதால் தமிழக அரசிற்கு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பது அரசு அறியுமா? இதைப் போக்குவதற்கு, மத்திய அரசு மாநில அரசுகளிடையே நல்ல உறவு இருப்பதால் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி இந்தத் தடையை நீக்கவும், புதிய சந்தன மரங்களை நடுவதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தடையை நீக்க வேண்டுமென்று மத்திய அரசிடத்திலே நம்முடைய அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தத் தடையை நீக்குவதும் அல்லது வைத்துக்கொள்வதும் மத்திய மாநில அரசுகளுடைய உறவின் அடிப்படையில் செய்யப் படுவதில்லை. சில கொள்கை அடிப்படையிலே செய்கிறார்கள். அந்தக் கொள்கையை மாற்றலாம் என்ற நம்முடைய கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட நாட்டிலே உள்ள பல தொழிற்சாலைகளை காப்பாற்றுவதற்காக மத்திய சர்க்கார் இப்படி சந்தன மர ஏற்றுமதிக்கு தடை விதித்து இருக்கிறது என்று பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறதே, அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்திய நாட்டினுடைய உள்நாட்டுத் தேவைகளைக் கருதித் தான் நாங்கள் தடை விதித்து இருக்கிறோம் என்று விவாதத்தின் போது குறிப்பிட்டிருக் கிறார்கள். வட நாட்டிலே இருக்கிற சில எண்ணெய் தயாரிக்கிற ஆலைகளின் சொந்தக்காரர்களுக்காகத் தான் இந்த முடிவு என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்காது. ஆனால் அப்படிப்பட்ட சிறிய எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு ஆயிரத்திற்கும் மேற் பட்ட டன் சந்தன மரங்கள் தேவைப்படும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் விட கர்நாடக மாநிலத்திற்கு தேவை என்ற அடிப்படையிலே தான் அவர்கள் தடை விதிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள் என்று தெரிகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சந்தன மரத் திருட்டில் 510 சம்பவங்கள் நடந்திருப்ப தாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவற்றில் இது வரையில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்பதையும், எவ்வளவு வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆண்டில் தான் அந்தக் கணக்கை கொடுத்து இருக்கிறேன். மேற்படி கணக்கின் தொடர்பாக 449 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1,240 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 49 வழக்குகளுக்கு தீர்ப்பு அளிக்கப்பட்டது. 400 வழக்குகள் நிலுவையில் உள்ளன. 62 குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது என்றும் தெரிகிறது. மீதி வழக்குகளில் துறையினர் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளனர்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி சந்தன மரத் திருட்டுகள் நடப்பதால் இதைத் தடுப்பதற்கு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவர்களை கைது செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் தீவிரமாக உள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பரவை வட்டாரத்திலும், மாவட்டத்தில் குத்தியாறு, திங்களூர் வட்டாரத்திலும், பெரியார் சந்தன மரக் கடத்தல் ஏராளமாக நடந்துள்ளதை இந்தச் மன்றத்தில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளேன். இவைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இந்த இரண்டு வட்டாரத்திலும் எவ்வளவு பேர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது? எத்தனை கேஸ்கள் பதிவு செய்யப் பட்டன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விவரங்கள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு கேள்வியினை போட்டால் அந்தப் பகுதியிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விவரமாக தெரிவிக்க இயலும்.

மருங்காபுரி ஒன்றியம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு சோளீஸ்வரர் சிவன் கோயில்

5— (*வினா எண் 17794) திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா மருங்காபுரி ஒன்றியம் கோவில்பட்டியில் உள்ள சோளீஸ்வரர் சிவன் கோவில் பழுதடைந்து சிதைந்த நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): இத்திருக் கோயில் சுவாமி மற்றும் அம்மன் சன்னதிகள் பழுதடைந்துள்ளன. திருப்பணி மேற்கொள்ள திருக்கோயிலின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லை. திருக்கோயிலை நிர்வகிக்கும் பரம்பரை அறங்காவலரும் திருப்பணி நடக்க யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. எனினும் திருப்பணி நடக்கும் வாய்ப்பு குறித்து துரித நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலானது மிகவும் தொன்மை வாய்ந்த கோவில். இதன் தொன்மையைக் காப்பாற்றும் வகையில் அரசு தீவிர முயற்சி எடுத்து, அந்தக்கோவிலை புதுப்பிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொன்மை வாய்ந்த கோவில் என்றால், மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள், முயற்சி எடுத்து, மக்களுடைய துணையோடு இந்தத் திருப்பணிக் காரியங்களிலே ஈடு படவேண்டும். இல்லையானால், அதிலே பொறுப்பேற்றுக் கொண் டிருக்கின்ற பரம்பரை அறங்காவலர் முயற்சி எடுக்கவேண்டும். அப்படி பொதுமக்கள் முயற்சி எடுத்தால், அதற்கு அறநிலையத் துறை துணையாக இருக்கும்.

திரு. மே. அ. இராசகுமார். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலில் வேலை செய்யும் அர்ச்சகர்கள் போதிய வருவாய் இல்லாமல், கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவியாகப் போதிய மான்யம் அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். தலைவரவர்களே, இந்த ஆலயம் என்பது ஒரு தனியான நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு ஆலயம் அல்ல. ஒரு 6, 7 ஆலயங்கள் இணைந்த ஒரு ஆலயத்திற்குள்ளே இருக்கிறது, ஒரு துணை ஆலயமாக இருக்கிறது. ஆலயங்கள் அனைத்திற்குமே சேர்த்து வருடத்திற்கு ரூ. 22,658 தான் வருமானம் வருகிறது என்று தெரிகிறது. ஆகவே இந்த வருமானத்திற்குள்ளேதான் அந்த 6, 7 ஆலயங்களுடைய நிர்வாகமும் நடைபெற வேண்டியிருக்கிறது. அந்த வருமானத்தை வைத்துத்தான் அந்தப் பணியாளர்களுக்கு அல்லது அர்ச்சகர்களுக்கு ஊதியம் போன்ற சம்பளப் பட்டுவாடாக்கள், அல்லது படித்தரங்கள் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே தான் அதைப் பரிசிலிக்கமுடியும்.

பாம்புத் தோல் ஏற்றுமதிக்காை தடை.

6 (*வினா எண் 18168) திரு.பாபு ஜனார்தனன். மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்புத்தோல் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை யாக சட்டங்கள் போட்டிருப்பது உண்மையா?

(ஆ) அதுகுறித்து மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு கடிதம் எழுதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெருவாரியாக பாம்பைக் கொன்று தோலை ஏற்று மதி செய்கிறார்கள். பத்திரிக்கைகளில் படிக்கும்போது பாம்புத் தோலைவிட பாம்பு விஷத்தை ஏற்றுமதி செய்தால் அதிக பணம் கிடைக்குமென்று செய்திகள் வருகின்றன. அந்தப்பாம்பைப் பிடித்து, கொன்று, தோல் எடுத்து சம்பாதிப்பதை விட விஷம் எடுத்தால் அதிக பணம் கிடைக்கும். இப்படிப்பட்ட காரியத்தை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். துணைத் தலைவரவர்களே, பாம்பைக் கொல்வது அல்லது விஷம் எடுப்பதற்காக அவைகளைத் துன்புறுத்திக் கொல்வதில் ஈடுபடுகிற முயற்சி எல்லாம் இப்போது கடுமையான குற்றங்கள் எனக் கருதப் பட்டு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பாம்பைக் கொல்லாமலேயே அதனுடைய விஷத்தை எடுக்கின்ற சில முயற்சிகள் அரசினிடத்திலே எழுதி அனுமதி

பெற்று, நடைபெறுகிறது, அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதியைப் பெற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்கள் பாம்பைக் கொல்லாமலேயே விஷத்தை எடுக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க முடியாது. பொதுவாகவே நாம் எண்ணுகிறதைப் போல, பாம்பினாலே ஏற்படுகிற அபாயம் மக்களுக்கு மிக மிகக் குறைவு. அந்தப் பாம்பை அழித்து விடுவதனாலே, அந்தப் பாம்பு கொல்லுகின்ற எலிகள் உயிரோடு இருக்கிற காரணத்தினாலே ஏற்படுகிற அபாயம் மிகப் பெரிய அளவிலே இருப்பதுதான், இருக்கிற உண்மையாகும்.

செங்கை மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகளிலும் கருவேலங் கன்றுகளை நடும் திட்டம்.

7 (*வினா எண் 18612) திரு. பு. கோ. ஆலூர் ஜெகதீசன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் உள்ள எல்லா ஏரிகளிலும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் சத்துள்ள உரமான வண்டல் கிடைக்கவும் கருவேலங் கன்றுகளை நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இம்மரங்களைப் பாதுகாக்கவும் பஞ்சாயத்துக்களுக்கு வருமான ஆதாரங்களைப் பெருக்கவும் பஞ்சாயத்துக்களுக்கும் இதிலிருந்து வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். (அ) எல்லா ஏரி களிலும், குளக்கரையோரங்களிலும் மரங்கள் நடும் பணி ஏற்கனவே தொடங்கி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(ஆ) இதுவரை பஞ்சாயத்துக்களுக்கு சொந்தமான இடங் களில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் தோட்டங்களை ஏலத்தில் விற்பனை செய்யும்போது கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆணை யிடப்பட்டிருந்தது. ஆனால் இற்பொழுது பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான இடங்களில் மட்டுமின்றி, அரசுக்குச் சொந்தமான மற்ற எல்லா இடங்களிலும் உற்பத்தி செய்யப்படும் தோட்டங் களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 சதவீதம் அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பல ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அங்கே மின்சாரம் இணைப்பு களை பெற்று, ஒருசிலர் அந்த ஏரிகளில் தண்ணீர் நிற்கின்ற காலத்திலே வெட்டி விடுவதால் பயிர்களுக்குத் தேவையான தண்ணீர்ப் பாசனம் குறைந்துகொண்டிருக்கிறது. அதை ஆக்க முறையிலே நீக்குவதற்கு அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 17]

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். இது ஏரிகளிலும் குளக்கரை ஓரங்களிலும் மரங்கள் நடுவதுபற்றிய கேள்வி. ஆக்கிரமிப்பு பற்றிய கேள்வியை தனியாக எழுப்பினால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்குத் தனியாகப் பதில் அளிக்க இயலும்.

திரு. ஏ. கி. சண்முகம். துணைத் தலைவர் அவர்களே, ஏரிகளிலோ அல்லது குளக்கரைகளிலோ கருவேல மரங்கள் தீவிரமாக நடப்பட்டு வருகின்றன. ஏரிகளிலும் குளங்களிலும் நடப்பட்ட கன்றுகள் கடுமையான வறட்சியின் காரணமாக சில இடங்களில் காய்ந்துபோய் விட்டன. அப்படிப்பட்ட காய்ந்துவிட்ட இடங்களிலே அரசே மீண்டும் புதுப்பித்து நடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்திலே திட்ட விதிகளிலே இதுவும் இருக்கிறது. அப்படி நடப்படுகிற செடிகள் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு அது வளர்க்கப்படாமல் அல்லது வளராமல் இருக்குமானால் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து மீண்டும் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. செ. சிவசாமி. துணைத் தலைவர் அவர்களே, கண்மாய் புறம்போக்குகளிலே கரைகளிலே இருக்கக்கூடிய லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் தரக்கூடிய மரங்களையெல்லாம் ஏலம் விடாமலேயே அரசின் பார்வைக்குக் கொண்டு வராமலேயே இரவோடு இரவாக கடத்திக்கொண்டு குறிப்பாக அந்தப் பகுதிகளிலே உள்ள ஆபீசர்களும் கிராமத்திலே உள்ள நபர்களும் சேர்ந்து கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுவதால் பல கண்மாய்களை காலி செய்துகொண்டிருக்கிறார்கள். நான் இதைப்பற்றி டி. டி. சி. மீட்டிங்கிலே சொல்லி இருக்கிறேன். எல்லா கிராமங்களிலும் இப்படி நடந்துகொண்டிருக்கிறது. இதனால் அரசிற்கு வரவேண்டிய லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் பாதிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். இதுபோன்று வளர்க்கப்பட்டிருக்கிற மரங்கள் பொது ஏலத்திலேயே விடப்படும். இல்லையென்றால் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பு முறையாக இருக்குமானால் அவர்களுக்கு அரசின் அனுமதியைப்பெற்று வழங்க வேண்டுமென்பது விதி. ஆங்காங்கே இருக்கிற சில கிராம மக்கள் ஒன்றுகூடி பொது ஏலத்தைத் தடுக்கிற முயற்சியில் ஈடுபடுகிறார்கள். சில நேரங்களில் வன்முறைகொண்டு தடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் பொது அமைதிக்கு,

1984 பிப்ரவரி 17]

சட்ட அமைதிக்குக் கூட பங்கம் விளையக்கூடிய நிலைமைகள் உருவாகின்றன. அதுபற்றி கடுமையான நடவடிக்கைகளை எடுத்தால் பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக அது வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது எந்த அனுமதியுமில்லாமல் திருட்டுத்தனமாக வெட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பெரிய அளவிலே மரங்களைக் கொண்டிருக்கின்ற அந்தக் கிராமப் பகுதிகளிலே அவர்கள் திருட்டுத்தனமாக வெட்டுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாமல் நடக்காது. கிராம மக்கள் சம்பந்தப்பட்டுதான் நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட குறிப்பிட்ட புகார்கள் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர், அப்படி குறிப்பிட்ட புகார்கள் இருக்குமானால் உடனடியாக தெரிவிப்பார்களானால், அந்த நேரத்திலேயே தடுத்தி நிறுத்தி அதிலே சம்பந்தப்பட்டவர்கள் கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே, பல பகுதிகளிலே புதிதாக நடப்பட்டிருக்கிற மரங்களும் கன்றுகளும் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தினாலே பட்டுப் போய்விட்டன. ஆகவே, அவைகளையெல்லாம் சரியாக பராமரிக்கக்கூடிய முறையிலே கூடுதலாக பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் மிகப் பெரிய அளவிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆகவே ஒவ்வொரு மரத்தையும் நேரிலேயே பாதுகாப்பது என்பது இயலாத காரியம். ஆனாலும் இப்போது அதற்காகவே ஆங்காங்கே கிராமங்களிலே உள்ள அந்த அந்த பகுதிகளைச் சேர்ந்த கிராம வனப் பாதுகாவலர் என்ற ஒரு பதவியை உருவாக்கி, அதிலே அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட எல்லை வரை அவைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்றெல்லாம் பணையிடப்பட்டிருக்கிறது. அந்தப் பதவிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

மேட்டூரில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்

8—(* வினா எண். 18204) திரு செ. செம்மலை: மாண்புமிகு சட்டம்—தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம் மாவட்டம், மேட்டூரில் முதலாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: சேலத்தில் தற்போது செயல்பட்டு வரும், இரண்டு குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில், ஒன்றை மேட்டூரில் மாற்றி அமைப்பதற்கான ஆணையை 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாளில் அரசு பிறப்பித்துள்ளது.

மேற்சொன்ன நீதிமன்றத்தை மேட்டூரில் அமைப்பதற்கு பொருத்தமான தனியார் கட்டிடம் இதுகாறும் கிடைக்கவில்லை என்று உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. எனவே அந்நீதிமன்றம் இன்னும் மேட்டூருக்கு மாற்றப்படவில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மேட்டூரில் துணை ஆட்சியர் அலுவலகம் இருந்த கட்டிடம் தற்போது காலியாக இருக்கிற சூழ்நிலையில் இருப்பதால் அந்தக்கட்டிடத்தில் இந்த நீதிமன்றத்தைத் துவங்குவதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திற்கு 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16, 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் ஆகிய இரண்டு தேதிகளில் எழுதி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு அறிவுறுத்தியது. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அண்மையில் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று அரசு எழுதி தக்க கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் ஒரு கட்டிடத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார். அது குறித்து உயர்நீதிமன்றத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தகவல் தெரிவித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாநில அளவில் வழக்கு நடத்தும் துறை (Department of Prosecutions) அமைக்கும் திட்டம்.

9-(*வினா எண். 19229) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம்—தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் சார்பில் குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு மாநில அளவில் வழக்கு நடத்தும் துறை (Department of Prosecutions) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் இருக்கின்ற குற்றவியல் வழக்குகளை நடத்துவதற்கு தனியாக ஒரு துறை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த குற்றவியல் வழக்குகளை நடத்துகின்ற போது காவல்துறையினருக்கும், வழக்குகளை நடத்துகின்ற வழக்குரைஞர்களுக்கும் இதில் முழுமையான ஒத்துழைப்பு இல்லை என்பது உண்மைதானா? தற்போது வழக்குகளில் சம்பந்தப்பட்ட சம்மன்களைக் கொடுப்பதற்கும், சாட்சிகளைக் கொண்டு வருவதற்கும் காவல்துறையினர் தான் ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருக்கிறது. வழக்குகள் நடத்துவது மட்டும் வழக்குரைஞர்களிடம் இருக்கிறது. இதை மாற்றி வழக்குகளை நடத்துகின்றபோது வழக்குகள் சம்பந்தப்பட்ட எல்லா பணிகளையும் முழுமையாக, இதற்காக தனியாக அமைக்கப்பட இருக்கிற தனி துறையே எடுத்துக்கொள்ளுகின்ற முறையில் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது காறும் நடைமுறையில் குற்றவியல் வழக்கு நடத்துனர்களும் காவல்துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நடத்துவது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இதில் சில நேரங்களில் மக்களுக்கு எதிர் பார்க்கின்ற பலன் கிடைக்காமல் போய்விடுவதாக கருதப்பட்டு அந்தக்கருத்தையும் இந்திய சட்டக்கமிஷன் 14-வது அறிக்கையில் கூட தெரிவித்து இருக்கிறது. குற்றவாளிகளே, வழக்கு நடத்துனர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் காவல் துறையினிடமிருந்து முழுமையாகபிரிக்கவேண்டும் என்றும், தன்னிச்சையாக அவர்கள் செயல்படவேண்டும் என்றும் காவல்துறையினர் கட்டுப்பாடு அவர்களுக்கு இருக்கக்கூடாது என்றும் தனித்து ஒரு துறையாக மாவட்டத்தில் அமைக்கப்பட்டு அந்தத்துறையின் கீழ் வழக்கு நடத்துநர்கள் இயங்கவேண்டும் என்றும் ஒருங்கிணைந்த மாநில அளவில் ஒரு உச்ச அளவில் ஒரு துறையாக அமைத்து அந்தத்துறையின் கீழ் அனைவரும் செயல்படவேண்டும் என்ற பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. அதை நடைமுறைப் படுத்துவது அரசின் நோக்கம். அந்த அடிப்படையில் தான் Directorate of Prosecutions என்ற ஒரு அமைப்பை மாநில அளவிலும் அதற்கு கிளைகளை மாவட்ட அளவிலும் அமைக்க அரசு தற்போது நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் 500-க்கும் மேற்பட்ட இளம் நிலை குற்றவியல் வழக்குரைஞர்களை அரசின் சார்பில் நியமிக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் தனிப்பட்ட முறையில் வக்கீல் தொழில் நடத்தமுடியாது. அவர்கள் முழு நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். இந்த

வழக்குகளை நடத்தி விரைவுபடுத்துவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதத்தை உயர்த்துவதற்கு அரசு ஏதேனும் பரிசீலனை செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதல்நிலை வழக்கு நடத்துநர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு 1,000 ரூபாய் அடிப்படை சம்பளமாக இருக்கிறது. அது 1,650 ரூபாய் அளவுக்கு உயரும் நிலை இருக்கிறது. இந்த அளவுக்கு அவர்களுக்கு சம்பள விகிதம் இருக்கிறது. ஆனால் இரண்டாம் நிலை வழக்குரைஞர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிற ஊதியம் போதும் என்று அரசு கருதவில்லை. அவர்களுக்கு ரூ. 750 துவக்க அடிப்படைச் சம்பளமாக கொடுத்து உச்ச கட்டமாக 1,350 ரூபாய் அடையும் நிலையில் அவர்களுக்கு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை மாநில அளவில் அப்பணி ஆற்றுகின்ற ஏ.பி.பி.2 என்ற நிலையில் இருக்கின்றவர்கள் அரசாங்கத்திடம் கேட்டு இருக்கிறார்கள். அது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் அரசு நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது.

1980–1983 டிசம்பர் முடிய சென்னை நகரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் ஒதுக்கப்பெற்றோர் எண்ணிக்கை.

15—(* வினா எண் 16833) திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 1980-81, 1981-82, 1982-83 (டிசம்பர் முடிய) ஆண்டுகளில் எத்தனை பேருக்கு வீட்டுவசதி ஒதுக்கீடு செய்யப்பட்டது?

(ஆ) இதை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: 1980-81-ல்—2092 நபர்களுக்கும், 1981-82-ல்—2905 நபர்களுக்கும், 1982-83-ல் —4729 நபர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்களே, சென்னை நகரத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கிடைக்கும் வீடுகள் விண்ணப்பிக்கும் அளவிற்குச் சீக்கிரமாக தடுத்தர மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் பரவலாக இருக்கிறது. ஆகவே, பொது மக்களுக்கு அந்த வீடுகள் வினரவில் கிடைக்க ஆவன செய்யப்படுமா? இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். பரிசுச் சீட்டுக் குலுக்கு வதைப்போல வீடுகளைக் கொடுக்கும் முறை இப்பொழுது இருக்கிறது என்று அறிகிறேன். அப்படியில்லாமல் வரிசைக்கிரமப்படி வருபவர்களுக்கு வீடுகளைக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்குச் செயல்படுத்தப்பட்டு வரும் ஒதுக்கீட்டு முறையானது பல்வேறு இடங்களில் பாராட்டைப் பெற்றிருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே வீடுகள் ஒதுக்கப்படுகின்ற அத்தனை பேர்களும் பொதுமக்கள் அல்ல என்ற கருத்து நிச்சயமாக இல்லை. சாதாரண நிலையில் உள்ள பலருக்கு வீடுகள் எதிர்பாராத விதங்களிலெல்லாம் இப்பொழுதுள்ள குலுக்கல் முறையில் கிடைக்கிறது. அதற்காக வைக்கப்பட்டிருக்கின்ற முறைகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன என்று பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், குலுக்கல் முறையை ரத்து செய்து விட்டு வேறு முறைகளைப் பின்பற்ற ஆரம்பித்தால் நிச்சயமாக அதில் பல்வேறு தவறுகள், வழக்குகள் ஏற்பட வழியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கண் தெரியாதவர்கள், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியவர்களில் வீடற்ற மக்களுக்கு கிடைக்க — குறிப்பாக ஒதுக்கீட்டில் எஸ்ட் அண்ட் ரைப்ஸ்-க்கு 18 சதவீதம் கொடுப்பதாக அமைச்சரவர்கள் முன்பு சொல்லியிருக்கிறார்கள்; முதலமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த சதவீதம் இந்தக் குலுக்கல் முறையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியது தாராளமாகக் கிடைக்காமற் போய்விடுகிறது. ஆனால் குலுக்கல் முறை நடந்தால் இந்த 18 சதவீதம் என்ற முறையில் அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் கண்காணிக்கப் படுமா? குறிப்பாகக் கண் தெரியாத மக்களுக்குக் கிடைக்காத நிலைமையிருக்கிறது. எனவே, அவர்களுக்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து கண் தெரியாதவர்களுக்கு இடம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்னமும் ஒதுக்கீடு என்ற முறையை வைத்துக்கொண்டு பல்வேறு தரப்பினருக்குத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படித் தரப்படுகின்ற நேரத்தில் இந்தக் குறிப்பிட்ட அளவிற்கு ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்ற புகார் வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அப்படிப்பட்ட புகார்கள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. அப்படிப்பட்ட புகார்களைக் குறிப்பிட்டுக் கூறுவதாகயிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிகவும் பரிவோடு கண் தெரியாதவர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் என்னிடத்திலேகூட கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவேளை கண் தெரியாதவர்களை யாரோ ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியாது. ஆகவே, கண் இருப்பவர்கள் அவர்களுக்குத் துணையாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்குத் தரப்படும்.

திரு. க. முத்துக்கிருஷ்ணன்: தலைவரவர்களே, சென்னை நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீட்டு வசதிகள் செய்யப்படுவதைப் போல எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. ஆனால், மாவட்டத் தலைநகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கொடுத்தப்படும் வீடுகள் போதுமான அளவில் இல்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா? குறிப்பாக, நாகர்கோவில் நகரத்திற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகப் பல பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் வீட்டு வசதி கிடைக்கவில்லை என்ற புகார் வந்துள்ளதா? அந்தக் குறைபாடுகளை விரைவிலே நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதைப்போல, சென்னை நகரத்திலே பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுவதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்கு இந்த முறையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இரண்டு கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, சென்னை மாநகரத்தைத் தவிர்த்து மற்ற இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கொடுப்பதைப் பற்றியது. பல்வேறிடங்களில் வீடுகளைக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்றெல்லாம் வீட்டு வசதி வாரியத்திற்குக் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வீட்டுத் தேவையினைப் பொறுத்தவரையில் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். இன்றைக்குப் பெய்து கொண்டிருக்கின்ற மழையில் பொதுமக்களுக்கு அதிகமான அளவில் குடியிருப்புக்கள் தேவை என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும். அதிலும் பாளமான இடங்களில் வீடுகள் கட்டி

[1984 பிப்ரவரி 17]

இருப்பவர்களை மேடான இடத்திற்குக் கொண்டுவந்தாக வேண்டும். ஆனால் அதை புகார் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அது மக்களின் தேவை என்ற வகையில் அந்தத் தேவையினைப் பூர்த்தி செய்து தருகின்ற வகையில் அதற்கான நடவடிக்கையில் நாம் ஈடுபடவேண்டும். பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவதைப் போல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்ற கருத்தினைக் கேட்டிருக்கிறார்கள். அது ஒரு நல்ல கருத்துதான். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்னை நகரத்திலே இல்லாவிட்டாலும் அவர்கள் வசிக்கின்ற இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் பெரிய வீடுகள் இருக்கும். ஆனால் வீடு வசதி இல்லாத ஏழை மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நிலைமையிலே ஒருவர் என்ற அளவுக்கு செய்து கொடுக்க முயற்சி எடுக்கலாம்.

திரு. வைத்தியலிங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தில் வீடுகளை ஒதுக்குகின்றபோது ராணுவ வீரர்களுக்கும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் என்று சில குறிப்பிட்ட சதவீத வீடுகள் ஒதுக்கப்படுவதாக சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால் அதைப் போலவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, அருமை நண்பர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் நல்ல கேள்வியினைக் கேட்டிருக்கிறார்கள். மொழிப் போராட்டத்தில் சுடுபட்டு தாய்மொழியினைப் பாதுகாக்கவேண்டும் என்ற உணர்வோடு போராடிய பல்வேறு தியாகிகளையும், பாதியோர்களையும் நாம் நிச்சயமாக மறந்துவிட முடியாது. அப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தோரின் குடும்பங்கள் இன்றைக்கு நலிந்த நிலையில் இருக்கின்றன. எனவே, அந்தக் குடும்பங்களைக் காக்க வேண்டும் என்ற உணர்வு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்த அளவிற்கு இருக்கின்றதோ அதே நிலையிலே தான் நாங்களும் இருக்கிறோம். எனவே அதற்கான வாய்ப்புக்கள் வருகின்ற நேரத்தில் நிச்சயமாக மொழிப் போராட்ட வீரர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மொழிப்போர் தியாகிகளுக்கு ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசிலே பல்வேறு உதவிகளும், உதவித்தொகையும் அளிக்கப் பட்டு வந்தது. அது பின்னர் வழக்கு மன்றத்திற்குப் போன காரணத்தால் தடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அதனை வேறு ஏதாவது ஒரு தலைப்பிலே மறுபடியும் அளிக்கலாம் என்று இந்த அரசு கூட்டு வாக்குறுதி கொடுத்திருக்கின்றது. ஆனால் இதுவரையில்

[1984 பிப்ரவரி 17

அளிக்கப்படவில்லை என்று அவர்கள் திரும்பத் திரும்ப சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அரசுக்குய விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த உதவித் தொகையை அளிப்பதற்கு அரசு ஏதாவது வழிவகை செய்யுமா? காரணம் அமைச்சர் திரு. இராதா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கான பற்றும் பரிவும் உடையவர்கள். காரணம் அவர்களும் அதிலே ஈடுபட்டவர்கள். எனவே இப் பிரச்சினையில் அரசு அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு வீடுகள் அளிக்கப்படுமா என்பது. உதவித்தொகை அளிப்பது என்பது பற்றி தனியாக ஒரு நிலையிலே தான் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். ஆனாலும் அந்தக் கேள்வி யையும் போட்டு வைக்கலாம் என்ற முறையிலே கேட்டிருக் கின்றார். ஆகவே பதிலைக் கொடுத்து வைக்கலாம் என்ற முறையிலே நானும் பதில் சொல்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய மாவட்டத் தலைநகர்கள் எல்லாம் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. எனவே அந்தப் பகுதிகளில் வீட்டு வசதிகள் குறைவாக இருக்கின்ற நிலைமைகளை அறிந்து அப்படிப்பட்ட பகுதிகளில் வீட்டுவசதியினை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதியினைப் பொறுத்தவரையில் எந்தெந்தப் பகுதிகளில் தேவை என்பதை அறிய சர்வே நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட சர்வேக்களில் புதிதாக மாவட்டத் தலைநகரங்களுக்கு அறிவிக்கப்பட்ட அந்த இடங்களில் இப்போதிருந்தே தேவையான வசதிகளை முழுமையாக முதன்மைக் கொடுக்கப்பட்டு ருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

செங்கற்பட்டு வேதாசலம் நகரில் நகர்மன்றம் கட்ட ஒதுக்கப்பட்ட இடம்.

16—(* வினா எண். 17347) திரு. பி. கணேசன்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் வேதாசலம் நகர் பகுதியில் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தில், நகர மக்களுக்கு டவுன்ஹால் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை இப்போது ஸ்டேட் பேங்க் நிர்வனத்துக்கு விற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா?

1984 பிப்ரவரி 17]

(ஆ) ஆம் எனில், கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் வேறு இடத்தில் டவுன்ஹால் கட்டிக் கொடுக்க முன்வருமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு வேளைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகரில் இப்பொழுது இருக்கிற அந்த இடம் பாரத ஸ்டேட் வங்கிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு வேதாசலம் நகரில் நகர்மன்றம் அமைக்க வேறு தகுந்த இடமில்லை. அதேசமயம் நகர் பற்றும் அண்ணா நகரில் அந்தத்திற்குச் சொந்தமான பெ துக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 76 சென்ட் 201 சதுர அடி பரப்பளவு உள்ள மனைகள் உள்ளன. இந்த மனைகளில் நகர் மன்றம் கட்டித்தருகிற அளவுக்குச் சங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை.

தஞ்சாவூரிலிருந்து வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம்

17—(*வினா எண் 19191) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் இருந்த வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம் திருச்சி பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் தஞ்சையில் மீண்டும் பிரிவு அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) தஞ்சையிலிருந்த வீட்டுவசதி அலுவலகம் வேலையின்மை காரண மாக மாற்றப்பட்டிருக்கிறது. வேலைகள் வருகிற நேரத்தில் நிச்சயமாக அந்த அலுவலகம் செயல்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் மதுரை வீட்டு வசதிப் பிரிவோடும் தஞ்சை திருச்சியோடும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. புதிதாக மாவட்டத் தலைநகரங்களை மாற்ற வசதிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே, தஞ்சையிலே மீண்டும் அந்த அலுவலகத்தை ஏற்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரை எங்கு பணிகள் இருக்கின்றனவோ அந்தப் பணிகளுக்கு ஏற்ப அலுவலகங்கள் அமைப்பது என்பதை முறையாக வைத்

[1984 பிப்ரவரி 17

திருக்கிறோம். பணிகள் எடுப்பதிலே பல்வேறு இடங்களிலே தாமதங்கள் ஏற்படுகின்றன. தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கும்போது பல்வேறு நிலைகளிலே தடுக்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய வேலைகளை உருவாக்கித் தருவார்களானால் அந்த வேலைகளை எடுக்கும் போது அங்கு அலுவலகம் திறக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கே வேலை இருக்கிறபொழுது அலுவலகம் இருந்தது. வேலை இல்லாததால்தான் அலுவலகம் போய் விட்டது என்று சொன்னார்கள். எனவே, அதிகமான வேலைகளை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேலைகளைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களிலே கோட்புகளின் அடிப்படையில் அதற்கான ஆய்வுகள் நடந்தப்பட்டு, எடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலைகளை எடுக்க வேண்டுமென்ற முயற்சி எடுக்கிற நேரத்தில் பல்வேறு இடங்களில் விளைநிலமாக இருப்பதால், இடத்தைத் தேர்ந்தெடுப்பது சிரமமாக இருக்கிறது. எனவே, தேர்ந்தெடுக்கப்படுகிற இடங்களில் வீடுகள் கட்டப்படுவதில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில், வேலைகள் இன்மையால், அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது. வேலைகள் எடுக்கப்படுமானால் நிச்சயமாக அலுவலகம் உருவாகும்.

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கடுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, பார்த்து விட்டு, திருச்சிக்குச் சென்று வீட்டு வசதி வாரிய அதிகாரிகளை அழைத்துப் பேசி ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசிய அடிப்படையில், தஞ்சையில் பள்ளப் பகுதியில் உள்ளவர்களுக்கு மேட்டுப் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க, ஒரு திட்டத்தை உருவாக்க, தஞ்சை மாவட்டத்திலே ஒரு அலுவலகம் வைத்து, பாதிக்கப் பட்டவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலமாக, பாதிக்கப் எப்படியாகிலும் எடுத்து, வீடு கட்டிக் கொடுக்க இடத்தை அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய அமைச்சர் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் கேட்டிருக்கிற கேள்வியைப் பொறுத்தவரை இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையிலே இருக்கிற மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால், பாதிக்கப்பட்டிருக்கிற பெரும்பகுதி மக்கள் தாழ்ந்த இடங்களிலே குடிசைகளிலே

1984 பிப்ரவரி 17]

வாழ்கிறவர்கள். அந்தத் தாழ்ந்த இடத்திலே, குடிசையிலே இருக்கிற மக்களை, மேட்டுப் பகுதிக்கு மாற்றுவது என்பது ஒரு முக்கியமான பணி. இதற்காக குடிசை மாற்று வாரியம் சார்பிலும். வீட்டு வசதி வாரியம் சார்பிலும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம் பல்வேறு தரப்பினர் களுக்கும் வீடு கட்டித் தருகிறது. ஆனால் இவ்வளவுக்கு ரூ. 3 கோடி அளவுக்கு, தனியாக இப்பொழுது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியினர்களுக்கு வீடுகள் கட்டுவதற் காகக் கூட்டுறவுத் தங்கத்தின் சார்பில், குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

1982–1983 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

18— (* வினா எண் 20920) திரு. என். பரதராஜன்: மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தில் 1982 முதல் 1983 ஜூன் வரை கட்டப்பட்ட வீடுகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் 2,450 வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். பரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. இந்தக் குடிசை மாற்று வாரியத்தின் வீடுகள் சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் கட்டப்படு கிறது. தமிழ் நாட்டிலுள்ள பிற நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும் இந்தத் துறையின் மூலம் வீடுகளைக் கட்டு வதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த குடிசை மாற்று வாரியம் என்பது சென்னை மாநகரத்திற்கு மட்டும் இருந்த நிலையை மாற்றி தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலும் இருக்கிற குடிசைகளை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் 16 இடங்களுக்கு அது விரிவாக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் இருக்கிற குடிசை களை மாற்றுவதற்கான வேலைகளை குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படுகிற வீடுகள் ஏற்கெனவே இருந்த ரேட்டில் இப்போதும் கட்டப் படுகிற போது போதுமான அளவிற்கு தரமான நிலையில் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த ரேட்டை உயர்த்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தைப் பற்றிக் கேட்கிறார் என்று கருதுகிறேன். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு விலையில் அந்த வீடுகள் உருவாக்கப்படுகிறதோ அதே விலையில் தரப்படுகின்றன. வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் தான் 4,000 ரூபாய் என்று இருப்பதை இப்போது 6,000 ரூபாய் என்று மாற்றி இப்போது 4500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது குடிசை மாற்று வாரியம் பணிகளை சென்னை நகரம் தவிர வேறு பல இடங்களுக்கும் விரிவு படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாக தஞ்சையில் குடிசைகளில் வாழ்கிற விவசாயத் தொழிலாளர்கள் வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத நிலையில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் குடியிருப்புகளை இழந்து விட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப் பட்ட இடங்களில் இந்த வீடுகளைக் கட்டிக்கொடுத்து இங்கே வசூல் செய்வதைப் போல சிறிய தொகையை வாடகை என்று வசூலிப்பதற்கு ஏதாவது விசேஷமான செயல்குறிப்பை அரசாங்கம் தயாரிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களை சொல்கிறபோது, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மேட்டு நிலம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இருக்கிற இடங்களை அங்கே இருக்கிற சில மிராசுதாரர்கள் வளைத்து மேடாக வைத்துக் கொள்வார்களே தவிர குடியிருப்புகள் கட்டுவதற்கு அந்த இடத்தை தர மாட்டார்கள். ஆகவே குடியிருப்புகள் பள்ள மான இடங்களில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே இந்த இடங்களை மேடாக ஆக்கியதற்கு பிறகு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக தனித் தனியாக வீடுகளை கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. இதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால் ஒரே இடத்தில்

வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் எங்கே வேலை செய்கிறார்களோ அந்த இடத்திற்கு அருகிலேயே தங்கள் வீடுகள் இருக்கவேண்டு மென்று விரும்புவார்கள். ஆகவே குடிசை மாற்று வாரியம் ஒரே இடத்தில் 200, 300 வீடுகளைக் கட்டுகிற காரணத்தால் இந்தப் பணியை உடனடியாக எடுக்க முடியவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் இந்தக் கருத்தைப் கூறியிருப்பதால் நான் அதைப் பரிசீலிக்கிறேன்.

திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் தெரு விளக்குகள், குப்பை கூட்டுதல், ரோடு போடுதல், பழுது பார்த்தல், குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றல் ஆகியவை களுக்கு மாநகராட்சிக்கும் மற்ற இலாக்காக்களுக்கும் குடிசை மாற்று வாரியம் கட்டட வேண்டிய பணம் கட்டாததால் அந்தக் குடியிருப்பு மக்கள் படும் தொல்லை அரசிற்கு தெரியுமா? அந்த இலாக்காகளுக்கு கட்ட வேண்டிய பணத்தை கட்டுவதன் மூலமாக அந்த மக்களின் தொல்லைகள் நீங்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் வாரியம் மாநகராட்சிக்கு தொகை கட்டவேண்டிய அப்படிப்பட்ட நிலை நிச்சயமாக இல்லை யென்று கருதுகிறேன். குறிப்பிட்டுக் கூறுவார்களானால் அதற்கு தகுந்த நடவடிக்கையை நான் எடுக்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. ப. பொன்னுசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டப்பட்டு இருக்கும் குடிசை மாற்று வாரிய வீடுகளில் சுகாதாரக் கேடுகள் நிறைய இருக்கின்றன. குடிநீர் வசதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொன்னால் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் சிமிட்டிரி ரோடு, க சிமேடு, இராய புரம் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் குடிப்பதற்குத் தண்ணீர் வசதி இல்லை. கண்ணீர் நிலத்தில் இருந்தாலும், பம்ப் சரியாக வேலை செய்யாததால் தண்ணீர் கிடைக்கவில்லை, அந்தப் பம்ப்பை ரிப்பேர் செய்ய போதிய ஸ்டாப் இல்லை. போதிய ஊழியர்களை அங்கே நியமித்து, அங்குள்ள சுகாதாரக் கேடுகளை நீக்குவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறுப்பிட்டுக் கூறியதைப்போல அப்படிப்பட்ட நிலைமையிருக்குமானால் அது நிச்சயமாக் மாற்றப்படவேண்டும் என்கிற அவசியத்தை நான் உணருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை மாற்றுவதற் கான நடவடிக்கைகளில் நிச்சயமாக நான் ஈடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக நிலைமைகளை மாற்றுவதாக உறுதி கூறியதற்கு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். நிச்சயமாக காலமாக நான் எழுதிக்கொடுத்தும், நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிற பகுதிகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டாக்டர் சந்தோஷம் நகர், எக்மோர், அதே போன்று, ராதாகிருஷ்ணன் நகர் ஆழ்வார் தோட்டம், தங்கமணி தெரு போன்ற இடங் களில் தண்ணீர் வசதி இல்லை, லைட் இல்லை. இப்போதுள்ள அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன், இதற்கு முன்பு இருந்த அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன், மாநகராட் சிக்கும் பல முறை எழுதி இருக்கிறேன். ஆனால் பலன் ஒன்றும் இல்லை. ஆகவே, உடனடியாக செய்கிறேன் என்று அமைச்சர் உறுதி கொடுத்து, அதை உடனடியாகச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எல். ஆர். இராதா: மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் முதலில் எடுத்துச்சொன்னபோது குடிசை மாற்று வாரியத்தில்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எண்ணி இருந்தேன். கடைசியில் அவர்கள் மாநகராட்சியிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொல்லியிருப்பதால், அவர் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள நிலைமைகள் என்ன என்பதை ஆராய்ந்து, எந்தத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதன் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் 2450 வீடுகள் கட்டப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வீடுகள் கட்டும் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முன்வருமா? லட்சக்கணக்கான மக்கள் வீடுகள் வேண்டும் என்று மனு செய்து இருக்கிறார்கள். அதன் மூலம் அரசுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய் வருமானம் கிடைத்து இருக்கும். ஒரு மனுவுக்கு ரூ. 30, ரூ. 40 என்று வாங்கப்படுகிறது. ஆகவே, அதிகமான வீடுகளைக்கட்ட அரசு வழி வகை செய்யுமா? (குறுக்கீடு)

1984 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி சென்னை நகரத்தில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றியதாகும். 2450 வீடுகள் 1982–83 ஆம் ஆண்டு ஜூன் வரையில் கட்டப் பட்டிருக்கிறது. எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நாம் வீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். சென்னையிலே இருக்கின்ற குடிசைகளையெல்லாம் ஒழித்துவிட முடியுமா என்பது மிகப் பெரிய கேள்வியாகும். ஆனால் எவ்வளவு அதிகமாகக் கட்டிக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நாம் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கிறோம். போதிய இடம் கிடைக்காதது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் குடியிருக்கும் பகுதிகளை குடியிருக்க தகுதியாக இருக்கும் வகையில் மேம்பாடு செய்வதற்காக திட்டம் போட்டு இருக்கிறோம். இடம் கிடைத் தால், அந்தப் பகுதியில் நிச்சயமாக குடிசை மாற்று வாரியம் மூலம் அதிக வீடுகளைக் கட்டிக் கொடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய இருக்கைக்குக் கீழே யாரோ குடையை வைத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். இது என்னுடைய குடை அல்ல. (குடையைக் காண்பித்தார்).

திரு. கு. பாலன்: அது என்னுடைய குடை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்குள் குடை எடுத்துக்கொண்டு வரக்கூடாது.

திருப்பத்தூர் தொகுதியில் பனையோலைப் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தும் திட்டம்.

19—(*வினா எண் 20008) திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி வறட்சிப் பகுதியாக உள்ளதால் அங்கு பனையோலைப் பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்தி சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வருவாய் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி விரயலட்சுமி பழனிச்சாமி: (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் கடந்த ஆண்டில் 8 பனை ஓலை பயிற்சி நிலையங்கள் செயல்பட்டன. நடப்பு ஆண்டில் திருப்பத்தூர் தொகுதியில் கயிதர் நிலையங்களை அதிகப்படுத்தும் திட்டம் தமிழ் நாடு கிராம தொழில் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது

[1984 பிப்ரவரி 17

திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதியில் பல ஒலைப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அவற்றில் பலவும் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை செய்யப்படுகிறதா? அங்கே பயிற்சி பெற்றவர்களுக்கு உற்பத்தி வாய்ப்பு அளிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி ப. விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டில் 8 பனை ஓலை பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டன. அதில் 160 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் ஆரம்பிக்கப்படும் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருவோருக்கும் அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இன்னும் அதிகமான பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே எம்பளாய்மெண்ட் கொடுத்து, பயிற்சி முடித்த ஆண்களும் பெண்களும் வேலையற்றிருக்கிறார்கள். ஸ்பாலேயே அப்படி இல்லாமல், அரசாங்கத்தின் உதவி நாடவேண்டுமென்று இருக்கிறார்கள். அப்படி பயிற்சி முடித்து அவர்களுக்கு இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு முதலிடம் கொடுத்து, வேலையில்லாமல் வேலைவாய்ப்புக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விசயலட்சுமி பழனிச்சாமி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்த பகுதியில் பயிற்சி பெற்று, எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று எழுதிக் கொடுத்தால் அரசாங்கம் அதை பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவரவர்களே, இந்த பனை ஓலை பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தக்கூடியத் திட்டம் திலே என்னுடைய தொகுதியிலும் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படுமா? என்னுடைய தொகுதியில் நிலையங்கள் அதிகமாக உள்ளன. அதோடு தொழில் நலிவுற்ற பனை மரங்கள் தொகுதியாகவும் இருக்கிறது. ஆகவே எனுடைய தொகுதியில் ஏதாவது ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திருமதி ப. விசயலட்சுமி பழனிச்சாமி: துணைத் தலைவரவர்களே, இங்கே கேட்கப் பட்டிருக்கிற கேள்வி இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி வறட்சி பகுதியாக உள்ளதால் அங்கு பனைமரம் ஏறும் பயிற்சி நிலையங்

1984 பிப்ரவரி 17]

களை அதிகப்படுத்தி சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வருவாய் கிடைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருஞ்சாணி, சிற்றார் நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்க வழங்கப்படும் படகுகளுக்கு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதா?

*20—(*வினா எண் 17528) திரு. டி. மணி: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் தீர்க்கப்படும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் சிற்றார் 1, சிற்றார் 2, பெருஞ்சாணி ஆகிய நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பதற்கு இயந்திரம் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப் படகுகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1984 மார்ச்சுக்குள் அவை வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கடந்த 1983 ஆம் ஆண்டிலேயே வழங்கப்படும் என்று சட்ட மன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. இப்போது 1984 மார்ச்சுக்குள் வழங்கப்படும் என்று சொல்கிறார்கள். அதற்குள் நிச்சயமாக வழங்கப்பட்டுவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, 1984 மார்ச்சுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, வழங்கப்படும்.

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, கடலிலே மீன் பிடிக்கின்ற மீன்பிடி விசைப் படகுகள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் மூன்று மைல்களுக்கு அப்புறம்தான் மீன் பிடிக்கலாம் என்று ஹைகோர்ட்டும் சுப்ரீம் கோர்ட்டும் உத்தரவிட்டும் அதை மீறி அவர்கள் மீன் பிடிப்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் பற்றி குறிப்பாகச் சொல்வார்களானால் துறையின் மூலம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: துணைத் தலைவரவர்களே, இந்த கண்ணாடி இழைப் படகுகள் எத்தனை நீர்த்தேக்கங்களுக்கு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது? இந்தப் படகுகளில் எத்தனை ஹார்ஸ் பவர் எஞ்சின் பொருத்தப்படும்? ஒரு படகின் விலை என்ன? அதற்கு சப்சிடி உண்டா?

மாண்புமிகு திரு க. கலைமணி: துணைத் தலைவரவர்களே, மொத்தம் 15 நீர்த்தேக்கங்களுக்கு 15 கண்ணாடி இழைப் படகுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. ஒரு படகின் விலை சுமார் 40,000 ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்ததால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. திகவல் கோரல்.

(அ) அடைமழையினால் ஏற்பட்டுள்ள சேதம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் அண்மைக் கால வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இந்த கோடைகாலத்தில் கடந்த ஒரு வாரமாக மழை பெய்கிறது. பல்வேறு மாவட்டங்களில் ஏற்கெனவே பெய்த மழையினால் ஏற்பட்ட சேதம் பற்றியும் அரசு எடுக்கின்ற நிவாரண நடவடிக்கை பற்றியும் அரசு எடுக்க அறிக்கை வைக்கவேண்டுமென்று கேட்டு, வெள்ளை வெள்ளை ஒன்றை வைப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்றாலும் இப்போது தொடந்து மழை பெய்துக்கொண்டிருக் கிறது. ஏற்கெனவே பெய்த மழையினால் பல இலட்சக்கணக் கான ரூபாய் மதிப்புள்ள வேளாண் பொருள்கள் சேதம் அடைந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான குடிசைகள் சேதம் அடைந்திருக்கின்றன. உயிருக்கும் உடைமைக்கும் பெருமளவில் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவை பற்றி இந்த மன்றம் பெரிதும் கவலை கொண்டிருக்கின்ற மன்றம் இப்போது காரணத்தால், சட்ட அமைச்சரவர்கள் நேரில் பார்த்து இந்த நிவாரணப் பணிகளை முடுக்கிவிடவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் குறைகளைப் போக்க புதிதாக ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா, சேதம் பற்றிய விவரம் தற்போது அமைச்சரிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த விவரங்கள் இருந்தால், அரசின் தரப்பிலே இன்றைக்கு மன்றத்திலே தெரிவிப்பதாக இருந்தால், அது இந்த திற்கும் மக்களுக்கும் உதவியாக இருக்கும்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான் இல்லம் கும்பத்திலிருக் கிறது. அதில் அவருடைய அன்னையாரும், அண்ணனும் வசிக்கிறார்கள்.... (குறுக்கீடு)

(முற்பகல் 10-20.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி இன்று தான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். அதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் (குறுக்கீடுகள்).

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் இல்லம் கும்பத்தில் இருக்கிறது, அங்கே அவருடைய தாயாரும், அண்ணனும், தம்பியும், மற்றவர்களும் குடும்பத்தோடு வசிக்கிறார்கள். கோஷ்டி முறையில் இருக்கக் கூடியவர்களை, வீட்டில் புகுந்து போலீஸ் தாக்கியிருக்கிறார்கள்.. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான்: அது என்ன என்றாவது தெரிந்துக் கொள்ள வேண்டாமா? எனக்கு பாதுகாப்பு இல்லை. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் முதலில் என்னை அலௌ பண்ணுங்கள்; 'இட் இஸ் எ சிரியஸ் அலிகேஷன்' (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: எனக்கு ரைட் இருக்கிறது, சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்குத்தான் அதுபற்றி ட்ஜர்ன்மெண்டு மோஷன் அறிவிப்பு கொடுத்திருக் கிறீர்கள். அதைப் பரிசீலிக்க வேண்டாமா?.... (குறுக்கீடு) அதை எடுத்துக்கொள்ளும்போது அதுபற்றி பேசலாம்.

திரு. துரைமுருகன்: காலை 8 மணிக்கே கொடுத்தாகி விட்டது. இது மிகவும் சீரியஸ் மேட்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அட்ஜர்ன்மெண்டு மோஷன் அறிவிப்பைக் கொடுத்துவிட்டு, உடனே அதன்மீது பேசமுடியாது.... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் ஏ. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப் பினர் 55-ஆவது விதியின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ள பிரச்சினையை இன்றைக்கே எடுத்துக் கொண்டாலும் அரசு உடனடியாக பதில் சொல்வதற்கில்லை. அவர்கள் இன்றுதான்

அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அதுபற்றிய முழு விவரங்களையும் காவல் துறையினரிடமிருந்து அறிந்து, கேட்டு அந்த நிலைமையை இந்த அவைக்கு எடுத்து வைப்பதன் மூலமாகத் தான் அவைக்கு முழு தன்மையையும் எடுத்துச்சொல்ல முடியும். ஆக இப்போது உடனடியாக எடுத்துக்கொண்டால், முழுத் தகவலையும் அவைக்கு அளிக்க முடியாது. பிரச்சினையின் அவசரத் தன்மையை உணர்ந்து அரசு உடனே அதுபற்றிய தகவல்களைச் சேகரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளும். கூடுமானால், நாளைக்கே இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம். ஆக செய்தி வரவேண்டும். (குறுக்கீடு)

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr, Deputy Speaker, Sir, this is a very serious master involving the patents and properties of an hon. Member of the D.M.K.Party. I would like to. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் வேறு ஏதோ சொல்ல வருகிறீர்கள் என்று நினைத்தேன் (குறுக்கீடு: அதே பிரச்சினையைத்தான் சொல்ல வருகிறீர்கள். திரு. கோபாலன் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் இதே போன்ற இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறார். அவரும் ரெயில் பண்ணட்டும். பிறகு சேர்த்துப் பேசுவோம். He is also a Member, I should equally protect him. அவர் பேசட்டும் நீங்கள் அமருங்கள்.

THIRU K.S.G.HAJA SHAREEF: I have not finished.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு). என்னையாவது பேசவிடுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு). இது முறையல்ல. இப்படி நாம் நடந்து கொள்வது நல்லதல்ல. தயவுசெய்து எல்லோரும் அமருங்கள். திரு. கோபாலன் அவர்கள் வீடும் தாக்கப்பட்டு இருக்கிறது. (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் எஸ். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சனையையும் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற என்னுடைய யோசனையை அவை முன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் இப்போது அமருங்கள்.

I have not allowed Thiru GOPALAN. I have to protect him also.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை முக்கியமான பிரச்சினை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். திரு. துரைமுருகன் எழுப்பிய பிரச்சனையோடு, திரு. கோபாலன் எழுப்ப இருக்கிற பிரச்சனையையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அது ஒரு தனிப் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் கோபாலன் அவர்கள் கொண்டு வருவது தனிப் பிரச்சனை. அவர்கள் 13-2-84 அன்று நடந்த நிகழ்ச்சி பற்றி 55-வது விதியின்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு தரப்பிலேயிருந்து முழு விபரங்களையும் சேகரித்துத் தருவதற்காக அந்தப் பிரச்சனையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) 13 ஆம் தேதி நடந்த சம்பவம் அது. 17 ஆம் தேதி வரையிலும் அதைப்பற்றி எழுப்பவில்லை. இன்றுதான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நாளைக்கு எடுத்துக்கொள்ளும் வரை பொறுத்திருக்கக்கூடாதா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தரவேண்டிய அவ்வளவு பாதுகாப்பும் உண்டு. அந்தப் பாதுகாப்பிலும் எந்தக் குறையும் ஏற்படாது. நாளைக்கு அவையில் அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு விவரங்களைச் சொல்லலாம்; அரசு தரப்பிலும் அதற்குள் முழு விவரத்தையும் பெற்று பதில் சொல்ல முடியும். இந்தப் பிரச்சனையினுடைய முக்கியத்துவத்தை அறிந்து சொல்கிறேன். நாளைக்கே எடுத்துக் கொள்ளலாம். இன்றைக்கு தயவுசெய்து உறுப்பினர்கள் அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினை நாளைக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். (கூச்சல், குழப்பம்) அந்தப் பிரச்சினை முடிந்தாகிவிட்டது. . . .

திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள் . . (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி நோட்டீஸ் கொடுக்கவில்லை. எனவே இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு உரிமை இடையாது. (குறுக்கீடுகள்)

Thiru N. S. V. Chithan: It is not fair.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்னை அவையில் வருகிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதில் தம் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு முழு உரிமை உண்டு. மற்றத் தலைவர்களுக்கெல்லாம் கூட முழு உரிமை உண்டு. ஆனால் தலைமை தாங்குகிற தலைவர் அவர்களோ அல்லது துணைத் தலைவர் அவர்களோ, யாரைக் குறிப்பிடுகிறார்களோ அவர்களுக்கு இடம் அளித்து, அவர்களைப் பேச விடுவதுதான் முறை. உட்காரச் சொன்னால் உட்கார்ந்து, பிறகு பேசுவதற்கு வாய்ப்புக் கேட்கலாம். அவ்வித் தலைவருக்கு, ஒருவரை பேச அழைப்பதற்கோ, அல்லது பேச வேண்டாம் என உட்காரச் சொல்வதற்கோ உரிமை உண்டு. எதிர்க்கட்சித் தலைவரைப்பேச வேண்டாம் என்று சொன்னதற்கு, அந்தப் பிரச்னை இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பெறவில்லை; அதுபற்றி அவர் அறிவிப்பும் கொடுக்கவில்லை. எனவே அந்தப் பிரச்னை பற்றி பேச வேண்டாம் என்றார்கள்.... (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தப் புரொஜீஜர் சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்குச் சாதகமாக வருகிறபோது புரொஜீஜர் பேசுகிறீர்கள்.... (சூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் சொன்னது, அந்தப் பிரச்னையை இன்றைக்கு எடுத்துக் கொள்ளவில்லை: எதிர்க்கட்சித் தலைவரும் இந்தப் பிரச்னையில் நோட்டீஸ் கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை. அவர் வேறு கருத்தைப் பற்றி பேச முற்பட்டிருந்தார் என்றால், அதுவேறு விஷயம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேறு கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. இந்தப் பிரச்சினை குறித்து இனி யாரும் பேச வேண்டாம்; என் அனுமதியின்றி பேசப் பெறுபவை குறிப்பேட்டில் ஏறாது

THIRU K.S.G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker, Sir, it is a most disgusting thing that we were not permitted to speak but you are liberally asking somebodyelse to speak.

MR. DEPUTY SPEAKER: It is not somebody else. He is also an Hon.ble Member like you.

THIRU K.S.G. HAJA SHAREEF: I know.

MR.DEPUTY SPEAKER: Do not cast aspersion on individuals. He is also a Member like you. He has got the same rights.

உறுப்பினர்கள் எல்லோருக்கும் பேசுவதற்கு உரிமைஇருக்கிறது என்று சொல்லி அவ்வளவு பேரும் எழுந்து நின்று பேசமுடியுமா? தலைவர் அனுமதித்தால்தான் பேச முடியும். தலைவருடன் ஒத்துழைத்தால்தான் அவையை நடத்திச் செல்ல முடியும். பேரவை விதிகளின்படித்தான் நான் அவையை நடத்திச் செல்ல முடியும். எனக்கு பாதுகாப்பு விதிகள்தான். விதிகளின்படி அவையை நடத்திச் செல்ல உறுப்பினர்கள் அனைவரும் என்னுடன் தயவுசெய்துஒத்துழைக்கவேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய பாதுகாப்பு எனக்குத் தேவை, என்னுடைய கடமையை நான் செய்வதற்கு.

THIRU K.S.G. HAJA SHAREEF: I have not cast any aspersion on any of my colleagues whom I respect. But I feel that your asking the other gentlemen to speak is very wrong on your part. The parents of a very important member of this House have been subjected to Police interference. I want the Government to place before this house full particulars. In the meantime please give them protection.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்துழைப்பு இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன்: தாங்கள் அனுமதி கொடுக்க வில்லையென்றால் நாங்கள் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

(அ) அடை மழையினால் ஏற்பட்டுள்ள சேதம்—தொடர்ச்சி

திரு சு. பாலன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் சென்னை மாநரம் மிகவும்பாதிக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பெரம்பூர் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே வியாசர்பாடி, சத்தியமூர்த்தி நகர், ஜீவா நகர், திரு.வி.க. நகர், வ.உ.சி. நகர், கோவிந்தம்மாள் தோட்டம், பாச்சா தோட்டம், தாசாமகான், கல்யாண மேஸ்திரி தோட்டம் ஆகிய பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே குடிசைகளிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கி மிகவும் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். தண்ணீரில் அவர்கள் எல்லாம் அகப்பட்டு இருக்கிறார்கள். உடனடியாக முன்னெச்சரிக்கையாக அவர்களை வெளியே வரச் செய்வதற்கும் அவர்களுக்கு நிவாரணங்களைக் கொடுப்பதற்கும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: [1984 பிப்ரவரி 17 அவர்களே, தொடர்ந்து மழை பெய்து துணைத் தலைவர் அதைப்பற்றி பல்வேறு மாவட்ட ஆட்சித் கொண்டிருப்பதால் தொடர்புகொண்டு நிவாரணப் தலைவர்களோடும் அளவுக்குச் செய்ய வேண்டுமென்று பணிகளை தேவைப்படுகிற அது மட்டுமல்ல, என்ன சொல்லப்பட்டிருக்கிறது. தொலைபேசி மூலமாகச் நடக்கிறது என்ற சேகரித்துக்கொண்டு செய்திகளை அதேமாதிரி சென்னையிலே மாவட்ட இருக்கிறோம். மாநகராட்சி தனி அதிகாரி மூலம் ஆட்சித் வேண்டிய நடவடிக்கைகளை தலைவர், எடுத்துக் கொண்டிருக்கிறோம் காலையிலே மாவட்ட தொடர்பு கொண்டு ஆட்சித் வேண்டுமா என்று கேட்டு எங்காவது போய்ப் இருக்கிறோம். பார்க்க அதையும்போய்ப்பார்ப்பதற்குத்தயாராகஇருக்கிறோம் என்பதைத் செய்தி வந்தவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி.

திரு. த. இராமசாமி: மாண்புமிகு சட்டப் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் நன்றி தெரிவித்துப் மேதகு ஆளுநர் உரைக்கு உங்களுக்கு முதற்கண் வாய்ப்பை அளித்தமைக்காக கொள்கிறேன். 1984 என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் நாள் மேதகு ஆளுநர் ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தலைவருடைய அரசாங்கம் நிகழ்த்திய உரையில் புரட்சித் ஆற்றியிருக்கிற சிறந்த தமிழகத்தில் கடந்த காலத்திலே பணிகளைப் பற்றியும், அரசுப் பணியாளர்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய இனிப்புச் செய்திகளையும் தொழிலாளர் வர்க்கத்திற்கு வழங்கப்படுகிற இனிப்புச் செய்திகளையும் ஆளுநர் உரையிலே தந்ததற்காக தமிழகத்தினுடைய காவல் தெய்வமாம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மேதகு ஆளுநர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10—40)

தமிழகத்தில் பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காகவும், சிறிய மாவட்டங்களை முன்னேற்றுவதற்காகவும் வழிவகை காண்பதற்காக புதிய 7 மாவட்டங்கள் இன்றைய தினம் உருவாக்கப் பட்டு இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் என்பது ஒரு பெரிய மாவட்டமாக இருந்து வந்தது. கடந்த 20 ஆண்டு காலமாக அந்த மாவட்டத்தைப்பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை அந்தப்பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மத்தியில் இருந்து வந்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக அறிவோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள் கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தமிழகத்தில் அமை வதற்கு முன்னாள் அந்தக்கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக

1984 பிப்ரவரி 17] [திரு. த. இராமசாமி]

இருந்து வந்தது. அந்த மாவட்டத்தைப் பிரிப்பதில் மற்றைய அ சுகள் முனைப்பாக இருந்தாலும் மாவட்டத்தின் தலைநகர மாக இது இருக்கும் என்று ஆக்கினால் அதன் மூலமாக பல்வேறு பகுதியிலிருந்து எதிர்ப்புகள் வந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அந்த மாவட்டத்தைப்பிரிக்கமுடியாத ஒரு சூழ்நிலை அந்தக்காலத்திலிருந்து இருந்து வந்தது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம அனைத்து மக்களின் கோரிக்கையையும் நியாய உணர்வினையும் ஆராய்ந்து தாய் உள்ளத்தோடு பரிந்து இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட் டங்களாகப்பிரிக்கின்ற காரணத்தினால் பிரச்சினை வந்து விடக் கூடாது என்ற நல்ல உணர்வோடு அனைத்து மக்களும் பாராட்டக் கடிய அளவுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிவினை கண்டு வெற்றியும் கண்டு இருக்கிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் காண வேண்டும் என்று சொன்னால் சுமார் 72 மைல் தூரம் சென்று மதுரையில் மாவட்ட ஆட்சித் தலைவரைக் காணவேண்டிய நிலை இருந்தது. ஆனால் இன்றையதினம் அது மாற்றப்பட்டு இராமநாதபுரத்தை தலைநகரமாகக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டம் என்று அமைத்ததற்கு மாண்புமிகு தமிழகத்தின் காவல் தெய்வமாக வீற்று இருக்கின்ற முதலமைச்சராகிய புரட்சித் தலைவர் அவர் களுக்கும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இராம நாதபுரம் தொகுதியில் உள்ள மக்களின் சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொற்பாதங்களில் செலுத்தியும் நன்றியையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தேசிய தலைவர்களாக தமிழகத்தில் அமைந்து இருந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள் பெயரையும் பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் பெயரையும் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்டங் களுக்கு பெயர் இடப்பட்டு இருப்பதற்கு நான் என் நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டும் அல்ல, தமிழகத்தில் அரசியல் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தி, தமிழகத்தில் ஆட்சியை ஏற்படுத்தி, தமிழகம் என்ற உணர்ச்சியை ஏற்படுத்தி, தமிழர் என்ற உணர்ச்சியை ஏற்படுத்தி இந்த நாட்டை நல்ல பாதைக்கு கொண்டு செலுத்திய தமிழக உத்தமத் தலைவன், தமிழக மக்கள் இதயத்தில் வீற்று இருக்கிற நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் மாவட்டம் கண்டதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியை அவர்களுடைய பொற்பாதங்களில் செலுத்துகிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத் தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு த. இராமசாமி] [1984 பிப்ரவரி 17

இங்கே பேசுகின்றபோது எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் நடந்த வறட்சிப் பணிகளைப் பற்றி நமது அரசு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். தமிழகத்தில் கடந்த காலத்தில் வறட்சி உச்ச கட்டமாக இருந்தது. அதை யாரும் மறுக்க முடியாது. வறட்சி கடுமையாக இருந்த நேரத்தில் கூட தமிழகத்தில் அரிசி பற்றாக்குறை இருந்ததா? அல்லது அரிசி இல்லை என்று பட்டினி சாவு ஏற்பட்டதா என்பதை எல்லாம் தயவுசெய்து குறை கூறுகிற எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்த்து நியாய உணர்வோடு சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விளைந்தாலும் கூட என்னுடைய பகுதி ஒரு காலத்தில் பஞ்சப்பகுதியாக இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில்கூட என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய வறட்சியான நேரத்தில்கூட, மக்கள் செழிப்பாக வாழ்ந்தார்கள். அரிசிக்கு பஞ்சம் இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு வாழ்ந்தார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி இருந்த நேரத்தில் மாநில அரசு மத்திய பேரரசின் நிதியைக்கூட எதிர்பார்க்காமல் இங்கே 116.28 கோடி ரூபாய் செலவழித்து வறட்சியை நீக்கிய ஒரு அரசு தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில்—கடந்தகால அரசுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது—வறட்சிப் பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறது என்று நாட்டு மக்கள் இன்றையதினம் சான்றிதழ் வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு ஒரு இனிப்பான செய்தியை இன்றைக்குத் தமிழக முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்த அரசு ஊழியர்களின் சங்கத் தலைவர்கள் புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள்; தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே பேசிய சம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அருமை நண்பர் திரு. அப்பாதுரை அவர்கள் இதில் ஏதோ மோசடி இருக்கிறது என்று சொன்னார்கள். ஓய்வூதியம் பத்தாயிரம் தருகிறோம் என்று சொல்வது மோசடியாக இருக்கிறது; ஐயாயிரம் ரூபாய்தானே வழங்குகிறீர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அரசு ஊழியர்களுக்குப் பத்தாயிரம் வழங்குகின்ற திட்டம் என்று சொல்லி, அதை ஏப்படிப் பெறுவது என்பதைப் பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றபொழுது எந்தஅடிப்படையிலே இதை மோசடி என்று அவர்கள் சொன்னார்கள் என்று தெரியவில்லை.

ஆண்டாண்டுக் காலமாக அரசு ஊழியர்களுக்கு இருந்த கோரிக்கைகளையெல்லாம் புரட்சித் தலைவரவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்து இனிப்பான செய்தியை வழங்குகின்ற இந்த நேரத்தில் அதற்காக அந்த ஊழியர்கள் அனைவரும் இந்த நேரத்தில் ஒன்று திரண்டு, இந்தியாவிலே முன் மாதிரியாகத் தமிழக அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று புரட்சித் தலைவரவர்களைப் புகழ்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இங்கேயுள்ள சட்டப் பேரவை உறுப்பினரவர்கள் இம்மாதிரி குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது அவர்கள் ஏற்றிருக்கின்ற கொள்கைக்குச் சரியானதுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிடத் தொழிலாளர்களுக்கு இருந்த நீண்ட கால கோரிக்கையும் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரிய பெரிய கட்டிடங்களையெல்லாம் நிர்மாணிக்கின்ற அந்தக் கட்டிடத் தொழிலாளர்கள் தங்களுக்கு என்று வீடு இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களைக் காக்க வேண்டுமென்றுமாண்புமிகு புரட்சித்தலைவரவர்கள் கருணையோடுஅந்தத்தொழிலாளர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, இறந்தவரின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வழங்குகின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தொழிலாளர் வர்க்கம் என்று சொல்லிக் கொள்ளுகின்ற, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே நாங்கள் தான் என்று சொல்லிக்கொள்ளுகின்ற கம்யூனிஸ்ட் கட்சி நண்பரவர்கள் இதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டவில்லையென்றாலும்கூட, மனத்தைப் புண்படுத்துகின்ற வகையில், நிந்திக்கின்ற வகையில் சொற்களைச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த டிசம்பர் மாதத்தில் கடுமையான மழை பெய்தது. அந்த மழையினால் இராமேஸ்வரத்தில் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத் தமிழகத்தின் முதல்வரவர்கள் அங்கே வருகை தந்து நிவாரணப் பணிகளை ஊக்குவித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏராளமான உதவிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதற்காக புரட்சித் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாம்பன் பாலத் திட்டம் ஏற்கனவே ஆரம்பமான திட்டமாக இருந்தாலும்கூட இடையிலேநிறுத்திவைக்கப்பட்டு,அந்தத்திட்டம் செயல்படாமல் இருந்தது. இன்றைக்கு, பாம்பன் பாலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கானஉத்தரவைவழங்கி,பாம்பன் பால வேலையை முடுக்கி விடுவதற்கான அறிவிப்பை இந்த உரையிலே சொன்னதற்காகத் தமிழக முதல்வரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. த. இராமசாமி] [1984 பிப்ரவரி 17

புரட்சித் தலைவரவர்களின் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், வறட்சிப் பகுதிகளாக இருந்தாலும் சரி, வெள்ளப் பகுதிகளாக இருந்தாலும் சரி, ஏராளமான நல்ல காரியங்களை யெல்லாம் செய்கின்ற அரசாங்கமாக இருக்கிறது என்று நாட்டு மக்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி, பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் வர்களுக்கு நன்றியைச் சொல்லி என் உரையை நிறைவு செய் கிறேன், வணக்கம்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு மரியாதைக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே ஆற்றிய உரையிலே அரசால் செய்யப்படும் சாதனைகளைப் பற்றி பரவலாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்கள் அரசினுடைய திட்டங்களைப் பற்றி இங்கே விளக்கிக் கூறியிருக் கிறார்கள். அரசு செய்திருக்கின்ற பல நல்ல காரியங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. மின் உற்பத்தி போன்றவை களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திட்டங்களை நாங்கள் மனமாரப் பாரட்டுகிறோம். இன்றைய அரசால் கொண்டுவரப் பட்டிருக்கின்ற நல்ல காரியங்கள் அத்தனையையும் பாராட்டினா லும்கூட, இன்னும் பல நல்ல காரியங்கள் நடைபெற வேண்டு மென்ற எங்களுடைய கருத்தைச்சொல்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நாடு சுதந்திரமடைந்து கிட்டத்தட்ட 34, 35 ஆண்டுகளாகி யும்கூட இன்னும் பல பகுதிகளிலே சரியான முறையிலே சுதந்திரத்தின் அருமையை உணராமலும் அரசால் அளிக்கப்படும் நன்மைகளை அடைய முடியாத நிலையிலும் கடைகோடியிலே எங்கோ அடையாளம் தெரியாத இடங்களிலே வாழ்ந்து வருகிறார்கள். இங்கே பல திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக் கிறோமே தவிர இந்தத் திட்டங்களெல்லாம் கடைகோடியில் உள்ள அந்த ஏழை மக்களுக்குச் சேரவில்லை என்பதற்குப் பல உதாரணங்களை உங்களுக்குச் சொல்ல முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 10—50)

ஆண்டாண்டாக கல்விக்கூடங்களில் படித்து முடித்த பட்டதாரி மாணவர்கள் பலர் இன்றைக்கு வேலையற்று தவித்துக்கொண்டிருப்பது இந்த அரசுக்குத் தெரியும். காமராஜர் காலத்திலே கொண்டு வந்ததைப் போல பல தொழில் நிலையங்களையும், பல வேலை வாய்ப்பு நிலையங்களையும் திறப்பதற்கு வேண்டிய திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்கள் இன்றைய அரசால் ஒன்றிரண்டு கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர பெரும் தொழில் கூடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய திட்டங்கள் பற்றி இதிலே கூடங்களைக் படவில்லை என்பதை உங்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள் கிறேன்,

1984 பிப்ரவரி 17] [திரு. ஆர். தியாகராசன்]

அடுத்து விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு உள்ள நிலைமை உங்களுக்குத் தெரியும். இந்த அரசு மின்சார உற்பத்தி செய்வதற்குரிய திட்டங்களைத் தீட்டுகின்றது. மின்சாரம் இல்லாமல் இந்த நாட்டிலே எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது என்பது உண்மைதான். காமராஜர் அவர்கள் காலத்திலே திட்டமிட்டு செயல்படுத்திய மின் உற்பத்தித் திட்டங்களைத் தவிர இப்போது திட்டமிட்டு செயல்படுத்துகின்ற மின் உற்பத்தி திட்டங்கள் இப்போதுதான் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. எனவேஇது மிகவும் தாமதமான ஒன்றாகும். எனவே இதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு இதிலே முனைந்து செயல்படவேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியிலே மின் உற்பத்தி செய்வதைப் பொறுத்த வரையில் மிகவும் ஆதாயமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. தூத்துக்குடி போன்ற இடங்களில் மின் உற்பத்தி செய்வதைவிட நெய்வேலியிலே குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்யப் படுவதாகச் சொல்லப்படுகின்றது. எனவே அங்கே பக்கத்திலேயே மாநில அரசு மேலும் ஒரு பெரிய தொழிற்சாலையை 100 கோடி ரூபாயிலே ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்களே தவிர அது சம்பந்தமாக இந்த அறிக்கையிலே எதுவும் குறிப்பிடப் படவில்லை. இருந்தாலும் நெய்வேலி 1, 2, 3 சுரங்கங்கள் அங்கே செயல்படுகின்றன. மின் உற்பத்திக்கு வேண்டிய திட்டங்கள் அங்கே செயல்படுத்தப்படுகின்றன. அந்தப் பகுதியிலே உள்ள விவசாய பெருங்குடி மக்கள் வாட்சி பகுதியிலே வாழக் கூடியவர்கள். அவர்களை அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்து கிறார்களே தவிர அவர்களுக்கு வேண்டிய உரிமைகளைக் கொடுப் பதற்கு இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் இன்று வரை எடுக்கவில்லை. அரசோ அல்லது நிலையார் நிறுவனமோ விடத்திலே உள்ள நிலையார் ஒருவரின் நிலத்தினை ஆர்ஜிதம் செய்கின்றது என்று சொன்னால் அங்கே ஆரம்பிக்கப்படுகின்ற நிறுவனத்திலே அந்தக் குடும்பத்தினைச் சேர்ந்தவர் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய அணையாகும். எனவே இந்த அணையின்படி இன்றுவரை நெய்வேலி சுரங்க நிறுவனத்திலே வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முறை செயல்படவே இல்லை. அந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் புறம்போக்கு போன்ற பகுதியிலே வீடுகளைக் கட்டி இருந் தார்கள் என்றால் அவர்களுக்கு அடிமனைக்கு பணம் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே இருந்து கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் புறம்போக்கு அல்லது தரிசுப் புறம்போக்கிலே கட்டியிருந்தாலும் அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுவது கிடையாது. எனவே இப்படிப்பட்ட நிலையில் மூன்றாவது திட்டத்தைத் தொடங்கு வதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். எனவே நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்ட விவசாயிகளின் குடும்பத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய காரியங்களைக் கொண்டுவர வேண்டும்

[திரு. ஆர். தியாகராசன்] [1984 பிப்ரவரி 17

என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்ளிக்கும் போது அதுபற்றிக் குறிப்பிடவேண்டும். அங்கே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட விவசாயிகள் அநாதைகள் போல பாதிஸ்தான், வங்காளதேசம் போன்ற இடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட அகதிகள் போல இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றுமே இல்லை என்று சொல்வது நியாயமா?

அஜீஸ்நகரிலே 80 வருஷமாக வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் அவர்கள் அடிமனைக்கு பாத்தியம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்தில் மின்சார உற்பத்தி என்பது தேவைதான். அது நல்ல திட்டம். ஆனால் அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன உதவி செய்யப் போகிறீர்கள் என்பது பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை இந்த அறிக்கையில் எனவே அதுபற்றி மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஒருவனுடைய வீடு ஆகியவற்றை எல்லாம் அப்புறப்படுத்தி நிலத்தை எடுத்துக் கொள்கின்றபோது அவர்களுக்கு அதற்கு ஈடாக நன்மை செய்ய வேண்டுமா? இல்லையா? ஆகவே அதற்கான திட்டத்தையும் அவசியம் நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நெய்வேலி சுரங்கத்திலே அதிகப்படியான தண்ணீரை இழுத்து விடுவதன் காரணத்தால் சுற்றியுள்ள கிராமங்களில் கூடுமைவான வறட்சி ஏற்படுகின்றது. அங்கெல்லாம் கிணறு தோண்டினாலும், அல்லது கைப் பம்ப் போட்டாலும் தண்ணீரே வருவதில்லை. ஒட்டேரி என்ற கிராமத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் வசூல் செய்து யூனியன் கணக்கிலே எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ. 1.40 இலட்சம் செலவு செய்து 50 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால், அரசினுடைய மொத்தச் செலவு என்ன? நெய்வேலியிலிருந்து வெளியேறக்கூடிய தண்ணீரை சென்னைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டிருந்தது. வீராணம் திட்டத்திற்காக பைப்புகள் போடப் பட்டிருக்கின்றன. அந்த பைப்புகளை வைத்து சுற்றியிருக்கிற கிராமங்களுக்குக் குடிநீர் கொடுத்தால் என்ன? அந்தக் கிராமங்கள் எல்லாம் பச்சைக் காடு; முந்திரிக் காடு. அந்தப் பகுதி தண்ணீரைக் குடிக்கவே முடியாது. ஆகவே, இந்த வீராணம் பைப்புகளை உபயோகப் படுத்தி அக்கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்தது 20 மைல் சுற்றளவுள்ள கிராமங்களிலே 200, 300 அடி ஆழம் தோண்டினால்கூட தண்ணீர் வருவதில்லை. இன்றைக்கு அங்கே ஓடுகிற ஓடையிலே தண்ணீர் வருவதில்லை. நில்லாவிட்டால் போயிற்று. அந்த மாதிரி நிலைமையிருக்கிறது. அந்த மாதிரி நிலைமை இருப்பதாலே குடிநீர் திட்டத்தை அங்கு சுற்றியுள்ள கிராமங்களுக்கு மாநில அரசோ, மத்திய அரசோ கொண்டு வந்து, அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கவேண்டு

1984 பிப்ரவரி 17] [திரு. ஆர். தியாகராசன்]

மென்று இந்த நேரத்திலே தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். வேலை கொடுப்பதன் மூலமாக அவர்களுக்குப் பணம் கிடைக்கும். இதற்கெல்லாம் திட்டமிட வேண்டுமென்று உங்களை இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்த வறட்சியோடு இடுபயிர்கள் எல்லாம் அழிந்து பிறகு அவன் ஓரளவுக்குப் பயிர் செய்து, ஏதாவது நன்மை அடையும் நேரத்திலே வெள்ளம் வந்தது. எங்கள் பகுதியிலே வறண்ட ஆறுகளே நிறைத்திருக்கின்றன. ஒன்று மணிமுத்தாறு, மற்றொன்று வெள்ளாறு. இந்த இரண்டு ஆறுகள் மத்தியிலே என்னுடைய தொகுதி இருக்கிறது. இந்த இரண்டு ஆறுகளிலும் பெருத்த வெள்ளம். அமைச்சர்கள் வெள்ளம் என்று தஞ்சாவூருக்குத்தான் போய் பார்த்தார்கள். 2,3 நாட்கள் வெளியே வரவே முடியாத நிலையில் எங்கள் பகுதி மக்கள் இருந்தார்கள். பழங்குடி என்ற கிராமத்திலே அந்த நிலையிருந்தது. ஆனால், யாரும் வந்து பார்க்கவில்லை. ஏதோ தஞ்சை, திருச்சி என்று எல்லா அமைச்சர்களும் இலாகாவினர்களும் அங்கே போகிறார்களே தவிர, தென்னாற்காடு பகுதியிலே இருக்கிற வெள்ளப் பகுதிகளை வந்து பார்த்தார்களா? ஒரு கிராமத்திலே 2,3 நாள் நானே மாட்டிக் கொண்டேன். என்னோடு வந்த ஆள் ஆற்றிலே அடித்துக் கொண்டு போய்விட்டான். பிறகு எல்லோரும் தேடி அவனைப் பிடித்தோம். அப்படி இருக்கும்போது எங்கள் பகுதிக்கு யாரும் வந்து பார்க்க மறுக்கிறீர்கள். இன்றைய நிலையிலே வயலில் அறுவடை செய்ய வேண்டிய பயிர் ஏராளமாக வந்திருக்கிறது. ஆனால், மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் தஞ்சாவூரிலே உள்ள விவசாயிகளுக்கு ரூ. 35 போனஸ் கொடுக்கிறோம் என்று அறிவித்தார். நாங்கள் எல்லாம் என்ன பாவம் செய்தோம். எங்களைவிட அவர்களுக்கு என்ன செலவு அதிகம்? நாங்கள் மோட்டார் வைத்திருக்கிறோம். கரண்டுக்குப் பணம் கட்டுகிறோம் ஆழமாகக் கிணறு எடுக்கிறோம். எங்களைவிட அதிகமாக விளைச்சல் அவர்களுக்கு வருகிறது. இருந்தாலும் ஏக போகம் என்று இருக்கக்கூடாது. எல்லா பகுதிகளுக்கும் அந்த போனஸ் கிடைக்க வேண்டும். எங்கள் பகுதியிலே, சிதம்பரத்திலே மட்டும் சரவிதை உலர்த்த முடியும். மற்ற பகுதிகளிலே அவ்வாறு உலர்த்த முடியாது. காரணம் தேவையான கருவிகள் இல்லை. ஆகவே, மத்திய சர்க்காராக இருந்தாலும், மாநில சர்க்காராக இருந்தாலும் எல்லா பகுதிகளுக்கும் போனஸ் கொடுக்க வேண்டும். நாங்களும் வேர்ஹவுசிலே நெல்லைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அவர்கள் அங்கேயிருக்கிற வியாபாரிகள் மூலமாகத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே இருக்கிற வியாபாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள். 50 கிலோ நெல் ரூ. 50 என்று சொல்கிறார்கள். அந்த விலைக்கு நெல்லைக் கொடுத்தால், விவசாயி விழுந்து வாங்க வேண்டாமா? பயிர்களுக்கு இடுபொருள் இடவேண்டாமா? பெண்டு பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க வேண்டாமா? பிள்ளை

[திரு. ஆர். தியாகராசன்]

[1984 பிப்ரவரி 1

ளைப் படிக்க வைக்க வேண்டாமா? இந்த நிலையில் 50 லோ நெல்லை, ரூ. 50-க்குக் கேட்கிறார்கள். நெல் அதிகமாக ளைந்தாலும், வேர்ஹவுஸில் எடுக்க மறுப்பதால், விவசாயி ளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆகவே, போனஸ் கொடுத்து, எல்லா பகுதியிலிருந்தும் நெல்லைப் பெற்றுக் கொள்ள ற்பாடு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய உத்தரவிட வேண்டுமென்று இந்த அரசை விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பை எடுத்துக் கொண்டால், ஒரு ஏக்கருக்கு 10 டன், 20 டன்கூட கிடைக்கவில்லை. அது ஓராண்டுப் பயிர் வறட்சி யினால், கரும்புக்குத் தண்ணீர் இல்லாமல், காய்ந்து நீர்த்துப் போய் விட்டது.

(முற்பகல் 11-00)

இப்போது மழை பெய்கிறது. அது உடனே வந்து விடுகிறது. ஆகவே ஒரு ஏக்கரில் 20 டன்கூட கரும்பு வெட்ட முடிய வில்லை. விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. கரும்பு உற்பத்தியில் மாநில அரசும், மத்திய அரசும் பெரிய பலனை அடைகிறார்கள். கரும்பை நாட்டினுடைய காமதேனுவாக விவசாயிகளும், மற்றவர் களும் கருதுகிறார்கள். மத்திய அரசுக்கு பெரிய அளவில் கரும்பு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. மதுபானங்களை தயாரிக்க கரும்பு மாநில அரசிற்கு உதவுகிறது. கரும்பின் சக்கை கூட காகிதம் செய்யப்பயன்படுகிறது. கரும்பின் அளிக்கிற அந்தக் கரும்பை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான உதவியும் செய்யப்படவில்லை என்பதை தெள்ளத் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன். 81-ஆம் ஆண்டிற்குப் பின்னாலே படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் கரும்பிற்கு விலையை குறைத்துக் கொண்டே வந்துவிட்டார்கள். எந்த விதத்திலும் ஏற்றிக் கொடுத்ததாகத் தெரியவில்லை. எந்த நேரத்தில் விலைவாசி உயர்வு, இடுபொருள்கள் விலை உயர்வு, அரசாங்கம் போடுகிற வரிகள் போன்றவற்றால் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லாமல் போயிற்று. முத்தரப்பு மகாநாடு கூட்ட வேண்டுமென்று நான் மரியாதைக் குரிய முதலமைச்சர் அவர்களைக் கூட கேட்டிருந்தேன். இதற்கு உரிய விலை நிர்ணயம் செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு பக்கத்திலே இருக்கிற மாநிலங்களில் எல்லாம் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். நம் மாநிலத்தில் இன்னும் செய்யவில்லை. அப்படியே விலை நிர்ணயம் செய்தாலும் கூட செய்யவில்லை. கரும்புக்கு ஒரு மூட்டை சர்க்கரை அளிக்கக்கூடிய ஒரு டன் 1½ மூட்டை சர்க்கரை கொடுக்கக்கூடிய கரும்புக்கும், விலை என்று விலை நிர்ணயம் செய்தார்கள். இன்றைக்கும் அதே சுகர்ஸ்லில் உற்பத்தி ஆகக்கூடிய சர்க்கரைக்கு 1½ மூட்டை சர்க்கரை ஒரு டன் கரும்பிற்கு வருகிறது, அதேபகுதியில் ஒரு டன் கரும்பிற்கு ஒரு மூட்டை சர்க்கரை சுத்துள்ள கரும்பும்

1984 பிப்ரவரி 17] [திரு. ஆர். தியாகராசன்]

விளைகிறது. இரண்டுக்கும் ஒரே விலை என்று வைத்துள்ளார்கள். ஆகவே இதனால் விவசாயிகளுக்கு பெரிய நஷ்டம், பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே விவசாயிகள் விஷயத்திலே மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். எத்தனையோ விஷயத்தில் நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளிடத்தில் நல்ல பெயர் பெற்றுள்ளார்கள். பல நல்ல காரியங்களை செய்து வருகிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளை திரும்பிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய நிலை எந்த அளவிற்கு தீர்கெட்டிருக்கிறது என்பதை இந்த அரசு உணிக்க வேண்டும். விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். விவசாயிகள் தங்கள் குடும்பத்தில் எந்தவிதமான நிலையும் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரைக்கால் சர்க்கரை பொறுத்தவரையில் 13 பைசா யூனிட்டிற்கு என்றால் எக்காரில் சொல்கிறோம். அதேபோல விவசாயிகளுக்கு கரும்புக்கட் சர்க்கரை குறைத்துக் கொடுக்க வேண்டும். எங்களுக்கு இருக்கிற கடன்களை இப்போது வரட்டியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருப்பதாலே ஒரு ஆண்டு காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டும்; அவர்கள் மீண்டும் பயிரிடுவதற்கு மாநில அரசு மானிய அடிப்படையில் நிதியுதவியும், விதை உதவியும் இது போன்ற உதவிகளை எங்களுக்கு கட்டாயமாக செய்யவேண்டு மென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள் கிறேன்.

வேலைக்கு உணவு திட்டம் என்பது இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே அரசு நிறைய கொடுக்கிறார்கள்; டன் கணக்காக அரிசி கொடுக்கிறார்கள். கிராம சேவகர்கள் தான் அந்த வேலையை செய்ய வேண்டும். அவர்கள் மூலமாக இங்கே இருக்கிற ஏழைகள் அந்தத் திட்டத்தில் வேலை செய்தால் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். அது தான் அரசினுடைய திட்டம். ஆனால் அங்கே கிராம சேவக்கும், கமிஷனரும் சேர்ந்து கான்ட்ராக்டர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். எத்தனை ஆட்கள் வேலை செய் தார்கள். என்று மொத்த கணக்கை சொல்லிவிட்டு அரிசியை வாங்கிக் கொண்டு போய் அதிக விலைக்கு கொடுத்து விட்டு அந்த தொழிலாளர்களுக்கு பணந்தான் கொடுக்கப் படுகிறது. அரிசி தொழிலாளர்களுக்கு போய் சேர்வதில்லை. இதுபோன்று பல திட்டங்களைக் சொல்ல முடியும். ஹவேவஸ் ரோடிலே இருக்கிற ஒரு எஞ்சினியர் அங்கே வேலைக்கு உணவுத் திட்டத்தில் வேலை செய்யக்கூடிய அரிசனர்களுடைய தலைவரை கையிலே வைத்துக் கொண்டு, அவர் பெயரிலே பில்லைபோட்டு இவர்கள் நேரடியாக வாங்கிக் கொள்கிறார்கள். அதை கான்ட்ராக்ட் கூட விடுவதில்லை. அரசு எவ்வளவு திட்டங்களைப் போட்டாலும் அந்தப் பகுதியை மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டும். எல்லாவிட்டால் அதிகாரிகளை விட்டாவது பார்க்கச் சொல்ல வேண்டும். இன்றைக்கு அரசால் கொடுக்கப்பட்ட அத்தனை காரியங்களிலும் பல தவறுகள் நடந்திருக்கின்றன. அதை என்னால்நிருபிக்க முடியும்.

[திரு. ஆர். தியாகராசன்] [1984 பிப்ரவரி 17

அதேபோல வெள்ளத்தால் இடிந்த வீடுகளுக்கு பணம் கொடுக்கிறபோது இடியாத வீடுகளுக்கு பணம் கொடுக்கிறார்கள். இடிந்த வீடுகளுக்கு பல இடங்களில் உதவி கொடுக்கப்படவில்லை. இது வருந்தத் தக்கச் செயலாகும். ஆகவே அரசு போடும் திட்டங்களை மீண்டும் அதிகாரிகளை வைத்து கவனிப்பதிலே ஆக்கமும், ஊக்கமும் காட்ட வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி விலையை 25 பைசா ஏற்றிவிட்டார்கள். அதைப்போலவே சர்க்கரை விலையையும் 25 பைசா ஏற்றிவிட்டார்கள். அதே நேரத்தில் உற்பத்தி செய்கிறவர்களுக்கு அந்த விலை யேற்றத்தைக் கொடுத்து இருக்கிறார்களா என்றால் இல்லை. ஏன் விவசாயிகள் விஷயத்தில் மட்டும் இந்த அரசு கருணையற்று இருக்கிறது என்று தெரியவில்லை. மத்திய அரசு விவசாயக் கமிஷன் நியமிக்கிறது. அதன் மூலம் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்கிறது. அதைப்போலவே, பூரியா மற்றும் இதர இடுபொருள் களுக்கும் விலை நிர்ணயக் கமிஷன் போட்டு நிர்ணயித்தால் நல்லது. அதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த வேலைவாய்ப்புத் திட்டத்தை மாநில அரசு மத்திய அரசு உதவியுடன் நல்லமுறையில் செயல்படுத்தி வருகிறது. ஆனால் அதைச் செயல்படுத்துகிற அதிகாரிகள் ஆங்காங்கு எந்த வகையில் தவறு செய்கிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களுக்கு என்னவோ தாங்கள் தான் உழைப்பதாக சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லிக் கொண்டாலும் தமிழக அரசு நல்ல பல திட்டங்களை அந்தத் தொழிலாளர் களுக்கு தீட்டித் தந்து இருப்பதால், இந்த அரசை நான் பாராட்டு கிறேன். இருந்தாலும் கூட தனியார் துறையில் இருக்கிற தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி என்று 10 ரூபாய் தான் சில இடங்களில் தரப்படுகிறது. அரசு நிறுவனங்களில் பணிபுரி கின்றவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுவாடகைப்படி போல் அவர் களுக்கும் வழங்க வேண்டும் என்று அரசு சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டிடத் தொழிலாளர்களுக்கு இறந்தால் 10,000 ரூபாய் உதவித்தொகை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயத் தொழிலாளி யைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. விவசாயத் தொழிலாளி வாளர்களுக்கு 60 வயதுக்கு மேற்பட்டு இருந்தால் அவர்களுக்கு பென்ஷன் என்று சொன்னார்கள். ஆனால் விவசாயத் தொழி லாளர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆங்காங்கு மனு கொடுத்து இருக்கிறார்கள். இதுவரையில் ஒருவருக்கும் பென்ஷன் கிடைக்கவில்லை. அது உண்டா இல்லையா என்றுகூட தெரிய வில்லை. அதனால் எந்தவிதமான நன்மையும் விவசாயிகளுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதைப்போலவே முதியோர் உதவித் தொகை அறிவித்தீர்கள். நான் கூட பலபேருக்கு கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். எந்த முதியோருக்கும்

1984 பிப்ரவரி 17] [திரு. ஆர். தியாகராசன்]

இதுவரையில் உதவித்தொகை கிடைத்ததாகத் தெரியவில்லை. தாசில்தார் ஆபீசில் போய் விசாரித்தால் அப்புறம் பார்க்கிறோம் என்று சொல்கிறார்கள். அதைப்போலவே சத்துணவுத் திட்ட மையங்களில் வயதானவர்களுக்கு சத்துணவு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. அங்கே போய் சத்துள்ளவர்கள் சத்துணவு வாங்கிக் கொள்கிறார்களே தவிர முதியோர்களுக்கு கிடைக்க வில்லை. முதியோர்களுக்கு நியாய விலைக்கடைகளில் 3 கிலோ அரிசி கொடுத்து வந்தார்கள். ஆனால் கடந்த 6 மாத காலமாக ராஜாங்கம், ரங்கநாதன் என்பவர்களுக்கு அரிசி கொடுக்கப் படவில்லை. ஏன் என்று தெரியவில்லை. இதையெல்லாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுக்கு ஏற்ற வகையில் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய அரசு முன் வரவேண்டும். தொழிலாளர்களுக்கு அது வேண்டும், இது வேண்டு மென்று கேட்டு போர்வலம் எல்லாம் நடந்துகிறார்கள். ஆனால் யாரோ ஏதோ பேசினார்கள் என்பதற்காக இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு எதுவும் செய்யாமல் இந்த அரசு புறக் கணிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்போலவே இலவசமாக வேஷ்டி புடவை வழங்கப்பட்டது. அதுவும்சரியானபடி வழங்கப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட என்னுடைய விருத்தாசலம் பகுதியும் தென்னாற்காடு மாவட்டப் பகுதியிலும் பலர் வீடு களை இழந்து தவிக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களாக பெய்த தொடர்ந்த மழையின் காரணமாக, 23 பேர் இறந்து விட்டார்கள். என்று எலக்கு நேற்று போன் மூலம் செய்தி வந்தது. வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் சபாநாயகர் மூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10.)

இப்போது நம்முடைய எம்.எல்.ஏ. குடியிருப்புகள் எல்லாம் ஒழுகுவதாகச் சொல்கிறார்கள். எம் எல் ஏ. குடியிருப்பு என்றால், நான் சொல்வது பழைய ஆஸ்டல் பக்கத்தில் இருக்கிற விடுதிகள். அவை ஒழுகிக் கொண்டிருக்கின்றதுஎன்று சொல்வதால் உடனடி யாக அவற்றைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி, முடிக்கிறேன்.

திரு. கு. புத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1984 பிப்ரவரி 17

எடுத்துச் சொன்னார்கள். ஆளுநர் உரையிலே தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களுக்காக எடுத்துச் செய்கின்ற பணிகளை எல்லாம் மிக அருமையாக தெளிவாக்கியிருக்கிறார்கள் என்பதை அறிந்து இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கிற நாலரை கோடி மக்களும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின் மூலமாக நிர்வாக வசதிக்காக பல பெரிய மாவட்டங்களைப் பிரித்திருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக இந்தக் கோரிக்கை இருந்து வந்தது. இதுவரையில் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படாமல் இருந்தது. இன்றைக்கு புரட்சித் தலைவரவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, பெரிய மாவட்டங்களைப் பிரிக்கின்ற பணியை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். நல்ல காரியம் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப்போன்று அரசு ஊழியர்கள் பிரச்சனை. ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று அரசு ஊழியர்கள் பல ஆண்டு காலமாக கோரிக்கை வைத்திருந்தார்கள். அதை கவனத்தில் கொண்டு, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் மன மகிழ்வு கொள்ளத்தக்க வகையில் அவர்கள் ஓய்வு பெறும் போது 10,000 ரூபாய் வழங்கும் நல்ல திட்டத்தை அறிவித்திருக் கிறார்கள். ஆகையால் அரசு ஊழியர்கள் அத்தனை பேர்களும் புரட்சித் தலைவருக்கு நன்றி தெரிவித்து, பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போன்று இந்த அரசு பஞ்சாயத்துத் தேர்தலை எப்போது நடத்தும் என்று பொதுமக்கள் மத்தியிலே குறை சொல்லிக்கொண்டிருந்த எதிர்க்கட்சிகளுக்கு நல்லமுறையில் பதில் சொல்லுகின்ற வகையில் தேர்தல் தேதியை தெளிவாக ஆளுநர் உரையில் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. என்பதை இன்றைக்கு தமிழக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களும் இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழகத்திலே புரட்சித் தலைவர் அரசு ஒன்றுதான இந்த முன்னோடித் திட்டங்களை நிறை வேற்றி வருகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1984 பிப்ரவரி 17] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

பல மாநிலங்களிலே இருக்கின்ற அரசுகள் புதியத் திட்டங் களைத் தீட்டுகின்ற நேரத்தில் அங்கே இருக்கிற அரசு அதிகாரி களை தமிழ்நாட்டுக்கு அனுப்பி அறிந்துவரச் செய்கின்ற காட்சியை இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் செயல்படும் திட்டங்களைப் பார்த்து, இங்கே நடப்பதைப்போல அந்த அந்த மாநிலத்தில் நடத்துவதற்கு அதிகாரிகளை அனுப்பி பார்த்துவரச் செய்கிறார்கள். அந்த வகையிலே பார்த்தால் இன்றைக்கு தமிழகம் மற்ற மாநிலங் களுக்கு, இந்தியாவுக்கு முன்னோடியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற திட்டங்களை மற்ற மாநிலங்களில் இருக்குமதி செய்கின்ற அளவுக்கு, தமிழ்நாடு அந்த மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்ற மாநிலமாக இருக்கிறது என்பதை அறிந்து இந்தியாவில் இருக்கிற அனைத்து கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் இந்த நேரத்திலே கூட இந்த அரசு செய்தது போதாது, இந்த அரசு செய்கின்ற பணிகள் சரியாக நடைபெற வில்லை, திட்டங்களை சரியாகச் செயல்படுத்தவில்லை என்று சொல்லி பலர் இந்த அரசை குறைசொல்லிக்கொண்டிருக் கிறார்கள். இந்த அரசு நீடிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள் சிலர். வேண்டுமென்று குறைசொல்லும் பழக்கம் என்ற அளவிலே இன்றைக்கு அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இப்படி குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நடைபயணம் என்ற முறையிலே அவர்கள் தமிழ்நாட்டிலே பல்வேறு பருதிகளுக்குச் சென்றபோது—பல எதிர்க்கட்சிகள் அதிலே கலந்து கொண்டார்கள்—இங்கே இருக்கிற எதிர்க்கட்சி களுக்கு எந்தவிதமான ஆதரவும் கிடைக்கவில்லை. என்று பத்திரி கையில் செய்தி வந்திருக்கிறது. நடைப்பயணம் போனவர்கள் எல்லாம் நடைப்பிணமாக வருகின்ற நிலைமை இருந்து கொண் டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் மீது கொண் டிருக்கின்ற பற்று, புரட்சித்தலைவர் அரசின்மீது காண்டிருக் கின்ற நல்லெண்ணம், எதிர்க்கட்சிகள் செய்கின்ற எந்த முயற்சியும் இந்த அரசின் மீது களங்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல உணவுத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, புரட்சித் தலைவருடைய அரசு மக்கள் நல்ல முறையிலே ஏற்கின்ற விதத்திலே விலைவாசியை கட்டுப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. கருணாநிதி ஆட்சிக் காலத்திலே தமிழ் நாட்டிலே இருந்த மொத்த குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை குறிப்பாக 40 இலட்சம். புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பின்னால், தமிழ்நாட்டிலே, இன்று 1,18,00,000 என்ற அளவிலே குடும்பக்கார்டுகள் வினியோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆக 40 இலட்சம் குடும்பக்கார்டுகளை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிற்கு அரிசி கொடுத்து வந்த நிலைமை அங்கே இருந்தது, கருணாநிதி, அதாவது தி.மு.க. ஆட்சியிலே ஒரு

(திரு. சு. முத்துக்கிருஷ்ணன்) [1984 பிப்ரவரி 17

படி அரிசி ரூ. 10-க்கு விற்றது. ஆனால் இந்த ஆட்சியிலே 1,18,00,000 குடும்பக்கார்டுகளுக்குஇந்தஅரசு, நியாய விலையிலே அரிசி கொடுத்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, வெளிச் சந்தையிலே ரூ. 3.40 என்ற அளவிலே கொள்முதல் செய்து ஒரு கிலோ ரூ. 1.80, ரூ. 1.20 என்ற விலைக்கு இந்த அரசு மக்களுக்கு அரிசி ய விநியோகித்து வருகிறது. ஒரு கிலோ அரிசியை எடுத்துக்கொண்டால் கூட, ரூ. 1.45 என்ற அளவிலே சப்சிடி கொடுக்கின்ற நிலைமை இன்று தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது.

உணவுத் துறையை எடுத்துக்கொண்டால் அது மட்டுமல்ல. தொழிலாளர் நலத் துறை போன்ற எந்த துறையிலும், தமிழக மக்களுக்காக பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது.

காவல்துறையை எடுத்துக்கொண்டால், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதலிடம் வகித்து, நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டு இருக்கிறது. பல இடங்களிலே நடைபெற்ற போராட்டங்களிலே நமது காவல் துறை மிகச் சிறப்பாக செயல் பட்டுவந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இந்த அவையிலே பேசுகின்றபோது, கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த வர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பல்வேறுவிதமான குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 'இந்து' பத்திரிகையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக் கிறார்கள். மேற்கு வங்காளத்திலே மார்ச்சாக ஊர்வலம் சென்றிருக்கிறார்கள், இந்திய தேசிய காங்கிரஸ்கட்சிக்காரர்கள். காவல் துறை துப்பாக்கிப் பிரயோகம் செய்து நான்கு பேரைக் கொன்றிருக்கிறது. 4 பேர்களைக் கொன்ற இந்த சம்பவத்தைக் கண்டித்து, இந்திய தேசிய காங்கிரஸ் மேற்கு வங்காளத்தில் ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். நீதி விசாரணை தேவை என்று காங்கிரஸ்காரர்கள் ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். மேற்கு வங்க அரசு நீதி விசாரணை அளிக்கவில்லை.

மதுரையிலே மருத்துவ மாணவர்களை அடித்துவிட்டார்கள், நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். இந்த அரசு மாணவர்களை அடிப்பார்கள் என்று சொல்கிறீர்கள். கொண்டிருக்கிறீர்கள். புரட்சித் தலைவர் உடனடியாக நீதி விசாரணை ஒன்றுக்காக ஆணையிட்டார்கள் என்பதைக் குறிப் பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்யூனிஸ்டு அரசாங்கம் செய்யாத அந்தச் செயலை தமிழ கத்திலே புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செய்திருக் கிறது என்பதை நீங்கள் தன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே காவல்துறை, நீதித்துறை மிகச் சிறப்பாக தமிழ் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

1984 பிப்ரவரி 17] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

அதே நேரத்தில் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் எங்கள் மாவட்டத்தைப் பற்றி ஒன்று சொன்னார்கள்— நெல்லை எங்கள் எல்லை—குமரி எங்கள் தொல்லை—என்று. அந்த செய்தி பத்திரிகையில் கூட வந்தது. ஏன் சொல்கிறேன் என்றால், தெல்லை எங்கள் எல்லை, குமரி எங்கள தொல்லை என்று சொன்னதை, புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே குமரி எங்கள் முல்லை என்று சொல்கின்ற அளவிலே பணிகள் எல்லாம் வெகு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே, எல்லா மாவட்டங்களும் நல்ல முறையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். குமரி மாவட்டத்திலே ஏறத்தாழ 35 ஆண்டு களாகச் செய்யாத ஒரு சாதனையை புரட்சித் தலைவருடைய ஆட்சி செய்து வந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலும் நடை பெறவில்லை, தி.மு.க. ஆட்சியிலும் நடைபெறவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்திலே பின்தங்கிய தாலுக்காவான தோவாளையை புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே பின்தங்கிய தாலுக்காவாகச் சேர்த்திருக்கிறார்கள். அதற்காக குமரி மாவட்ட மக்களின் சார்பாக புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

குமரி மாவட்டத்திற்கு என்று இன்னும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த மாவட்டத்தின் மக்கள் சார்பாக சில பிரச்சினைகளை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக மத்திய அரசின் மூலமாக நடை பெறுகிற ரயில்வேயில், அங்கே அகல ரயில் பாதை செய் வதற்கான வேலைகள், அந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. திருவனந்தபுரத்திலிருந்து நெல்லை வரை அகல ரயில் பாதை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. ஆனால் இந்த அகல ரயில் பாதையை திருநெல்வேலி டிவிசனோடு சேர்க்க வேண்டும் என்று கேட்டு கோரிக்கை, பொதுமக்களால் வைக்கப்பட்டு, அது நிராகரிக்கப்பட்டு இருக் கிறது. அந்த ரயில்வே துறையை திருவனந்தபுரத்தோடு இணைப்பதன் காரணமாக குமரி மாவட்டத்தில் பணியாற்று கின்ற பல ஊழியர்களை, பல அடிப்படை ஊழியர்கள், திருவனந்தபுரத்திலேயிருந்து தேர்வு செய்து இங்கே அனுப்பு கின்ற ஒரு சூழ்நிலை அங்கேயிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல் நாகர்கோவிலில் அமைக்கப்பட இருக்கும் வானொலி நிலையம். நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்காக உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் செயல்படுத்து வதற்கான, அனுமதியைக் கொடுத் திருப்பதாகச் சொல்லுகிறார்கள். வானொலி நிலையம் அமைப் பதற்கான வேலைகள் எல்லாம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்

டிருக்கின்றன. ஆனால் அந்த வானொலி நிலையத்தை திருவனந்தபுரத்தோடு சேர்க்க இருப்பது மிக வருத்தமான செய்தி என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். அதோடு வானொலி நிலையத்திலே பணியாற்றுகின்ற வர்களை தேர்வு செய்யும் பணி திருவனந்தபுரத்திலே நடை பெற்று அங்கேயிருந்து ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். நாகர்கோவில் வானொலி நிலையத்தை கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் திருவனந்தபுரத்திலே இருக்கிறது. வானொலியில் நடைபெற இருக்கின்ற நிகழ்ச்சிகள், மற்றும் பணியாட்கள் எல்லாம் அங்கேயிருந்து இறக்குமதி செய்யப்படுகிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்த வேலை வாய்ப்பில் மிகவும் புறக்கணிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலைகள் இருந்து கொண்டிருப்பது மிகுந்த வேதனை தருவதாக இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்தின் சார்பாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

அதேபோல் தும்பா ராக்கெட் நிலையம் கேரளாவிலேயிருக் கிறது. அதனுடைய கிளை இங்கே இருக்கின்றது. குமரி மாவட் டத்திலே அந்த கிளை அமைப்பதற்கான இடத்தை கையகப் படுத்தி வடதோடி என்ற இடத்திலே அந்த நிலையம் அமைப் பதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்துகொண்டிருக் கிறது. ஆனால் அதனுடைய அலுவலகம் நாகர்கோவிலில் இருந்தும், அங்கே வேலை செய்வதற்கான அடிப்படை ஊழியர்கள், மற்ற ஊழியர்களைத் தேர்வு செய்யும் பணியை திருவனந்தபுரத்திலே உள்ள அரசினுடைய துறை செய்து கொண்டிருக்கிறது, என்ற வேதனையான செய்தியை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி குமரி மாவட்டத்திலே அமைக்கப்படுகின்ற நல்ல திட்டங்களுக்குத் தேவையான ஊழியர்களை அந்த மாவட்டத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக எடுக்க வில்லை, என்ற உண்மையை நான் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் நல்லதையே செய்யும் தலைவர் அவர்கள் தயவுசெய்து குமரி மாவட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இந்த பிரச் சனையில் மத்திய அரசின் துறைகளோடு கலந்து பேசி, புறக் கணிக்கப்படுகின்ற குமரி மக்களுக்காக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொரு பிரச்சினை. தமிழ்நாட்டி எல்லா மாவட்டங்களிலும் மழை பெய்து பல இடங்களி முழுமையாக நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருகாலத்தி மழை இல்லாமல் வருத்தப்பட்டோம். மழை இல்லை என்று சொல்லி, வறட்சி நிவாரணப் பணிகளை நாம் தமிழ்நா

முழுவதும் செய்தோம். பிறகு 2 மாதங்களாக மழை பெய்து, அந்த மழையின் மூலமாக, இங்கு எங்கும் பாதிப்புகள் நிறைய ஏற்பட் டுள்ளன. எனவே, இம்மாதிரி, வறட்சி காலத்திலும் தமிழ்நாடு அரசு பண உதவி செய்யவேண்டியிருக்கிறது. அதேபோல் மழை யினால், வெள்ளத்தினால் பாதிக்கப்படும்போதும், அதற்கு நிவாரண நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை இன்று தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இன்று குமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே மழையில்லை. அங்கே இன்றும் அணைகளிலே, கேட்ச் மெண்ட் ஏரியாக்களிலே மழையில்லாத காரணத்தால், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளிலே இன்றும் ஷிப்டு முறையில் தான் தண்ணீர் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே குமரி மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணப் பணிகளை செய்யவும், அந்த மாவட்டத்திற்கும் உதவிகளைச் செய்வதற்கும் இந்த அரசு உதவி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் குமரி மாவட்டத்தின் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குமரி மாவட்டத்தில் அரசுக் கல்லூரிகளே இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் குமரி மாவட் டத்தில் விவசாயக் கல்லூரியை புதிதாக அமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. எனவே தயவு செய்து அந்த விவசாயக் கல்லூரியை குமரி மாவட்டத்திலே ஏற்படுத்தி, அந்த மக்களுக்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல் அனல் மின்சாரத்திட்டம், குமரி மாவட்டத்திலே ராஜாத்திமங்கலம் என்ற இடத்தில் அனல் மின்சாரத் திட்டம் தேவை என்று இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பல நேரங் களில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு.) குமரி மாவட் டத்திலே ராஜாத்தி மங்கலம் பகுதியிலே அந்த அனல் மின்சார நிலையம் புதியதாக ஏற்படுத்துவதற்கு தேவையான உதவிகளை தமிழக அரசு செய்யவேண்டும். மத்திய அரசும் முழு உதவிகளை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள் கிறேன். கடைசியாக, நல்ல திட்டங்களை தமிழகத்திற்கு உருவாக்கித் தந்து கொண்டிருக்கிற எங்கள் இதய தெய்வப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு என் நன்றியை காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். வணக்கம்.

4. அறிவிப்பு.

பேரவைத் துறை, பேரவைச் செயலகம் என்கிறபெயரில் முழு ஆளுமை உரிமை பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, சட்டப்பேரவைத் துறை அரசின் தலையீடின்றி எனது முழு ஆளுகையின் கீழ், இதற்கென அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட பேரவைச் செயலக தனிப் பணிவிதிகளின்படி இயங்கினாலும் அது அரசுத்துறை என்று அழைக்கப்படுவதால் சில தவறான கருத்துக்கள் நிலவுவதைப் போக்குவதற்காக நானும், அரசும், ஆளுநரும் கலந்து ஆலோசித்து தற்போது இத்துறை செயலகத்துறை என்று இருப்பதை 'பேரவைச் செயலகமாக' எனது முழு ஆளுகையின் கீழ் தனித்து இயங்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 187-வது பிரிவின் கீழ் என்னைக் கலந்தாலோசித்து ஆளுநர் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

16-2-1984 முதல் இத்துறை, பேரவைச் செயலகம் (Legislative Assembly Secretariate) என்னும் பெயரில் இயங்கும். செயலாளர், அவைக்கு செயலாளர் என்றும், செயலகத்திற்கு ஆணையர்-செயலாளர் என்றும் அழைக்கப்படுவார். ஆணையர்-செயலாளர் என அழைக்கப்படுவ மற்ற அரசுத் துற ஆணையர்-செயலாளர்களுக்கு சமமானவர் என்பதற்காகவே என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவைச் செயலாளர் மீது நீதிமன்றத்தி writ quo warranto) ரிட் கோவாரண்டோ ஒன்று ஏழுதப்பட்டதாக இன்று காலை நாளிதழில் வெளிவந்த செய்தியினைப் பார்த்தேன். இந்த அவையின் அலுவலகம் இதுவரை எவ்வாறு இயங்கி வந்தது என்பதைப் பற்றியும் இனிமேல் இவ்வலுவலகம் எந்தப் பெயரின் கீழ் இயங்கும் என்பதைப் பற்றியும் பேரவைக்கு அறிவித்தேன். எந்த அதிகாரத்தின் கீழ் இப்பேரவைக்கு செயலாளராக ஒருவர் இயங்குகிறார் என்பதை இப்பேரவை மட்டுமே விசாரிக்கத் தகுந்தது. இது பற்றி வேறு மன்றங்களில் எழுப்புவதற்கோ ஆராய்வதற்கோ உரிமை கிடையாது. அவ்வாறு செய்தால் இப்பேரவையை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார்கள்.

இப்பேரவை செயலாளர் அரசியலமைப்புச் சட்டத்தின் 187-வது விதியின் கீழ் ஆளுநரால் பேரவைத் தலைவரை கலந்தாலோசித்து இயற்றப்பெற்ற இச்செயலகத்தின் பணி விதிகளின் கீழ் Tamil Nadu Legislative Assembly Secretariat Service Rules அமர்த்தப்படுகிறார். இக்காரணங்களாலும் இப்பேரவையின்முன் மரபுகளையொட்டியும் நீதிமன்றத்திலிருந்து ஏதேனும் தாக்கீது

வருமானால் செயலாளர் இந்த அவையின் அலுவலர் என்ற முறையில் அதைப் பெறாது மறுத்து அனுப்பிவிட வேண்டுமென்று அவருக்கு கட்டளையிடுகிறேன்.

இதுபற்றிய சட்டத்தையும், விதிகளையும் உயர்நீதி மன்றத்தில் இயங்கும் தனது சட்ட அலுவலர்கள் (Law Officers) மூலமாக அரசு, உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. K. SOURIRAJAN : Mr. Speaker, Sir, I am on a Point of Order. May I invite your kind attention to Clause (2) of Art, 187, where it states that the 'Legislature of a State may by law regulate the recruitment. and the conditions of service of persons' என்று இருக்கிறது.

அதுவரை ஆர்ட்டிக்கிள் 187(2)லே, கவர்னர் அவர்கள் சபாநாயகரை கலந்துக்கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற உரிமையை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நீங்கள் இந்த உரிமையைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள்.

இந்த சட்டமன்றத்திலே Are you going to come with a Bill? Are you going to come with some sort of law before the Legislature? It is the Legislature which is supreme; it is not the Speaker and Governor alone who are Supreme. ஆர்ட்டிகள் 187 (2)-இல் 'a Legislature of a State may by law regulate the recruitment, and the conditions of service of persons' என்று சொல்லியிருக்கிறார்கள். ஸ்பீக்கருக்கு உரிமம் இருக்கிறது. அதன்படி Are you going to introduce a Bill? This is more important. You cannot take decisions SUO MOTU. The House is supreme.

(முற்பகல் 11-30)

MR. SPEAKER : I can take 'SUO MOTU' decision.

DR. K. SOURIRAJAN : But we have to endorse it.

MR. SPEAKER : No.

DR. K. SOURIRAJAN : It must come before the Legislature

MR. SPEAKER : That is why I have announced in the Assembly. This is the procedure which is approved and continuously followed by our Parliament and Parliaments in all democratic countries So this is not a new or novel thing.

Dr. K. SOURIRAJAN : They are acting on behalf of the Legislature. I may oppose a proposal. It must come in the form of a Bill and made law. It must be put to vote.

MR. SPEAKER : No. That is not absolutely necessary. As far as my Secretariat is concerned, it is not necsssary.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைச் செயலாளர், கமிஷனர் அன்ட் செகரட்டரியாக்கப்பட்டு இருக்கிறார் என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்தது. துபற்றி இந்த அவைக்குச் சொல்லப்படவில்லை. ஹைகோர்ட்டிலே கேஸ் வந்தபிறகுதான் இங்கே தெரிவிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தனலவர்: நேற்றுதான் ஆர்டர் போடப் பட்டது. உடனே அவர்கள் கோர்ட்டிற்குப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு நான் அறிவிக்க வேண்டிய நாள். நான் அறிவித்து இருக்கிறேன்.

3. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

(தொடர்ச்சி)

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். நேற்றைக்கு முன்தினம் இந்த மாமன்றத்தில் இடையிட்டுப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவரது கருத்தையொட்டி கழகத்தின் சார்பில் ஆளுநர் உரையின்மீது சில கருத்துகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. முத்துக்கிருஷ்ணன் எதிர்க்கட்சிகள் தேவையில்லாமல் குறை களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. என்றுகுறிப்பிட்டார் அவ்வாறு முதலமைச்சரோ அமைச்சர்களோ கருதாமல், நியாய மானகுறைகளைச் சொல்வதற்கு, ஆட்சியிலே இருக்கிறகுறைகளை சொல்லி அவைகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமை என்ற அந்த அடிப்படையில் என்னுடைய பேச்சை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

முதலிலே திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவும் பிரிகிற பகுதிக்கு பெரம்பலூர் மாவட்டத் தலைநகராக இருக்கும் என்று அறிவித்ததற்கும் அந்த மக்களின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் முதலமைச்சர் அவர்களுக்குத்

தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே அளவித்த அறிவிப்புகள் விரைவிலே நடைமுறைக்கு வரத்தக்க அளவுக்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நல்ல முறையிலே அந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையைப் பார்க்கிற நேரத்திலே என்ன காரணத் தினாலோ ஏற்கனவே பேசப்பட்ட பல்வேறு சருத்துக்களை, அறிவிக்கப்பட்ட திட்டங்களை விவாதிக்கப்பட்ட விஷயங்களை பல்வேறு பாராக்களில், பத்திகளில் மீண்டும் மீண்டும் அவை கூறப்பட்டிருக்கிறது. முன்கலைத சுருக்கம் போல் இருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் பருதிக்கு மேலாக பழைய விஷ யங்களையே குறிப்பிட்டிருக்கிறார்கள். பழைய விஷயங்களை குறிப்பிட்டுக் காட்டியிருந்தால் போதும். ஆனால் அவைகளை விளக்கமாகக் கூறியிருப்பது உள்ளபடியே விந்தையாக இருக் கிறது. ஆனால் அதே நேரத்திலே தெரிவிக்கப்பட வேண்டிய மிக. இன்றியமையாத கருத்துக்கள் நடப்பு ஆண்டிலே எதிர் காலத்திலே தமிழக அரசு எந்தத் திசையில் செயல்பட்டப் போகிறது என்பதைப்பற்றி அறிவிக்க வேண்டிய பல்வேறு பிரச் சினைகள் வேண்டுமென்றே விட்டப்பட்டு இருக்கின்றன என்று நான் சந்தேகப்படுகிறேன். லாவகமாக விட்டப்பட்டு இருக்கிறது விடப்பட்டிருப்பதைபற்றி நான் சுருக்கமாக தெரிவிக்க விரும்பு கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினை, நமக்கும் கர்நாடகத்திற்கும் இருக்கிற நீண்டகால பிரச்சினை கடந்த காலங்களில் பல்வேறு ஆளுநர் அறிக்கைகளிலும் நம்முடைய நிலைமைகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். கர்நாடக அரசு தண்ணீர் தர மறுக்கிறார்கள் என்று சுறிப்பிட்டு, தரவேண்டு மென்று வற்புறுத்தியும் வந்திருக்கிறோம். கர்நாடக அரசின் போக்கை ஆளுநர்கள் கண்டித்து பேசியிருக்கிறார்கள். மத்திய அரசு உதவ வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு பிரச்சினைகள் நடந்த காலத்தில் பேசப் பட்டும், நம்முடைய இந்த ஆளுநர் உரையில் அதைப்பற்றி எந்தவிதமான ஒரு வார்த்தையும் இல்லை இந்த ஒரு ஆண்டு காலத்தில் முதலமைச்சர் அவர்கள் கர்நாடகத்தோடு பேசி யிருக்கிறார்கள். மத்திய அரசோடு பேசியிருக்கிறார்கள். திரு எக்டேவோடு அண்மையில் முதலமைச்சர் அவர்கள் பேசி யிருக்கிறார்கள். எத்தனையோ பேச்சுகள் நடந்தும் கூட இன்றைய லேட்டஸ்ட்டு டேவலப்மெண்டு என்ன என்பதை பற்றி தமிழ்நாட்டில் மிகமுக்கியமான இந்த விஷயங்களைப் பற்றி இந்த அறிக்கையில் ஆளுநர் அவர்கள் தெரிவிக்காமல் இருப்பது உள்ளபடியே வேதனைக்கு உரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். கர்நாடகத்தில் இருக்கின்ற பாசன அமைச்சரோ பொதுப்பணித் துறை அமைச்சரோ எங்களுக்கு தண்ணீர் பற்ற வில்லை எப்படி நாங்கள் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தர முடியும் என்று வெளிப்படையாக பேசியிருக்கிறார்கள். அது

(திரு. ஜே. எஸ். இராஜ) [1984 பிப்ரவரி 17

அந்த அமைச்சருடைய கருத்தா? அல்லது கர்நாடக அரசினுடைய கருத்தா? அண்மையில் டேயி முதலமைச்சர்கள் எனவே முடிவுகளை எடுத்தார்கள் என்பதைப்பற்றி எல்லாம் ஆளுநர் அறிக்கையில் தெரிவிருந்து இருந்தால் நாட்டுக்கு நன்மையாக இருந்து இருக்கும்.. தெரிவிக்காதது வருந்தத்தக்கது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இந்த பிரச்சினை, மதுரையில் உலக தமிழ் மாநாடு நடந்தபோது பிரதமர் அவர்களும் கலந்து கொண்டார்கள் அப்போது "நேரு கொடுத்த உறுதி மொழியிலிருந்து நான் பின்வாங்கமாட்டேன், இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் இந்தி அவர்கள் மீது கட்டாயமாக திணிக்கப்படமாட்டாது" என்ற உறுதிமொழியை மீண்டும் மீண்டும் தந்தார்கள். ஆனால் அண்மையில் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய இந்தி மாநாட்டில் பேசிய பிரதமருடைய பேச்சை படிக்கும்போது முதலமைச்சர் அவர்கள் படித்து இருப்பார்கள், மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களும் படித்து இருப்பார்கள் நீண்ட காலமாக நேரு பெருமானும் அதற்கு பின் வந்த சாஸ்திரி அவர்களும், அதற்கு பின் வந்த நம்முடைய பிரதமராக இருக்கின்ற இந்திரா காந்தி அவர்களும் ஏற்கனவே இந்தி பற்றி, அவர்கள் எடுத்த ஸ்டாண்டுக்கு மாறாக இந்தி பேசாத மக்களை மோசமாக பாதிக்கக்கூடிய அளவுக்கு உறுதிமொழியிலிருந்து பின் வாங்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் அவருடைய பேச்சிலிருந்து படித்து தெரிந்துகொண்டேன். அதைப்பற்றி இந்த ஆளுநர் அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இல்லை. போன ஆண்டு அறிக்கையில் ஓரு வார்த்தை ஆண்டு அறிக்கையிலும் ரயில்வே இலாக்காவிலும் அதற்கு முந்தைய இலாக்காவிலும் தொலைபேசி இலாக்காவிலும், தபால் தந்தி இலாக்காவிலும் வேறு பல இலாகாவிலும், வானொலி மாக வளர்ந்து கொண்டு இருக்கிறது இந்தி ஆதிக்கம் அதிக அப்போக்கைக் கண்டித்து இருக்கிறார்கள். நமக்கு இருக்கிறது. ஆனால் இன்னும் மறையாத இந்தி எதிர்ப்பு வில்லை ஆனால் இந்தி எதிர்ப்பு ஆட்சியிடம் இருக்கிறதா அது மறைய ஜையப்பாடு இந்த அறிக்கையை படித்து பிறகு இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. தெரிகிறது. ஏன் நான் முன்பு சொன்ன அந்த துறைகளில் பின்வாங்கப்பட்டதா? திரும்பப் பெறப்பட்டதா? இல்லையே ஆதிக்கம் வளர்கிறதே தவிர குறைந்தா? அண்ணா வினுடைய கொள்கை, தந்தை பெரியாருடைய கொள்கை இந்தி எதிர்ப்பு கொள்கை தமிழ்நாட்டின் ஏகோபித்த கொள்கை அந்த கொள்கை பற்றி இந்த அறிக்கையில் சொல்லாமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த அரசு ஒரு வகையில் இந்தி எதிர்ப்பில் தீவிர கவனம் செலுத்தவில்லை என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. ஆகவே அதைப்பற்றி முக்கியமாக அரசு கவனிக்கவேண்டும் என்றும், இந்தி எதிர்ப்பை விட்டு டக்கூடாது என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

1984 பிப்ரவரி 17] (திரு. ஜே. எஸ். இராஜ)

அடுத்து, மிக முக்கியமான கருத்துக்கள் விடுப்பட்டு இருக்கின்றன. சேது சமுத்திர திட்டம். 123 ஆண்டு காலமாக இந்த திட்டம் கிடப்பில் தூங்குகிறது, பார்லிமெண்டில் அண்மையில் தெரிவிக்கப்பட்டது, இதற்காக அமைக்கப்பட்டகுழு தன்னுடைய அறிக்கையை கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சரிடம் தந்து விட்டார்கள் என்று. ஆனால் அந்த அறிக்கை பற்றி இந்த நாட்டுக்கு மிக முக்கியமான பொருளாதார வளம் பெறுவதற்காக அந்த சேது சமுத்திர திட்டம் பற்றி மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை பற்றி இதில் குறிப்பை காணோம். அதைப்போலவே கரும்-திண்டுக்கல் நூற்பாலை அமைக்கும் வேலை என்ன ஆயிற்று? ஆண்டுதோறும் 50 லட்சம் ஒதுக்குகிறார்கள், ஒரு கோடி ஒதுக்குகிறார்கள் அப்படி பார்த்தால் தமிழ்நாட்டை ஏமாற்றுகிறார் நாடு போலவும் நான் எல்லாம் கையை ஏந்திக் கொண்டுதான் இருக்கவேண்டும் என்பது போலவும் மத்திய அரசு கருதுகிறதா? இந்த மாதிரியான அலை நிலைக்கு இவ்வளவு பெரிய திட்டம் தள்ளப்பட்டு இருக்கிறதே இதை என் வலியுறுத்தி மத்திய அரசிடம் கேட்கவில்லை என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதைப்போலவே பல விஷயங்கள் இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தை திருத்த சட்டம் கொண்டு வரப்படும் என்று 1980 லேயே ஆளுநர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்னும் கொண்டு வரப்படவில்லை. அதோடு மட்டும் அல்ல, மண்டல் கமிஷன் அறிக்கை. தமிழ்நாட்டில் இருக்கிற பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனை பேணி காக்கிற அறிக்கை அது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான அறிக்கையாக இருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதில் அக்கறை உண்டு. அந்த அறிக்கையை ஆந்திர முதலமைச்சர் அவர்கள் வரவேற்றிருக்கிறார்கள். நான இந்த அறிக்கையை ஏற்றுக் கொள்கிறேன். நிறைவேற்றுகிறேன் என்று ஆணித்தரமாக அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், ஜ யாவின் வழியிலும் அண்ணாவி ர வழியிலும் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள் ளுகின்ற ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் அ ப்பற்றி ஆளுநர் உரையிலே சொல்லவில்லை. அதுபற்றி எந்தக் கருத்தையும் சொல்லவில்லை என்பதற்காக நான் வேதனைப்படுகிறேன்.

னால் மண்டல் கு வின் அறிக்கையை எதிர்த்து, அண்ணாவின் பெயரால் நடைபெறும் அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பெறும் "தாய்" ஏட்டில் எதிர்ப்புக் கட்டுரை வருகிறது அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் எத்தக் கருத்துக்களுக்காகப் பாடுபட்டார்களோ, பிற்பட்ட மக்களின் வாழ்க்கை நலம்பெற வேண்டுமென்பதற்காகத் தங்கள் வாழ் நாள் முழுவதும் போராடினார்களோ அதைப்பற்றி இந்த அரசு ஏன் எதையும் சொல்லவில்லை என்பதை அறியும்போது உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன்.

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரைப் பாசனத்திற்குத் திருப்பி விடவேண்டுமென்றும், அதற்காகத் தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்றும்

(திரு. ஜே. எஸ். இராசு) [1984 பிப்ரவரி 17

சொல்லப்பட்டது. அந்த நீர் அவ்வாறு திருப்பி விடப்பட்டதா என்பதைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு முக்கியமான கருத்துக்களைச் சொல்லாமலே இந்த அறிக்கை முழுமை பெறாத வகையிலே இருக்கிறது.

புது அனல் மின் நிலையத் திட்டங்கள் வரும் என்று சொல்லப்பட்டது ஆனால் அது பற்றி ஒரு வார்த்தையும் இப்பொழுது கூறப்படவில்லை. புது அணு மின் நிலையம் வரும் என்று சொன்னார்கள் அதைப் பற்றியும் ஒரு வார்த்தை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—40)

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான கருத்தைத் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநரைப்பற்றி இங்கே விமர்சனம் செய்வது நல்லது அல்ல என்ற மரபை நான் அறிவேன். எனவே, அந்த மரபுக்குப் புறம்பாக நான் பேசப் போவதில்லை அண்மையில் ஒரு செய்தி வந்தது. தகுதி அடிப்படையில் பல் கலைக் கழகத்தில் அட்மிஷன் பற்றி கவர்னர் யோசனை என்று ஒரு செய்தி வந்தது. தகுதி, திறமை என்ற மோசடியின் முதுகெலும்பை முறித்தந்தான் சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் போன்ற அனைத்து முற்போக்குக் கட்சிகளும் போடப்பட்டன. மத்திய அரசாங்கத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற கமிட்டி பாலிசி, அதுநம்முடைய ஆளுநர் அவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ மதுரையில் பேசியதாகப் பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் உட்பட, அண்ணாவும் ஐயாவும் பாடுபட்ட காரணத்தால்தான் தகுதிஅடிப்படை என்று பாராமல் நாமெல்லாம் பள்ளியிலே சேர்க்கப்பட்ட காரணத்தால்தான் இந்த சட்டமன்றத்திற்கே தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறோம். நமது எந்த ஒரு உயர்வும் தகுதி, திறமை அடிப்படையில் இல்லை. அதை மறந்து விட்டு ஆளுநர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதைக் குறித்துத் தமிழக அரசின் கருத்து என்னவென்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ஐயா, அண்ணா ஆகியவர்களின் கொள்கைக்கு வேட்டு வைப் பதற்காக அண்ணாவின் பெயரைப் பயன்படுத்துகிறீர்களா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றி நம்முடைய ஆளுங்கட்சி நண்பர்கள் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள் இதை நாங்கள் எதிர்க்கவில்லை. எங்களுக்கும் உங்களுக்கும் இருக்கின்ற பெரிய வேறுபாடே, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே நடைபெறும் கெடுதல்களையும், ஊழல்களையும் பற்றி நாங்கள் கேட்கிறோம், பார்க்கிறோம். அதைப் பொறுக்க முடியாத காரணத்தால் அதைப்பற்றி இங்கே பேச வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர திட்டங்களில் குறை சொல்லவில்லை. சத்துணவுத் திட்டத்தை யார் யார் பாராட்டினார்கள் என்று எத்தனையோ சான்றுகளை காட்டினார்கள். அதை விடப் பெரிய சான்றை இந்த மன்றத்தில் தர விரும்புகிறேன்

1984 பிப்ரவரி 17] (திரு. ஜே. எஸ். இராசு)

"தமிழ்நாட்டில் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு 150 கோடி ரூபாய் செலவாகிறதே, இதற்கு மத்திய அரசின் நிதி உண்டா" என்ற கேள்வியைப் பிரதமரைப் பார்த்துக் கேட்கி றார்கள். அதற்கு அம்மையார் அவர்கள், "இது மிகவும் கஷ்ட மான கேள்வி: இது நல்ல திட்டம்தான், ஆனால் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கிறபொழுது, இப்படிப்பட்ட திட்டங்களில் பணத்தை முதலீடு செய்து பணத்தைப் பாழாக்கிக் கொண்டிருப்பது எதிர்காலத்தில் மிகப்பெரிய பொருளாதார பிரமிடை ஏற்படுத்தும்" என்று பிரதமர் இந்திராகாந்தி அம்மை யார் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். பிரதமர் சொன் னதைவிட வேறு யார்சொன்னதை நான் கோட் செய்ய முடியும். இப்பொழுது தமிழக அரசு கிசான் வங்கியில் அதிகப் பற்று வரவு இருக்கிறது. எதிர் காலத்தில் எவ்வளவு வரும் என்பது தெரியவரது. ஆகவே, இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் கருத்தை ஆராய்ந்து பார்த்துச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உலக வங்கியின் டைரக்டர் இந்தியாவிற்கு வந்த பொழுது இந்தத் திட்டம் சிறந்தது என்றுதான் பாராட்டி யிருக்கிறார். ஆகவே, உலக வங்கியின் டைரக்டராக இருக் கின்றவர் ஒரு பொருளாதாரத் திட்டம், பொருளாதார மேம் பாடு, நாட்டினுடைய முக்கியமான திட்டங்கள் என்ப தைக் அவரைவிட நன்கு தெரிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆகவே யார் சொன்னார்கள் என்பதைவிட, எப்படிப்பட்டவர் சொல்லியிருக்கிறார் என்பதை பார்க்கும் பொழுது, உலக வங்கியின் டைரக்டர் பொறுப்பிலே இருக்கும் ஒருவர் பாராட்டியிருக்கிறார் என்ற வகையில் மாண் புமிகு இராசு அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்

திரு. ஜே. எஸ். இராசு : அதுபற்றி பொதுவுடைமைக் கட்சி நண்பர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள், பேசுவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை ஆனால் நம்மை யெல்லாம் கட்டியாளும் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை நான் மதிக்கிறேன். ஆட்சி தரப்பிலே உள்ளவர்கள் மதிக்கவில்லை என்றால் அதற்காக நான் வருத்தப்படவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே யார் ஆளுகிறார்கள், யார் சொல்கிறார்கள் என்பதல் பிரச்சனை. பொருளாதார அடிப்படையில் இது சரியா எ பதைப் பற்றிச் சொல்வதற்குரிய தகுதியான ஒருவர் சொல் இருக்கிறார் என்பதுதான் என்னுடைய வாதம்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே. ஏழை மிகுந்த இந்த நாட்டிலே ஒருவேளை சாப்பாடு போடுவதா சொன்னால் யார்தான் வரவேற்காமல் இருப்பார்கள்? ச

(திரு. ஜே. எஸ். இராசு)

[1984 பிப்ரவரி 17

படிப்பட்ட நிலையில் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு கொடுத்தாலும் வரவேற்பார்கள். அதேமாதிரி பொடி கொடுத்தால் வரவேற்பார்கள்; புகையிலை தேவையானவர்களுக்கு புகையிலை கொடுத்தால் புகையும்தான் வரவேற்பார்கள். யார்தான் வேண்டாம் என்று சொல்லப் போகிறார்கள் எனவே இப்போது அதை இதன் மூலமாக பொருளாதார வளர்ச்சி மக்களுக்கு ஏற்படுமா ஒரு வளை சத்துணவினைப் போட்டுவிட்டால் மட்டும் குழந்தைகளின் கல்வியும், அறிவும் வளர்ந்துவிடுமா மாணவர்கள் எல்லாம் அறிவு பெற்று விடுவார்களா என்பது பற்றி நிச்சயமாக எல்லோரும் சேர்ந்து ஆராய வேண்டியதுதான். அப்போது உலக வங்கியின் டைரக்டரின் கருத்தையும் சேர்த்து ஆராய வேண்டியதுதான்.

அடுத்து மீண்டும் மதுவிலக்கு வரப் போகின்றது என்று மைத்திருக்கின்றார்கள். முதலிலே சாராயத்தை ஒழிப்போம் என்று பெருமிதிப்பிற்குரிய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தெரிறார்கள் அவர்கள் மதுரையில். ஆனால் சொல்வதற்கு முன்பாகவே ஆளும் கட்சியிலே உள்ள கொள்கை பரப்புச் செயலாளர் அந்த ஜனவரி 23-ம் தேதி அவ்வாறு அமைச்சர் அதே கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். மதுரையில் சருக்கு முன்பாக ஆளும் கட்சி செயலாளர் தெரிவித்தது முறைதானா? (மணியடிக்கப்பட்டது).

அடுத்து கடந்த ஓராண்டு காலமாக கிராமப்புற வீடு கட்டும் சங்கத்தில் யாருமே உறுப்பினர்களாகச் சேர முடியாத நிலைமை இருக்கின்றது. ஏனென்றால் கவர்ன்மெண்டிலே பணம் இல்லை. மொத்தமாக வீடு கட்டுவதற்கு என்று சொசைட்டியிலேயிருந்து 5 கோடி ரூபாய் அரசாங்கத்திடம் கடன் கேட்டார்கள். அதைக் கொடுக்கவில்லை. ஆனால் வீடுகள் நிறைய கட்டப் போறோம் என்ற அறிக்கை மட்டும் வருகின்றது. 1774 கோடி ரூபாய்க்கு மேலாக நாம் பட்ஜெட் போடுகின்றபோது 5 கோடி ரூபாயினை ways and means என்ற வகையில் கொடுங்கள் என்று கேட்டால் அதைக் கொடுக்கவில்லை. ஏனென்றால் தேவையில்லாத காரியங்களுக்கு எல்லாம் பணம் செலவழிக்கப்படுவதால் வீடு வசதிக்குத் தர பணம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருந்தார்கள் இப்போது அவையில் இல்லை. இருந்தாலும் நான் சொல்கின்ற இந்தச் செய்தி நிச்சயமாக அவர்களுக்குத் திட்ட வேண்டும். அடுத்து 20 அம்சத்திட்டத்திலே விரிவான பாசனை வசதி செய்து தரவேண்டியது ஒரு அம்சம். எனது தொகுதியில் மேலப்புலியூர், நடுவலூர் ஆகிய ஊர்களைப் பொறுத்தவரையில் உள்ள சிறு பாச்சனத் திட்டம் சம்பந்தமான சோப்பு முதல்வர் அவர்களிடம் ஒரு வருடமாக அனுமதிக்காக காத்துக் கொண்டு இருக்கின்றது. அதைப் பொறுத்தவரையில் ஒரு கையெழுத்தினை அவர்கள் போட்டால் போதும். அது அவருடைய டேபிளிலேயே இருக்கின்றது. ஆகவே அத்திட்டங்களை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

1984 பிப்ரவரி 17] (திரு. ஜே. எஸ். இராசு)

அடுத்து நான் முன்னாள் மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் பேசுகின்றபோது நிச்சயமாக ஊராட்சி மன்றத் தேர்தல் வராது. வராது என்று ஊரிலே போய் சொல்வேன்" என்று சொன்னார்கள். எனவே இதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் வெல்லப் போகிறார்களா அல்லது மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தவேலு அவர்கள் வெல்லப் போகிறாரா என்பது தெரியவில்லை. வெள்ளம் வந்தாலும் தேர்தல் நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்திருந்தபோது பிரமிப்பண்ணி இருக்கிறார்கள். அதுபற்றி பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் இப்படி பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இவற்றை கவனித்து தகுந்த காரியங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்து வெள்ள நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.. (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 11-50)

*திரு. எஸ். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற நல்வாய்ப்பைத் தந்தமைக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரதகு ஆளுநர் உரையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்கால தமிழகத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட திட்டங்களைத் தந்து நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தழைத்தோங்கச் செய்த பெருமை தமிழக முதல்வர் ஒருவரைத்தான் சேரும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டுவது கடமை என்று கருதுகிறேன். தமிழக மக்களின் கண்ணீரைப் போக்கவும் அவர் களுடைய வாழ்வு வளம் பெறவும் திட்டங்கள் போட்டுச் செயல் படுத்துகின்ற அரசு புரட்சித் தலைவர் அரசுதான் என்று சொன்னால் அது மிகையாகாது என்று எண்ணுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நாட்டில் வறட்சி ஏற்பட்டாலும் சரி, வெள்ளம் ஏற்பட்டாலும் சரி, அந்த நேரத்தில் முழு பாதுகாப்பு புரட்சித் தலைவரைத் தவிர வேறு யாராலும் தரமுடியாது என்பதை பல்வேறுபட்ட சமயங்களில் நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து நூற்றுக்கணக்கான கிராமங்கள் தண்ணீரில் மூழ்கியபொழுது அப்பகுதி மக்கள் உண்ண உணவில்லாமல் உடமைகள் இழந்து தவித்தபொழுது, உங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நான் இருக்கிறேன், உடமைகளுக்குப் பாதுகாப்பு நான் தருகிறேன். என்று சொல்லும் வகையில் போர்க்கால அடிப்படையில் உண்ண உணவும் தங்கும் வசதிகளும் செய்து கொடுத்ததாக புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டுகிறார்கள்.

[திரு. என். விஜயபாலன்] 1984 பிப்ரவரி 17]

தஞ்சை மாவட்டம் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக என்னுடைய பூம்புகார் தொகுதி மக்கள் வெள்ளத்தில் மிதந்தபொழுது புரட்சித் தலைவர் ஆணையை ஏற்று, அரசு அதிகாரிகள் பணிகளை விரைந்து செய்து வீடிழந்தவர்களுக்கு உதவியையும் வேட்டி சேலையையும் வழங்கி பல்வேறுபட்ட உதவிகளைச் செய்ததற்காக பூம்புகார் தொகுதி மக்கள் தமிழகத்து முதல்வர் புரட்சித் தலைவர் காலடியிலே தங்களுடைய நன்றி மலர்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவு புரட்சித் தலைவருடைய அரசு சிறப்பாகவும், முனைப்பாகவும், விரைவாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்த உதவிகளைத்தாடு அமையாமல் இருந்திருக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு நல்நோக்கத்தோடு செய்த இந்தச் சேவைகளுக்குக்களங்கத்தைக் கற்பிக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் பேசுவது வருந்தத்தக்கது என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

வெள்ளப் பகுதியினருக்கு உதவி நிவாரண வழங்குவதில் பல ஊழல்கள் என்றும் அமைப்பாளர்களை வைத்துக் கொண்டு கொடுக்கிறார்களே இதுநியாயமா என்றும் எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டுக் காட்டினார்கள். நான் அவர்களுக்குப் பணிவன்போடு சொல்வதெல்லாம் அரசு நல்ல காரியங்களைச் செய்கிற பொழுது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிலே தவறுகள் நடக்காத வகையிலும், மக்களுக்கு செய்கின்ற அந்த நன்மைகள் நல்ல முறையிலே போய் சேரவேண்டுமென்ற அடிப்படையிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக் காட்டுவதை என்னுடைய கடமையாக கருதுகிறேன். ஆனால், அதே நேரத்தில் அ.இ.அ.தி.மு.க.வில் சேர்ந்தவர்கள் இந்த வெள்ளம் ஏற்பட்டபொழுது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்டுவது நல்லது என்று கருதுகின்றன். என்னுடைய பூம்புகார் தொகுதியில் காவிரிப்பதல்லூர் என்றஊராட்சியில் நாராயணபிள்ளை சாவடி என்ற கிராமத்தில் வெள்ள நேரத்தில் ஏறக்குறைய 12.30 மணிக்கு நான் வெள்ளச் சேதங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிற பொழுது அந்த நாராயணபிள்ளை சாவடி என்ற கிராமத்திற்கு வருகிறபொழுது ஏராளமான மக்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள். உணவு கொடுக்கிறார்களா, அரிசி கிடைத்து விட்டதா என்று கேட்கிற நேரத்தில், அங்கே இருக்கிற தி.மு.க. என்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் அரிசியை வாங்கி அந்த கிராம பண்ணையாடமிருந்த ஒரு பள்ளிக்கூடத்திலே போட்டுவிட்டு நான் மீண்டும் 3 மணிக்குத்தான் வருவேன், வந்ததற்குப்பிறகு தான் இந்த அரிசியை வழங்க வேண்டும், சமைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்படியெல்லாம் தி.மு.க. திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெள்ளச் சேதத்தைப் பயன்படுத்தி ஆதாயம் தேடிக் கொண்டிருந்தார்கள் என்பதற்காகத்தான் இந்தக்கருத்தை இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள அனைத்து மாவட்டங்களையும் நிர்வாக வசதிக்காக, மறைந்த தலைவர் அவர்களின் பெயரால் பிரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். தமிழகத்தின் விடிவெள்ளி பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலும் மற்ற தலைவர்களின் பெயராலும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருப்பது குறித்து என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உலக உத்தமர் காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்றி, கல்லாலும் காரையாலும் கட்டினால்தான் நினைவுச்சின்னமா? என் நெஞ்சில் என் கண்ணீராலும், அன்பாலும் நினைவுச் சின்னம் எழுப்பி உள்ளேன் என்று சத்திய சோதனையில் வர்ணிக்கப்பட்ட ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த வள்ளியம்மை பெயரால் திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு வள்ளியம்மை மாவட்டம் என்று அறிவித்தது உலக உத்தமர் காந்தியடிகளின் மங்காத கொள்கைக்கு மகுடத்தையும் ஆதி திராவிட இனத்திற்கு அழியாத பெயரையும் தந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பூம்புகார் மக்கள் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உலகத் தமிழர்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் அவர்களுடைய ஏற்றத்திற்கும் எதிர்காலத்திற்கும் தமிழ் முதல்வர் புரட்சித் தலைவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பது தெளிவான ஒன்றாகும். உலகத்திலே வாழ்கிற தமிழர்கள் எங்கு பகுகண்ணீர் விடுகிறார்கள் என்றால் அவர்களின் கண்ணீரைப் போக்குகின்ற தலைவராகப் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்திட முடியாது. அண்மைக் காலத்தில் இலங்கைவாழ் தமிழர்கள் சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்டு, வேதனைக்குள்ளானபொழுது, அவர்களுடைய பாதுகாப்பிற்கு முழு ஆதரவை தந்து தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட பெருமை புரட்சித் தலைவரையே சாரும். இலங்கை கலவரத்தில் கொல்லப்பட்ட விடுதலை வீரர் ஸ்ரீ குட்டிமணி, தங்கதுரை ஆகிய இருவரின் துணைவியாருக்கும், திரு குட்டிமணியின் சகோதரிக்கும் அரசு வீடுகள் கொடுத்திருக்கிறது என்ற செய்தியும், குட்டிமணியின் குடும்பத்திற்கு ஒரு ஆண்டு வரையிலும் அல்லது அவரது குடும்பம் இலங்கைக்கு திரும்பும் வரையிலும் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது என்றசெய்தியும் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவிற்கு உலகத்திலே வாழ்கிற தமிழர்களுடைய கண்ணீரைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்ற வகையிலே தமிழகத்திலே வாழ்கிற தமிழர்கள் அத்தனைபேரும் மனதார இன்றைக்கு அவரை பாராட்டிக்

கொண்டிருக்கிறார்கள். தமிழ் இனம் வாழவும், தமிழ் மொழி வாழவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு செயல்படுகிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் துறையிலும், விவசாய துறையிலும் வளர்ச்சி பெறுவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்த அளவிற்கு அவர் அக்கறை எடுத்துக் கொள்கிறார் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிப்பு ஏற்பட்ட போதெல்லாம் தஞ்சை மாவட்ட விவசாய வளர்ச்சிக்கு விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகிய அனைத்தையும் கொடுத்து, 7 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் வடிமுனைக் குழாய் கிணறுகளை அமைக்கும் திட்டத்தை உருவாக்கி, விவசாயிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கினார்கள். இந்த பெரிய திட்டத்தை தஞ்சை மாவட்ட விவசாயிகள் உளமார வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அண்மையில் பெய்த பெருமழையின் காரணமாக தஞ்சை மாவட்ட விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியும் என்று கருதுகிறேன். குறுவை பாதித்தாலும் சம்பாவை காப்பாற்றலாம், உளுந்து பயிர் வளத்தை உண்டாக்கும் என்று விவசாயிகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மீண்டும் மழை பெய்ததால் சம்பா பயிரும் உளுந்தும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் நிராதரவாக நிற்கும் காட்சியைபார்த்துக் கொண்டிருக்கிறோம். வாரி வாரி வழங்குகிற புரட்சித் தலைவர் அவர்கள் தங்கள்வாழ்விலேமறு மலர்ச்சியை உண்டாக்க மாட்டார்களா என்று விவசாயிகள் ஏக்கத்தோடு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டை இழந்தோம், வசதிகளை இழந்தோம், இந்த நேரத்திலே உதவிக்கரம் நீட்டி எங்கள் உயிரைக் காப்பாற்றி, புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயம் செழிக்கவும், உடமைகளைத் தந்த உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் காதுகளுக்கு எட்டியிருக்கும் என்று நான் கருதுகிறேன். வாரி வழங்கும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நான் பணிவோடு வேண்டுவதெல்லாம் விவசாயிகள் கும்பவும் விவசாயம் செய்வதற்கு விவசாயக் கடன்களை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அவர்கள் விவசாயம் செய்வதற்கு வழிவகை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறஇந்த நேரத்திலே ஏக்கருக்கு குறைந்தது ஆயிரம் ரூபாயாவது மானியமாக வழங்க வேண்டும். இப்படி செய்வதால் பல்வேறு சங்கடங்கள் அரசுக்கு ஏற்படும் என்று என்னால் உணர்ந்து பார்க்க முடிந்தாலும், தஞ்சை மாவட்ட விவசாயிகளை காக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்கு புனர் வாழ்வு தந்து அவர்களை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறே

என்னுடைய தொகுதியிலே பாசன வசதிகளும், வடிகால்வசதிகளும் சரியாக இல்லாத சூழ்நிலையில்தான்வீரசோழன்நந்தலாறு, வெட்டாறு, காவேரி ஆகிய ஆற்றுப்பாசனங்களில் வெள்ளம் வந்து பாதி கிராமங்களை காப்பாற்ற முடியாமல் போனது, ஆற்றின் கரைர இரண்டு பக்கங்களிலும் தடுப்புச் சுவர்களைக் கட்டி பாசன வசதிகளையும், வடிகால் வசதிகளையும் பெருக்கினால்தான் வெள்ளம் வருகிற நேரத்திலும், மற்ற நேரங்களிலும் விவசாயம் நடப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் என்னுடைய தொகுதி கடலோர பகுதியாகும். கடல் கொந்தளிப்பு ஏற்படுவதால் ஏறக்குறையதரங்கம்பாடி பஞ்சாயத்தியுள்ளபகுதியில்நூற்றுக்கணக்கான் ஏக்கர் நிலங்களை கடல் கொண்டு விடுகிறது. அந்த நேரத்தில் அங்கே இருக்கிற விவசாயிகள் அல்லல்பட்டு அலைகிற சூழ்நிலையில் இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகையை வழங்குவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். கடல் கொந்தளிப்பால் பாதிப்பு ஏற்படாத அளவிற்கு வல்லுநர்களைக் கலந்து சிறப்பானத் திட்டத்தை ஒரு நிரந்தரமான பரிகாரத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

இப்போது ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகியவைகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான தேதியை அரசு அறிவித்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்கு உரிய ஒன்றாகும். கிராம நிர்வாகம் சீர்பட வேண்டும என்பதற்காகவும், கிராமத்தில் அடிப்படை வேலைகளை நல்லமுறையில் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலும் புரட்சித் தலைவருடைய அரசு இந்தத் தேர்தலை கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

(நண்பகல் 12-00)

அதைப்போன்று வானுயர்ந்த கட்டிடத்தை கட்டிடத் தொழிலாளி கட்டுகிறான். ஆனால் அதிலே குடியிருக்க அவனுக்கு உரிமையில்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வேதனையோடு குறிப்பிட்டதை தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தெளிவாக உணர்ந்ததால் கட்டிடத் தொழிலாளிகள் பணி நேரத்தில் இறந்தால் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து 10,000 ரூபாய் உதவித்தொகை கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று கல்வி முறையிலே தொழில் கல்வி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி தமிழக அரசு பல்வேறு வகைகளில் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதைப் பார்க்கும் போது அந்த முதலமைச்சருக்கு தமிழக மக்கள் நன்றி தெரிவிக்கிறார்கள், என்னுடைய பூம்புகார் தொகுதி மக்களின் சார்பில் நானும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1984 பிப்ரவரி 7

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையிலே உரையாற்றுகின்ற ஒரு வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இந்த அவையிலே சென்ற கூட்டத் தொடரிலே 1980 ஆம் ஆண்டு, 1981 ஆம் ஆண்டு, 1982 ஆம் ஆண்டு, 1983 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆளுநர் உரையிலே அளிக்கப்பட்ட ஏராளமான வாக்குறுதிகளிலே பல நிறைவேற்றாமல் இருப்பதை நான் ஏற்கனவே சுட்டிக்காட்டினேன். அதைப்போலவே இந்த ஆளுநர் உரையிலேயும் ஏராளமான வாக்குறுதிகள் அள்ளித் தெளிக்கப் பட்டு இருக்கின்றன. இந்த வாக்குறுதிகள் பூராவும் நிறைவேற்றப் படுமானால், அது எல்லோருக்கும் நன்மையாகவே இருக்கும். ஆனால் நீங்கள் சொல்லியிருக்கும் பல திட்டங்கள் எந்த எந்தக் காலங்களில் எத்தனை மாதங்களில் எந்த எந்தத் தேதிகளில் என்பதைப் பற்றி திட்டவட்டமாக அவைகள் நிறைவேற்றப்படும் என்பதைப் பற்றி திட்டவட்டமாக எதுவும் ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லை. இது ரொம்ப வருந்தத்தக்கது. திட்டம் இல்லாமல் இந்த ஆளுநர் உரையிலே அளிக்கப்பட்டு இருக்கின்ற அந்த வாக்குறுதிகளால் எந்தப் பயனும் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சொன்னதையே திரும்பவும் சொல்லியிருக்கிறீர்கள். வறட்சித் தணிப்புப் பணிக்காக தஞ்சை மாவட்டத்தில் 7½ கோடி ரூபாய் செலவில் கிணறுகள் வெட்டுகிற அந்தத் திட்டத்தை 1–ம் பக்கத்திலே அறிவித்து இருக்கிறார்கள். அதே தஞ்சை மாவட்டத்திலே அதே 7½ கோடி ரூபாய் செலவிலே ஆழ்குழாய் கிணறுகள் வெட்டும் திட்டமும் அறிவிக்கப்பட்டு, இதை தன்மேற்கு பருவ மழை சுமார் தாழ்ந்து வந்தது என்றுசொல்லி அந்தத் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டமும், இந்தத்திட்டமும் ஒன்றா அல்லது வேறு வேறா என்கிறவிளக்கம் ஆளுநர் உரையில் இல்லை.

இலங்கை அகதிகள், இலங்கையிலிருந்து பொத்து சுகம் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக நம்முடைய நாட்டிற்கு ஓடிவந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு என்ன செய்து இருக்கிறது என்ப தெயெல்லாம் விரிவாகச் சொல்லியிருக் கிறீர்கள். அதுமட்டுமல்ல அந்த அகதிகளுடைய நலப் பிரச் னையைப் பற்றி அவ்வப்போது ஆராய்வதற்கு உயர்மட்டக்குழு ஒன்று அமைக் ப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவிலே நானும் மற்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும் இடம் பெற்று இருக்கிறோம். ஆனால் அந்தக் குழு உருவாக்கப் பட்டதிலிருந்து இதுவரையில் கிட்டத்தட்ட 6 மாதம் ஆகியும் ஒரு தரம் கூட கூடவில் ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அகதிகளாக வந்தபிறகு அவர்களுக்கு எத்தனையோ பிரச் னைகள் இருக்கின்றன. அதுவும் இலங் கத் தோட்டத் தொழி லாளர்கள் இந்திய வம்சாவழி அகதிகளாக வந்துஇருக்கிறார்கள். ஈழநாட்டில் இருந்து அகதிகளாக வந்து இருக்கிற ர்கள். இந்திய

1984 பிப்ரவரி 17 [திரு. நெடுமாறன்]

வம்சாவழி அகதிகளுக்கு இந்த அரசு உதவிகளைச் செய்கிறது. ஈழ நாட்டு அகதிகளுக்கு அந்த உதவி அளிக்கப்படவில்லை. இப்படி உதவி செய்வதில் எந்தவிதமான பாகுபாடும் இருக்கக் கூடாது. இலங்கையில் இருந்து வந்த அகதிகள் யாராக இருந்தாலும் அது இந்திய வம்சாவழி தமிழர்களாக இருந்தாலும் ஈழத்திலிருந்து வந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உங்களுடைய உதவும் கரம் நிச்சயமாகநீளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, தமிழ்நாட்டிலே பயிரிடுகின்ற நிலத்திலே 50 சதவீதம் அளவுக்குத் தான் பாசன வசதி இருக்கிறது. எஞ்சியுள்ள 50 சதவீத நிலத்திற்கு பாசன வசதி இல்லை. பெரும்பகுதி நிலம் ஏரிப்பாசனத்தை நம்பி இருக்கிறது. இந்த ஆளுநர் உரையிலே ஏறத்தாழ 39,000 ஏரிகளை நவீனப் படுத்தும் திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். பாசன வசதி இல்லாமல் இருக்கிற 50 சதவீத நிலத்திற்கு பாசன வசதி அளிக்க வேண்டுமென்று பல்லாண்டு காலமாக தமிழக மக்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டிலே நீர் பற்றாக்குறை இருக்கிறது. அண்டை மாநிலத்திலிருந்து நமக்கு வரவேண்டிய நீரும் காவிரி நீர் பிரச்சனை போன்ற பல காரணங்களால் நமக்கு வருவது தடைபடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கங்கை-காவேரி இணைப்புத் திட்டம் ஒன்றுதான் தமிழகத்தில் பாசனவசதி பெறாமல் இருக்கிற 50 சதவீதம் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும். வேறு முறையினால் பாசன வசதி அளிக்க முடியாது.

கங்கை-காவேரி இணைப்புத் திட்டம் என்பது பல நூற்றாண்டு களாக தமிழகத்தில் வற்புறுத்தி வருகின்ற ஒரு திட்டம். ஆனாலும் மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை; உரிய கவனத்தை இதிலே செலுத்த வில்லை என்பது மிகுந்த வேதனை அளிப்பதாக இருக்கிறது.

நான் உருஷிய நாட்டிற்குச் சென்றபோது அங்கே அவர்கள்ஒரு அற்புதமான சாதனை செய்திருப்பதைப் பார்க்க முடிந்தது. அங்கே ரூக்மேனியா என்ற மாநிலம் முழுவதும் பாலைவனமாக இருந்தது. ஏறத்தாழ 1,400 கிலோமீட்டர் தூரத்திற்கு அமுதாரியா என்ற ஆற்றிலிருந்து ஒரு நீண்ட கால்வாய் வெட்டி, அந்த மாநிலத்திற்கு தண்ணீர் கொண்டு வந்து, அதன் மூலமாக 25 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்பட்டிருக் கிறது. இது ஒரு மகத்தான சாதனை. ஏறக்குறைய ஆயிரம் மைல் தூரத்திற்கு ஒரு பெரிய ஆற்றை வெட்டி தண்ணீரைக் கொண்டு வந்து பாலைவனத்தை சோலைவனமாக ஆக்கியிருக்கிறார்கள். இதிலே சோவியத் நாட்டு மக்கள் பெரும் பணியாற்றியிருக் கிறார்கள். 200-க்கு மேற்பட்ட நகரங்களைச் சேர்ந்த மக்கள் 40-க்கு மேற்பட்ட தேசிய இன மக்கள் ஒன்றுபட்டு நின்று இந்த கால்வாயை வெட்ட உதவி செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் காவிரியில் இருந்து நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீரையே கர்நாடக மாநிலம் தர

மறுக்கிறது, தடுக்கிறது; அதைப் பார்த்துக் கொண்டு மத்திய அரசு சும்மா இருக்கிறது. சோவியத் நாட்டில் இந்த மகத்தான சாதனையை எப்படிச் செய்தார்கள் என்று பார்த்து அதைப் போன்று கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்திற்கு எல்லா விதமான நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டு மென்று நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். இதற்கு தமிழ்நாட்டிலுள்ள சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

அதேநேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். கிருஷ்ணா நதித் திட்டம் சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக வகுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 750 கோடி ரூபாய் செலவில் ஆந்திர அரசும் தமிழக அரசும் சேர்ந்து இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அண்மையிலே பாராளுமன்றத்திலே மத்திய நிதி அமைச்சர் ஒரு அறிவிப்பைச் செய்தார். அதாவது இந்தத் திட்டத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் பணம் ஒதுக்கவில்லை அடுத்த, என்று சொல்லியிருக்கிறார். அதை எதிர்த்து ஆந்திர முதல்மைச்சர் குரல் கொடுத்திருக்கிறார். ஆனால் தமிழக முதலமைச்சர் அதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை. இது மிகவும் வருந்தத் தக்கது. தமிழக முதலமைச்சரும் குரல் கொடுக்க வேண்டும். இந்தத் திட்டத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே போதுமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று தமிழகத்திலே இருக்கிற எல்லா கட்சிகளும் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க தயார், ஆனால் நீங்கள் அதற்குத் தயாரா என்று நான் அறிய விரும்புகிறேன். இதிலே அரசியல் வேறுபாடு தேவையில்லை. கிருஷ்ணா நதித் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும் அதற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நிதி ஒதுக்க வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே மின்சாரப் பற்றாக்குறை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்றால் அணுமின் நிலையங்கள் பல வந்தாலொழிய இந்தப் பற்றாக் குறையை யாராலும் தீர்க்க முடியாது. ஆகவே அணுமின் நிலையம் நமக்குத் தேவை. கூடங்குளம் அணுமின் நிலையம் அமைக்கும் திட்டம் கடந்த பத்தாண்டு காலமாக அப்படியே கிடப்பில் கிடக்கிறது. மத்திய அரசை வற்புறுத்தி அதை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். ஆளுநர் உரையிலே அதைச் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் அதுபற்றி ஒன்றும் சொல்ல வில்லை.

அதைப்போன்று ஆளுநர் உரையிலே குடும்பநலத் திட்டத்தைப் பற்றி மிகப்பெருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே இந்த நாட்டிலே நம்முடைய மாநிலம் முதன்மை பெற்றுத் திகழ்கிறது என்று

பெருமிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதற்கும் நீங்கள் எடுத்தது வருகிற நடவடிக்கைக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை.

(பிற்பகல் 12-10)

காரணம், பல்வேறு பத்திரிகைகளிலேயும், பல்வேறு நகரங்களிலேயும் குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்தில் வேலை பார்க்கிற அலுவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றி என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தக் குடும்பக்கட்டுப்பாடு, நாட்டிலேயே முன்னணி பெற்றிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் குடும்பக்கட்டுப் பாட்டுத் திட்டந்தச் சரிவர அமுலாக்கத் தவறினர்கள் என குற்றஞ்சாட்டி மதுரை மாநகராட்சியிலே 25 பேர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு இளாக்குகளிலேயும் ஏராளமான ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது வருந்தத்தக்கது. அவர் களுடைய சஸ்பெண்டு உத்தரவுகளை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து 20 அம்சத் திட்டத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய ஒரு சுற்றறிக்கையிலே குடும்பக் கட்டுப்பாட்டில் எந்த விதமான கட்டாயமும், வற்புறுத்தலும் இருக்கக் கூடாது என்றிருக்கிறது. ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? தமிழக மக்கள் குடும்பக்கட்டுப்பாட்டை விரும்பிச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக உங்கள் நடவடிக்கை அந்த உணர்வுக்கு உலைவைக்கக் கூடிய நடவடிக்கையாக இருக்கிறது. இந்தத் திட்டம் முக்கியமாக திருத்தி அமைக்கப்படவேண்டுமென்று நான் மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, மாவட்டங்களைப் பிரிப்பதைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களையும் முற்றிலுமாக சீரமைக்க வேண்டும் என்பதிலே ஐயமில்லை. 5 தாலுக்காக்களுக்கு ஒரு மாவட்டம். அதற்கு மேலே இருக்கக் கூடாது என்ற அளவிலே, தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய எல்லா மாவட்டங்களையும் முற்றிலுமாக சீரமைக்கக் கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கென்று ஒரு குழு அமைக்கப்படுவதாகவும், ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற் கிறேன். இதில் மக்கள் கருத்து, நிலவியல், நிர்வாக நலன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, முழுமையாக நன்கு ஆராய்ந்து, எல்லா மாவட்டங்களுக்கும் இந்தக் குழு சென்று எல்லா மக்களுடைய கருத்துக்களையும் அறிந்த பிறகு, சகல மாவட்டங்களையும் பிரித்து அமைக்க வேண்டிய முயற்சியில்

[திரு. ப. நெடுமாறன்]

[1984 பிப்ரவரி 17

ஈடுபடவேண்டும். ஏதோ சில மாவட்டங்களை மட்டும் அதாவது அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த மாதிரி—பிரித்துவிடக் கூடாது. மாறாக எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அனைத்து மக்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே ஒரு செய்தி இருக்கிறது. அரசு ஊழியர்கள் ரிடையர் ஆகும்போது ரூ. 10,000 அளிப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அரசு ஊழியர்களுக்கு ரூ. 10,000 அளிப்பது ஒருபுறம் இருக்கட்டும். அரசு ஊழியர் ரிடையர் ஆவதற்கு முதல் நாள், எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் கூட, வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இரவிற்குள்ளே சஸ்பெண்டு உத்தரவு வந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அப்படி நிஜமாகவே சஸ்பெண்டு செய்கின்ற நிலை இப்போது இருக்கிறது. அந்த அநாகரீகமான செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஒரு மாதத்திற்கு அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். ஆக சஸ்பெண்டு எப்போது என்று சொன்னால், அவர்கள் ரிடையர் ஆவதற்கு முதல் நாள். பெரிய பெரிய அதிகாரிகள் கூட, இந்தவிதமான கிரமங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ரொம்பவும் தவறான போக்கு. அவர்களுடைய மன நிலை மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கப்படுகிறது. இது அநீதியான போக்கு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, கட்டிடத் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. நல்லது. அந்தச் சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? நிரந்தரமான முதலாளியையோ, நிரந்தரமான பணியிடத்தையோ, தொழிலாளர்களுடைய நிலைமைகளை மனதிலே கொண்டோ, இல்லது கட்டுமானத் இந்தச் சட்ட முன்வடிவு அமைக்கப்படவில்லை. கட்டிடத் தொழிலாளியின் பெரும்பகுதி இந்தச் சட்டப் பாதுகாப்பிற்குள்ளே வரவில்லை. கட்டிடத் தொழிலாளர்களின் பெரும் பகுதிகளை ஒதுக்கிவிட்டு, யாருக்காக இந்தச் சட்டம்? கட்டிடத் தொழிலாளர்களுக்கு எந்தப்பாதுகாப்பும் கொடுக்கப்படமுடியாத நிலையிலே இந்தச் சட்டம் வருவதனால் என்ன பயன் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தச் சட்டம் முற்றிலுமாக திருத்தி யமைக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

சட்ட முன்வடிவு வருகின்ற நேரத்திலே பேசுகிற அரிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே அதைப்பற்றி சொல்லவில்லை. இங்கே நேற்றும், அதற்கு முன் தினமும் பேசிய உறுப்பினர்கள் தொழில் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொன்னார்கள். இங்கே சென்னை நகரிலே பி. அண்ட் சி. மற்றும் சிம்சன் கம்பெனிகள், மற்றும் இதுபோன்று தமிழ்நாடு முழுவதும் 300-க்கும்

[1984 பிப்ரவரி 17] [திரு. ப. நெடுமாறன்]

மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. ஏறக்குறைய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தெருவிலே நின்று திண்டாடுகிறார்கள். இதன் விளைவாக தொழிலாளர்கள் நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டினுடைய உற்பத்தி பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு அபாயம் நிறைந்திருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை உரிய கண்ணோட்டத்திலே அரசு ஆராயவில்லை என்பதைத் தான் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சனையின் அவசரத் தன்மையை ஆய்ந்து பார்த்து நமது முதல் அமைச்சர் அவர்கள், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், சகல தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து, ஒரு கூட்டத்திற்கு உடனடியாக ஏற்பாடு செய்து இந்தப் பிரச்சனை பற்றிப் பேசி, 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு திரும்புவதற்கான நடவடிக்கைகளையும், 300-க்கும் மேற்பட்ட தொழிற்சாலை களைத் திறப்பதற்கும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தனியார்கள் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதற்காக அரசு உத்திரவிட்டிருக்கிறது. பாலிடெக்னிக்குகள் அவசியம் தேவைதான். ஆனால் தனியார் பாலிடெக்னிக்குகள் அவசியம்தானா? நம்முடைய மாணவர்கள் தொழிற்கல்வி பெறவேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது. ஆனால் இந்த பாலிடெக்னிக்குகளின் நிலைமை என்ன இன்றைக்கு? சாதாரண ஏழை மாணவர்கள் இதிலே சேர முடியவில்லை. 10 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என்று பணம் கொடுத்தால்தான் அட்மிஷன் கிடைக்கிறது, யாராக இருந்தாலும், இதுதான் இன்றைய நிலைமை. ஏந்தப் பாலிடெக்னிக்காக இருந்தாலும் இதுதான் நிலைமை. இவை களிலே ஒளிவுமறைவுவே இல்லை. இது எல்லோருக்கும் தெரியும். பகிங்கரமாக. 10 ஆயிரம், 15 ஆயிரம் வரையில் வாங்குகிறார்கள். பணம் கொடுத்தால்தான் மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கிறது. இவைகளில் தொழிற்கல்வி படிக்க ஒரு மாணவன் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக எந்த ஏழை மாணவனும் இதிலே சேர்ந்து படித்து எந்தப் பயனும் அடைய முடியாது. அவர்கள் தெருவிலேதான் நிற்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிருக் கிறது. மேலும் 5 என்ஜினியரிங் கல்லூரிகளை தனியாருக்குத் தரப்போவதாக செய்திகள் வருகின்றன. இது ரொம்பவும் தவறானது. இன்ஜினியரிங் கல்லூரிகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார் துறைக்கு அளிக்கக்கூடாது. அரசே அதை ஏற்படுத்தி நடத்த வேண்டும். அதை நீங்கள் தனியாருக்குக் கொடுத்தால் அதனால் லஞ்சமும், ஊழலும் பெருகும். ஏழை எளிய மாணவர்கள் அந்தக் கல்லூரிகளிலே படிக்க முடியாத நிலை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. நெடுமாறன்] [1984 பிப்ரவரி 17

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை. காவிரிப் படுகையிலே எண்ணெய் இருக்கிறதா? இல்லையா? என்ற ஆராய்ச்சியிலே மத்திய அரசு நிறுவனமான ஓ.என்.ஜி.சி. ஈடுபட்டது. ஆந்திராவிலே தேர்தல் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் காவிரிப் படுகையில் சோதனை போட்டுக் கொண்டிருந்த அந்த இயந்திரங்கள் அனைத்தும், ஆந்திராவில் உள்ள கோதாவரிப்படுகைக்கு சோதனைப் போடுவதற்காக எடுத்துச் சென்றார்கள். அப்போது இந்தப்பிரச்சினையை இந்த சட்டமன்றத்தில் எழுப்பி குற்றம் சாட்டினோம். ஆனால் இன்னமும் காவிரிப் படுகையில் எண்ணெய் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்படவில்லை. அந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்டு விட்டார்கள். ஆளுநர் உரையிலே அதை நீங்கள் வலியுறுத்தி இருக்கவேண்டும். மாநிலத்தில் எண்ணெய் ஆராய்ச்சி தொடங்கவேண்டும். இது தமிழகத்தின் தொழில் வளர்ச்சி, அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி இதிலே அடங்கியிருக்கிறது. எனவே இந்த ஆராய்ச்சி திட்டமிட்டப்படி உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த அரசின் சார்பிலே, மத்திய அரசை வற்புறுத்துவதற்கு எதுவும் செய்யப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாதது.

அதேபோல் மிக நீண்டகாலமாக பேசப்பட்டு வந்த கரூர்–திண்டுக்கல்–மதுரை—தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டம் இந்தத் திட்டத்தைப் பற்றி இந்த அவையிலே சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு ஒரு தனி நபர் தீர்மானம் கொண்டு வந்து, அனைத்துக் கட்சித் தலைவர்களும் அதிலே பேசி, விவாதித்து, ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றியதற்குப் பின்னால் ஏதோ, பெயருக்காக, 1½ கோடி ரூபாயை ஒதுக்கியது மத்திய அரசு. அதற்குப் பின்னால், எந்தப் பணமும் இதுவரையில் அரசு. ஆண்டு ரயில்வே பட்ஜெட் ஒதுக்கப்படவில்லை. இந்த சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய சகல கட்சியினரும், அதற்காக குரல் கொடுத்தாலொழிய, அவர்கள் நிதி ஒதுக்கப்போவதில்லை.

(பிற்பகல் 12—20.)

இந்த அரசு இதிலே உறுதியாக நின்று மத்திய அரசினிடம் போராடி, அந்த அகல ரயில் பாதை திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவும் அதற்கான நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். மத்திய நிதிஅமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னையில் 1980–ல் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள்.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான ஏறத்தாழ 40 கோடி ரூபாயும் நிச்சயமாக ஒதுக்கப்படும். இந்த திட்டம் 4 ஆண்டுக் காலத்தில் நிச்சயமாக முடிக்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு 1984 ஆம் ஆண்டு ஆகிவிட்டது. இந்த 4 ஆண்டுக்காலத்திலே இந்த திட்டத்திற்காக

1984 பிப்ரவரி 17] [திரு. ப. நெடுமாறன்]

சில வேலைகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர அதற்கான முழு பணமும் ஒதுக்கப்படவில்லை. அதை வற்புறுத்திப் பெற வேண்டியது இந்த அரசினுடைய கடமை. அந்தக் கடமையை இந்த அரசு சரிவர செய்யவில்லை. அதன் விளைவாக இந்த திட்டத்திற்கு போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை.

அதைப்போலவே மதுரை, மேலூர், திருப்பத்தூர் வழியாக காரைக்குடியை இணைப்பதற்காக ஒரு ரயில் பாதையை அமைக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்த வேண்டும்.

ஸ்ரீரங்கத்திலே, கோயிலிலே ஒரு ஆலய அதிகாரி மர்மமான சூழ்நிலையிலே மரணம் அடைந்திருக்கிறார்கள். திருச்செந்தூரிலே இதுபோல ஏற்கெனவே நடந்தது. அந்த மர்ம மரணம் குறித்து தமிழக மக்கள் பெரிதும் அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதன் உள்ளே போக நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு சந்தேகம் எல்லோருக்கும் எழுந்திருக்கிறது. தமிழகத்திலுள்ள சகல ஆலயங்களிலும் உள்ள நகைகள், விக்கிரகங்கள், வாகனங்கள் போன்றவை பத்திரமாக இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் எல்லோருக்கும் வந்திருக்கிறது. இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டிய கடமை இந்த அரசுக்கு உண்டு. அதற்காக மடாதிபதிகள், கிருபானந்த வாரியார் போன்றவர்கள், கொண்ட குழு ஒன்றை அமைத்து, இதைப் பற்றி ஆராய்ந்து அதை தமிழ் மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

மதுரையிலே மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மீது மிருகத்தனமான தாக்குதலை போலீசார் நடத்தினர். அதைப்பற்றிய விவரங்களுக்குள் நான் இப்போது செல்ல விரும்பவில்லை without any provocation என்ற வகையில் எந்த விதநியாயமான காரணமும் இல்லாமல் மாணவர்களை ரிசர்வ் போலீஸ்லைனில் வைத்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கைக்கடிகாரங்களை, தங்க செயின்களை, மோதிரம் போன்றவைகளையெல்லாம் அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மிக மோசமான முறையிலே மாணவர்கள் அடிக்கப்பட்ட பின்னரும், உடனடியாக அவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்லாமல், 4, 5 மணி நேரம் கழித்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். செல்கிற வழியிலேயும் அடித்திருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்): சீக்கிரமாக முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது.

[1984 பிப்ரவரி 17

திரு. ப. நெடுமாறன்: இரக்கம் இல்லாது செய்யப்பட்ட இந்தக் கொடுமைக்கு யார் காரணம் என்பதை இந்த அரசு அறிவிக்க வேண்டும். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுரையைப் பொறுத்த வரையிலும் இது புதியது அல்ல. ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த தாக்குண்டே-ஐ இந்த அரசாங்கத்திற்கு சுப்ரீம் கோர்ட் வக்கீலாக இருந்தவர்களையே மதுரை நகர போலீசார் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.வே. இரா. ஜெயராமன்): நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்களுக்கு கொடுக்கப்பட்டது 20 நிமிடங்கள்தாம். மேலே 10 நிமிடங்கள் ஆகிவிட்டது. மேலும் உங்களை அனுமதித்தால், மற்றவர்களும் அப்படிக் கேட்பார்கள். கொடுக்க வேண்டியிருக்கும்.

திரு. ப. நெடுமாறன்: சீக்கிரமாக இதுபோன்ற போலீஸ் அத்துமீறல்கள் முடித்து விடுகிறேன். தொடர்ந்து நடைபெறுகின்றன. மதுரை நகரத்திலே உங்களுக்குத் தெரியும். மதுரையின் வரலாறு கேட்டு போராடினாள். மதுரை நகரத்திலே கண்ணகி நீதி நகரம் அன்றைக்கு பற்றி எரிந்தது. கவிழ்ந்தது. மதுரை திருவிளையாடல் காலத்திலே, சிவபெருமான் மீது மதுரை நகரத்திலே அடி உலகம் பூராவும் விழுந்தது. அடி விழுந்தது. மருத்துவ கல்லூரி மாணவர்கள் இன்றைக்கு மதுரை என்பது, இந்த ஆட்சியின் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் அடியாகக் கருதி, இந்த அஸ்திவாரத்தின் மீது விழுந்த அக்கிரமத்திற்கு நீங்கள் ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

இறுதியாக ஒன்றை வற்புறுத்த விரும்புகிறேன். போலீஸ் உங்கள் கையை மீறிச் செல்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த பலருக்கும் கூட அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். போலீஸ், நீதி, ஆகிய துறைகளிலே லஞ்சமும் ஊழலும், அக்கிரமமும் இன்னது என்று சொல்ல முடியாத அளவுக்கு வளர்ந்துக் கொண்டிருக் கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையில் குளோஸ்டு சேம்பர் டிஸ்கஷன் என்று ஒன்று வையுங்கள். வெளியே தெரிய வேண்டாம். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோருக்கும் உண்மையை பேசுவதற்கு முழு உரிமை கொடுங்கள். இந்த அவையிலே குளோஸ்டு சேம்பர் டிஸ்கஷன் என்ற வகையிலே விவாதம், நீதித்துறையைப் பற்றியும், போலீஸ் துறையைப் பற்றியும் வைத்தாக வேண்டும். அப்பொழுது வரக்கூடிய உண்மைகள் என்ன? இந்த நாட்டு நடப்பு என்ன என்பதையும், பல்வேறு இடங்களில் போலீஸ் என்னென்ன அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதையும் பல்வேறு இடங்களில் உள்ள நீதிமன்றங்கள் எப்படியெல்லாம் லஞ்ச லாவண்யங்கள் தாண்டவமாடுகின்ற இடங்களாக இருக்கின்றன

என்பதையும், இந்த நாட்டு மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் அறிவதற்கு அது வழி வகுக்கும், அத்து மீறி. எல்லையை மீறி எல்லோருக்கும் அபாயம் விளைவிக்கக் கூடிய அளவுக்கு இந்தத் துறைகள் எல்லாம் மாறிவிட்டன என்பது புரியும். இதற்கு நீங்கள் முற்றுப் புள்ளி வைக்காவிட்டால், அதை ஒடுக்காவிட்டால், அதன் விளைவாக, நாட்டினுடைய ஜனநாயகத்தின் ஆணிவேரே அறுக்கப்பட்டு விடுகின்ற அபாயம் ஏற்படக் கூடும். ஆகவே, குளோஸ்டு சேம்பர் டிஸ்கஷன் ஒன்றை நீங்கள் கட்டாயம் வைக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவையினுடைய தாற்காலிகத் தலைவர் அவர்களே, ஒரு பெரும் வெள்ளச் சேதமும் மறுபடியும் வறட்சியும் நாட்டைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் போது இடையில் ஆளுநர் உரை என்ற பெயரில் இந்த மாமன்றம் இந்த விவாதத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த உரையில் ஒன்றுமேயில்லை என்று சொல்பவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேவாடிக்கொண்டிருக்கிற மக்களுடைய ஏக்கப் பெருமூச்சைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நான் சொல்லமாட்டேன், அந்த மக்கள்மீது இன்னும் அவர்களுக்கு அக்கறை வரவில்லை என்பதை பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கத்திற்கு மாறாக இந்த ஆண்டு இந்த மாமன்றம் ஆளுநர் உரைக்குப் பின்பு பரபரப்பு இல்லாமல் பதட்டம் இல்லாமல் ஆர்ப்பாட்டம் இல்லாமல் மிகவும் அமைதியாகவும் கொஞ்சம் சோர்ந்தே நடந்துகொண்டிருக்கிறது. ஆளுநர் உரையை தமிழக மக்களுக்குத் தந்துவிட்ட காரணத்தினால் என்ன செய்வது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் குறைகூற முடியாத அளவுக்கு சோம்பிப் போய்விட்ட காரணத்தினால் ஆளுங்கட்சிக்காரர்களாகிய நாங்கள் என்ன இவர்கள் ஒன்றுமே பேச மாட்டேன் என்கிறார்களே என்று நினைக்கக்கூடிய அளவுக்கு எதற்கெடுத்தாலும் குழுவைப் போடுங்கள், குழுவை போடுங்கள் என்ற கருத்துக்கள்தான் அவர்களிடமிருந்து வருகின்றனவே தவிர ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டுவதற்கு அதை விவாதிக்கிற அளவுக்கு அது ஒரு விவாதப் பொருளாக இல்லை என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலம் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் பிரதான எதிர்க்கட்சியாக ஒரு கால கட்டத்தில் இந்த மாமன்றத்தில் இருந்த தி.மு. கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னாலே அது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு பிரதான எதிர்கட்சி என்று வெளியே கருதப்பட்ட அந்த கட்சியே இந்த மாமன்றத்திற்கு வரவில்லை. ஆளுநர் உரையின்போது என்று சொல்லும் போது எனக்குக் கூட கொஞ்சம் சல்லாபம் தட்டியது. ஆளுகின்ற தரப்பில் ஏன்

இவர்கள் வரவில்லையே என்று நாங்கள் எண்ணிக்கொண்டு இருந்தபோது சட்டமன்றத்திற்கு உள்ளே வந்து ஆளுநர் உரையை ஆளுநர் படிக்கும் போது தான் ஏன் அவர்கள் வரவில்லை என்பது எனக்கு புரிந்தது. காரணம் அவர்கள் வந்து இருப்பார்களானால் அவர்களுடைய தலைவருடைய உத்தரவையும் மீறி அவர்களையும் அறியாமல் அவர்கள் கைதட்டி இருப்பார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அவ்வளவு சலுகைகள், சகாப்தத்தில் முக்கிய மான அறிவுப்புகள் இந்த ஆளுநர் உரையில் வந்து இருக்கிறது. இந்த ஆளுநர் உரையின் மீது மக்கள் மன்றத்தில் பேசப்படுவது எல்லாம் எழுப்பப்படுவது எல்லாம், கிளப்பப்படுவது எல்லாம் கிளர்ச்சி நடத்தப்படுவது என்று சொல்வது எல்லாம் என்னவென்று சொன்னால் இந்த மாவட்ட பிரிவினை தான். ஒரோ ஒரோ மாவட்டபிரிவினையா இதற்கு இந்த தலைநகரம் வேண்டுமா இந்த தலைநகரம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று மக்களை குழப்பிவிடுகின்ற முயற்சியில் தமிழகத்தின் அமைதியை கெடுக்கவேண்டாம் என்பதை நான் பணிவோடு இந்த மாமன்றத்தின் சார்பாக இந்த ஆளுநர் உரையை எதிர்த்து அல்ல, இந்த ஆளுநர் உரையை ஏளனம் செய்து அல்ல இந்த செய்து மக்கள் மன்றத்தில் விமர்சனம் செய்கிறார்கள். தயவு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, மாவட்ட பிரிவினைப் பற்றி உணர்ச்சியைத் தூண்டிவிட்டு எதிர்க்கட்சிகள் காரியங்கள் ஆற்றுகின்றன என்ற கருத்துப்படி அவர் சொன்னார். அப்படி அது உண்மையாக இருக்குமானல் அதில் ஆளும் தரப்பினரும் கலந்துகொண்டு அந்த காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

(பிற்பகல் 12-30)

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள சாதாரண பிரஜைகள் அதை செய்து இருந்தால் அது எல்லா சட்சியிலும் இருக்கிறார்கள். ஆளுகின்ற பொறுப்பில் 7 ஆண்டு காலம் இருந்து பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி தெரிந்து இருந்தும் கூட, தில்லையாடிவள்ளியம்மையைப் பற்றி தெரிந்து இருந்தும் கூட, வள்ளுவர் பற்றி தெரிந்து இருந்தும் கூட, சம்புவராயரை பற்றி தெரிந்து பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைப்பற்றி தெரிந்து இருந்தும் கூட இந்த தமிழ்நாட்டில் இந்த தலைவர் களுடைய பெயர்களை எல்லாம் வைக்கவாமே என்று சிந்திக்கக் கூடிய ஒரு வாய்ப்பு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் மற்றவர்கள் எல்லாம் நம்முடைய பெயரை எப்போது வைக்க நமக்கு சந்தர்ப்பம் கிட்டக்கும் என்று ஆவர்கள் நினைத்துக்கொண்டு இருந்தார்கள். அந்த சந்தர்பத்தில் நான் காவ கட்டம், கால சக்கரத்தின் சுழற்சி மக்களுடைய

தீர்ப்பு அவர்களை தூக்கி வெளியே விழுத்தியது. தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் மகாத்மா காந்தி அவர்களை காப்பாற்ற துடித்தவர்கள். திருவள்ளுவர் அவர்கள் தமிழுக்கு அமுதமாக இருந்தவர்கள். பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்கள் தேவர் இனத்தில் சிங்கமாக இருந்தவர்கள் என்று தெரிந்து அந்த மாவட்டங்களுடைய பெயர்களை வைக்கும் போது மல்லிகைப் பூவை அ.இ.அ.தி.மு.க. அரசு ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகருக்கும் சூட்டும்போது மல்லிசைப் பூவா வேண்டாம் கனகாம்பரம் பூ கேள் நீ, கொஞ்சம் அடுக்கு மல்லி கேள் நீ என்று சொல்வது எவ்வளவு அரசியல் நாகரீகம் என்பதைதான் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் பணி வோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இதை விட கரண காரியங்கள் வேண்டும் என்று சொன்னால் ஒன்றை இங்கே மறைமுகமாக குறிப்பிட்டுச்சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். ஒரு மிகப்பெரிய எதிர்கட்சித் தலைவர் நான் மீண்டும் இந்த நாட்டுக்கு பொறுப்புக்கு வந்தால் என்று பொருள்பட இந்த மாவட்டத்தின் பெயர்களை எல்லாம் தூக்கி எறிய மாட்டேனா என்று பேசி இருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார், திருவாரூர் ஒன்றியத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை பெயரை வைத்து இருக்கலாமே என்று பேசியிருக்கிறார். அப்படி பேசியதன் காரணம் என்ன? தில்லை யாடி வள்ளியம்மை யார்? எவ்வளவு பெரிய தியாகத்தை செய்தவர். திருவாரூருக்கு என்னுடைய பெயரை வைக்கவேண்டும் என்று எனக்கு ஆசை இருக்கிறது, ஆனால் நாடு ஒத்துக் கொள்ள வேண்டுமே அந்த ஆசையின் அடிப்படையில் திருவாரூர் ஒன்றியத்திற்கு தில்லையாடி வள்ளியம்மை என்ற பெயரை வைக்கவேண்டும் என்று விரும்புவது அரசியல் அழகு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்,

மாவட்ட பிரிவினை பிரச்சினையின் அடிப்படையில் ஒரு மகத்தான செய்தியினை இன்று தமிழ்நாட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்தியா மிகவும் அமைதியாக இருந்து கொண்டிருக்கிறது நாம் எண்ணிக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுபினர் என்று இராசு அவர்கள் குறிப்பிட்டது போல் இந்தி பிரச்சினையில் திருமதி காந்தி அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும், திருமதி காந்தி அவர்கள் இந்தி பிரச்சினை பற்றி மாநாட்டில் எதை பேசினாலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வை பொறுத்தவரையில் தமிழுக்கு எதுவரை பாதுகாப்பு இருக்கிறதோ அதுவரை வடக்கில் இருப்பவர்கள். எல்லோரும் அ.இ.அ.தி.மு.க. வுக்கு நண்பர்களாக இருப்பார்கள். தமிழுக்கு பாதுகாப்பு இல்லை என்று அ.இ.அ.தி.மு.க. தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கருதுவார்களானால் வடக்கு அல்ல, தெற்கு அல்ல உலகத்தில் யாராக இருந்தாலும் அவர்கள் எதிரிகளாகத்தான் இருப்பார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம்

[திரு. கோவைத்தம்பி] [1984 பிப்ரவரி 17

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய 16 நாடாளு மன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி கொல்ல வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மிகப்பெரிய அரசியல் பரிணாம வளர்ச்சிக்கு பிறகு இந்த மாமன்றத்தில் இந்த ஆளுநர் உரையை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். நான் பரிநாம வளர்ச்சி என்று குறிப்பிடுவது அரசியலில் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை தமிழ்நாட்டில் நிலைநாட்டக்கூடிய யோக்கியதை படைத்தவர்கள் யார் என்று மக்கள் எண்ணியபோது நான் அதற்கு இருக்கிறேன் என்று இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் மக்கள் மன்றத்தில் சொன்னபோது சரி நீங்கள் தான் இருந்து கொள்ளுங்கள் என்று மக்கள் பிரகடனப் படுத்தினார்கள். அதற்கு பிறகு முதலமைச்சர் ஆனார் இன்றைக்கு அந்த அரசியல் பரிணாம வளர்ச்சிக்கு பிறகு நாம் ஆளுநர் உரையைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டு இருக்கிறோம். இந்த ஆளுநர் உரையைப் பற்றி விமர்சனம் செய்யும்போது இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி பேசும்போது கூட என்னுடைய அரசு, அ.இ.அ.தி.மு.க. அரசு என்று குறிப்பிடுவது இல்லை. இது அண்ணாவின் அரசு என்று நான் குறிப்பிடு கிறார்கள். அந்த அண்ணாவின் அரசு என்ற அடிப்படையில் வந்து இருக்கிற இந்த திட்டத்தில் இந்த செயலில் என்ன என்ன பணிகள் ஏற்பட்டு இருக்கிறது என்பது இந்த ஆளுநர் உரையில் மிக அதிகமாக வந்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டு கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன் அரசு ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கக்கூடியதை மனம் உவந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். அதை சொல்லி விட்டு பாராட்டாமல் சஸ்பெண்டு செய்கிறீர்களே இது நியாயம் தானா என்று சொல்கிறார். பிறகு அவர் சொல்கிறார் காவல் துறை தவறு செய்கிறது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது, ஒரு அந்தரங்க விசாரணை வையுங்கள் நாங்கள் எல்லாம் சொல்லுகிறோம் என்று சொல்கிறார். முதலில் அரசு ஊழியர்கள் தவறு செய்தால் நிட்டையார்டு ஆவதற்கு முன்னால் நடவடிக்கை எடுத்து சஸ்பெண்டு செய்கிறார்கள் என்று சொல்லி விட்டு பிறகு மாறாக இந்த கருத்தை சொல்கிறார்கள். இந்த கருத்தை அவர்கள் சொல்லக்கூடிய காரணங்கள்....

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் நான் சொன்னதை தவறாக புரிந்துகொண்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்காகவே அழுத்தம் திருத்தமாக சொன்னேன். யார் தவறு செய்தாலும் என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுங்கள். ஆனால் அதை ஏன் சில மாதங்களுக்கு முன்னால் செய்யக்கூடாது. நிட்டையார்டு செய்வதற்கு முதல் நான் தான்

சஸ்பெண்டு செய்ய வேண்டுமா. இது மைக்கலாஜிகலாக எவ்வளவு பெரிய எப்பக்ட்டை அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் அவருடைய குடும்பத்திற்கும் ஏற்படுத்தும், நீங்கள் இதுவரை சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிற பல்வேறு உயர் அதிகாரிகள் மீது பல மாதங்களாக விசாரணை ஆகியும் எந்தவிதமான முடிவும் இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. நெடுமாறன்: முடிவுகள் தெரியும்பொழுது அவர்கள் நிட்டையர் ஆகக்கூடிய நாட்கள் இருக்கலாம், அந்த ஒரு சூழ்நிலை இருக்கும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராசு அவர்கள் சத்துணவுத் திட்டம் என்பது நிரந்தரமான எதிர்காலப் பொருளாதாரத்தை ஏற்படுத்தாது என்ற வகையில் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சிகளைச் சார்ந்த பலரும் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவன் போடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் கூட்டப் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், சுதந்திரத்தின் சுவையை இன்றுகூட ஏழை எளிய மக்கள் கிராமப் புறங்களில் உள்ள மக்கள் பெற முடியவில்லை என்று கூற, அப்படிப் பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டு மென்று சொன்னார்கள். அமரர் காமராஜ் ஆட்சிக் காலத்தில் கொழிற் கூடங்கள் வளர்ந்தன என்பதைப் பற்றியும் சொன்னார்கள். முந்தைய அரசுகளின் ஆட்சிக் காலத்தில்— அது காங்கிரஸ் கட்சி ஆண்ட அரசாக இருந்தாலும், அல்லது வேறு எந்த அரசாக இருந்தாலும் அவைகள் காலத்தில் எத்தனை தொழிற்கூடங்கள் வளர்ந்தாலும் கூட, திடமான பொரு ளாதாரத்தை, எதிர் காலத்தில் உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், அப்படிப்பட்ட வல்லமை பொருந்திய பொருளாதாரத்தை உருவாக்க முடியாத காரணத்தால், பிஞ்சு உள்ளங்கள் பட்டினியால் வாடி மயங்கிக் கொண்டிருந்தன. அந்த மயக்கத்தைத் தீர்க்க அவர்களுக்குக் கஞ்சி ஊற்றி, அந்த மயக்கத்தைப் போக்கி, தெம்பு ஊட்டி, அந்தத் தெம்போடு நடக்கச் செய்த பிறகு பெரும் பொருளாதார நிலைக்குச் சில்லலாம் என்று ஒரு அரசு முற்படும்பொழுது அதைப் பற்றிக் குறை கூறுகின்றவர்களைப் பார்க்கும்பொழுது தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தச் சத்துணவுத் திட்டத்தையே ஒழித்துவிடுவோம் என்று மறைமுகமாகச் சொல்வதைப் போலத்தான் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்ன கருத்தை மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இராசு அவர்கள் குறிப்பிட்டார்கள். பொருளாதாரத்திற்கு ஒரு திடமான நிலையைத் தமிழக அரசு

ஏற்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை அவர்கள் சுமத்தினார்கள். இந்த நாட்டின் நிதியமைச்சர், பெருமதிப்பிற்குரிய, மாண்புமிகு திரு. பிராணப் முகர்ஜி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பிராணப் முகர்ஜி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்தியாவிலே வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகமான செலவை, அதாவது 34 விழுக்காடுகளுக்கு மேல் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகச்செலவு செய்து இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே முன்னணியில் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு என்றும், முன்னணியில் இருக்கும் முதல்வர் புரட்சித் தலைவர் என்றும் இந்தியாவின் நிதியமைச்சர் பிராணப் முகர்ஜி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்திலுடைய மாற்றுத் தலைவரவர்களே, பிராணப் முகர்ஜி அவர்கள் இந்த அரசைப் பற்றிச் சொல்லியதாகச் சில தகவல்களைச் சொன்னார்கள், நானும் பிராணப் முகர்ஜி கூறிய கருத்தைப் படித்தேன். ஆடம்பரங்கள், நான்-பிளானிங் எக்ஸ்பென்டிச்சர் பல்வேறு மாநிலங்களில் நிறைய இருக்கின்றன; எனவேதான் திட்டச் செலவிலேகூட அதிக தொகை ஒதுக்க முடியவில்லை என்ற கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறாரே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போலச் சொல்லியிருந்தால் எந்தயிடத்தில் சொல்லியிருக்கிறார், அது எந்தப பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்பினால் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை மாமன்ற தலைவர் அவர்களின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி நான் விடை பெற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். சத்துணவுத் திட்டம் என்ற இந்தத் திட்டம் ஒரு திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டம் அல்ல. ஆகவே, இந்தச் சத்துணவுத் திட்டம் தேவையில்லை என்று அவர்கள் குறிப்பிடுகிறார்களா என்பதை நான் அறிய விருப்புகிறேன்.

அடுத்து, யார் எங்கு போனால் என்ன ஏன் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேசும்பொழுது கேட்கிறார்கள். பாக்கியராஜ் திருமணத்திற்கு முதலமைச்சர் போகலாமா என்று. அதுதான் பண்பு. மற்ற முதலமைச்சர்களுக்கும் இந்த முதலமைச்சருக்கும் இருக்கின்ற வேறுபாடே அதுதான். மக்கள் யாரை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் எவ்வளவு சிறியவர்களாக இருந்தாலும் இந்தத் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் போய் அவர்களை மதிக்கிறார்கள்.

ஆகவே, மக்கள் சக்தியை, மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சக்தியை மக்கள் மதிக்கக்கூடிய சக்தி, படைத்தவர்களாக இருக்கின்ற காரணத்தால் போகிறார்கள். ஆகவே பாக்கியராஜ் திருமணத்திற்குப் போனால் என்ன? மற்றவர்கள் திருமணத திற்குப் போனால் என்ன?

(பிற்பகல் 12—40)

மதுரையில் மாணவர்கள் அடிபட்டபோது கண்ணகியைச் சுட்டிக் காட்டினார்கள். மாணவர்கள் மீது அடிப்பதற்காக விசாரணைக் கமிஷன் இருக்கின்றது. அதற்காக ஒரு ஆட்சிப் போகப் போகின்றது. அதற்கு அஸ்திவாரம் அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இலங்கைப் பிரச்சினையைப் பற்றி இந்த மாமன்றத்தில் எத்தனை தடவை பேசி இருக்கிறீர்கள். இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? தன்னந்தனியாக நடுக்காட்டில் போவதுபோல், தனக் கப்பலில் போவது போல் தனித்தனி தோணிகளில் போனீர்கள். அது எல்லாம் பயன் அளித்ததா? தமிழக வரலாற்றில், திராவிட இன வரலாற்றில், இந்திய வரலாற்றில் ஒரு எதிர்க்கட்சியின் மந்திரிசபை அமைந்துள்ள தமிழ்நாட்டிலிருந்து ஒரு தமிழர் ஜ.நா, சபையின் சென்று பேசுகின்ற அளவுக்கு ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கித் தந்தவரே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்தான். இது ஸ்ரீலங்காவிற்குக் கிடைக்கின்ற வெற்றியைவிட மிகப் பெரிய வெற்றியாக தமிழகம் அந்த வெற்றியைக் களித்து அதன் காரணமாக ஸ்ரீலங்கா பயப் படுகின்ற அளவுக்கு இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே வெறும் நையாண்டிகளை, வேகமான கருத்துக்களை மார்தட்டிப் பேசுவதாலேயே அது வெற்றிபெறாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளரைப் பற்றி நேற்று முன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் விவாதம் நடக்கும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். விரும்பினால் பாடப்புத்தகத்தில் வையுங்கள் என்று சொன்னார்கள். அது அவர்களுடைய சொந்தக் கருத்தாக இருக்கலாம். ஒரு ஆளும் கட்சி, மக்களுடைய செல்வாக்கைப் பெற்ற கட்சி, இரண்டு தடவை தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்த ஒரு கட்சியின் கொள்கைப்பரப்புச் செயலாளர் செல்லுகின்ற இடத்தில் எல்லாம் மக்கள் கூட்டம் கூடுகின்றது. மக்கள் கூட்டம் கூடுகின்றது, என்று சொல்வதைவிட மார்தட்டிச் சொல்ல முடியும், இந்தியாவில் இருக்கின்ற 23 மாநிலங்களில் உள்ள

[திரு. கோவைத்தம்பி] [1984 பிப்ரவரி 17

எந்த ஒரு பெண் பேச்சாளருக்கும், எந்த ஒரு கட்சியில் கொள்கை பரப்புச் செயலாளருக்கும் சேராத கூட்டம் தமிழகத்தில் எங்களுடைய கொள்கை பரப்புச் செயலாளருக்கு கூடுகின்றது. அந்தக் கொள்கை பரப்புச் செயலாளரைப் பற்றி விமர்சிக்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைய அரசியல் கட்டத்தில் ஏற்பட்ட பிறகு ஓரு பேராசிரியர் அதைப் பற்றிக் கேள்வி கேட்கிறார் என்று சொன்னால் அவரைப்பற்றிக் கேட்பதா அல்லது அவருக்கு வருவதைவிட குறைவாகக் கூட்டம் யாருக்கு வருகிறதோ அவர்களைப் பற்றிக் கேட்பதா என்பதைத்தான் அந்த உறுப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மத்திய அரசு விவசாயிகள் பிரச்சினையில் எடுக்கின்றதோ என்னென்ன நடவடிக்கைகளை அதைவிட நடவடிக்கையை இன்று அனைத்திந்திய அண்ணா வேகமான முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு எடுத்துக் திராவிட கின்றது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்று பிப்ரவரி 29 ஆம் தேதி அல்லது அதற்கு மேலானாலும் நான் நெல் கொள்முதல் விலையை உயர்த்தியே தீருவேன் என்று தமிழக அரசின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

வெள்ளச் சேதத்தால் பல பகுதிகள் பாதிப்புக்கு ஆளாவ நேரத்திலும், கோவை மாவட்டம் போன்ற பகுதிகள் வறட்சிக்கு ஆளான நேரத்திலும் விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியினை அளிக்கின்றது என்பதை நான் பணிவோடு தெரிவித்து இந்த ஆளுநர் உரையினை வரவேற்று விடைபெற்றுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டம் கூடுவதாலேயே பாடப் புத்தகமாக வைக்கலாம் என்றால் சில்க் சுமிதாவுக்குக் கூட கூட்டம் கூடுகின்றது. எனவே பாடப் புத்தகமாக வைப்பார்களா?

திரு. கோவைத்தம்பி: மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சைப் பற்றிச் சொன்னதால் நான் பதில் சொல்கிறேன். சம்பல் நதி தீரத்தில் கொள்ளை கொள்ளைக்காரனை ஜெயிலிலே பிடித்து அடித்த ஒரு அவனுக்குக் கூட்டம் இல்லையே என்று வருத்தப்படுவதில் பயன் இல்லை.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் திரு. ரகுமான்கான் பேசியது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

1984 பிப்ரவரி 17] [டாக்டர் கே. சௌரிராஜன்]

சிரிக்கச் சிரிக்கச் சொல்வார்கள், வீரோதிகள், அழ அழ சொல்வார்கள் நண்பர்கள் என்பது பழமொழி. நான் இங்கே பேசுகின்ற நேரத்தில் இந்தப் பழமொழியை மனதில் வைத்துக் கொண்டு இங்கே ஆளுங்கட்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள், ஏதாவது, அவர்களுக்கு மன வேதனை ஏற்படுமானால் நான் நண்பன் என்ற முறையிலே நல்லதைச் சொல்கின்றவன் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகையிலே படித்திருப்பீர்கள், நம்முடைய சட்டமன்றம் ஆரம்பித்த அந்த தேதியிலே உத்திரப் பிரதேசத்திலே சட்ட மன்றம் துவங்கியது. ஆளுநரை உரையாற்றக்கூட எதிர்க்கட்சிகள் விடவில்லை. ஆளுநர், உரையைப் படிக்க முடியாமல், சபாநாயகர் படித்தார். லோக் தல் உறுப்பினர் ஒருவர் சென்று அந்த ஆளுநர் உரையையே கிழித்து எரிந்து விட்டார்கள் என்று பத்திரிகையிலும் படித்திருப்பீர்கள். இங்கே கர்நாடக மாநிலத்திலே பார்த்தீர்களானால், ஆளுநர் ஏதோ மத்தியிலே ஆளுகின்ற கட்சியின் ஏஜெண்டைப் போல் செயல்படுகிறார் என்று அங்கே தெருத்தோறும் கூறுகிறார்.

(பாலங்களுமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காஷ்மீரிலே உள்ள மந்திரி சபையும் ஆளுநர் இந்திரா காந்தியினுடைய அபிஷியல் ஏஜெண்டாக அவர்கள் சொல்வதைக் கடமையாகக் கருதிச் செய்கிறார்கள் என்று எங்கு பார்த்தாலும் குற்றச்சாட்டுகள். ஆனால், தமிழ்நாட்டிலே உள்ள காங்கிரஸ் காரர்கள் செய்த பாவம் மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் ஆரம்பித்து, மேதகு குரானா அவர்கள் வரையிலும் எந்த ஒரு காங்கிரஸ்காரனுக்கோ, கட்சிக்கோ சாதகமாக ஏதாவது செய்ததாக வாலாறே இல்லை. அதனுடைய காரணம் என்ன தெரியுமா? இங்கே ஆளுகின்ற திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்த 2 கட்சிகளும் ஆண்டவனையே சரிக்கட்டக் கூடியவர்கள்.

* * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் மேதகு ஆளுநர் உரையைப் பற்றி அவருடைய கட்சியினுடைய கருத்துக்களை, அவருடைய திட்டங்களை, அவர்கள் செய்ய நினைப்பவைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வதற்குத் தாராளமாக இடம் உண்டு. வேறு பல மாநிலங்களிலே என்ன என்ன நடைபெற்றது எல்பதை இங்கே ஏன் சுட்டிக்காட்டுகிறார்? அது இங்கே நடைபெற வேண்டுமென்று விரும்புகிறாரா என்றும் தெரியவில்லை. எதிர்க் கட்சிகள் எல்லாம் செய்யாமல் இருக்கின்றன என்று சொல்கிற மாதிரி இருக்கிறது.

* * *

வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப்பெற்றது.

[1984 பிப்ரவரி 17

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * *

என்பதையும் அது குறித்து நிதியமைச்சர் பேசியது உடபட நீக்கப்படுகின்றன.

டாக்டர் கே. சௌரிராஜன்: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஆளுநர் உரையைப் பற்றிப் பேசுங்கள். காலையிலே பேசியதை மீண்டும் பேசாதீர்கள். இப்பொழுது பேசியவை எல்லாம் நீக்கப்படுகின்றன.

(பிற்பகல் 12-50)

டாக்டர் கே. சௌரிராஜன்: * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டார்கள். * *

பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை அளித்ததற்கு பிறகு அதைப்பற்றிச் சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு வேறு பிரச்சினைகளுக்குப் போவதுதான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் இது குறித்து பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன்: * * *

அடுத்தபடியாக ஒரு சிறிய கட்டுரையில் படித்தேன். வட நாட்டுப் பத்திரிகையிலே அது வந்திருக்கிறது.

This Government is surviving by self-praise

என்று போட்டிருந்தார்கள். சுய விளம்பரத்திலே இந்த அரசாங்கம் 'சர்வைவிங்' அதாவது பிழைத்துக் கொண்டிருக்கிறது என்று போட்டு இருந்தார்கள். நான்கூட அதை நம்பவில்லை. காரியங்களைச் செய்கிறார்கள். புரட்சிகரமான திட்டங்களை அறிவிக்கிறார்கள். அவர்கள் எதற்காக விளம்பரம் செய்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

1984 பிப்ரவரி 17] [டாக்டர் கே. சௌரிராஜன்]

கொள்ள வேண்டும்? விளம்பரம் செய்யாமலே மக்கள் அவர்களிடத்தில் இருப்பார்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அண்மையில் ஒரு நிகழ்ச்சி. என்னுடைய தொகுதியிலே வடபழனி ஆண்டவன் கோவில் கும்பாபிஷேகம் நடந்தது. அதற்கு பத்திரிகையிலே பெரிய விளம்பரம். ஒன்றைக் கொடுத்து ஒருந்தார்கள். தமிழ், ஆங்கிலம் இரண்டு பத்திரிகைகளிலும் வந்திருந்தது. தமிழில் வந்ததில், "அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை—26, குடமுழுக்கு விழா— 6-2-1984 மாண்புமிகு டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் அமைச்சரவையில் பெரும்பணி ஆற்றி வரும் மாண்புமிகு இராம. வீரப்பன்" இது எனக்கே புரியவில்லை; யாருக்கும் தெரியாதா, அமைச்சர் வீரப்பன் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். பொன்மனச் செம்மல் தலைமையில் பணியாற்று கிறார் என்று? It is a collective responsibility.

ஒரு கேபினெட்டிலே எந்த மினிஸ்டர் இருந்தாலும், அவரால் வருகிற பெருமை either the defects or the profits go to the entire Cabinet. நான் கேள்விப்பட்டிருக்கிறேன், வெள்ளைக்காரன் காலத்திலே K.T.C.I.E., K.T.S.E., K. C. I. E. என்று பட்டம் கொடுப்பார்கள். அதாவது Knight Commander of the Indian Empire.

அதுமாதிரி மந்திரிகளுக்கு பட்டம் கொடுத்து விடலாமே; அட்லீஸ்ட் அட்வர்டைசிங் செலவாவது மிச்சமாகுமே, இதற்கு விளம்பரம் என்று இல்லாமல் வேறு என்ன அர்த்தம்? எந்த ஒரு மந்திரி ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பெருமை சேர்த்துக் கொடுத்தாலும். It goes to the entire Cabinet the Government.

காமராசர் அவர்கள் காலத்திலே ஒரு அமைச்சர் தவறு செய்து விட்டார். அப்போது காமராசர் அவர்கள் "I own the responsibility" என்று சொன்னார்கள். அந்தமாதிரி இந்த அனாவசியமான விளம்பரம் தேவைதானா இல்லையா என்பதை பொதுமக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து முடிவு எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் அறிக்கையைப் படிக்கிறபோது கிட்டத்தட்ட 25 பக்கத்திலே 10-11 பக்கம் ஒப்பாரியாக இருக்கிறது. வறட்சி, வெள்ளம், வறட்சி, வெள்ளம் என்று இருக்கிறது. இதிலே ஒன்று தான் பாக்கி, துக்கம்பம் வரவில்லை, மற்ற எல்லாம் வந்து விட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புவியியல் அமைப்புப்படி எக்காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டில் பூகம்பம் வராது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பூகம்பம் டெல்லியில் வந்திருக்கிறது என்ற செய்தி இன்றைக்குப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

டாக்டர் கே. சௌரிராஜன்: புவியியல் பற்றி சொன்னதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் ருமதி யசோதா அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். இந்த ஆளுநர் உரை சாதாரண மாகவும், சாமர்த்தியமாகவும், தயாரிக்கப்பட்ட அறிக்கை என்று. நான் கூடுதலாக— அடிஷனல் டிரிபியூட்டாகச் சொல்ல விரும்பு கிறேன்—இந்த அறிக்கை ஒப்பாரி நயத்தோடும், இலக்கிய நயத்தோடும் வைப்பதிலே கவிதை அடிஷனல் டிரிபியூட்டாக நான் அளிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலே மிகுதியான வறட்சி இருந்தது. அந்த வறட்சி நேரத்தில் இந்த அரசாங்கம் மிகச் சிறந்த முறையில் போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து அந்தத் தண்ணீர் பஞ்சத்தை மிகச் சிறந்த முறையில் சந்தித்தது என்பதிலே எந்தவிதமான இரண்டு விதக் அபிப்பிராயம் இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில் நான் அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டு இதற்காக அந்த இருக்கிறேன். இதிலே சொல்லியிருக்கிற ஒரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். "....11951 tubewell pumps and 1,204 India Mark II pumps were installed in Madras City at a cost of Rs. 252.28 lakhs" 2½ கோடி ரூபாய்செலவழித்து 11,951 குழாய்க்கிணறு பம்புகளும், 1,204 இந்தியா மார்க்-2 பம்புகளும் அமைக்கப்பட்டன. ஆனால் இப்போது தண்ணீர் பிரச்சனை தீர்ந்து விட்டது. தினந்தோறும் தண்ணீர்விட ஆரம்பித்தாகிவிட்டது. பம்புகள் எல்லாம் என்ன ஆயிற்று? Have they gone underneath the ground அதைப்போலவே, ஆங்காங்கு தண்ணீர்த் தொட்டிகள் வைத்தீர்கள். ஒரு தொட்டி வைப்பதற்கு கிட்டத்தட்ட 5,000 ரூபாய் செலவாகும். அதையெல்லாம் எடுத்து, ஒவ்வொரு வீட்டிற்கும் ஓவர்ஹெட் டாங்க் கட்டுவதற்குப் பதிலாக வைத்துக் கொள்ளலாம் என்று விற்றால் கூட செலவழித்ததில் பாதிப்பணம் வந்துவிடும்.

From this Rs. 252.28 lakhs atleast 50 perc nt could have been recovered. But what have they done? Nothing Don't you thing it is a gross: wasteful expenditure? The Government has not made any attempt to preserve what it has done during the drought.

அந்த டாங்குகள் இன்றைக்கு அப்படியே நின்று கொண்டு இருக்கின்றன. அவற்றை கண்டம் செய்தாகி விட்டதா என்பதைத்தான் நான், பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். 252 லட்ச ரூபாய் செலவழித்ததில், குறைந்தபட்சம் 100 லட்ச ரூபாய்க்கு நம்மிடம் பொருள்கள் இருக்கின்றன. அதைத் திரும்ப எடுத்துக் கொள்வதில் என்ன கஷ்டம்? அதை அப்படியே விட்டு விட்டால், மீண்டும் ஒரு பெரிய ட்ரௌட் வந்தால், மறுபடியும் 252 லட்ச ரூபாய் நாம் செலவழிக்க வேண்டுமா? இதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். Coming to Civil Supplies it stated in the Governors address, "An average supply of 75,000 to 80,000 tonnes per month was maintained at the subsidised issue price which has been retained unaltered for the last few years." The Government of India has already given a sizeable quantityt you have supplemented 40,000 tonnes.

இந்த 35,000 டன் ஒவ்வொரு மாதமும் மத்திய கிரிட்டிலிருந்து தமிழகத்திற்கு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு நீங்கள் எந்த அளவிற்கு மத்திய அரசைப் பாராட்டி யிருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

What is the total commitment? This caused the Exchequer hugely This caused the Exchequer enormously.

What is the total commitment of this Government by having this subsidised rice supply?

இன்னும் 10 நாட்களில் பட்ஜெட் வரப்போகிறது. இந்த ஆளுநர் உரையில் அதைப் பற்றி சொல்லியிருக்கக்கூடாதா?

ஸ்ரீலங்கா பிரச்னையில் மத்திய அரசு எந்த அளவிற்குத் தலையிட்டு. எந்த அளவிற்கு உதவி செய்து இருக்கிறது. எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறது. ஸ்ரீலங்கா ரிபேட்டிரியேட்ஸ்ஸுக்காக எந்த அளவிற்கு உதவி புரிந்து இருக்கிறார்கள் என்பதைப் பற்றி ஒரு வார்த்தைகூட சரியான முறையில் இந்த ஆளுநர் உரையில் கொடுக்கப்படவில்லை. முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல எல்லா வற்றையும் நாங்களே செய்தோம் என்று சொல்லும் அளவிற்கு

you are blowing your own trumpets என்ற அளவிற்கு ஓழிய மத்திய அரசு நமக்கு செய்து இருக்கிறதே அவர்கள் கொடுத்து இருக்கும் நன்மைகளை, நீங்கள் எடுத்துச் சொல்லவில்லை என்பதை நான் மிக யோடு இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்,

(பிற்பகல் 1-00)

Sir I am covering the subjects one by one. I have completed only half of it. My party, the Congress party consists of 32 members. It is the main opposistion party. We have got a right to take more time. I must be given atleast 30 minutes.

In page 10 of the Governor's address it stated as "A major policy of the Government has been to bring new areas under irriga- tion, as also to stabilise the existing irrigation facilities. As against a sum of Rs.189.79 crores set apart for major and minor irrigation and food control schemes in sixth Five -year Plan a sum of Rs. 80.73 crores have been spent in the first three years of the plan period."

மூன்று வருஷத்தில் 80,73 கோடி ரூபாய் செலவிட்டிருக் கிறீர்கள். இனி வரப்போகிற இரண்டு வருஷத்தில், முதல் வருஷத்தில் 55 கோடி ரூபாயும், இரண்டாவது வருஷத்தில் 60 கோடி ரூபாயும் செலவு செய்யப் போகிறோம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். இரண்டு வருஷத்தில் இவ்வளவு தொகையை பாசனத்திற்கு என்று செலவிடப் போகிறோம் என்று சொன்னால் இந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் என்ன செய்து கொண்டிருந் தீர்கள்? தூங்கிக் கொண்டா இருந்தீர்கள்? விவசாயம் பற்றிய உங்கள் சிந்தனை எப்படி இருக்கிறது என்பதற்கு இது ஒன்று போதாதா? இவ்வளவு காலம் கடந்து இவ்வளவு தொகையை செலவிடப் போகிறோம் என்கிறீர்களே.

In page 11 it is stated, "Tamil Nadu has very little potential left for exploting surface water resources for cultivation. Ground water exploitation has also reached its full potential in some areas and with about 50 percent of the cultivable areas in the State still to be irrigated the need to resort to more prudent and scientific water management has became inescapable."

ப்போதுதான் இதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். பெய் கின்ற மழைத் தண்ணீர் வீணாகிறது. ஏரிகள் வறண்டு கிடக்கின் றன. மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கர்நாடகத்திலிருந்து தண்ணீர் வரவேண்டியிருக்கிறது. ஆகவே மழை நீரை எப்படி சேமித்துவைத்து விவசாயத்திற்கு பயன்படுத்துவது என்பது பற்றி 15 ஆண்டு கால திராவிட பாரம்பரிய ஆட்சிக்குப் பின்தான் சிந்தித்து பார்த்திருக்கிறீர்கள். ஏனென்றால் இருக்கிற ஆறுகளில் எல்லாம் காங்கிரஸ் ஆட்சியில் அணைகளைக் கட்டிவிட்டார்கள்.

பாசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் திட்டமிட்டு சிறப்பாகச் செய்தார்கள். நீங்கள் என்ன செய்தீர்கள்? 15 ஆண்டுக் கால திராவிட பாரம்பரிய ஆட்சியிலே ஆங்காங்கே இருந்த ஏரிகள், குளம் குட்டைகளை எல்லாம் தூர்த்துவிட்டு, அந்த இடத்திலே வீடுகளை கட்டியிருக்கிறீர்கள். அதனால் இன்றைக்கு சென்னை யிலே குடிதண்ணீருக்கு பஞ்சம். மாவட்டங்களிலே பாசனத் திற்கு தண்ணீ இல்லை; கிணறுகள் வறண்டு கிடக்கின்றன. ஏற்கெனவே இருந்த ஏரிகள், குளம் குட்டைகளை தூர்த்து விட்டு, இப்போது பெர்குலேஷன் பாண்ட்ஸ் ஏற்படுத்தப் போவ தாகச் சொல்கிறீர்கள். இது காலம் கடந்த சிந்தனை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக இந்த அரசாங்கத்திற்கு என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், 'ஹைப்ரோ ஃபோபியா, ஃபோட்டோ ஃபோபியா' என்று சொல்வார்கள்; அதைப்போல இப்போது உங்களுக்கு 'கருணாநிதி ஃபோபியா' வந்திருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் இப்போது நீங்கள் அறிவித் திருக்கிற 10,000 ரூபாய்க்கு திட்டம். அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் கொடுக்கிறோம். நீங்கள் 5,000 ரூபாய் கட்டுங்கள்; நாங்கள் 5 000 ரூபாய் தருகிறோம்; மொத்தம் 10,000 ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். கருணாநிதி காலத்தில் செத்துப்போனால் 10,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி கொடுத்தார்கள். அதைப்பார்த்துக் கொண்டு இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள். அதேமாதிரி நீங்களும் 10,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே. இல்லை என்றால் ரிடையர் ஆகும்போது அரசாங்கம் 5,000ரூபாய் காடுக்கும் எல்லா ஊழியர்களுக்கும் என்று அறிவியுங்கள். அதை விட்டுவிட்டு நீ 5,000 ரூபாய் கட்டு, நான் 5 000 கட்டுகிறேன். ரிடையர் ஆகும்போது 10,000 கொடுக்கிறோம் என்று ஏன் சொல்ல வேண்டும். இது எதைக் காட்டுகிறது என்றால். You are always suffering from the disease called "Karunanidhi phobia"

அவர்கள் கட்டும் பணத்தை நாங்கள் கொடுக்கிறோம் என்று நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்? யாராகயிருந்தாலும் நாங்கள் 5.000 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போங்கள.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு துணைத்தலைவரவர்களே ஒரு விளக்கம். இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது என். ஜி. ஓ. க்களுக்கு இது நன்மை செய்திருக்கிறதுஎன்று என். ஜி. ஓ. சங்கத் தலைவர் திரு. சிவ இளங்கோ பாராட்டி, இது இந்தியா வுக்கே வழி காட்டுகிற ஒரு முறை என்று சொன்ன பிறகு மாண்பு மிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள இப்படி பேச வதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை.

டாக்டர் கே. சௌரிராஜன்: நீங்கள் கொடுப்பது 5,000 தானே. கருணாநிதி, செந்துப்போனால் 10,000 கொடுத்தார். அதைப் போன்று புரட்சித்தலைவர் மிடையர் ஆகும்போது 10,000 கொடுக்கிறார் என்று சொல்லுங்கள். ஆனால் நீங்கள் அறிவித்திருப்பது 5,000 தானே. 5,000 ரூபாய் கட்டுவது ஊழியர் அல்லவா? ஆகவே நாங்கள் 10,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்வது சரியல்ல (மணியடிக்கப்பெற்றது). இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் ஏப்ரல் 19, 23 ஆம் தேதிகளில் நடக்கும் என்று அறிவித்திருக்கிறீர்கள்? எப்படி அந்தத்தேதியை அறிவித்தீர்கள்? பட்ஜெட் மே மாதம் வரையிலும் போகும், பட்ஜெட் இருக்கும்பொழுது எப்படி அந்தத் தேதிகளை அனௌன்ஸ் பண்ணினீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. எப்ரல் மாதம் நடத்தலாம், மே மாதம் நடத்தலாம் என்று சொன்னால் அர்த்தம், கரெக்ட்-ஆக நாள், மாதம், முகூர்த்தம் கூட எல்லாம் பார்த்து வைத்துவிட்டீர்கள். எப்படி நீங்கள் நடத்தப் போகிறீர்கள்? பட்ஜெட்டிற்கு நாங்கள் எல்லாம் இருக்கவேண்டும் தேர்தலுக்காக நாங்கள் போகவேண்டாமா? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிசினஸ் அட்வைசரி கமிட்டி எடுத்த முடிவு தான் இது. நாம் எல்லாவற்றுக்கும் மரியாதை கொடுத்துப் பேச வேண்டும். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் கொடுத்தாலும் கடைசியில் பிரச்சனையோடுதான் முடியும் (குறுக்கீடு).

டாக்டர் கே. சௌரிராஜன்: இந்த ஆளுநர் உரையை நான் கிழித்தெறியவில்லை.

But I am considering this as a trash. It only briefly touches upon the steady deterioration made by the State in all walks of life including the administration, as well as in day to day life, law and order and economic situation.

With these words I conclude.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக் சில கருத்துக்களைச் சொல்ல வி ழைகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு நயரம் மிகுந்த நிலையை பிரதிபலிப்பதாக இந்த ஆளுநர் உரை அமையவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களோ அல்லது அமைச்சர் பெருமக்களோ, இந்த ஆளுநர் உரையானது ஏதோ பெரிய அளவிற்கு தமிழக மக்களுக்கு உதவி செய்கிறது என்று கற்பனை செய்து கொண்டால் அந்தக் கற்பனை அவர்களுக்குத் தோல்வியையே கொடுக்கும் என்று நான் எடுத்துச் சொல்ல வேண்டும். உண்மையான நிலைமையை நீங்கள் மனதில் கொள்ளாமல் ஏதோ

அந்தரத்திலே நின்று ஆட்சி நடத்திவிடலாம் என்று நினைக்கக் கூடிய நிலை இருக்கிறது என்று எங்களுக்குத் தெரிகிறது. நம் முடைய நிதியமைச்சரவர்கள் 8 ஆவது நிதிக் கமிஷனுக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். ரூ. 1,000 கோடி எங்களுக்குத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே பாசன வசதி என்பது இந்தியாவிலேயே 11-வது இடத்தில் இருக்கிறது, நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இன்று 57.2 பர்சன்ட் வறுமைக் கோட்டிற்குக் கீழே தமிழக மக்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். கடந்த மூன்று ஆண்டுகளாக மட்டும் பண வீக்கம் மிகப் பயங்கரமாகவே உயர்ந்து, நாணயத்தினுடைய மதிப்பு மிகக் குறைந்து, ரூபாயினுடைய உண்மையான மதிப்பு 17 பைசா என்று மத்திய சர்க்கார் அறிவித்துக் கொண்டிருக்கிறது. ஒரு வேளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்தும்படியான மாநிலம், இந்தியாவிலிருந்து தனியாக, ஒதுங்கி நிற்கிறதோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது. சமீபத்தில் மத்திய சர்க்கார் நிலக்கரி விலையை 25 பர்சென்ட்-ஆக உயர்த்தியிருக்கிறது. அப்படி உயர்த்துமானால், மாநில அரசின் பட்ஜெட்களே தூள் தூளாகும், மக்களுடைய வாழ்க்கையே நொறுக்கி எறியப்படும் என்று நம்முடைய இந்தியாவினுடைய பொருளாதர நிபுணர்கள் கவலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிற காலம் இது. மறந்து விடக்கூடாது-ஆகவே நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? உங்கள் கையில் ஒப்படைத்திருக்கக் கூடியது ஒரு அச்சு முறிந்த ஆணி, ஆறக்கால் போன வண்டி. அதை நீங்கள் எழிலாகப் பூசி, ஜிகினா போட்டு அலைகளை மறைத்து ஏதோ நடக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால், ஒரு ஆபத்தில் சிக்கிக் கொண்டீர்கள். அது தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய துரோகமாகக் கூட போய்விடும் என்று எச்சரிப்பதே எங்கள் கட்சியினுடைய நிலை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்று நான் சில விவரங்கள் பேசுவதற்கு முன்னாலே ஒன்றிரண்டை ஞாபகப்படுத்த வேண்டும். டிசம்பரிலே கடுமையான மழை-- ஜனவரியிலே கடுமையான மழைத் தாக்குதல்-இப்போது மீண்டும் பிப்ரவரியிலே தொடர்ந்து ஒரு வாரமாக வெள்ளம், புயல், மழைத் தாக்குதலுக்கும் தமிழகத்தினுடைய விவசாயிகள், மக்கள் ஆட்பட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திண்டுக்கல் போன்ற நகரங்களில் கூட 12 மணி நேரம் தொடர்ந்து ஓயாமல் மழை பெய்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி, உயிர்ச் சேதம், பயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று தவிர்க்க முடியாத தந்திகள் அங்கிருந்து வந்து கொண்டிருக்கின்றன. அரசு இந்த நிவாரண உதவிகளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? ஆனால் நம்முடைய முதலமைச்சர் ஏதோ மத்திய சர்க்கார் ரூ. 5 கோடியை ஒதுக்கியது என்று தெரிவித்த உடனேயே பெருமகிழ்ச்சி தெரிவித்தார் என்று நாங்கள் கேள்விப்படுகிறோம், வருத்தப்படுகிறோம். ஏற்கனவே பெங்களூரில் நமக்குத் தேவையானது--இயற்கை பாதிப்பு ஏற்பட்டால் மாநிலங்களுக்கு 75 சதவீதத்தை மத்திய சர்க்கார்

[திரு. என். வரதராஜன்

[1984 பிப்ரவரி 18

கொடுக்கவேண்டுமென்று நாம் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். அதை வற்புறுத்தாமல் தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப்பணிகள் எப்படி நடைபெறும்? திப்பிடிக்காத வீடுகளுக்கும் நிவாரணம் கொடுக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. மக்கள் நலக் குழுவினை அமைத்து அதன் மூலமாக நீங்கள் நிவாரணப் பணிகளை மேற் கொள்ளாவிட்டால், இந்த நிலைமை வந்து சேரும், அதில் இந்த ஆட்சி என்ன, வேறு எந்த ஆட்சி என்ன?— இன்று உங்களுக்கு ஏன் அந்த பயம் வந்தது? இந்த நிவாரணப் பணிகளுக்கு பட்டி யல் படித்து பிரயோஜனம் இல்லை. அந்தப் பட்டியலை நிறை வேற்றுகின்ற கூட்டம் அது. இயற்கையாக தவறுகள் ஏற்படும், ஊழல் ஏற்படும், தவறான வீடுகளுக்கு பணம் கொடுக்கப்படும். இடிந்து வீழ்ந்த வீடுகள் மனுக்களோடு நிற்கும். இன்றைக்குத் தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்திலே பல மனுக்கள் தேங்கி இருக்கின்றன என்பது உண்மை.

(பிற்பகல் 1-10)

அதற்காத்தான் நாம் இன்றைக்கு 200 ரூபாய் கொடுக்கிறோம். ஏற்கெனவே 40 ரூபாய் கொடுத்தார்கள் என்று தி.மு.க. அரசின் மீது ஓயாமல் சொல்லிக்கொண்டே காலத்தை, தள்ள முடியாது. அன்றைக்கு கீற்று விற்றது 100, பத்து ரூபாய், ஆனால் இன்றைக்கு கீற்று 100, 25 ரூபாய், 35 ரூபாய் விற்கிறது. இதை வைத்துக்கொண்டு அந்த வீட்டை 60 ரூபாய் விற்கிறது. புனர் அமைக்க முடியாது. மழை ஓயாமல் பெய்து கொண் டிருக்கிறது. நாமும் நிவாரண இடங்களில் அவர்களைத் தங்க வைக்க முடியவில்லை. எங்கே நிற்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். ஏதாவது அதைப்பற்றி குறிப்பிலே உண்டா? ஆளுநர் உரையிலே உண்டா? இன்று இரவு படுக்கப்போகும்போது கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். அந்தக் குடிசைகளுக்குப் போக முடியாது. நம்முடைய சுற்றுப் புற சூழல் அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். தாழ்ந்த பகுதியில்தான் அரிசன மக்கள் குடியிருக்கிறார்கள், என்று. அது பூராவும் வீழ்ந்துவிடக் கூடிய நிலையில் அவைகள் எல்லாம் மழையில் நனைந்து கொண்டிருக்கிறது. நாம் அவர்களை பள்ளி யில் தங்க வைக்க முடியாது. நம்முடைய பணம் போதாது. போதாத குறைக்கு இந்த நாட்டில் எவன் எவனோ செய்து வைத்த அக்கிரமத்தின் காரணமாக நாம் கொடுத்த 200 ரூபா யிலே அவனவன் குடித்தானோ, வைத்தானோ தெரியாது. அந்தப் பணத்திலே குடிசைப் போட முடியாது. நடுத்தெரு நாராயண னாக நிற்கிறான் என்று இந்த ஆளுநர் உரையிலே சொல்லி, தமிழ்நாட்டு மக்களை தட்டி எழுப்ப வேண்டாமா? மத்திய சர்க்காரை வற்புறுத்தாமல் ஜிகினா போட்டு மறைக்கவா? என் பதுதான் எங்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய இயம். எனவே தான் நாங்கள் மிகுந்த கவலைப்படுகிறோம்.

1984 பிப்ரவரி 17] [திரு. என். வரதராஜன்]

அடுத்து நான் வற்புறுத்த விரும்புவது, இந்த மதுரை மருத் துவ கல்லூரியில் நடந்த சம்பவங்களைப் பற்றி நம்முடைய அரசு தீவிரமாகக் கருதாமல் போனால் நீங்கள் மிகப்பெரிய தவறு செய்தவர்கள் ஆவீர்கள். ஒரு ஜாலியன்வாலாபாக்கை நாம் பார்த்திருக்கிறோம். ரிசர்வ் போலீஸ் படையை மைதானத்தில் வைத்து, சுற்றி ஆயிரம் போலீஸ்காரர்களை வைத்து நிறுத்தி, மத்தியிலே 175 மாணவர்களை தடியடிப்பிரயோகம் செய்தும் தாக்குதலுக்கு ஆளாக்கியும், அதற்கு அனுமதி கொடுத்தால் என்ன நடைபெறும் என்பதை நீங்கள் பாருங்கள். பிரான்ஸ் நாட்டு ஆட்சியிலே இருக்கக்கூடிய சில கயவர்கள் மிருகங்களைவிட்டு மனிதர்களை கடிக்க வைத்து ருசி பார்த்த வரலாற்றை எல்லாம் நாம் படிக்கிறோம், அதுமாதிரி நடந்திருக்கிறது மதுரையிலே இந்த மாதம் 3-ம் தேதி. இப்போது அந்த மாணவர்கள் வெளியே இருக்கிறார்கள். அந்தக் கொடுமைக்கு எவர் காரண மாக இருந்தாரோ அவரை டிஸ்மிஸ் செய்யவேண்டும். அது ரிசர்வ் போலீஸ் டி.எஸ்.பி.யாக இருந்தாலும், அல்லது காவல் நிறை ஆய்வாளராக இருந்தாலும், யார் அந்த அக்கிரமத்திற்கு காரணமாக இருந்தார்களோ அவர்களை டிஸ்மிஸ் செய்ய வேண் டும். ஒரு நீதி விசாரணை வேண்டும். அவர்களுடைய ஹாஸ்டல் மூடப்பட்டு இருப்பதால் இன்று அவர்கள் வெளியே இருக் கிறார்கள். அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். நீதி விசாரணைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இன்னும் உத்தரவு போடவில்லை. உடனடியாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சஸ்பென்ஷன் செய் யப்பட்ட அதிகாரிகள் வெளியே விரட்டப்பட வேண்டும். கல்லூரியைத் திறந்து மீண்டும் அந்த மாணவர்களுக்கு கல்விப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இதிலே இத்தனை கோளாறு களுக்கும் என்ன காரணம் தெரியுமோ? அத்துமீறிய அதிகாரத்தை காவல்துறைக்கு மக்கள் இயக்கத்தை ஒடுக்குவதற்கு கொடுத்ததன் விளைவுதான் இது. அதனுடைய அடிப்படை தான் இது என்பதை அரசு உணரவேண்டும் என்பதுதான் எங்களது பார்வை.

அடுத்து நான் சொல்ல விரும்புவது இன்றைக்கு தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில். கரூர், திண்டுக்கல், தாராபுரம் அகல ரயில் பாதை என்பது மிகவும் முக்கியமானது. இதைப் பற்றி ஆளுநர் உரையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. 40 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொல்லி, 4 கோடி ரூபாய் செலவு செய்து விட்டு, இந்த ஆண்டு மூச்சுவிடமாட்டேன் என்று அடம்பிடிக்கிறது மத்திய அரசு. ஆகவே நம்முடைய ஆளுநர் உரையில், இந்தத் தமிழ்நாட்டினுடைய வர்த்த கர்கள், தொழில் விற்பன்னர்கள், தமிழ்நாட்டினுடைய ஜனநாயக சக்திகள் எல்லாம் கவலை அடைகிறார்கள் என்று சொல்லி, மத்திய அரசை வற்புறுத்த வேண்டியது முக்கியம் அல்லவா? நம் முடைய மின்சாரத்துறை அமைச்சரவர்கள் டில்லியிலே போய் பேசியிருக்கிறார்கள். யாரோ ஒரு உறுப்பினர் சொன்னார் ஐ.நா. சபையிலே போய் பேசினார்கள் என்று சந்தோஷப்படுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். இந்த தமிழ்நாட்டின் மின்

[திரு. என். வரதராஜன்] [1984 பிப்ரவரி 17

உற்பத்திக்காக தேவைப்படுகிற நிலக்கரி, 2 லட்சத்து 70 ஆயிரம் டன். இப்போது மத்திய சர்க்கார் நமக்குக் கொடுப்பது 1 லட்சத்து 32 ஆயிரம் டன். அப்படியானால் தமிழ்நாட்டி னுடைய தொழில் வளர்ச்சி எப்படியிருக்கும்? நீங்கள் தொழில்களுக்கு எப்படி மின்சாரம் கொடுப்பீர்கள். இன்றைக்கு அதிக மழை பெய்து இருக்கக்கூடிய காலத் தில் நமக்கு நீர் மின்சாரம் உற்பத்தி அதிகமாக ஆகக்கூடிய காலத்திலேயே இன்னும் எவ்வளவு நாளைக்குள் மின் வெட்டு வரும் என்று சொல்லமுடியாது. தத்தளித்துக்கொண்டிருக்கிறது தமிழ்நாடு. தொழில் வளர்ச்சி எப்படி வரும். நாமெல்லாம் உட்கார்ந்து ஏதாவது உருப்போட்டு மந்திரங்கள் சொன்னால், தொழில் வளர்ச்சி ஏற்படும் என்று சொன்னால், கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளத் தயார். இல்லை, மார்க்சிஸ்ட் தான் உங்களுடைய அடிப்படையான தொழில் வளர்ச்சி கம்பந்த மான பார்வை பலகீனமானது என்று சொல்கிறோம். ஆகவே அதை எதிர்த்து நின்று மத்திய அரசோடு வாதாடுவதற்குப் பதி லாக ஏதே அரசியல் உறவு கொண்டு தாஜா செய்து எண்ணி யதை நிறைவேற்றிவிட வேண்டும் என்று நீங்கள் நினைத் தால் அது தவறான வழியில்தான் உங்களை அழைத்துச்செல்லும் என்றுதான் நாங்கள் செல்ல விரும்புகிறோம்.

ஆளுநர் உரையிலே மாவட்டங்கள் பிரிவினையைக் குறித்து செய்திவந்திருக்கிறது. நாங்கள்எல்லாம் முன்பே வற்புறுத்தினோம். இது தமிழ்நாட்டு மக்களுடையமிகமுக்கியமான கோரிக்கை. அதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இதற்கு முன்னால் நீங்கள் வற்புறுத்தியபோதுகூட, இதே மன்றத்திலே அரசு சார்பாக என்ன சொன்னீர்கள்? ஒரு மாவட் டத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னால்கூட ஐந்து கோடி ரூபாய்க்குமேல் வேண்டும். இன்று அரசினுடைய பொருளாதாரம் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்று கடந்த கூட்டத் தொட ரிலே தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்திலே எட்டு மாவட்டங் களைப் பிரித்து. இன்னின்ன பெயர்களை வைக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறீர்கள் என்றால், இது தேர்தலுக்காக அவசர கோலமாக அறிவிக்கப்பட்டதுதானே தவிர, தெரிந்து, தெளிந்து தமிழக மக்களுடைய உணர்வை புரிந்து, மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்த, அந்த மக்களுடைய நல்வாழ்விற்காக, நிர்வாகப் பணிகளை சீர்திருத்துவதற்காக இந்த மாவட்டங்களைப் பிரிக் கின்ற பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதை எதிர்த்து, கருரிலே, அரியலூரிலே, நாகப்பட்டிணத்திலே இன்று, பந்தும், கொளர்ச்சியும் நடக்கின்றன என்றால் இந்தப் பிரிவினைகளை நீங்கள் செய்திருப்பது சரியல்ல என்றுதானே பொருள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் தமிழக மக்களுக்கு நாங்கள் வேண்டுகோள் விடுத்துக் கொண்டி ருக்கிறோம். இப்படி மாவட்டங்களைப் பிரிக்கின்ற பிரச்சினையில் ஏற்படும் போராட்டங்களில் நீங்கள் கலந்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இக்கட்டான போராட்ட [illegible]

1984 பிப்ரவரி 17] [திரு. என். வரதராஜன்]

வேலை நிறுத்தங்களிலோ நீங்கள் கலந்து கொள்ள வேண்டாம்a. அனைவிட முக்கியமான பிரச்சனைகளாகிய, மக்களின் நலன்களுக் காக, உரிமைகளுக்காக போராட்டங்கள் நடந்தி, அதிலே கலந்து கொள்ள வேண்டிய நீங்கள், இதிலே சிக்கிக் கொள்ள வேண்டாம், நிறுத்துங்கள் என்று வேண்டுகோள் விடக்கூடிய நிலைமை இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்டிருக் கிறது.

தமிழக மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை நிறை வேற்றுகிறோம் என்ற பெயராலே, இன்றைக்கு நீங்கள் இந்த மாவட்டப்பிரிவினையைக் கொண்டுவந்திருப்பதால் என்ன பயன்? அதற்கென முறையான எந்தத் திட்டமுமில்லை. மேல், படிப்படி யாக நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் குழு அமைத்து அந்தக்குழு எப்போது ரிப்போர்ட் கொடுக்கும் என்று கூட எந்த விவரமும் சொல்ல முடியாத அளவுக்கு இந்தப் பிரச்னையை அணுகக்கூடிய முறையிலேதான் இதிலே காரியம் செய்திருக்கிறீர்கள். நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் நமது சகோதரி யசோதா அவர்கள் பேசும்போது, பாரிட்சைக்குத் தயாரா கிற மாணவனைப் போலஇந்த அறிக்கை இருக்கிறது என்று சொன் னார்கள். அதுதான் உண்மை. உங்களுடைய லட்சணம் இதில் அப்படித்தான் இருக்கிறது என்று சொல்லலாம். அவசரப்பட்டு செய்திருக்கிறீர்கள்.

இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்டங்களைப் பிரிப்பதிலே தலைநகரைப் பற்றி பிரச்னை எழும். அதில் வரக் கூடிய பிரதேசங்கள் பற்றி பிரச்னைகள் எழும். உணர்ச்சிகளைத் தூண்டுவதாலில சில சிக்கல்கள் அதனுள்ளே புகும். ஆகவே அரசு ஒரு நிபுணர் குழு அமைத்து அந்தக் குழு தலைநகரைப் பற்றியும் அதில் வரக்கூடிய பிரதேசங்கள் பற்றியும் ஆய்வு செய்து, அதனுடைய சிபாரிசை அரசுக்கு சமர்ப்பித்து, அதன் பிறகு தமிழகத்தினுடைய அரியல் கட்சிகளுடைய ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு ஆராந்த நடைமுறைக்குக் கொண்டு வர அரசு முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனங்களை ஏமாற்றி திசை திருப்புகிற ஒரு காரியத்திலே அரசு இறங்கிய நிலைமையை மக்கள் புரிந்துக்கொள் வார்கள். அபாய நிலைமைகள் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட அபாய விளைவுகள் இப்பொழுதே சில பகுதிகளிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வேறு சில பிரச்னை களைப் பற்றி நாளைக்கு பேசயிருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் பேசயிருக்கிறார்கள். இன்றைக்கு மிக முக்கிய மாக மாநில அரசாக இருக்கிற உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வேளை எங்களை விட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகமாக தெரிந்திருக்கலாம். இந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தை, திரு. வி. பி. [illegible]

[திரு. என். வரதராஜன்] [1984 பிப்ரவரி 17

சுப்பிரமணியன் அவர்கள் ஆரம்பித்து வைத்துப் பேசினார்கள். கூர்மையாகக்கவனித்துக் கொண்டு வந்தோம். சில நேரம் ஆந்திரம் ஏற்படுத்துகிற முறையிலே கூட அவர் வார்த்தைகளைப் போட்டு பேசினார்கள். ஒரு வேளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை தாக்குவதன் மூலமாக, அந்த இயக்கத்தினுடைய முதன் முன்னணிப் படையை ஒழித்துவிடலாம் என்று நினைக்கிறார் களோ என்னவோ தெரியாது.

இன்று மாநில அரசினுடைய அதிகாரம் விவசாயத் துறையிலே தான் இருக்கிறது. அதிலேதான் ஏதாவது செய்ய முடியும். மற்ற துறைகளில் அதிகாரம் இறுகிக் கொண்டே வருகிறது. தமிழகத் தினுடைய விவசாயத் துறையிலே சச்சரவுகள் நடத்துகிறீர்கள். அதில் சத்துணவில் சத்து இருக்கிறதா இல்லையா என்ற சச்சர விற்குள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி புக விரும்பவில்லை. ஆனால், இந்த சத்துணவு கொடுப்பதாலும், சேலைகள், வேட்டிகள் கொடுப்பதாலும், அல்லது வேறு சில நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாலும் தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்களுடைய வருவாயை பெருக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? என்னுடைய இந்தக் கேள்விக்கு தகுந்த பதிலை, அமைச்சர் பதிலை அளிக்கின்றபோது — முதலமைச்சர் சொன்னாலும் சரி, நிதியமைச்சர் சொன்னாலும் — சரி, பொருளாதார மாற்றத்தை இது ஏற்படுத்துமா என்று சொன்னால் போதும். ஆனால், உண்மை நிலையை பார்க்கப் போனால், மிக ஆழமாக பொருளாதார நெருக்கடி மிகுந்துக் கொண்டு வருகிறதா இல்லையா தமிழ்நாட்டிலே?

இன்றைக்கு காலையிலே திரு. எஸ். டி. எஸ். அவர்களைப் பார்த்தபோது சொன்னேன். நான் பேச ஆரம்பித்தவுடன் உங்களைத்தான் தாக்குவதாக இருக்கிறேன் என்று. அவர் நீண்ட காலமாக, 1973 லேயிருந்து, திண்டுக்கல் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொகுதியில் நின்ற காலத்திலே யிருந்து எனக்கு நண்பர். அது வேறு விவகாரம். ஆனால், மாவட்டங்களைப் பிரிக்கின்ற பிரச்னை என்பது வேறு விவகாரம்.

அடுத்தாற்போல, இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னை—என்ன செய்திருக்கிறீர்கள்? அவன் திராவிடனா, தமிழனா என்று ஏதாவது ஆராய்ந்து பாருங்களேன். 5 கோடி மக்களில் 80 லட்சத்திலிருந்து 1 கோடி வரை விவசாய மக்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி கொண்டு வந்து சட்டம் போட்டீர்கள். அமுலில் இருக் கிறதா? அதன் சுவடியாவது இருக்கிறதா? அல்லது அதை நடை முறைப்படுத்துவதற்கு என்று எதாவது மெஷினரியாவது இருக் கிறதா? 4 ரூபாய் 5 ரூபாய் கூலி வாங்கிக் கொண்டு ஜீவனத்திற்கு வாதைப்படுகிற நேரத்தில், ஏதோ ஜிகினா வேலை செய்து சமாளிப்பது என்று எண்ணமா? ஜிகினா வேலை என்ன செய்வது?

1984 பிப்ரவரி 17] [திரு. என். வரதராஜன்]

(பிற்பகல் 1—20)

இன்று தமிழ்நாட்டில் அதை அமல் நடத்துவதற்கு (குறுக்கீடு) என்ன மெஷினரி இருக்கிறது என்று சொல்லுங்கள் புரிந்து கொள்ளலாம். இந்தச் சட்டங்கள் எல்லாம் ஏட்டளவில் இருக் கின்றன. கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலிச் சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால், அந்தச் சட்டத்திலே நாம் போட்டதற்குக் குறைவாக கலெக்டர்கள் ஒப்பந்தம் போட்டிருக் கிறார்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த அவையில் பலமுறைகள் சொல்லியிருக்கிறார்கள். சட்டங்கள் அமலாக்கப்படவில்லையென்றால் தொழில் தகராறுகளை எழுப்புங்கள், எழுப்புங்கள் என்று. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இதுவரையில் எழுப்பிய தொழில் தகராறுகள் எத்தனை?

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நான் அன்பிற் குரிய நண்பர் திரு பாலசுப்பிரமணியன் போன்றவர்கள் கருத்துக் களோடு இரண்டறக் கலக்கவேண்டும், கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று மோதினால்தான் சிறந்த கருத்து உருவாவதற்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு அஞ்சவில்லை நாங்கள். மேற்கு வங்கத்தைப்பற்றி குறை சொன்னார்கள். குறைகள் இருந்தால் சொல்லட்டும், நாங்கள் அதை வரவேற்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற முறை என்னவென்றால் இந்தச் சட்டம் அமலாவதைப் பார்ப்பதற்கு அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இங்கே நீங்கள் அப்படிப்பட்ட அதிகாரத்தை யாருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்? அதைத் தெளிவுப்படுத்தினால் நல்லது.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே 15 லட்சம் குத்தகை விவசாயிகள் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். ஆனால் மேற்கு வங்க சர்க்கார்—பலவீனமான சர்க்கார், தமிழ்நாடு சர்க்கார் கற்றுக் கொள்ளவேண்டிய சர்க்கார்—என்ன சட்டம் கொண்டு வந்திருக் கிறார்கள் தெரியுமா? குத்தகை விவசாயிகள், குத்தகை விவசாயிகள் அல்ல என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு நிலச்சுவான்தார் களுக்கு விடப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே என்ன நிலைமை இருக்கிறது? குத்தகை விவசாயிதான், நான் குத்தகை விவசாயி என்று நிரூபித்தாக வேண்டும். இங்கே குழுவை வைத்திருக் கிறோம். அதனால் ஏற்பட்ட பலன் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவிலே உள்ள 22 மாநிலங்களிலே காஷ்மீர், மேற்கு வங்கம் ஆகிய இரண்டு மாநிலங்களில்தான் உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாகக் கிடைத்த மிச்ச நிலம் விவசாயிகளுக்குக் கொடுக்கிறபோது அவர்கள் தம்பிடிகூட அவர்களிடமிருந்து வசூல்

செய்வதில்லை. காஷ்மீர், மேற்கு வங்கம் ஆகிய இரண்டு மாநிலங்களிலேதான் நல்லமுறையிலே அந்தச் சட்டம் அமலாக்கப் பட்டிருக்கிறது என்பது தெரியும். வேண்டுமானால் விசாரணைக் கமிஷன்கூட வையுங்கள். இந்தியாவிலேயே நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் அமலாக்கப்பட்டதன் விளைவாக 22 லட்சம் ஏக்கர் இந்தியா முழுவதும் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்றால், அதிலே மேற்கு வங்கத்திலிருந்து 12 லட்சம், கேரளத்திலிருந்து 6 லட்சம்—இந்த இரண்டு மாநிலங்களிலேதான் பயன்பட்டிருக்கிறது என்பது தெரியும். பாக்கி நிலம்தான் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் மூலமாகப் பயன்பட்டது. 80 ஆயிரம் ஏக்கர் தமிழ்நாட்டில் கொடுத்திருக்கிறோம் என்று அமைச்சர் சொன்னார்கள். பொம்மை நாளைக்குச் சொல்லிக்கொண்டிருக்கலாம். இப்போது இன்னும் ஒரு பெரிய ஆபத்து தமிழ்நாட்டிலே இருக்கிறது. உங்களுக்கு மந்திரி சபையிலே சிக்கல் இல்லையா? குத்தகைப் பட்டா எப்படி நடக்கிறது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டால் சொல்வார்கள். கோயில் நிலங்களை குத்தகை செய்கிறவர்கள் தான் பதிகிறார்கள். பாக்கி விவசாயிகள் குத்தகை செய்கிறவர்கள் காரணம் அவர்களை எப்படியாவது மிரட்டி பதிவு செய்ய விடுவதில்லை. கோயில் நிலங்களிலே உள்ள விவசாயிகளுக்கு ஆபத்து வந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் கோயில் நிலத்திலே குத்தகை செய்யும் விவசாயிகளுக்கு அந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் நீண்ட காலமாக திராவிட இயக்கமே உருவாக்கிய இந்தப் பிரச்சினையிலே இங்கேயே திக்குமுக்காடுகிற காட்சி இன்னைக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் தமிழ்நாட்டிலே குத்தகை விவசாயிக்கு பாதுகாப்பு என்ன? உச்சவரம்புச் சட்டத்தில் மிச்ச நிலம் நாம் வருமானம் என்ன? அவனுடைய எடுப்பதற்கு சீர்திருத்தங்கள் கொண்டுவந்தால் 20 லட்சம் ஏக்கர் நிலம் நம்முடைய கைக்குக் கிடைக்கும். அந்த வகையிலேதான் பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை நாம் இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லை, அதைப்பற்றி ஒரு வார்த்தை இதிலே இருக்க வேண்டாமா? இன்றைக்கு அந்தச் சட்டத்தைத் திருப்பிக் கொண்டுவந்தால்—நாங்கள் ஏற்கெனவே சந்தேகப்பட்டோம். காங்கிரஸிலே இருக்கக்கூடிய மூத்த தலைவர் ** நிலத்தில் இன்னும் பல பினாமிகள் இருப்பதால் அந்தச் சட்டம் வருமோ என்று அப்போது நினைத்தோம். வரவேற்றோம். இத்தகைய நிலச் சட்டங்கள் கொண்டுவருவதில் சிக்கல் இருந்தது.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் வரதராஜன் அவர்கள் பேசும்போது இந்த சபாமன்றத்திலே இல்லாத ஒருவர்

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பெயரைக் குறிப்பிட்டு சந்தேகம் தெரிகின்ற முறையிலே பேசுகின்றார்கள். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சபாபதி) : அந்த பெயர் நீக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன்: இன்றைக்கு தான் ஒரு உண்மையைச் சொல்லவேண்டும். இப்போது பெயரைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ரங்கசாமி மூப்பனார் என்று வைத்துக் தொள்ளுங்கள். அவருடைய நிலத்தில் நீண்டகாலமாக குத்தகை செய்தவர் ராஜன், அவர் காங்கிரஸ்காரர். சட்டப்படி நிலம் தனக்கு வேண்டுமென்று பதிவாக வேண்டுமென்று அங்கே பிளர்ச்சி நடக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு தலைமை தாங்கு கிறது. அவரை வெளியேற்றுவதற்கு சில காரியங்கள் நடந்தன. இப்படி. இருந்தால் எப்படி. கிராமப்புறங்களிலே உள்ள நிலங்கள் எல்லாம் மாறும்? எப்படி உற்பத்தியாகிற செல்வம் விவசாயிக்கு வந்து சேரும்? குத்தகை விவசாயத்திலே கோளாறு, விவசாயிக்கு கூலி கிடையாது. நிலசீர்திருத்தமும் அமலாகாது, விவசாயிகளுடைய விளைபொருட்களுக்கு என்ன நிலைமை? நேற்று நிதியமைச்சர் இங்கே பதில் சொல்லும்போது சொன்னார், 132 ரூபாய் விலை கொடுக்கிறோம். அதுவும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் கொள்முதல் சென்டர்களிலே கொடுக்கிறோம், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி வரை என்று நீட்டித்துக்கொண்டிருக்கிறோம், மத்திய சர்க்கார் மறுக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் ஒரு குவிண்டாலுக்கு 132 ரூபாய் கொடுத்தால் தமிழ்நாட்டிலே இப்போது தத்தளித்துக்கொண்டிருக்கிற விவசாயியின் வாழ்வு என்ன ஆகும்? விவசாய விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை என்று மத்திய சர்க்காருக்கு சொல்லி வாதாடிப் பெறுவதற்கு என்ன முயற்சி இங்கே எடுக்கப்பட்டிருக்கிறது.

கர்நாடகத்திலே ஒரு டன் கரும்புக்கு 200 ரூபாய். இந்த ஆண்டு ஆந்திராவிலே 215 ரூபாய் கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டில் விலையென்ன? தமிழ்நாட்டு விவசாயம் முன்னேறும் முன்னேறும் என்று சொல்விக்கொண்டிருப்பதால் என்ன ஆகும்— தமிழ்நாட்டிலே விவசாய மக்களுடைய பிரச்சினை தோல்வி யடைந்து இருக்கிறது. அதுதான் நம் கையில் இருக்கிறது. ஒரே ஒரு அதிகாரம். அதையே நாம் செய்யமுடியவில்லை யென்றால் இந்த நிலைமை முற்றினால் நிலைமை ஆபத்தாக வரும். ஜனங்கள் கிளர்ச்சி ஏற்பட்டு கிளர்ச்சியை அடக்குவதற்காக சட்டங்கள் போடவேண்டும். அந்தச் சட்டங்களை அமலாக்கு வதற்கு காவல் துறையிடம் அதிகாரங்களை ஒப்படைக்கவேண்டும். அப்படி ஒப்படைப்பதால் அநீதியான அக்கிரமமான கஷ்டங்கள் தான் ஏற்படும். லஞ்சம், ஊழல் என்று சொன்னால் சில சமயங் களிலே ஆளுங்கட்சியினருக்கு கோபம் வருகிறது. இப்படி நிர்வாக ஊழல் நடைபெறுகிறபோது கொள்கைகளில் பலவீனம்இருக்கிற போது காரியங்கள் சரியாக நடைபெறுவதில்லை. ஏழைகளின்

வாழ்வை உயர்த்த முடியவில்லை. ஏற்கெனவே கையை நக்கிக் கொண்டிருந்தவன் இப்போது முழு வெறுங்கையை நக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் பயன்படுத்தவேண்டுமென்று நினைக்கிற பொருளாதாரத்தை ஜனங்களுக்கு அளிக்கவேண்டுமென்று நினைக்கிற பொருளாதாரத்தை சீரழிக்கக்கூடிய நிலைமை வளர்ந்துகொண்டிருக்கிறது. அதிலே ஆளுங்கட்சி இயற்கையாக ஈடுபடுவதில் சந்தேகம் இல்லை. ஆகவே, ஜனங்களுடைய ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொண்டு மக்கள் மூலமாக நிறைவேற்றக்கூடிய முயற்சியில் ஈடுபடாவிட்டால் குழுக்கள் ஆபத்தான நிலையில் சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத்திற்கு 13 கோடி ரூபாய் கொடுத்தார்கள், இப்போது 5 கோடி கொடுத்திருக்கிறார்கள். மூன்றாம் தேதி பட்ஜெட் கொண்டு வாருங்கள். விவரத்தைத் தெரிந்துக்கொள்கிறோம். பட்ஜெட்டில் ஒன்று மக்களைத் தாக்கவேண்டும், புதிய வரிகள் போடவேண்டும். ஏற்கனவே கழுத்தளவுக்கு தண்ணீரில் இருக்கிற மக்கள் அமுங்கிவிடும்படியான நிலை ஏற்படுவதைத்தவிர வேறு வழியில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சி எங்கிருக்கிறது? சமீபத்திலே கல்கத்தாவிலே நடந்த மாநாட்டுத் தீர்மானத்தின்படி நாங்கள் 13 ஆம் தேதி தெருவிலே நடந்துபோனோம். அதிலே உங்களுக்கும் தி. மு. க.வுக்கும் வித்தியாசம் இருந்தால் சொல்லுங்கள். அந்தத் தீர்மானத்திலே என்ன கோளாறு, தமிழ் நாட்டிலே தி. மு. க.வும், இடதுசாரிக் கட்சிகளும் ஏதோ பாவத்தைச் செய்துவிட்டதைப்போல் சொல்கிறீர்களே. அதோ இன்றைக்கு வற்புறுத்துகிறது ஐயா, இந்த மாநிலத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று. இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்பட்டால் முழுத் தொகையைக் கொடு, மாநிலத்திற்கு அரசித் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கேட்கிறோம். உங்களிடம் அரிசி கிடையாது, மண்ணெண்ணெய் கிடையாது, பாமாயில் கிடையாது, பணமும் கிடையாது. தமிழ்நாட்டு கோயில்கள் சிலவற்றில் ஆள் அம்பு வராது, அவன் கிண்கிணி கிண்கிணி என்று மணி அடித்துக் கொண்டு இருப்பான். அதற்கு இரண்டு ஆட்களை வைத்துக் கொண்டு இருப்பார்கள். அந்தமாதிரி மணி அடிக்கிற சர்க்காராகப் போகும். ஆரக்கால் அச்சுப்போன வண்டியைத் தள்ளிக்கொண்டு — முக்கியமானவர்கள் தள்ளுகிறார்கள். நம்முடைய முதல்வர் எம். ஜி. ஆர். தள்ளுகிறார், நீண்டநெடுங் காலப் பாரம்பரியத்திலே வந்த நாவலர் தள்ளுகிறார், மற்றவர்கள் தள்ளுகிறார்கள்—அதைப்பார்த்துவிட்டு ஊரிலே உள்ள ஜனங்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். வண்டி போக வில்லையே. அவர்கள் தள்ளுவதைப்பார்த்தால் ஏதோ 200 மைல் 150 மைல் வேகத்திலே போகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள் வண்டி உடைந்து கிடக்கிறது. நீங்கள் அதை ரிப்பேர் செய்யா விட்டால் ஓடாது. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் சே. சமரசம்) : பேரவை யின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18-2-1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

(78) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட நிறுவனத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டு அறிக்கையும் கணக்குகளும் (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஒழுங்கு தாள்கள்.

(15) தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 26-10-1983 முதல் 23-11-1983 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.



V21,3) N83
N83-54-4